Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோக்கு

தமிழ்த்துறை
புதுவைப் பல்கலைக் கழகம்
காரைக்கால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7790
पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோக்கு

(ஆய்வுக் கட்டுரைகள்)

DONATION

தொகுதி — 3

Forwarded free of cost and with the Compliments of the Dept. of Education; Govt. of India; New Delhi.

7790

தமிழ்த் துறை

புதுவைப் பல்கலைக்கழகம்

காரைக்கால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல் குறிப்பு

தலைப்பு	:	நோக்கு (ஆய்வுக் கட்டுரைகள்) தொகுதி: 3
பதிப்பாசிரியர்	:	டாக்டர் அ. பாண்டுரங்கன்
துணைப் பதிப்பாசிரியர்	:	டாக்டர் ம. மதியழகன்
வெளியீட்டுக் காலம்	:	டிசம்பர், 1991
தாள்	:	சேசாயி 14 2 கி.கி.
அளவு	:	1/8 டெமி
அச்செழுத்து	:	10 புள்ளி
பக்கங்கள்	:	12 + 193
படிகள்	:	800
அச்சகம்	:	ஸ்ரீ வேலன் பிரஸ், சிதம்பரம்
விலை	:	45—00
வெளியீடு	:	தமிழ்த் துறை புதுவைப் பல்கலைக் கழகம் காரைக்கால்-609 602

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோக்கு

(ஆய்வுக் கட்டுரைகள்)

DONATION

பதிப்பாசிரியர்

டாக்டர் அ. பாண்டுரங்கன்

துணைப் பதிப்பாசிரியர்

டாக்டர் ம. மதியழகன்

மாணவர் பதிப்புக்குழு

ச. இரவி

பெ. செல்வத்துரை

விற்பனை உரிமை

நன்மொழி புத்தக நிலையம்

71-B, காந்தி சாலை

புதுச்சேரி-605 001

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாக்டர் ஆ. ஞானம்
F.N.A., F.N. Asc.
துணை வேந்தர்
புதுவைப் பல்கலைக்கழகம்,

ஆர். வேங்கடராமன் நகர்
புதுச்சேரி

அணிந்துரை

புதுவைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்த் துறையான காரைக்கால் மையம் ஆண்டுதோறும் ‘நோக்கு’ என்னும் பெயரில் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்தளித்து வெளியிட்டு வருகின்றது. இப்போது மூன்றாவது தொகுதி மலர்ந்து மணம் பரப்புகின்றது.

உயர்கல்வி மையங்கள் சிந்தனைகளின் உலைக்களம்; சிந்தனைகள், ஆய்வுக் கனலில் கனன்று அறிவுச் சம்மட்டியால் பதப்படுத்தப்பட்டு, கட்டுரைக் கூர்முனைகளாக வெளிவருகின்றன. கட்டுரைத் தொகுப்பில் பதின்மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன; ஒவ்வொன்றும் ஒவ்வொரு திறத்தது.

பாரதத்துக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இடையில் நிலவும் பண்பாட்டுப் பரவலில் இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் உரிய பங்குண்டு. தென்கிழக்காசிய நாடுகளில் — குறிப்பாகக் கம்போடியாவில்- நிலவிய தேவராச வழிபாட்டை முதல் கட்டுரை ஆராய்கின்றது. தமிழகத்தில் இடைக்காலத்தில் பெருவழக்குப் பெற்றிருந்த பள்ளிப்படையின் பரிணாம வளர்ச்சியே தேவராச வழிபாடு என்று இக்கட்டுரை சுட்டுகின்றது; புதுமையான சிந்தனையாகப் பொலிகின்றது!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழில் நாவல் இலக்கியம் பிறந்து நூறாண்டுகள் கழிந்து விட்டன; நூறாண்டுகளில் விளைந்த தமிழ் நாவல்களின் வளர்ச்சியை ஐந்தொகைப்படுத்தும் காலத்தில் வாழ்கின்றோம். புதுப்புது அணுகுமுறைகள் நாவல் இலக்கிய ஆய்வில் தோன்றி வருகின்றன. இவற்றை ஆராய்ந்து புதிய முடிவொன்றை இரண்டாவது கட்டுரை எடுத்துரைக்கின்றது.

மனித சமுதாயத்தில் பேய் பற்றிய நம்பிக்கைகள் ஆழமானவை; தொன்மையானவை. தற்கால மீனவர் சமூகத்தில் நிலவும் பேய் பற்றிய நம்பிக்கைகளைக் கள ஆய்வு-களில் கண்ட தரவுகளின் வாயிலாக மூன்றாவது கட்டுரை ஆராய்கின்றது.

கட்டபொம்மு, மருது சகோதரர்கள், கான்சாகிபு, சடைக்கத் தேவன் போன்ற வரலாற்றுக் கதைப்பாடல்களின் தலைவர்களின் முடிவுகள், அவல முடிவுகளாக அமைகின்றன. இம்முடிவுகள் பாமர மக்கள் மனத்தில் ஏற்படுத்தும் உணர்ச்சி வெளிப்பாடுகள் கதைப் போக்குகளை மாற்றியமைக்கின்றன என, நான்காவது கட்டுரை சுட்டுகிறது. காப்பியத் தலைவர்-களின் முடிவுகளுக்கும் கதைப்பாடல் தலைவர்களின் முடிவு-களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் இக் கட்டுரையில் தெளிவாக்கப்படுகின்றன.

"என்றுமுளதென்றமிழ்" எனக் கம்பர் தமிழைப் பாராட்டி-னார். முன்னைப் பழமைக்கும் பழமையாகவும் பின்னைப் புதுமைக்கும் புதுமையாகவும் காலந்தோறும் தமிழ் தன்னை வளர்த்துக்கொண்டு வருகின்றது. சங்கத் தமிழில் இடம் பெற்றுள்ள வினைவடிவங்கள் இன்றைய தமிழில் எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகின்றன என, ஐந்தாம் கட்டுரை ஆராய்-கின்றது. ஒரே வடிவம் முற்றாகவும் எச்சமாகவும் இடத்துக் கேற்பப் பொருள்படுவதைக் கட்டுரை தக்க எடுத்துக்காட்டு-களுடன் நிறுவ முயல்கின்றது.

வைணவ பக்தி தொண்டை நாட்டில் கருக்கொண்டு, பாண்டியநாட்டில் செழித்தோங்கி வளர்ந்து, சோழப்பேரரசுக் காலத்தில் பாரத நாடு முழுவதும் பரவியது. அரசியல் மாற்றங்களால் தொண்டை நாடு தன் முதன்மையை இழந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நின்ற காலங்களிலும் - இன்றும் - அது எவ்வாறு வைணவ பக்தி இயக்கத்தைக் கட்டிக் காத்து வருகின்றது என்பதனை ஆறாவது கட்டுரை ஆராய்ந்து கூறுகின்றது.

இலக்கியத்தை மொழியியல் நோக்கில் ஆராயும், நெறிகள் இன்று வளர்ந்து வருகின்றன. அமைப்பியல் நோக்கில் இலக்கியத்தை ஆராயும் அணுகுமுறைகள் செல்வாக்குப் பெற்றுவருகின்றன. இப்புதிய அணுகுமுறைகளில் பிரதிக் கோட்பாடு செல்வாக்குப் பெற்று வருகின்றது. இக்கோட்பாட்டின் பல்வேறு போக்குகளை ஒரு கட்டுரை தெளிவு படுத்துகின்றது.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில், பங்குனித் திங்களில் ஒரு 'மீன்' விழுந்ததன் காரணமாகச் சேரநாட்டு மன்னன் யானைக் கட்சேய் மாந்தரன் சேரல் இரும்பொறை இறந்துபட்டான் என்ற குறிப்பு உள்ளது. இக்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு, சோதிட நூல்களின் துணைகொண்டு, அம்மன்னன் இறந்த நேரத்தை ஒரு கட்டுரை கணித்துக் கூறுகின்றது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தொடக்க நிலையில் ஈடுபட்ட பலரும் நாம் மரபுரிமையாகப் பெற்றுவரும் இந்தியச் சிந்தனை மரபுகளில் தோய்ந்து நின்றவர்கள். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் ஸ்ரீ அரவிந்தரும் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். ஸ்ரீ அரவிந்தர் புதுவைக்கு வருவதற்கு முன்பே, அவருடன் நம் மகாகவிக்குத் தொடர்பு இருந்தது. புதுவை வாழ்க்கை இருவரையும் மேலும் நெருக்கமாகப் பிணைத்தது. ஆன்மிகச் சிந்தனை மரபுகளில் இருவருடைய கருத்துகளும் சிறப்பாக ஒப்பிடப்படுகின்றன.

மொழி, மனம் சார்ந்த பொருளாகும்; மற்ற பருப் பொருள்களைப் போல இது தனித்து நிற்கவில்லை. எனினும் பிற பருப்பொருள்களுக்குப் பொருந்துகின்ற இயக்கவியல் (dialectics) விதிகள் மொழிக்கும் பொருந்துகின்றன. மொழியின் செயற்பாடுகள் (Function) இயக்கவியல் விதிகளின்படி செயல் படுகின்றன என, ஒரு கட்டுரை ஆராய்ந்து நிறுவ முயல்கின்றது.

தற்காலத் தமிழ் நாவல்களில் தலைமைப் பாத்திரம் யார் என்பது குறித்து விவாதங்களும் விளக்கங்களும் பெருகிவரு-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றன. தொடக்க நிலையில் காப்பியத்தின் தாக்கத்தில் உருவான கதைத் தலைவன், சமுதாய எதார்த்தத்தின் விளைவாகச் சிதையத் தொடங்கினான். கதைத் தலைவனோ தலைவியோ இல்லாமலும் நாவல் படைக்கப் பெறுகின்றது. இப்போக்கைத் தலைமைப் பாத்திரத்தின் சிதைவு என வரையறுக்கும் கட்டுரையாளர், அதனை இரண்டு தமிழ் நாவல்களின் வாயிலாகத் தெளிவுபடுத்துகின்றார்.

காரைக்கால் வட்டாரத்தில் வாழும் வள்ளுவர் இன மக்களின் சடங்குகளைப் பற்றி ஒரு கட்டுரை ஆராய்கின்றது. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த இம்மக்கள், மற்ற தாழ்த்தப்பட்ட இன மக்களைவிடக் கல்வி நிலையிலும் வாழ்வியல் நிலையிலும் உயர்ந்து காணப்பெறுகின்றனர். இவ்வின மக்களைப் பற்றிக் கள ஆய்வில் கிடைத்த தரவுகளைக் கொண்டு அவர்களுடைய சடங்குகள் ஆராயப்படுகின்றன. சமுதாயவியலில் மேனிலையாக்கம் (Sankritisation) செயல் படும் முறையை இக்கட்டுரை படம் பிடித்துக் காட்டுகின்றது.

சங்க இலக்கியங்களில் கபிலர் குறிப்பிடத்தக்கவர்; இவருடைய பாடல்கள் பரிபாடல் நீங்கலாக, ஏழுதொகை நூல் களிலும் பத்துப் பாட்டிலும் இடம்பெறுகின்றன. ஆயினும், இவற் றுள் பொருள்வேறுபாடுகளும் நடைவேறுபாடுகளும் காணப் படுகின்றன. கபிலர் பெயரில் உள்ள பாடல்கள் அனைத்தையும் பாடியவர் ஒருவரா, இருவரா, மூவரா என்ற சிக்கலை எழுப்பி விடை காண முயல்கின்றது இறுதிக்கட்டுரை.

இவ்வாறு இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் யாவும் புதுப்புது நோக்கிலும் போக்கிலும் தொகுக்கப் பட்டுள்ளன. இவை அனைத்தும் ஆய்வாளர்களின் ஆய்வுப் பொருள்களோடு தொடர்புடையவை என அறிகின்றோம்.

ஆய்வின் வீச்சு எல்லைகள் பரந்துபட்டவை.

ஆய்வின் தரம் ஆழமாகவும் சீரியதாகவும் அமைந்துள்ளது.

கட்டுரையாளர்களையும் தொகுத்துக் கொடுத்த பதிப்பு ஆசிரியக் குழுவினரையும் பதிப்பாசிரியர் அ. பாண்டுரங்கன் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

ஆ. ஞானம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உங்களுடன் சில மணித்துளிகள் ...

டாக்டர் அ. பாண்டுரங்கன் எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் - துறைத் தலைவர்
தமிழ்த் துறை
புதுவைப் பல்கலைக்கழகம்.
காரைக்கால்

புதுவைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைக் காரைக்கால் மையத்தின் நோக்கு – 3 கட்டுரைத் தொகுப்பைத் தமிழன்னையின் திருவடிகளில் எம் எளிய காணிக்கையாகப் படைக்கின்றோம்.

தமிழ் இலக்கியக் கொள்கைகளை உருவாக்குவதும் தமிழகப் பண்பாட்டு வரலாற்றை வரைவதும் என, இரண்டு குறிக்கோள்களை முன்னிறுத்தி, எம் மையம் இதுவரை நோக்கின் இரண்டு தொகுதிகளை வெளியிட்டுள்ளது; அதன் தொடரோட்டமாக இம் மூன்றாவது தொகுதி தங்கள் கைகளில் மலர்கின்றது.

பரபரப்பும் நெருக்கடிகளும் இல்லாத சூழலில் மலரும் இக்கட்டுரைகள், ஆய்வாளர்களின் புலமைக்கும் திறனுக்கும் கட்டியம் கூறுகின்றன.

கட்டுரைகளைத் தொகுப்பதில் முரண்பாடுகள், குறுக்கீடுகள், தொல்லைகள் மிகுந்தன. அவற்றை வெற்றி கொள்வதில் நேர்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய பண்புகளை உறுதியாகக் கடைப்பிடித்தோம்; அவற்றின் விளைவு இத்தொகுப்பு!

நோக்கு — 3இல் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், தமிழ் ஆராய்ச்சிப் பரப்பின் பல முனைகளைத் தொட்டுக்காட்டுகின்றன; அகவயச் சிந்தனையின் ஆட்சி மேலோங்கி நிற்கும் தமிழாய்வு உலகில், புறவயச் சிந்தனைகளுக்கு இவை முன்னுரிமை கொடுக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்த் தகளியில்
தமிழார்வ நெய்யூற்றி
ஆய்வுச் சுடரை ஏற்ற முனைந்துள்ளோம்!
இச்சுடர் விளக்கின்
அறிவொளி
தமிழாய்வுப் புலங்களில்
ஒளியூட்டும்
என, நம்புகின்றோம்
சிந்தனைகளில்
புதுமையும் புத்தாக்கமும்
இருப்பின்
ஊக்குவிக்க!
குறைகளும் குற்றங்களும்
இருப்பின்
உரிமையுடன்
சுட்டிக் காட்டுக!
திருத்திக் கொள்ளவும்
திருந்திக் கொள்ளவும்
திறந்த மனத்துடன் இருக்கின்றோம்!

தமக்கிருக்கும் பல்வேறு அலுவல்களுக்கு இடையிலும் கட்டுரைத் தொகுப்பைப் படித்து ஓர் அழகிய அணிந்துரை வழங்கியுள்ள புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆ. ஞானம் F.N.A., F.N. Asc., அவர்களுக்கு எம் நன்றி உரித்தாகுக!

கட்டுரைகளைப் பொறுமையோடும் பொறுப்போடும் கொடுத்த ஆய்வாளர்களுக்கு மனம் கனிந்த நன்றி.

நூல் தொகுப்பை வடிவமைத்துக் கொடுத்த பதிப்புக் குழுவினர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

குறுகிய காலத்தில் நூலைச் செம்மையாக அச்சிட்டுக் கொடுத்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சக உரிமையாளர்க்கும், அச்சக மேலாளர் பெரி. முருகப்பனுக்கும் அச்சக ஊழியர்களுக்கும் அன்புடன் நன்றி நவில்கின்றோம்.

அ. பாண்டுரங்கன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளுறை

1 தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு - தேவராச வழிபாடு: 1
அ. பாண்டுரங்கன்

2 நாவல் இலக்கிய அணுகுமுறைகள் 20
ம. மதியழகன்

3 புதுவை மீனவர் பண்பாட்டில் பேயோட்டும் சடங்குகள் 28
ஆ. அருள்தாசு

4 வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களின் அவல முடிவுகள் 44
ச. இரவி

5 முற்றுவினை, எச்சவினை வடிவமைப்பு 56
இராம. இராமமூர்த்தி

6 தொண்டை நாட்டில் வைணவ சமய மறுமலர்ச்சி 65
இரா. வ. கமலக்கண்ணன்

7 பிரதிக் கோட்பாடுகள் 81
தி. சிவக்குமார்

8 மீனும் கோனும் 98
அ. சிவபெருமான்

9 ஆன்மீகச் சிந்தனையில் பாரதியும் ஸ்ரீ அரவிந்தரும் 111
ச. சுப்புரெத்தினம்

10 மொழியின் இயக்கவியல் 127
ரா. செயராமன்

11 தமிழ் நாவலின் தலைமை மாந்தர் சிதைவுப் போக்கில் அம்மா வந்தாளும் சினிமாவுக்குப் போன சித்தாளும் 143
பெ. செல்வத்துரை

12 காரைக்கால் வட்டார வள்ளுவர் இனச் சடங்குகள் 160
வே. முத்தன்

13 சங்ககாலக் கபிலர் பற்றிய சிக்கல்கள் — ஓர் அறிமுகம் 175
ஆ. விஜயராணி

கட்டுரையாளர் பற்றி................ 190

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு - தேவராச வழிபாடு

அ. பாண்டுரங்கன்

தென்கிழக்காசியப் பண்பாட்டுக் கூறுகளுள் மிகவும் தனித் தன்மை வாய்ந்ததாகவும் தென்கிழக்காசிய நாடுகளுக்கே உரியதாகவும் கருதப்பெறுகின்ற தேவராச வழிபாட்டின் தொல்வடிவத்தையும் அவ் வழிபாட்டுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் இருக்கின்ற நெருக்கமான உறவுகளையும் சுட்டுவதற்கு இக் கட்டுரை முயல்கின்றது.

0. தென்கிழக்காசிய நாடுகளின் பண்பாடு, நாகரிகம், அரசியல் ஆகியவற்றில் இந்தியப் பெருநாட்டின் பங்களிப்பினை ஆராய்ந்து ஐரோப்பிய அறிஞர்கள் பல அரிய நூல்களை எழுதியுள்ளனர். இப்பண்பாட்டுப் பரவலுக்கு இந்தியப் பெரு நிலத்தின் பல பகுதிகளும் பங்காற்றியுள்ளன. தமிழகத்திற்கும் இப்பண்பாட்டு வரலாற்றில் சிறப்பான இடம் உண்டு. தென் கிழக்காசியப் பண்பாட்டுக் கூறுகளுள் மிகவும் தனித்தன்மை வாய்ந்ததாகவும், தென்கிழக்காசிய நாடுகளுக்கே உரியதாகவும் கருதப்பெறுகின்ற[1] தேவராச வழிபாட்டின் தொல்வடிவத்தை யும் (Proto form) அவ்வழிபாட்டுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக் கும் இருக்கின்ற நெருக்கமான உறவுகளையும் சுட்டுவதற்கு இக்கட்டுரை முயல்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

0.1 தேவராச வழிபாடு என்பது மன்னனைத் தெய்வமாக ஏற்றிப் போற்றும் வழிபாடாகும். இவ்வழிபாடு தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும், குறிப்பாகக் கம்போடியாவில் சிறப்பான இடம் பெற்றிருந்தது. கம்போடிய மன்னன் இரண்டாம் ஜெயவர்மன் காலத்தில் கம்போடியாவில் இவ்வழிபாடு (Cult) ஒரு தேசிய வழிபாடாகத் தொடங்கப்பட்டது. இவ்வழிபாடு பின்னர் பரம்பரை பரம்பரையாகத்தொடர்ந்தது. கம்போடிய நாட்டை வெற்றி கொண்ட தாய் (Thai) மன்னர்களிடமும் இவ்வழிபாட்டின் சாயலைக் காண முடிகின்றது.

> தேவராச வழிபாட்டின் அடிப்படை, அரசனை இந்துக் கடவுளின் அவதாரம் என்று நம்புவதாகும். அரசன் தன் அந்தணப் புரோகிதன் மூலம் தனக்கு விருப்பமான கடவுளுடன் தொடர்பு கொள்ள முடியும். தெய்வ அரசனுடைய (God-King) கோவில் மலை உச்சியில் கட்டப்படும். இம்மலைக் கோவிலிலிருந்து செய்யப்படும் பொருத்தமான சடங்குகள் (rituals) மூலம் அண்டத்தின் மையத்தில் இருப்பதாகக் கருதப்பட்ட மலைக்கோயிலாகிய சிற்றண்டத்தை (microcosm) அதனைச் சூழ்ந்துள்ள பேரண்டத்தோடு (macrocosm) ஒத்திசைந்து செல்லுமாறு செய்ய முடியும்.
>
> (ஹூப்ஸ், 1975:98)

0.2. கம்போடியாவில் கிடைக்கும் நூற்றுக்கணக்கான வடமொழிக் கல்வெட்டுகள் இவ்வழிபாடு பற்றிக் குறிப்பிடுகின்றன. தேவராசன் என்னும் தொடர் தேவர்களுக்கு இராசனாகிய இந்திரனைக் குறிக்கவில்லை; நாடாண்ட மன்னனைக் குறிக்கின்றது. தேவராசன் என்னும் வடமொழித் தொடருக்கு ஈடாக Kaamraten Jagata Taa Raajaa என்னும் கெமர் மொழித் தொடர் கி. பி. 1012 இல் பொறிக்கப்பட்ட கம்போடியக் கல்வெட்டில் காணப்படுகின்றது. "இவ் அண்டத்தின் தலைவனான கடவுள் இம்மன்னன்" என்பது இதன் பொருளாகும் (ஃபிலியோசா : 103).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> நாட்டை அரசாளும் அரசரின் ஆற்றல் சிவனிடமிருந்து சிவலிங்கத்தின் மூலமாகப் பெறப்படுவது என்றும், அச்சக்தி இலிங்கத்தில் வதிவது என்றும் அந்த இலிங்கம் மலையுச்சியில் வைத்துப் காக்கப் படல் வேண்டும் என்றும் கருதப்பட்டது. இலிங்கத்தைச் சிவனிடமிருந்து பெற்று நிறுவும் தகுதியுடையவர் புரோகிதராகிய அந்தணர் ஆவார் என்னும் நம்பிக்கையும் நிலவியது. இலிங்க வடிவமாகிய சிவன், ஆளும் அரசன், அரசவைப் புரோகிதன் ஆகிய மூவருக்குமுள்ள தொடர்பு, தேவராச வழிபாட்டின் அடிப்படையாக அமைந்தது. சிவலிங்க வழிபாடு ஆளும் அரசனை வணங்கும் வழிபாடாகவும் அமைந்தது. நாட்டின் தலைநகரத்திலோ மலை உச்சியிலோ கோயில்களில் நாட்டப்பட்ட இலிங்கம், அரசனையும் ஆண்டவனையும் குறித்தது (சிங்காரவேலு, 1981: 128).

என்று தேவராச வழிபாட்டின் கூறுகள் விளக்கப்படுகின்றன.

இவ்வழிபாடு தென்கிழக்காகிய நாடுகளில் அந்நாட்டின் இறையாண்மைக்கும் (Sovereignity) ஒற்றுமைக்கும் பேருதவி புரிந்தது. கடவுளாக்கப்பெற்ற மன்னன் (தேவராசன்) நாட்டின் ஒற்றுமைச் சின்னமாகக் கருதப்பெற்றான். எவ்வகையான முணுமுணுப்பும் எதிர்ப்பும் இன்றி மாபெரும் கலைக்கோவில்களை உருவாக்க இவ்வழிபாட்டு நெறி வழி வகுத்தது. பிற நாட்டினர் தம் நாட்டின் மீது படையெடுத்து வரும்பொழுது நாட்டிலுள்ள குழுக்கள் தத்தம் வேறுபாடுகளை ஒதுக்கி விட்டு, ஒன்றுபட்டுப் பகைவரை எதிர்த்து முறியடிப்பதற்கும் இந்நெறி பயன்பட்டது. எனவே, மன்னர்கள் தேவராச இலிங்கத்திற்குப் பகைவர்களால் எவ்வித ஊறும் நேராதவாறு பாதுகாத்தனர். இலிங்கம் பகைவர் கைகளில் அகப்படாதவாறு அதனை இடம் பெயர்த்துச் செல்வதும் உண்டு.

0.3 இலிங்க வழிபாட்டில் தொடங்கிய தேவராச வழிபாடு சில இடங்களில் உருவ வழிபாடாகவும் இருக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலிங்கத்தின் மேல் மன்னனின் உருவம் பொறித்த பொன், வெள்ளிக் கவசங்கள் சார்த்தப்பட்டன. காலப்போக்கில் இலிங்கத்திலேயே அரசனுடைய முகமும் பொறிக்கப்பெற்றது. இவ்வாறு பொறிக்கப்பட்ட இலிங்கம் முகலிங்கம் எனப் படும்.[2]

தேவராச வழிபாடு குறித்து ஹோல் விளக்குவது இங்கு கருதத்தக்கது:

> அரசனைப் போலவே பிரமுகர்களும் தங்கள் சொந்தச் சமயப் பிரிவைச் சேர்ந்த கோயில்களை அமைத்தனர். கோயில் கட்டி ஒரு விக்கிரகத்தை அமைப்பதால், வழிபடுவதற் குரியவரின், 'தூய ஆன்மா' அச்சிலையில் நிலைபெறும் என நம்பப் பட்டது. அதை அமைத்தவரின் சந்ததியார் அவ்வழி பாட்டைத் தொடர வேண்டும் எனக் கூறும் கல்வெட்டு கோயிலில் இருக்கும். அவன் இறந்ததும் அக்கோயிலே அவனது கல்லறை யாகும். இங்ஙனம் கோயிற் பிரகாரங்களிற் காணப்படும் சிவன், திருமால், ஹரிஹரன், திருமகள், பார்வதி, போதிசத்துவர் ஆகியோரின் எண்ணற்ற சிலைகள் உண்மையில் மன்னர்கள், அரசிகள், பிரமுகர்கள் ஆகியோரின் உருவங் களாகும். அச்சிலைகளில் அவர்களுடைய பெயர் கள் பொறிக்கப்பட்டிருப்பது, அவர்களுடைய சொந்தப் பெயர்கள், அவர்கள் ஐக்கியமடைந்-துள்ள தெய்வங்களின் பெயர்களுடன் இணைந் தமையைக் காட்டும். ஒவ்வொரு சிலையும் அது குறிக்கும் மனிதருக்கு இறவாமையை அளிக்கும் அபூர்வ சக்திவாய்ந்த செயற்கை வடிவமாகும் (தென்கிழக்காசிய வரலாறு, 1971: 126).

சைவ சமயச் சார்புடைய இவ்வழிபாடு வைணவ, பௌத்தச் சார்புகளுடனும் காணப்படுகின்றது. கீழைச் சாவகப் பேரரசன் ஏர்லங்கன் (Airlangga) வைணவ சமயத்தைப் போற்றினான்; பெலகன் (Pelagan) அருங்காட்சியகத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருடன் மேலமர்ந்துள்ள திருமாலின் திருவுருவம் இம்மன்னனின், சாயலில் வடிக்கப்பட்டுள்ளது. மத்திய சாவகத்திலுள்ள போரோபுதூர் (Borobudur) பௌத்த விகாரையில் காணப் பெறும் புத்தரின் திருவுருவங்கள் ஸ்ரீ விசயத்தை ஆண்ட சைலேந்திர (Sailendra) மன்னர்களின் சாயலில் உள்ளன. இவ்வாறு மானிட வடிவில் இறைவன் திருமேனிகள் தென்கிழக் காசிய நாடுகளில் வடிக்கப்பட்டதால், இந்தியாவில் காணப் பெறும் தெய்வத் திருமேனிகளுக்கு இடையிலுள்ள ஒருமையைப் போன்ற ஒருமையைக் காண முடியவில்லை.

1. தென்கிழக்காசிய நாடுகளில் பெருவழக்குப் பெற்றுச் சிறப்பிடம் பெற்றிருந்த தேவராச வழிபாட்டின் மூலம் யாது? இவ்வழிபாட்டுக்கும் தமிழகப் பண்பாட்டுக்கும் ஏதேனும் ஒரு வகையான தொடர்பு இருக்குமா? இவ்வினாக்களுக்குரிய விடை களைக் காண்போமாயின் தென்கிழக்காசிய நாடுகளின் இந்தியப் பண்பாட்டைப் பரப்பியதில் தமிழகத்தின் பங் களிப்பைத் துல்லியமாக மதிப்பிட இயலும். அவ்வகையில் இக்கட்டுரை ஒரு முன் முயற்சியாக அமைகின்றது.

1.1. மன்னர்களைத் தெய்வத்தோடு உவமித்துக் கூறுதல் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையான கூறுகளில் ஒன்றாகும். தொல்காப்பியப் பொருளதிகார வெட்சித் திணையில் இடம் பெறும் பூவை நிலை மன்னைத் திருமாலோடு ஒப்பிடுகின்றது (பொருளதிகாரம் : 63). முறை செய்து காப்பாற்றும் மன்னன் மக்களின் இறைவன் என்கிறார் திருவள்ளுவர் (திருக்குறள் :388). மன்னனைத் திருமாலாகவே பாடுகின்றார் நம்மாழ்வார் (திருவாய்மொழி: 4 : 4 : 8). சிந்தாமணியில் அரசன் "மாதெய்வம்" என்று குறிக்கப் பெறுகின்றான் (சீவக சிந்தாமணி: 247). கலிங்கத்துப் பரணியில் குலோத்துங்கன் திருமாலின் அவதாரம் எனச் சுட்டப்பெறுகின்றான் (கலிங் கத்துப்பரணி, இராச பாரம்பரியம்: 232-34)[3]. காலப் போக்கில் இக்கருத்து வலிமை பெறுவதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவாக்குகின்றன.

1.2. சங்க கால அரசர்களின் பெயர்ப் பட்டியலில் சிலருடைய பெயர்கள் "துஞ்சிய" என்னும் அடையுடன் காணப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுகின்றன[4] சிலப்பதிகாரத்தில், "அரசுக் கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்" என்று கூறப்பட்டுள்ளது (சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம்: கட்டுரைகாதை: கட்டுரை 17-18). திருத்தொண்டத் தொகையில் சுந்தரர், புகழ்ச் சோழ நாயனாரைக் "கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழர்" (சுந்தரர் தேவாரம்: திருத்தொண்டர் தொகை: 7) என்று பாடுகிறார். 'துஞ்சிய' என்ற சொல் 'இறந்த' என்னும் பொருளுடையது. கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழர் என்னும் தொடர் கருவூரில் இறந்த புகழ்ச் சோழர் என்று பொருள்படும். இவ் அடை இறந்த இடத்தைக் குறிக்கின்றது. சிலருடைய பெயர்களுக்கு மட்டும் இவ் அடை கொடுக்கப்பட்டிருப்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. இவர்கள் இறந்த இடத்தில் இவர்களை நினைவுகூரும் ஒரு குறியீடு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதுவதற்கு இடமுண்டு. இத்தகையோரைப் பிறரிடமிருந்த வேறுபடுத்திக் காட்டுதற்குத் 'துஞ்சிய' என்னும் அடை பயன் படுத்தப்பட்டுள்ளது தெளிவு.

1.3. போர்க்களத்தில் வீரப்போர் புரிந்து இறந்தவர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கத்தைத் தொல்காப்பியம் குறிக்கின்றது. இந்நடுகல் வழிபாடு தொல்காப்பியத்திலும் (பொருளதிகாரம்: 63) புறப்பொருள் வெண்பா மாலையிலும் (பொதுவியல் படலம்: 1) விளக்கமாகக் கூறப்படுகிறது. புறநானூற்றில் நடுகல் வழிபாடு குறிக்கப்படுகின்றது (புறநானூறு: 260, 261, 263, 264, 306, 314, 329, 335). கோப்பெருஞ்சோழனுக்கும் அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் நடுகற்கள் இருந்தன (புறநானூறு: 221, 223, 232).

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டறியப் பட்ட சில நடுகற்கள், கோவில் அமைப்புக்கு முன்னோடியாக உள்ளன. மூன்று பக்கங்களில் பலகைக் கற்களை ஊன்றி, அவற்றின் மேல் மற்றொரு பலகைக்கல்லால் அவை மூடப்பட்டு, கல்லறை போன்றும் திண்ணை போன்றும் காட்சியளிக்கின்றது. இதனுள் உருவமும் பெயரும் பொறிக்கப்பட்ட நடுகல் உள்ளது (கல்வெட்டியல், 1972: 149). தொல்காப்பியர் குறிக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடுகல்லோடு தொடர்புடைய பெரும்படை இதுவே ஆகலாம். புறப்பொருள் வெண்பா மாலை இதனை "இல்" என்றே குறிக்கின்றது. புறநானூறு இதனைப் "பதுக்கை" என்கின்றது (புறநானூறு: 3, 264). இறந்தவர் உடலை அடக்கம் செய்தல் கம்பராமாயணத்தில் "பள்ளி படை" எனப்படுகிறது (அயோத்தியா காண்டம்: பள்ளி படைப்படலம்)[5]. தொல்காப்பியம் குறிக்கும் "பெரும்படை" யும் கம்பராமாயணம் குறிக்கும் "பள்ளி படை"யும் ஒப்பு நோக்கத் தக்கன.

2. நடுகல்லின் வளர்ச்சியாகப் பள்ளிப்படை அமைகின்றது. பல்லவ, பாண்டிய, சோழர்கள் ஆட்சி செய்த இடைக்காலத் தமிழகத்தில் பல பள்ளிப்படைகள் இருந்தமையைக் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகின்றது. இவை முதலில் போரில் இறந்த அரசர்களுக்காக அவர்கள் இறந்த இடங்களில் கட்டப்பட்டன. நாளடைவில் அவை அவர்கள் நினைவைப் போற்றும் முறையில் வேறு இடங்களிலும் கட்டப்பட்டன. அரசர்களுக்கு மட்டுமின்றி அரசமாதேவியர்க்கும் பள்ளிப்படைகள் எழுப்பப் பட்டன.

2.1. பல்லவர்கள் கி.பி.880இல் நடைபெற்ற திருப்புறம்பியப் போரில் தங்களுக்குத் துணைநின்று போரில் மடிந்த கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதிக்குத் திரும்புறம்பியத்தில் பள்ளிப்படை எழுப்பினர் (பாண்டியர் வரலாறு, 1972:72). முதல் பராந்தகன் போரில் இறந்த தன் தந்தை ஆதித்தனுக்குக் காளத்திக்கு அருகிலுள்ள தொண்டைமானாட்டில் ஆதித்தேசுரம் என்னும் பள்ளிப்படையைக் கட்டினான். முதலாம் இராசராசன் ஆற்றூரில் போரில் இறந்த தன் தந்தை அரிஞ்சயனுக்கு அரிஞ்சிகை ஈச்சுரம் என்னும் பள்ளிப்படையை மேல்பாடியில் கட்டினான். இராசராசன் மனைவி பஞ்சவன் மாதேவியின் பள்ளிப்படை கும்பகோணத்தை அடுத்துள்ள இராம நாதன் கோவில் என்னும் சிற்றூரில் உள்ளது (நீலகண்ட சாஸ்திரி, 1955: 453). வீரபாண்டியன் தன் தமையன் சுந்தரபாண்டியனுக்குப் பள்ளிப்படைக் கோவில் எடுத்தான். அக்கோவில் பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஈச்சுரம் என்றும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூலவராகிய இலிங்கம் சுந்தரபாண்டிய தேவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளன (இராமன், 1977: 278).

2.2. இடைக்காலச் சைவ சமய வரலாற்றில் லகுளீச பாசுபத சமயப் பிரிவினர் மன்னர்களிடத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தமையைத் தமிழக வரலாறு தெளிவு படுத்துகின்றது. இவர்கள் மகாவிரதிகள் என்றும் மாவிரதிகள் என்றும் போற்றப்பட்டனர். லகுளீச பாசுபதத் துறவிகள் தங்கிய மடம் மயானம் என்று குறிக்கப்பெறுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. திருவொற்றியூரில் சைவ மடம் மயான மடம் என்று அழைக்கப்பட்டது (திருஞானசம்பந்தர் தேவாரம், மூன்றாம் திருமுறை, 1955: உள). ஈசான சிவ பண்டிதர், சர்வசிவ பண்டிதர், இலகுளீசுவர பண்டிதர், சதுரானன பண்டிதர் போன்ற காளாமுகத் துறவிகள் சோழ மன்னர்களின் ஆசாரியர்களாகச் செல்வாக்குடன் விளங்கினர். மன்னன் தன் ஆணையைத் தானே மறு ஆய்வு செய்துகொள்ளும் அளவுக்கு இவர்கள் சோழமன்னர்களின் அவையில் செல்வாக்குப் பெற்றிருந்தனர் (நீலகண்ட சாஸ்திரியார், 1955: 452, 642, 648—49). இவர்கள் மன்னர்களுக்குத் தீக்கை அளித்தனர். தீக்கையின்போது மன்னர்கள் புதிய பெயரைச் சூட்டிக் கொள்ளுதல் மரபு. முதலாம் இராசராசன் தீக்கை பெற்றுக் பெற்றுக்கொண்டபோது சிவபாதசேகரன் என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டான். ஆதித்தன் தன் ஆசாரியரான வாதீசுவர பண்டிதரிடம் தீக்கை பெற்று, அவருடைய பெயரையே தீக்கைப் பெயராக ஏற்றுக்கொண்டான். அவனுடைய பள்ளிப் படைக்கோவிலில் உள்ள இலிங்கம் வாதீஸ்வரர் என்று அழைக்கப்பெறுகின்றது,

2.3 பள்ளிப்படைக் கோவில்களை மன்னர்களின் சமாதிக் கோவில்கள் எனக் குறித்தோம்[5]. பள்ளிப் படைகளைச் சைவ சமயத்தோடு இணைப்பதற்கு முயற்சிகள் நடந்துள்ளன. திருமந்திரம் சமாதிக் கோவில்களுக்கு உரிய கிரியைகளை விளக்குகின்றது (திருமந்திரம்: ஏழாம் தந்திரம்: சமாதிக் கிரியை)[7]. பள்ளிப்படை ஆகம சமயத்தோடு இணைக்கப்பட்டு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதற்குச் சமுதாய ஒப்புதல் பெற முயற்சி நடைபெற்றுள்ளது.

பள்ளிப் படைக் கோவில் மாவிரதியர் என்னும் துறவிகளின் மேற்பார்வையில் இருந்ததை மேலே குறித்தோம். மாவிரதிகள் ஐந்து தலை மயிர்களால் திரிக்கப்பட்ட பூணூலை அணிந்திருப்பர்; இப்பூணூல், பூணல் என்றும் பூண நூல் என்றும் பஞ்சவடி என்றும் சைவ சமய இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றன. சிவபெருமான் தலைமயிரால் திரிக்கப்பட்ட பூணலை அணிந்திருப்பதாகத் திருநாவுக்கரசர் பாடுகின்றார். (திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், தலமுறை, 1957: 38:1:1; 38;1:4; 38:5:2; 38:6:2).

மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில் மாவிரதியர் வடிவில் சிவபெருமான் நாயனாரின் மகள் திருமணத்தின்போது எழுந்தருளி, மணப்பெண்ணின் அழகிய நீண்ட கூந்தலைத் தனக்குப் பஞ்சவடியாகப் பயன்படுத்த அரிந்து தருமாறு வேண்ட, நாயனாரும் அரிந்து கொடுத்துத் தம் சிவபக்தியை நிலைநாட்டுகின்றார் (பெரியபுராணம்: மானக்கஞ்சாற நாயனார் புராணம்).[9]

2.4 பள்ளிப் படைக் கோவில்களில் இலிங்க வழிபாடு நடைபெற்றது. மன்னர்கள் கட்டிய கோவில்களில் அரசன், அரசியருடைய உருவச் சிலைகளும் காலப் போக்கில் வழிபாடு செய்யப்பட்டன. சுந்தர சோழன் உருவம் தஞ்சைப் பெரிய கோவிலில் வைக்கப்பட்டு, வழிபாட்டுக்குரிய அறக்கொடைகள் குந்தவைப் பிராட்டியால் ஏற்படுத்தப்பட்டன. இராச ராசனும் அவனுடைய மனைவி உலோகமாதேவியும் அதே கோவிலில் வழிபாடு செய்யப்பட்டனர்; செம்பியன் மாதேவியில் உள்ள கோவிலில் செம்பியன் மாதேவின் உருவச்சிலை வழிபடப்பட்டது. இராசேந்திரன், சோழமாதேவி ஆகியோரின் பெயர்கள் பொறிக்கப்பட்ட படிமங்கள் தஞ்சைப் பெரிய கோவிலிலும், காளத்தியிலும் உள்ளன (நீலகண்ட சாஸ்திரியார், 1955: 453). இங்கு, பாச கவியின் வடமொழிநாடகமான பிரதிமா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாடகக் காட்சி ஒப்பிடத் தக்கது. இந்நாடகத்தில் அரசர்கள் தங்கள் முன்னோரின் சிலைகளை வழிபடுகின்ற காட்சி அமைந்துள்ளது.

2.5. கோவில்கள், பள்ளிப் படைகள் ஆகிய இரண்டும் அவற்றைக் கட்டிய அல்லது யாருக்காக அவை கட்டப் பட்டதோ அவர்களின் பெயர்களோடு இணைக்கப்பட்டுள்ளன. இராச ராசனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெரிய கோவில் இராசராசேச்சுரம் எனப்படுகிறது; ஆதித்தனுக்காக எழுப்பப் பட்ட பள்ளிப் படை ஆதித்தேச்சுரம் எனப்படுகின்றது. இப் போக்கினைத் தென்கிழக்காசிய நாடுகளிலும் காண முடிகின்றது. சம்பாவில் பத்ரவர்மன் சிவபெருமானுக்குக் கட்டிய கோவில் பத்ரேச்சுவரம் எனப்பட்டது. சிவனாகிய பத்ரேசுவரர் கோவில் என்பது இதன் பொருளாகும். இராசராசேச்சுரம் என்பதையும் இராச ராசனாகிய ஈச்சுரன் அமர்ந்துள்ள கோவில் என்று நாம் விளக்கலாம். இவ்வாறு விளக்கினால் தேவராச வழிபாட்டின் தொல் வடிவத்தைத் தமிழகத்தில் காண இயலும். மேலும், தென்கிழக்காசிய நாடு களில் போன்றே இங்கும் சில மன்னர்களில் உருவச் சிலை களில் அவர்களுடைய ;பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பதை அறிகின்றோம். தென்கிழக்காசிய நாடுகளில் காணப்பெறுகின்ற தேவராச வழிபாடு தமிழக வழிபாட்டின் வளர்ச்சி என்பதனை இச்சான்றும் தெளிவாக உணர்த்துகின்றது.

ஆனால், தமிழ் நாட்டில் பள்ளிப் படைக் கோவில்கள் வழி பாட்டு நிலையில் சிறப்பிடம் பெறவில்லை என்பதும் இங்கு நினைக்கத் தக்கது. பள்ளிப்படைக் கோவில் கல்வெட்டுகள் சிலவற்றில் 'பள்ளிப்படை' என்ற தொடரை அழிக்கும் முயற்சிகள் நடைபெற்றிருப்பதைப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் சுட்டிக் காட்டியுள்ளார் (சோழர்கள், 1955: 453).

3. தேவராசஇலிங்கம் கம்போடியாவில் மலைக்கோயிலில் அமைக்கப்பட்டது. தேவராச வழிபாட்டைத் தோற்றுவித்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாகக் கூறிக் கொள்ளும் இரண்டாம் சயவர்மன் இவ்வழி பாட்டை மகேந்திர மலையில் தொடங்கினான். சைவ புராணங்களில் சிவபெருமான் உறைவிடம் கைலை மலையாகக் கூறப்படுகின்றது. ஆனால், சைவ ஆகமங்கள் சிவபெருமானை மகேந்திர மலையோடு தொடர்புபடுத்துகின்றன. சிவபெருமான் மகேந்திர மலையிலிருந்து ஆகமங்களை அருளினார் என்று மாணிக்க வாசகர் பாடுகின்றார் (திருவாசகம்: கீர்த்தித் திரு அகவல், 9-10. கம்போடியக் கல்வெட்டும் மகேந்திர மலையைத் தேவராசன் இருப்பிடமாகக் கூறுகின்றது.

3.1. தேவராசன் என்னும் தொடரில் தேவர் என்னும் சொல் அரசனைக் குறிக்கின்றது. தமிழகத்தில் சோழ, பாண்டிய மன்னர்களின் பெயர்கள் தேவர் என்று முடிவது அனைவரும் அறிந்ததாகும். இராசராச தேவர், இராசேந்திர சோழ தேவர், சுந்தர பாண்டிய தேவர் என வரும் பெயர்களில் "தேவர்", அரசனாகிய தெய்வத்தைக் குறிக்கின்றது இடைக்கால இலக்கியமான சிந்தாமணி, மன்னனை "மாதெய்வம்" என்று குறிப்பிடுவதை முன்னரே சுட்டினோம். சமகாலச் சிந்தனை களையே சிந்தாமணி காட்டுகிறது எனலாம். தேவராசன் என்பது அரசர்க்கு அரசன், இராஜ ராஜன் என்று பொருள் படுவதாகும். சிவபெருமான் தேவர்களுக்கெல்லாம் இராசனாக - தேவராசனாக - இருப்பது போன்று சைவ சமயத் தீக்கை பெற்ற மன்னனும் தேவராசனாகிய சிவனாராகின்றான்; அவ்வாறு ஆன அளவில் அவன் வழிபாட்டுக்கு உரியவன் ஆகின்றான்.

3. 2. தேவராச வழிபாடு தொடங்கப்பட்டபோது என்னென்ன கிரியைகள் நடைபெற்றன? அவற்றை யார் யார் நடத்தினார்கள்? என்பன போன்ற ஐயங்களுக்குக் கம்போடிய மன்னன் இரண்டாம் உதயாதித்யனின் டோக் கக் தோம் (Sdok Kak Thom) கல்வெட்டு விரிவாகக் கூறுகின்றது. அக் கல்வெட்டு தருகின்ற செய்திகளைச் சுருக்கமாகக் காண்போம்:

ஸ்ரீ மகேந்திர பர்வதத்தில் ஸ்ரீ பரமேசுவரன் (இரண்டாம் சயவர்மன்) தேவராசனை நிறுவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னான். சிவ கைவல்யர் என்னும் அந்தணர் மன்னனின் ஆசாரியர். தேவராச வழிபாட்டைத் தொடங்குவதற்காக ஜனபதத்திலிருந்து இரண்ய தாமனை மன்னன் வரவழைத்தான். காம்போச நாடு இனிமேல் சாவகத்திற்கு அடிமையாக இருக்கக் கூடாது என்பதற்காகவும் மன்னன் சக்கரவர்த்தியாக ஓங்க வேண்டும் என்பதற்காகவும் தேவராச வழிபாடு இயற்றப்பட்டது. இரண்ய தாமன் பற்பல மந்திரங்களை உச்சரித்துத் தேவராச இலிங்கத்தைப் பிரதிட்டை செய்தான். அவன் இம்மந்திரங்களை அரசனின் ஆசாரியரான சிவ கைவல்யருக்குக் கற்பித்தான். சிவ கைவல்யர் இம்மந்திரங்களைச் சுவடிகளில் பதிவு செய்து கொண்டார். இரண்ய தாமனிடமிருந்து சிவ கைவல்யர் பிராமவினாசிகம், நயோதரம், சம்மோகம்,சிர்ச்சேதம் என்னும் நான்கு முக்கியமான ஆகமங்களைக் கற்றுக்கொண்டார். ஈசான மூர்த்தி, ஆத்ம சிவன், சதாசிவன் போன்ற பலர் கம்போடிய மன்னர்களின் ஆசாரியர்களாக இருந்தனர். அவர்கள் மன்னர்களிடமிருந்து அறக் கொடைகளைப் பெற்றனர் (டாவி டாவீவர்ன், 1982:487-88).

3 3. இக்கல்வெட்டு தேவராச வழிபாடு ஆகம வழிபாடு என்பதைத் தெளிவாக்குகின்றது. கல்வெட்டுக் குறிக்கும் ஆகமங்கள் சைவசமயத்திற்கு உரியவை; தென்னாட்டில் இயற்றப்பட்டவை. மன்னன் தீக்கை பெற்றுத் தேவராசன் ஆகின்றான். தீக்கைஅளித்த இரண்ய தாமன் கம்போடிய நாட்டவன் அல்லன்; இந்தியாவிலிருந்து சென்றவன்; அவன் தென்னிந்தியன் ஆகலாம்.

தமிழகத்திலும் சோழ மன்னர்கள் தீக்கை பெற்றுக் கொண்டனர். ஆதித்தன் வாதீசுவர பண்டிதர் என்று தன் ஆசாரியரின் பெயரைத் தீக்கைப் பெயராகப் பெற்றான்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலாம் இராச ராசன் சிவபாத சேகரன் என, தீக்கைப் பெயர் பெற்றான் என்பதை முன்னரே எடுத்துக் காட்டினோம். இரண்டையும் இணைத்துக் காணும்போது தேவராச வழிபாடு தமிழ் நாட்டில் இருந்த பள்ளிப் படைக் கோவில் வழிபாட்டின் வளர்ச்சி எனத் தோன்றுகின்றது. தென்கிழக்காசிய நாடுகளில் தேவராச வழிபாட்டுக் கோவில்களில் மன்னர்களின் உருவச் சிலைகள் இடம் பெற்றது போன்று, தமிழகக் கோவில்களிலும் மன்னர்களின் சிலைகள் வழிபாட்டில் இருந்தன. காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்தப் பெருமாள் கோவில் என்று அழைக்கப் பெறும் பரமேசுவர விண்ணகரத்தில் பல்லவ குல முன்னோர்களின் சிலைகள் கோவிலின் பிரகாரத்தில் உள்ளன. பிரம்பனனின் (Prambanan) உள்ள நூற்றி ஐம்பத்தாறு சுற்றுக் கோவில்களிலும் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைகள் சைலேந்திர அரச மரபினர் சிலைகள் என்பது இங்கு ஒப்பிடத் தக்கது. தமிழகத்திற்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இருந்த தொடர்புகளை இது உறுதிப்படுத்துகின்றது.

3.4 கிறித்தவ சகாப்தத்திற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டு வணிகர்கள் தங்கள் கப்பல்களைக் கீழைக் கடல் நாடுகளுக்குச் செலுத்தி வாணிகம் செய்தனர். அதியமானின் முன்னோர் விண்ணுலகிலிருந்து கரும்பைக் கொணர்ந்தனர் என்று ஔவையார் பாராட்டுவது (புறநானூறு: 99, 392) வெறும் புகழுரை அன்று. அது கீழை நாடுகளிலிருந்து அதியமானின் முன்னோர் கரும்பைக் கொணர்ந்ததையே குறிக்கின்ற வரலாற்று நிகழ்ச்சி ஆகும். அகத்தியர் கடலைக் குடித்தார் என்னும் தமிழ்ப் புராண மரபுகள் அவர் கடல் கடந்து தென்கிழக்காகிய நாடுகளுக்குச் சென்றதைக் குறிக்கும். சாவகத்தில் அகத்தியர் "படார குரு" என்று போற்றப்பெறுகின்றார். அவருடைய சிலைகள் அங்கே மிகுதியாகக் காணப் படுகின்றன.

தாய்கள் (Thais) கம்போடிய நாட்டுக் கெமர்களை (Khmer) வென்று தனியரசைத் தொடங்கினர். தாய் மன்னர்களும் மக்களும் பௌத்தர்களாக இருந்தும், கம்போடிய இந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன்னர்களின் தாக்கத்தால் தேவராச வழிபாட்டைப் பின் பற்றினர். அவ்வழிபாட்டின் விளைவாகத் தோன்றிய ஊஞ்சல் திருவிழாவில் தாய் மன்னர்கள் சிவனாராகவே வந்து மக்களுக்குக் காட்சி கொடுத்து வரம் தருவதை (பரிசு அளிப்பதை) அறிஞர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். இவ்விழாவில் திருப்பாவையும் திருவெம்பாவையும் மந்திரங்கள் போன்று ஓதப்பெறுகின்றன. அரசர்கள் முடிசூட்டு விழாக்களிலும் இவை ஓதப்பெற்றன. இதனை ஓதும் அந்தணர்கள் இராமநாத புரத்திலிருந்து வந்ததாகவும் கைலாயத்திலிருந்து வந்ததாகவும் கூறுகின்றனர். கயிலாய பரம்பரை என்று இவர்கள் கூறுவதை திருவாவடுதுறை, தருமபுரம் ஆகியவற்றோடு இணைத்துக் காண்கிறார் ஃபிலியோசா (இந்தியாவும் கம்போடியாவும்: 99). இவ்விரு மடங்களும் திருக்கைலாய பரம்பரை என்று தம்மைச் சிறப்பித்துக் கொள்கின்றன. இம்மடங்களோடு தொடர்புடைய அந்தணர்களே அங்குச் சென்று நிலையாகத் தங்கி இவ்வாறு கூறுகின்றனர் என்பர் ஃபிலியோசா. இவ்வந்தணர்கள் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்று வழங்கும் பஞ்ச பிரம மந்திரங்களின் பெயர்களையே தத்தம் பெயர்களாகக் கொண்டுள்ளார்கள் (தெ. பொ. மீ., 1978: ii–iii). கம்போடியாவில் இன்று "பகு" என்கின்ற அரசவை அந்தணர்கள் வாழ்கின்றனர். அவர்கள் குடுமியும் பூணூலும் கொண்டு விளங்குகின்றார்கள். இன்றைய தென் வியத்நாம் பண்டைக் காலத்தில் சம்பா என்ற இந்து நாடாக விளங்கிய போது, அங்கே குடியேறிய அந்தணர்களின் மரபினர் இன்றும் வாழ்கின்றனர். அவர்கள் இப்பொழுது இசுலாமியர்களாக மாறியபோதும் தங்கள் பெயர்களோடு ஆசாரியர், குரு என்னும் பட்டங்களைப் புனைந்து கொள்கின்றனர். அந்தணரில் சிலர் "பஸ்ஸே" என்றும் அழைக்கப்பெறுகின்றனர். இது 'தபஸ்வி' என்னும் சொல்லின் திரிபு என்பர் அறிஞர் (தெ. பொ. மீ., 1978:23). இவை அனைத்தும் தென் கிழக்காசிய நாடுகளில் தமிழ் நாட்டு அந்தணர்கள் பெற்றிருந்த சிறப்பான இடத்தைத் தெளிவாக்குகின்றன.

4. கடல் கடந்து சென்று, தென்கிழக்காசிய நாடுகளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடியேறிய வணிகர்களும் அரசர்களும் இந்திய நாட்டுப் பண்பாட்டை அந்நாடுகளில் பரப்பினர். தங்கள் ஆக்கப் பணிகளுக்கு இந்தியர்கள் அந்தணர்கள், துறவிகள், சிற்பிகள் ஆகியோரை அழைத்துச் சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் தமிழர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர். அதியமான் பற்றி முன்னரே குறித்தோம். பல்லவர்களுக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இருந்த தொடர்பு வரலாற்று ஆசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பாண்டியர்களுக்கும் சோழநாட்டு அந்தணன் கௌண்டிண்யனுக்கும் இந்நாடுகளோடு இருந்த தொடர்புகள் தெளிவாகி வருகின்றன.

இவ்வுண்மைகளைப் போன்றே தேவராச வழிபாடும் தமிழ் நாட்டிலிருந்து சென்ற ஒரு வழிபாடாகும். பள்ளிப் படைக் கோவிலை ஆகம அடிப்படையில் மாற்றியபோது தேவராச வழிபாடு தோன்றியது எனலாம். ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோரால் பாடப் பெற்ற திருப்பதிகள் இல்லாத தென் கிழக்காசிய மக்களின் சமயத் தேவைகளை நிறைவு செய்வதற்குத் தேவராச வழிபாடு உதவியது; எனவே, அவ்வழிபாடு அந்நாடுகளில் சிறப்பிடம் பெற்றது என்று கருதுவது பொருத்தமாகும்.

அடிக்குறிப்புகள்

1. D.G.E. ஹோல் (தென்கிழக்காசிய வரலாறு), H.H.E. லூப்ஸ் (Mainland South East Asia), டாவி டாவிவர்ன் (Brahmanism in South East Asia), க. அ. நீலகண்ட சாஸ்திரி (The Colas) போன்றோர் இவ்வாறு கருதுகின்றனர்.

2. இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் சில இடங்களில் முகலிங்கங்கள் வழிபாட்டில் உள்ளன.

3. அன்றிலங்கை பொருதழித்த அவனே அப்
   பாரதப்போர் முடித்துப் பின்னை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வென்றிலங்கு கதிராழி விசயதரன்
எனஉதித்தான் விளம்பக் கேண்மின்.
தேவரெலாங் குறையிரப்பத் தேவகிதன்
திருவயிற்றில் வாசுதே வற்கு
மூவுலகுந் தொழநெடுமால் முன்னொருநாள்
அவதாரஞ் செய்த பின்னை
இருள்முழுது மகற்றும் விது குலத்தோன்தேவி
இகல்விளங்கு தபனகுலத் திராச ராசன்
அருள்திருவின் திருவயிற்றில் வந்துதோன்றி
ஆலிலையி னவதரித்தா னவனேமீள.
— கலிங்கத்துப் பரணி: அவதாரம்,
தாழிசைகள், 232-34.

4. காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன், சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் வெள்ளி யம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி.

5. இப்படலத்துக்குப் பாட வேறுபாடாக வேறு பெயரும் உண்டு. பள்ளியடைப் படலம், பள்ளியரைப் படலம், பள்ளிப் படலம் என்று சுவடிகளில் வேறுபடுகின்றன.

6. சில பள்ளிப் படைக் கோவில்களை எடுத்துக் கட்டிய பொழுது, கோவில்களின் கருவறைகளில் மனித எலும்புகள் இருந்ததாகக் கல்வெட்டு ஆண்டறிக்கை கூறுகின்றது (ARA-1915-16).

7. சிவதீக்கை பெற்றவர்களின் உடலை எரிக்கக் கூடாது; நாய், நரி முதலிய விலங்குகள் உண்ணுமாறு எறிந்துவிடச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடாது. தீக்கை பெற்ற சிவஞானியின் உடலைச் சமாதிப் படுத்த வேண்டும். இறந்தவர் உடலைச் சமாதிக் குழியில் பத்மாசனத்தில் அமரச் செய்து குழியை மூட வேண்டும். சமாதியின் மேல் அரசமரத்தை நடலாம்; சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்யலாம். இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட சமாதி, குகை என்றும் அழைக்கப்படும். இக்குகையைக் கருவறையாகக் கொண்டு முன்னால் மண்டபங்கள் கட்டி, கோவிலாக மாற்றலாம். (திருமந்திரம்: ஏழாம் தந்திரம் — சமாதிக் கிரியை).

8. அ. பூதத்தின் படையர் பிரம்பின் பூணினர் பூண நூலர் (38 : 1 : 1)

ஆ. தலையினால் தரித்த என்பும் தலைமயிர் வடமும் பூண்ட
விலையிலா வேடர். . . (38:1:4)

இ. சவந்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு தலையொடு மயிர்க் கயிறு தரித்தான் தன்னை (38:5:2)

ஈ. பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர் (38:6:2)

9. அ... மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தல் ..
அணங்கிவள் தன்மயிர் நமக்குப் பஞ்சவடிக்காம் என்றார் .
(பெரியபுராணம்: மானக்கஞ்சாற நாயனார் புராணம், 29)

ஆ. பூங்கொடிதன், இருள்செய்த கருங்கூந்தல் அடியில் அரிந்து எதிர்நின்ற மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க் கரத்தின் இடையிலிட (பெரியபுராணம்: மானக்கஞ்சாற நாயனார் புராணம், 30)

துணைநூல் பட்டியல்

1 இராமன், கே. வி., பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், முதல் பதிப்பு, சென்னை,. 1977.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. கம்பராமாயணம், கம்பன் கழகம், முதல் பதிப்பு, சென்னை, 1976.

3. கலிங்கத்துப் பரணி, கழகம், ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1965.

4. சதாசிவ பண்டாரத்தார், T. V., பாண்டியர் வரலாறு, எட்டாம் பதிப்பு, கழகம், சென்னை, 1972.

5. சிங்காரவேலு, ச., தென்கிழக்காசியாவில் இந்து சமயச் செல்வாக்கு, தமிழாய்வு, தொகுதி: 12, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1981.

6. சிலப்பதிகாரம், உ.வே. சாமிநாதையர், தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1968.

7. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், தலமுறை, ஸ்ரீவைகுண்டம், 1958.

8. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், கழகம் ,மூன்றாம் பதிப்பு, சென்னை, 1941.

9. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், தலமுறை, ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1957.

10. திருமந்திரம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம், ஸ்ரீவைகுண்டம், 1960.

11. திருவாசகம், முதல் பகுதி மூலம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1964.

12. திருவாய்மொழி, நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திரு வேங்கடத்தான் திருமன்றம், முதல் பதிப்பு, சென்னை, 1973.

13. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம், இரண்டாம் பதிப்பு, கழகம், சென்னை, 1956.

14. நாகசாமி, இரா., நடுகல், கல்வெட்டியல் (பதிப்பு), இரா. நாகசாமி et al, தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு, முதற்பதிப்பு, சென்னை 1972.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

15. புறநானூறு மூலமும் பழைய உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், ஏழாம் பதிப்பு, சென்னை, 1971.

16. புறப்பொருள் வெண்பா மாலை மூலமும் சாமுண்டி தேவநாயகரியற்றிய உரையும், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, ஒன்பதாம் பதிப்பு, சென்னை, 1963.

17. பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து வெளியீடு, 1950.

18. மீனாட்சி சுந்தரனார், தெ. பொ., தாய்லாந்தில் திருவெம்பாவை திருப்பாவை, சர்வோதய இலக்கியப் பண்ணை, இரண்டாம் பதிப்பு, மதுரை, 1978.

19. ஹோல், D. G. E., தென்கிழக்காசிய வரலாறு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், முதலாம் பதிப்பு, கொழும்பு, 1971.

20. Daweewarn, Dawee, Brahmanism in Sonth East Asia, Sterling Publishers rrivate Ltd., New Delhi, 1982.

21. Filliozat, Jean, New Researches on the Relations between India and Combodia, Tamil Culture.

22. Loofs, H.H.E., Mainland South-East Asia in the Civilizations of Monsoon Asia, ed. Bhasam, A.L., S S. Chand and Co. (P) Ltd., New Delhi, 1974.

23. Nilakanda Sastri, K.A. The Colas, University of Madras, second edition, 1955.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாவல் இலக்கிய அணுகுமுறைகள்

ம. மதியழகன்

நாவல் இலக்கியத்தைப் பல்வேறு வகையான அணுகு முறைகளால் நோக்கி ஆராய்ந்து வருகின்றனர். பழைய நாவலைப் பார்த்த அணுகுமுறைகள் புதிய நாவலுக்குப் பொருந்தி வருவதில்லை. ஒவ்வொரு நாவலுக்குமேற்ற அணுகுமுறைகள் தேவை என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

இலக்கிய அணுகுமுறை என்பது இலக்கியத் திறனாய்வு முறைகளில் ஒன்றாகும். ஒரு படைப்பின் பன்முகப்பட்ட சிறப்புக் கூறுகளை எடுத்து விளக்க இவ்வணுகு முறைகள் உதவுகின்றன. "Wilber Scott" — ஆல் எழுதப்பட்ட "Five Approaches to Literary Criticism" - முதற்கொண்டு பலவகை அணுகுமுறைகள் இன்று வெளிப்படுத்தப்பட்டுப் பயன் படுத்தப்படுகின்றன. நீதியியல் அணுகுமுறை, உளவியல் அணுகு முறை, சமூகவியல் அணுகுமுறை, உருவவியல் அணுகுமுறை, வாழ்க்கை வரலாற்றியல் அணுகுமுறை, அமைப்பியல் அணுகு முறை, தொல்படிம அணுகுமுறை, குறியீட்டியல் அணுகு முறை போன்ற அணுகுமுறைகள் குறிப்பிடத் தக்கவை.

இவ்வணுகு முறைகளையெல்லாம் பொது அணுகுமுறைகள் எனலாம். அதாவது, சமூகவியல் அணுகுமுறை என்பதைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7790

சங்க இலக்கியங்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம். புதுக் கவிதைகளுக்கும் அப்பார்வையைச் செலுத்தித் திறனாய்வு செய்யலாம் நாவல் இலக்கியத்திற்கும் அவ்வணுகு முறையைக் கையாளலாம். ஆனால், சிறப்பு அணுகுமுறைகள் என்பது இவற்றிலிருந்து வேறுபட்டது. தொடக்ககால நாவல்களி-லிருந்து இன்றைய நாவல்கள் வரை பல்வேறுபட்ட ஆயிரக் கணக்கான நாவல்கள் எழுந்துள்ளன. பிரதாப முதலியார் சரித்திரத்தைப் பார்த்த பார்வையில் கோபல்ல கிராமத்தையோ ஜே. ஜே. சில குறிப்புக்களையோ நோக்க முடியாது. தொடக்ககால நாவல்களுக்கும் இக்கால நாவல் களுக்குமிடையே கதைப்பின்னல், கதை மாந்தர், பின்னணி, ஆசிரியர் நோக்கம், உத்திகள், மொழிநடை, போன்ற பல கூறுகளில் மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளன.

பிரதாப முதலியார் சரித்திர நாவலாசிரியர்க்கு நீதியை உணர்த்துவதும், அறிவுரை கூறுவதுமே நோக்கமாக உள்ளது. அதற்கேற்ற கதை, கதைமாந்தர், பின்னணி போன்றவைகளை ஆசிரியர் அமைத்துக் கொள்கிறார். ஆனால், 'எக்ஸிஸ்டன் சியலிசமும் பேன்சிபனியனும்' என்ற நாவலின் ஆசிரியர்க்கு நடைமுறை ஒழுக்கங்கள், சட்டதிட்டங்கள், பாலுணர்வு பற்றிய எண்ணங்கள் போன்றவற்றின் போலித் தன்மையைச் சாடல் நோக்கமாகிறது. அதற்கேற்ற உத்தி அவரால் அந் நாவலில் கையாளப்பட்டுள்ளது. நாவல் இலக்கியத்திற்கென்று உருவாக்கப்பட்ட நெறிமுறைகளை உடைத்தெறிவது அவரது நோக்கமாக இருக்கிறது. எனவே, இவ்விரண்டு நாவல்களை யும் ஒரே அணுகுமுறையான பொது அணுகு முறையால் நோக்குவது சரியன்று என்பது தெளிவாகின்றது.

நாவல் என்ற இலக்கிய வடிவத்தின் தன்மையும் அணுகு முறையை வேறுபட வைக்கின்றது. இது நாவலா? என்ற ஐயத்தைத் தோற்றுவிக்குமளவிற்கு அவற்றின் வடிவம் மாறி வருகின்றது 'கோபல்லகிராமம்' என்ற நாவல் பற்றிக் குறிப்பிடுகையில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> 'இதுவும் நாவல் என்றுதான் சொல்லப்படுகின்றது. ஆனால் இதுவரை எழுதப்பட்ட நாவல்கள் எது போலும் இது இல்லை. இதிலே நிறைய சம்பவங்கள் வருகின்றன. ஏராளமான மனிதர்கள் வருகின்றார்கள் ஆயினும், இதிலே கதை என்று சொல்லக் கூடியதாக எதுவும் இல்லை'

என்று அதன் முன்னுரையில் நுஃமான் குறிப்பிடுகின்றார்.

அசோகமித்திரனின் 'கரைந்த நிழல்கள்' பற்றி சி. மணி குறிப்பிடுகையில்,

> 'லைப் சைஸ் என்பது போல முழுமையாக உருவாகிற பாத்திரங்கள் கிடையாது. தொடக்கம், வளர்ச்சி, உச்சகட்டம், முடிவு என்னும் வழக்கமான கதையமைப்பும் இல்லை. இது முழுக்க முழுக்க வேறு மாதிரி' (நூலின் பின்னுரை).

என்கிறார். ஜே. ஜே. சில குறிப்புகள், ஏற்கனவே சொல்லப் பட்ட மனிதர்கள் போன்ற நாவல்களைப் படிக்கும்போது இத்தகைய எண்ணங்களே ஏற்படும். இத்தகு நாவல்களை கதை, கரு, பின்னல், பாத்திரப்படைப்பு என்ற கூறுகளைக் கொண்டு எந்த அடிப்படையில் அணுகுவது என்பது சிந்தனைக் குரியது.

> 'நாவல் என்றால் என்னென்ன இலக்கணங்கள் அவசியம் என்று பண்டிதர்கள் சொல்லுகிறார்களோ அத்தனை இலக்கணங்களையும் மீறி ஒரு அற்புதமான நாவலை நமக்கு சிருஷ்டித்துத் தந்திருக்கிறார் ஆந்த்ரே ழீடு'

என்று 'குறுகிய வழி' என்ற பிரஞ்சு நாவலின் மொழிபெயர்ப்பாசிரியர் குறிப்பிடுகிறார். இவ்வாறு புதிய புதிய முறைகளில் (உத்திகளைக் கையாண்டு) நாவல்கள் எழுதுவதால் அவற்றை அணுகும் போக்கும் மாறுபடத்தானே வேண்டும். இதுவே திறனாய்வாளர்களின் முன்நிற்கும் பெரிய சவாலாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'படைப்பும் படைப்பாளியும்' என்ற நூலில் தமிழவன் எடுத்தாண்ட கூற்றுக்கள் மேற்சொன்ன கருத்திற்கு அரண் செய்கிறது. அந்நூலில் கேள்வி பதிலாக அமைந்த பகுதி யாவது,

கேள்வி: ஒவ்வொருவகை நாவலுக்கும் அந்தந்தவகை இலக்கிய விமர்சனம் உண்டா?

பதில்: ஆம். உண்டு. புதுவகை நாவலுக்கான இலக்கிய விமர்சனத்தை அமைப்பியல் வாதம் போன்ற சிந்தனா முறைகளிலிருந்து நாம் புதிதாய் உருவாக்க வேண்டும் (பக். 139).

கேள்வி: ஜே. ஜே. சில குறிப்புக்கள் பற்றி ஏற்கனவே சில விமர்சனங்கள் வந்துள்ளனவே?

பதில்: அந்த விமர்சனங்கள் பழைய நாவல்கள் மீது பயிற்சி செய்யப்பட்ட விமர்சன முறைகள் (பக். 138).

இப்பகுதியிலிருந்து, பழைய நாவல்களுக்குச் செய்யப்பட்ட விமர்சன அளவுகோல்களைக் கொண்டு புதிய நாவல்களைப் பார்க்கக் கூடாது என்ற விளக்கமே கிடைக்கிறது. எனவே, நாவலுக்கேற்ற அணுகுமுறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதே இங்கு உணரப்பட வேண்டியது. அத்தகு அணுகு முறைகளையே நாம் சிறப்பு அணுகுமுறைகள் எனலாம். அச் சிறப்பு அணுகுமுறைகளை உருவாக்குவதற்கான சில படிநிலை களை நாவல் இலக்கிய வழி ஈண்டுக் காண்போம்.

ஒரு நாவலை அணுகுவதற்கு முன் அந்நாவலின்,

1) இலக்கிய வரலாறு
2) நாவல் இலக்கிய மரபு
3) நாவல் இலக்கியப் போக்கு
4) நாவலின் உட்கூறுகள்

போன்றவை தெளிவாக அறிந்து கொள்ளப்பட வேண்டும். ஒரு நாவலைப் படித்த பின்னர்தான் இலக்கியப் போக்கில் அந்நாவல் எவ்விடம் பெறுகிறது? நாவலின் நோக்கமென்ன? நோக்கத்திற்கான கதையும் பிறவும் எவ்வாறு ஆசிரியரால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எடுத்தாளப்பட்டுள்ளன போன்றவை தெளிவாகும். அதன் பின்னரே, அந்நாவலை எவ்வணுகுமுறையில் நோக்கினால் மிகுபயனை விளைவிக்கும் என்பதனையும் திறனாய்வாளனே முடிவு செய்து கொள்ளவேண்டும்.

தொடக்க கால நாவல்கள் ஓரளவிற்குக் காப்பியத் தன்மையைப் பெற்றிருந்தன எனலாம். தன்னேரிலாத தலைவன், கற்பும் நற்குணங்களும் கொண்ட தலைவி, இருவர்க்கும் இன்னல்களைத் தரவல்ல எதிர்நிலைத் தலைவன் என்கிற நிலையில் கதை மாந்தர்கள் படைக்கப்பட்டனர். அதற்கேற்ற கதைக் கருவும் கதைப் பின்னல்களும் ஆசிரியரால் அமைத்துக் கொள்ளப்பட்டன. இத்தகு நாவல் இலக்கியப் போக்கு 1950-க்குப்பின் மாறத் தொடங்குகிறது. தன்னேரிலாத தலைவன் என்கிற நிலை மாறி, பல்வேறு குறைகளைத் தன்னகத்தே கொண்டவனும் கதைத் தலைவனாகப் படைக்கப்பட்டான். ஒரு நாவலில் கதைத் தலைவனுக்குரிய இடமும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட முதன்மையும் சிதையத் தொடங்கியது (The disintegration of hero) கதைத் தலைவன் இல்லாமல் கூட நாவல்கள் எழத் தொடங்கின. ஒரு புளியமரம் கூட தலைமைப் பண்பைப் பெறக் கூடிய அளவில் நாவலின் போக்கு மாறியது.

கதை மாந்தர்களின் செயல்களைவிட அவர்களின் எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்குமே முதன்மையளிக்கப்பட்டன. இதனால் கதை நிகழ்ச்சிகள் குறையத் தொடங்கின. அதனால் கதைப் பின்னல்களும் வலுவிழக்கத் தொடங்கின. இதனால் இது நாவல் இலக்கியம் தானா? என்று ஐயமுறும் அளவிற்கும் நாவலின் வடிவம் மாறத் தொடங்கியது. கோபல்ல கிராமம், ஜே. ஜே. சில குறிப்புகள், சாயாவனம், கரைந்த நிழல்கள் போன்ற நாவல்களில் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவை என்பது முன்னரே சுட்டப்பட்டது.

இதுவரை நாம் கருதிவந்த நாவல் வடிவம் (Novel Form) என்பது மாறத் தொடங்கி விட்டது. கதை கூறும் முறை, கதை மாந்தர்கள், பின்னணி போன்றவற்றில் ஏற்பட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு நாம் நாவல்களை அணுக வேண்டிய நிலையில் உள்ளோம். எனவேதான், பழைய நாவல்களைக் கொண்டு நோக்கிய விமர்சனங்களும், அணுகு முறைகளும் புதிய நாவல்களுக்குப் பொருந்தி வராது என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

இக்கருத்தையே இலக்கியக் கொள்கை என்ற வேறொரு கோணத்தில் நோக்கலாம். சில அணுகுமுறைகள் இலக்கிய மரபை அடியொற்றி, இலக்கியத்தினின்றும் இலக்கணம் எழுந்தாற் போன்று உருவானவை. 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' என்பது நம் இலக்கிய மரபு. அம்மரபிற்கேற்ற அணுகுமுறைதான் நீதியியல் அல்லது அறவியல் அணுகுமுறையாகும். நீதியை உணர்த்தவும் அறத்தை நிலைநாட்டவும் இலக்கியம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு உருவாக்கப்பட்டது, இவ்வணுகுமுறை. ஆனால், இன்று இலக்கியத்தின் நோக்கமே கேள்விக்குட்படுத்தப்படு கின்றது. இலக்கியம், அறிவுரை கூறுவதற்கோ உலகைச் சீர்திருத்தம் செய்வதற்கோ எழவில்லை. இலக்கியத் திற்காகத்தான் இலக்கியம் என்ற கருத்து முன் வைக்கப் படுகிறது. அழகியல் கூறுதான் இங்கு முதன்மையாகிறது. எனவே, எதைச் சொல்கிறது என்பது பற்றிக் கவலை கொள்ளாமல் எப்படிச் சொல்கிறது என்பதிலேயே இக்கொள்கை நிற்கிறது. இக்கொள்கையின் படி, நீதியியல் அணுகுமுறை கொண்டு இலக்கியத்தை அணுகக்கூடாது. என்பது பெறப்படுகிறது. எனவே, அழகியல் அணுகுமுறை (Aesthetic - Approach) இங்குப் பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வழகியல் அணுகுமுறை கொண்டு நோக்கும்போது, பல நாவல்கள் தரமில்லாதவனாகத் தோன்றும். இவ்வழகியல் அணுகுமுறையும் உருவத்திற்குத்தான் முதன்மை அளிக்கின்றதே அன்றி, உள்ளடகத்திற்கு முதன்மையளிக்கவில்லை எனலாம்.

'பாத்திரப் படைப்பு' என்ற நாவல் கூறை ஆராய வேண்டு மாயின் இதனை எப்படி அணுகவேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டும். இதற்கு நாவல் இலக்கிய மரபும், தனிப்பட்ட ஆசிரியரின் கதைமாந்தர் படைப்பு பற்றிய நோக்கமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரிந்திருக்க வேண்டும். மு. வ. வின் கதைமாந்தர்கள் குறிக்கோள் மாந்தராகவே பெரும்பாலும் படைக்கப் பட்டுள்ளனர். E.M. Forster-இன் கோட்பாட்டின்படி, இவர் கள் ஒரே நிலை மாந்தர்களா? (Flat Characters), முழுமை மாந்தர்களா? (Round Characters) என்று பார்ப்பதும், அதற் கேற்ற எண்ணங்களும், செயற்பாடுகளும் எப்படி அந்நாவலில் கையாளப்பட்டுள்ளன என்று காண்பதும் அச்செயற்பாடுகளுக் கேற்ப எங்ஙனம் நாவலின் நிகழ்ச்சிகளும், கதைப்பின்னல் களும் அமைந்து நாவலின் கட்டமைப்பை உருவாக்குகின்றன என்று நோக்குவதும் பழைய நாவல்களுக்கே பொருந்தக் கூடியது.

இதேநிலையில், சமூகவியல் அல்லது உளவியல் பார்வை யில் அக்கதை மாந்தர்கள் எங்ஙனம் செயற்படுகின்றனர்? அதற்கேற்ற சமூகவியல் அல்லது உளவியல் காரணங்கள் என்ன? அவை எவ்வாறு கட்டுக்கோப்பை உருவாக்குகின்றன? அல்லது சிதைக்கின்றன? என்று காண்பது உள்ளடக்கப் பார்வையாகும். இவ்வாறு உருவம், உள்ளடக்கம் என்ற இரண்டையும் ஒருசேர ஒரு கூறுக்குப் (பாத்திரப் படைப்பு) பார்க்கும் பொழுதுதான் அக்கூறு பற்றிய விளக்கங்கள் நமக்குக் கிடைக்க வாய்ப்பேற்படுகின்றது. இவ்வாறே பிற கூறுகளுக்கும் இப்பார்வையைச் செலுத்தலாம்.

இங்கு, 'பாத்திரப் படைப்பு' என்ற கூறு ஒருநாவலில் தெற்றென விளங்கினால்தான் இத்தகு நோக்கிற்கு இடமளிக் கின்றது. அவ்வாறின்றி, கதைமாந்தரின் எண்ண ஓட்டங்களே கதையை நடத்திச் செல்லும்போது, கதை மாந்தரின் பல்வேறு ஆளுமைகள் வெளிப்பட இடமில்லாத நிலையைக் கொண்ட புதிய நாவல்கள் பல உருவாகி இருக்கின்றன. E.M. Forster - இன் கோட்பாட்டுக்கு அடங்காத கதைமாந்தர்கள் நாவலில் உலவும்போது அவற்றை எங்ஙனம் அளவிடுவது? போன்ற வினாக்கள் எழுகின்றன. மாந்தர்களின் செயலை அடி யொற்றியே பார்ஸ்டரின் பிரிவுநிலை இலங்குகின்றது. ஆனால் இக்கால நாவல்களில் செயல்களை வெளிப்படுத்தாத, எண்ணங்கள் மட்டும் கொண்ட கதை மாந்தர்களே படைக்கப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுகின்றனர். சி. சு. செல்லப்பாவின் 'ஜீவனாம்சம்' நாவலில் வரும் கதைத் தலைவியின் எண்ண ஓட்டங்களே நாவலாக உருவெடுத்துள்ளது. அவளுடைய செயற்பாடு என்பது மிகக்குறைந்த விழுக்காடே காட்டப்படுகிறது. எனவே, பார்ஸ்டரின் எல்லைக்கோட்டைத் தாண்டிய கதைமாந்தராக ஜீவனாம்சத்தின் தலைவி சாவித்திரி உள்ளாள். எனவே, இத்தகு கதை மாந்தரை அணுகுவதற்குப் புதிய அணுகுமுறை-களையே நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

நீல. பத்மநாபனின் 'தலைமுறைகள்' நாவலில் வரும் திரவி எண்ணங்கள், செயல்கள் இரண்டிலும் ஆட்படும் கதைமாந்தனாக வருகின்றான். திரவியைக் கூட பார்ஸ்டரின் கோட்பாட்டுக்குள் அடக்கிவிடலாம். ஆனால் ஜீவனாம்சத்தின் சாவித்திரி, ஜே. ஜே. சில குறிப்புக்களின் ஜேம்ஸ், கோபல்ல கிராமத்தின் கதைமாந்தர்கள், ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்களின் கதைமாந்தர்கள் இவ்வட்டத்திற்குள் அடங்காத வர்கள். அவர்களையும் அடக்கும்படியான அணுகு முறைகளை உருவாக்கிக் கொள்ள முயலவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுவை மீனவர் பண்பாட்டில் பேயோட்டும் சடங்குகள்

ஆ. அருள்தாசு

பண்டைக் காலம் தொட்டு பேய்பற்றிய நம்பிக்கை மக்களிடையே வேரூன்றிய ஒன்றாக இருந்து வந்து உள்ளது என்பதைப் பண்டைய இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. இத்தகைய நம்பிக்கை இனத்துக்கு இனம், வட்டத்திற்கு வட்டம் மாறியிருக்கிறது. அவ்வகையில் இக்கட்டுரை புதுவைப்பகுதி மீனவர்களின் பண்பாட்டையும், பேயோட்டும் சடங்கையும் அறிய முயல்கிறது.

புதுவை மற்றும் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வாழும் மக்கள், இவ்வுலகத்தில் உலவி வருகின்ற தீய ஆவிகளே பேயாக மாறி மக்களைத் துனபுறுத்தும் தன்மையுடையன என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். அத்தகைய துன்பத்தில் இருந்து அத்தகையோரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு பேயோட்டும் சடங்கு செய்யப்படுகிறது.

தமிழரிடையே பேய் பற்றிய எண்ணங்கள்:

மக்களின் வாழ்க்கையில் இன்பம், துன்பம் இரண்டும் மாற்ற முடியாத இரண்டு கூறுகளாகும். இவை தன்னைமீறிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏதோ ஒரு சக்தியால் தான் நடக்கின்றன. என்று பண்டை மனிதன் நம்பினான். இதில் நல்ல ஆவியாலேயே நன்மை நடக்கிறது என்றும் கருதுகிறார்கள். இத்தகைய ஆவிகள் முன்பிறப்பில் நல்லதையே செய்து, நல்ல முறையிலே இறந்தவர்களின் ஆவி என்றும், தீய ஆவி என்பது கொடிய கொலை, விபத்து ஆகியவற்றுக்கு உட்பட்டு திடீர் இறப்புக்கு உள்ளானவர்கள் ஆவியாகும் என்றும், இது மக்களுக்குத் துன்பத்தைத் தரக்கூடியது என்றும் மக்கள் நம்புகின்றனர்.

மானிடவியல் அணுகுமுறையில் பேய், பிசாசு பற்றிய பல கருத்துகளை அறிஞர்கள் தருகின்றனர்.

> "ஆதி மனிதன் தன்னைப் போலவே மரம், செடி, கொடி, விலங்கு, பறவை, ஆகியன உயிருள்ளன வாகவும் ஆறு, குளம், கல் ஆகியன உயிரில்லாதன வாகவும், ஞாயிறு, திங்கள், பூமி ஆகிய கோள்களும் தன்னைப் போலவே மகிழ்ச்சியும், துன்பமும் அடைகின்றன; சினமும், சீற்றமும் உறுகின்றன; பசித்தால் புசிக்கின்றன; காதலுணர்வு தோன்றின் கூடிக்களிக்கின்றன எனக் கருதினான். அனைத்துப் பொருட்களும், உயிரும், உணர்ச்சியும் உண்டு என்ற நிலையிலிருந்து (Animism), பல தெய்வ (Polytheism) வணக்க முறைக்குச் சமுதாயம் வளர்ந்த காலகட்டத்தில் பேய், பிசாசு பற்றிய நம்பிக்கை பரவலாக வேர்விட்டது"[1]

இது மட்டுமல்லாமல் வேறு கருத்துகளும் நிலவுகின்றன. மனிதன் இறந்தவுடன் நல்லவனாக இருந்தால் நல்ல ஆவியாகவும், தீயவனாக இருந்தால் தீய ஆவியாகவும், திரிவான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இறந்த மனிதர்களின் ஆவி அவன் வாழ்ந்த வாழ்க்கை, இறக்கின்ற காலம், இறப்பின் நிலை ஆகியவற்றை வைத்துத் தீர்மானிக்கப்படுகின்றன. அவிட்ட நட்சத்திரத்தில் உயிர் துறந்தவர்கள் பேயாகத் திரிவார்கள். சனிப்பிணம் துணைதேடும் என்று சனிக்கிழமை இறந்த பிணத்தைச் சுடுகாட்டில் வைத்துச் சடங்குகள் நிகழ்த்தும் போது, கோழிக்குஞ்சு பலி கொடுப்பது இந்து இறப்புச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சடங்கில் இன்றும் நடைபெறுகிறது. இது ஆவி பற்றிய நம்பிக்கையில் எழுந்த சடங்கு முறையேயாகும். இத்தகைய காலங்களில் உயிர் விடும் மனிதர்களின் ஆவி காற்றிலே கலந்து உலவிக் கொண்டிருக்கும். இவற்றைக் கிராமமக்கள் "காத்துக் கறுப்பு" என்று அழைக்கின்றனர். இத்தகைய நம்பிக்கை பண்டைய மக்களிடையே இருந்து வந்தது என்பதைப் பின் வரும் சங்க இலக்கியச் சான்று கொண்டு மெய்ப்பிக்கலாம். பேய்மகளின் நாக்கு, காது முதலியவற்றிற்கு நெருப்பு, ஆட்டுக் குட்டி ஆகியவை சிறுபாணாற்றுப்படையில் (196 - 197) உவமையாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் யானையின் கால் நகத்திற்குப் பேயின் பற்களை உவமையாகக் கூறுகிறது. பேய் பலிகொள்ளும் செய்தியைப் பதிற்றுப்பத்து (71/23-24) தெரிவிக்கிறது. பேயின் பல்லுக்குப் பன்றியின் பல் உவமை (புறம் (371/21-22)யாக வருகிறது.

மேற்கூறிய கருத்துக்கள் மூலம் பேய் பற்றிய நம்பிக்கை பண்டைய மக்களிடையே இருந்தது என்பது புலனாகிறது. மேலும், "வெறியாட்டு" போன்ற பேயோட்டும் சடங்கும் இருந்திருக்கிறது என்பது சங்க இலக்கிய வழி அறியலாகும் செய்தி.

பேயோட்டும் சடங்கு:

பேயோட்டும் சடங்கு ஒரு தனி மனிதனின் வல்லமையை வெளிப்படுத்தும் நோக்கோடு ஒருவர் தலைமை ஏற்றுப் பலருக்கும் செய்யப்படுகிறது. அவரே மந்திரவாதியாவார்.

மந்திரவாதிகள் பேயோட்டும் சடங்கில் பல முறைகளைக் கையாளுகின்றனர்.

1 வேப்பிலை அடித்தல்
2 கயிறு மந்திரித்துக் கட்டுதல்
3 தாயத்துக் கட்டுதல்
4 வாய்க் கட்டுதல்
5 திருநீறு மந்திரித்தல்
6 தகடு எழுதுதல்
7 விளக்கு வைத்துப்பார்த்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிகழும் முறை:

பேயோட்டும் சடங்குகள் பெரும்பாலும் வீடுகளில் பின் வருமாறு நிகழும்.[2]

வேப்பிலை அடித்தல்:

வேப்பிலை அடிப்பவர் காலை எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்து, குளித்துவிட்ட பிறகே இவற்றைச் செய்யத் தொடங்குகிறார். பேய் பிடித்தவர்களைக் காலையில் வரும்படி கூறி, வந்தவுடன் தன்னுடைய பூசை அறையிலே வேப்பிலை அடிக்கும் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. சில வேளைகளில் வயல் புறத்திலும் மந்திரவாதியின் வசதிக்கேற்ப நடத்தப்படுகிறது. பேய்பிடித்தவரை (பாதிக்கப்பட்டவரை) கிழக்கு முகமாக அமரவைத்து வேப்பிலையை கையில் பிடித்து முதலிலே பாதிக்கப்பட்டவரின் தலையில் வைத்து இரண்டு புறமும் வீசுகிறார். பாதிக்கப்பட்டவரின் தலையில் வேப்பிலையை வைத்து வீசுவதன் மூலம் அவர்மீது இருக்கும் தீய ஆவியை விரட்ட முடியும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது. வேப்பிலை அடித்து முடிந்தவுடன் பாதிக்கப் பட்டவரின் தலை முதல் கால்வரை வேப்பிலையால் தடவி விடுகின்றார். இவ்வாறு செய்வதன் மூலம் தீய ஆவியை தரையில் இறக்கி விடுவதாகக் கூறுகின்றனர். இவ்வாறு செய்து முடிந்தவுடன் மந்திரவாதி வாயால் நோயுற்றவர் முகத்தை ஊதுகிறார்.

குழந்தையாக இருந்தால் முகத்தை முகர்ந்து குழந்தைக்குத் தோஷம் இருக்கிறது என்று சில பரிகாரங்களைக் கூறுகிறார். பெரியவராக இருந்தால் இரவிலே ஏதாவது கனவு கண்டதுண்டா? என்று கேட்டு அதன் பிறகு நீ இந்த இடத்திலே முனீஸ்வரனால் நேர்பட்டு விட்டாய். அதற்காக இந்தச் சடங்குகளைச் செய்ய வேண்டுமென்று கூறி மறுநாள் வரச் சொல்லிச் சடங்கைச் செய்து வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேய், பிசாசு, பிடிப்பவரின் நிலையும், சடங்கின் நோக்கமும்:

பேய் பிடித்தவர்களைக் கோயிலில் கொண்டு வந்து விட்டு விடுவது இன்றைய பழக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. பூப்பெய்திய இளம் பெண்கள், இரவிலே தனியாகச் செல்வது இல்லை. மல்லிகை போன்ற மனம் நிறைந்த பூக்களை தலையிலே சூடிச் சென்றால் மல்லிகையின் வாசனையால் தீய ஆவி அவள்மேல் தொடரும் என்று மக்கள் நம்புகின்றனர் இதனால் இரவில் வெளியே செல்லும் பெண்கள் கையிலே கறுப்பு நிறமுடைய பொருள்களையும், காலிலே செருப்பும் அணிந்து செல்கின்றனர். கறுப்புக்கும் செருப்புக்கும் தீய ஆவி பயந்து ஓடிவிடும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது வீட்டிலே குழந்தை பிறந்தவுடன் வீட்டின் வாயிலில் வேப்பிலையைச் செருகி வைக்கின்றனர். காரணம் பிறந்த இளம் குழந்தையைத் தீய ஆவி பிடித்துக் கொள்ளக்கூடாது என்பதாலும், இதனால் தாய்க்கு ஆபத்து வந்து விடக்கூடாது என்பதாலும் இம்முறை கையாளப்படுகிறது. வேப்பிலைக்கு நோயைக் குணப்படுத்தும் தன்மையுடன், தீய ஆவியை ஓட்டக் கூடிய தன்மையும் உண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இம்முறை கையாளப்படுகிறது. வேப்பிலை தீய ஆவிகளை ஓட்டும் தன்மைக்காகவும் நோயினால் தாக்கப்படாமல் இருக்கவும் பண்டைய மக்களின் வாழ்க்கையில் வேம்பு இருந்ததைப் பண்டைய இலக்கிய வழி உணரமுடிகிறது (புறம்-296). இக் கருத்தின் அடிப்படையிலே பேய் பிடித்தவர்களைக் கோயிலில் விட்டு தினமும் வேப்ப மரத்தைச் சுற்றுவது, வேப்பிலை அடிப்பது போன்ற செயல்கள் நடைபெறுவதை அறியமுடிகிறது.

புதுவை நல்லவாடு கிராமத்தில் அங்காளம்மன் கோயில் ஒன்று உண்டு. அங்கே பேய் பிடித்தவர்களாகக் கருதப்பட்டு கொண்டு வந்து விடப்பட்டவர்களில், பெரும்பாலோர் பெண்களேயாவர். ஆண்கள் இருவர் மட்டுமே; அவர்களும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வயதிலே மூத்தவர்களாக இருந்தனர். அதிகமானவர் பெண்கள் என்பதால் அவர்களைக் கண்டு பேட்டி எடுத்ததில், பாதிக்கப் பட்டவரை எதுவுமே கேட்க முடியவில்லை. அவர்களின் உறவினர் மூலம் கேட்டபோது சில காரணங்களை அறிய முடிந்தது. சில காரணங்களை வேப்பிலை அடிக்கும் பூசாரி (மந்திரவாதியே) கூறினார். உறவினர் கூற்று:

> "இரண்டு மாதமுன்பு அவளை மணம் செய்து விட்டு துபாய் சென்ற கணவனிடமிருந்து அன்று வரை ஏதும் கடிதம் வரவில்லை. இதனால் வருந்திய மனைவிக்கு அன்று ஆறுதலாகக் கடிதம் வந்தது. இரண்டு தினங்களில் அவன் வரப் போவதாக துபாயிலிருந்து கடிதம் வந்தது. பல நாட்கள ாகியும் அவர் வராதது கண்டு வருந்திய மனைவியும் குடும்பத்தினரும் கணவனது வீட்டாரை விசாரித்ததில் முன்பு தனக்குக் கிடைத்த கடிதம், கணவன் வீட்டாராலேயே கணவன் எழுதியது போல் எழுதப்பட்ட உள் நாட்டுக் கடிதம் என்பது தெரிய வந்தது. அக்கணமே மயங்கி விழுந்த நிலைக்கு ஆளாகி விட்டாள்"[3].

இவ்வாறு பல செய்திகள் கிடைத்தன. மேலும் பதினாறு வயதுப் பெண்ணை வேப்பிலையால் அடித்து, அடித்து, அறையிலே பூட்டி வைத்திருந்து கடைசியில் மந்திரவாதியின் யோசனையால் சூடுபோட்டு அப்பெண் இறந்துவிட்ட கொடுமையையும் கேட்கமுடிந்தது. இவ்வாறு வேப்பிலை அடிக்கும் சடங்கில் பலரின் வாழ்க்கை வேம்பாக மாறுவதைக் காணமுடிகிறது.

கயிறு மந்திரித்தல்:

கயிறு மந்திரித்தல் என்பதை முடிக்கயிறு போடுதல் என்றும் கூறுகின்றனர். முடிக்கயிறு என்பதன் பொருள் மந்திரத்தைக் கூறி முடியிடுவதால் இதற்கு அப்பெயர் வந்தது. தேள், பூரான், எலி, வண்டு கடித்து விட்டால் விஷம் ஏறாமல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருக்க இம்முறை கையாளப்படுகிறது. ஒவ்வொரு முடிக்கும் விஷத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டு என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது. நச்சுக் கடிபினால் உடல் நலக்கேடு விளையக் கூடும் என்று இம் முடிக்கயிற்றை நோயாளியை நன்கு குளித்துவிட்டு வரச் சொல்லி, கிழக்கு முகமாக உட்காரவைத்து கழுத்திலோ அல்லது கையிலோ மந்திரவாதி மந்திரம் சொல்லி கட்டுகிறார்.

கயிறு கட்டியதிலிருந்து பன்னிரண்டு அல்லது பதின்மூன்று நாட்களுக்குப் பத்தியத்தைக் கடைப்பிடிக்கச் சொல்கிறார். பத்தியம் நிறைவேறிய பிறகு கயிறு அவிழ்க்கப்படுகிறது. அதனை, காலை குளித்த பிறகு ஆற்றிலோ அல்லது குளத்திலோ போட்டுவிட்டு வீடு திரும்புகின்றனர். இதிலும் ஓதுதல் முறையே கையாளப்படுகிறது.

தாயத்துக் கட்டுதல்

தாயத்து என்பது செப்புத் தகட்டிலே சில மந்திர உச்சாடனங்களை எழுதி அதனைச் சுருட்டி கையிலே கட்டும் முறைக்குத் தாயத்துக் கட்டுதல் என்பது பொருள். இவ்வாறு கட்டினால் தீய ஆவிகள் மனிதர்களை நெருங்காது என்பதாலும் தீய ஆவிகளான பேய், பிசாசு, போன்ற தீய ஆவிகளை அழிக்கும் ஆற்றல் தகட்டின் உள்ளே இருக்கும் மந்திர உச்சாடனங்களுக்கு உண்டு என்னும் நம்பிக்கையாலும் இத்தகைய சடங்குமுறை செய்யப்படுகிறது. இத்தகைய தாயத்தை கடலுக்குச் செல்லும் ஒவ்வொரு மீனவரும் கட்டியிருக்கின்றனர்.

தாயத்துக் கட்டுவதன் நோக்கம்:

கடலிலே தொழிலுக்குச் செல்லும்போது கடலிலே மூழ்கி, விபத்தில் சிக்கி இறந்தவர்களின் ஆவி அங்கேயே உலவிக் கொண்டு இருக்கும். இந்தத் தாயத்தைக் கண்டவுடன், தீய ஆவிகள் கிட்டே நெருங்காது என்று கூறுகின்றனர். கடலிலே இறந்தவர்களின் ஆவியைப் "பனவயம்" என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறுகின்றனர். திடீர் என்று வெளிச்சம் தோன்றும். உடனே மறைந்துவிடும். புதிதாகக் கடலுக்குச் செல்பவர்கள் அதைக் கண்டால் பயந்துவிடுவர் என்று கூறுவதைக் கள ஆய்வில் காண முடிந்தது.

வாய்க் கட்டுதல்:

வாய்க் கட்டுதல் என்பது ஒருவரிடம் இருந்து பேயை இறக்கி மந்திரத் தன்மையால் கட்டுதல் என்ற பொருளாகிறது.

நிகழ்த்தும் முறை:

பேய் பிடித்தவர்களை மந்திரவாதி வந்து பார்த்தவுடன் வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை போன்ற தினங்களில் இச்சடங்கைச் செய்யவேண்டும் என்று கூறுகிறார். அவர் கூறியது போலவே வெள்ளி அல்லது செவ்வாய்க் கிழமைகளில் பேய்பிடித்தவரை நன்கு குளிப்பாட்டி வீடு முழுதும் கழுவி, மெழுகிக் கோலமிட்டு, பேய் பிடித்தவரைப் பேய் பிடித்ததாகக் கூறப்படுமிடத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். அவ்விடத்திலே படையல் இடுகின்றனர்.

படையல் இடும் முறை:

படையல் முறை தெய்வத்திற்குத் தெய்வம் மாறுபடுகிறது. நோயாளியைப் பிடித்திருப்பது முனீஸ்வரனாக, கன்னிமாராக, இருந்தால் கோழிப்பலியும் பெரியாண்டவனாக இருந்தால் பன்றிக்கறியும் வைத்துப் படைக்கின்றனர். மந்திரவாதி பேயால் பீடிக்கப்பட்டவரை முக்கோணம் போட்டு, சில மந்திர உச்சாடனங்களைக் கூறி நடுவிலே உட்கார வைத்து விடுகிறார். பிறகு தன்னைச் சுற்றிச் சில மந்திர உச்சாடனங்களைச் சொல்லி நடுவிலே உட்கார்ந்து கொள்கிறார். பேய் பிடித்தவர் மீது இருக்கும் தீய ஆவி தன்னைத் தாக்காமல் இருக்க இம்முறையைக் கையாளுகின்றனர். இதற்குச் ''சக்கரம் தலித்தல்'' என்று கூறுகின்றனர். மந்திரவாதி தனக்குரிய வட்டத்தில் இருந்துகொண்டு சில மந்திரங்களை ஓதும் போது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேய் பிடித்தவர் அவருக்காகப் போடப்பட்ட வட்டத்திலேயே ஆடுகிறார். வட்டத்தைச் சுற்றி உளுந்து மாவால் செய்யப் பட்ட பிள்ளையாரை நான்கு புறத்திலும் வைத்து எலுமிச்சம் பழம், ஊது பத்தி, வெற்றிலை, பாக்கு முதலியவற்றை வைத்து கோழியைப் பலியிட்டு இரத்தத்தை ஒரு புது மண்சட்டியில் பிடித்து அதில் பச்சரிசிச்சோற்றைப் போட்டு பிசைந்து நான்கு மூலையிலும் வீசுகிறார். இவ்வாறு வீசக் காரணம் அங்குச் சுற்றித்திரியும் தீய ஆவிகள் அதனை உண்ணும் என்ற நம்பிக்கையில் செய்யப்படுகிறது. இதற்கு **''உதிரச்சோறு இரைத்தல்''** என்று கூறுவர். இந்நிகழ்ச்சி முடிந்தவுடன் கற்பூரம் கொளுத்தி மந்திரத்தை உச்சரிக்கிறார். தன் கையில் உள்ள எலுமிச்சம் பழத்தால் நோயாளியின் முகத்தில் காட்டிக் காட்டி எடுக்கிறார். சில சமயங்களில் எருக்குக்குச்சியால் முகத்திலிருந்து பாதம் வரை நீவிவிடுகிறார். இதற்குப் பேய் இறக்குதல் அல்லது பேய் விரட்டுதல் என்று கூறுகின்றனர். பேய் இறக்குதல் நிகழ்ச்சி முடிந்தவுடன் சுற்றி இருப்பவர்களைப் பேய் பிடித்தவர் தலையைப் பிடித்துக் கொண்டு உச்சி முடியை வெட்டிக் கையிலே எடுத்துச் சென்று ஊருக்கு ஒதுக்குப் புறத்திலே உள்ள பெரிய மரத்தில் ஆணியை அடித்து முடியை மாட்டி விட்டு வீடு வந்து சேர்ந்துவிடுகின்றனர். சில நாட்கள் கழித்து அம் மரம் இறந்து விடும் என்றும் நம்புகின்றனர். ''பேய் இரும்பைக்கண்டால் அஞ்சி மரத்திற்குக் கீழே வராது என்ற நம்பிக்கையில் தலை முடியை ஆணி கொண்டு அறைகின்றனர்''[4] என்னும் கருத்து மேறகூறிய காரணத்துக்கு விளக்கமளிக்கின்ற வகையிலே உள்ளது. மேலும், மனிதனிடம் உறைந்துள்ள ஆவி, அவனது தலைமுடியில் உறைந்துள்ளதாக மக்கள் நம்புகின்றனர். எனவே தலை முடியை அறுத்துத் தண்டனைக்குள்ளாக்கினால் அத்தண்டனை தீய ஆவிகளைச் சென்று சேருமென்று கருதுகின்றனர். மரத்தில் பேய் விரும்பி உறையும் என்பதால், மரத்தையும், பேய் உறைந்துள்ள தலை முடியையும் தொடர்பு படுத்துவதன் மூலம் பேய் மரத்தில் சென்று தங்கிவிடும் என்று நம்புகின்றனர். இந்நம்பிக்கை தொத்துமந்திரத்தின் பாற்படும்.[5]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொத்து மந்திரத்தின் மூலம் மனிதனின் நோயை பறவை, விலங்கு, மரம் போன்றவற்றிற்கு மாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் தன்னுடைய உடல் சரியானால் கோழி விடுவதைப் போலவும், சாமிக்கு முடிகொடுத்தல் போன்ற சடங்கைப் போலவும் பேயோட்டும் சடங்கு முறைகள் அமைவதைக் கூறலாம். இதை மானிடவியலார் கூற்றுப்படி மாற்றிட்டுச்சடங்கு என்பர்.

திருநீறு மந்திரித்தல்:

பேய் பிடித்தவர்களை மந்திரவாதி தன்னுடைய பூசை அறையில் நிற்க வைத்து, கோயிலாக இருந்தால் சூலத்தின் எதிராக நிற்கவைத்து, திரு நீற்றை (விபூதியை) சில மந்திரங்களைக் கூறித் தலையில் போட்டு உடல் முழுவதும் பூசி விடுகிறார். உடல் முழுதும் பூசுவதால் உடலின் மேல் இருக்கும் தீய ஆவி பயந்து ஓடிவிடும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது. கடலில் சென்று தீய ஆவிகளால் பயந்தவர்களுக்கு இம்முறை பெரிதும் பயன்படுகிறது.

தகடு எழுதுதல்:

தகடு எழுதும் முறை செப்புத்தகட்டில் சில மந்திரச் சொற்களை எழுதி, பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்து அனுப்பும் முறை ஆகும்.

தகடு எழுதுவதன் நோக்கம் தன்னுடைய தொழிலிலே சரிவு நிலை ஏற்பட்டால், அதற்குக் காரணம் "யாரோ நமக்குத் தீவினை செய்து வைத்திருக்கின்றனர். இதனால் தீய ஆவி நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் ஆட்டிப் படைக்கிறது" என்று மந்திரவாதியை நாடுகின்றனர். களப் பணியின் போது ஒருவர் கூறியதைக் காண்போம்:

> "எனக்குத் தொழிலில் எப்போதும் நட்டம் வந்ததே இல்லை, ஒரு நாள் வலையை எடுத்துக் கொண்டு என்னுடைய படகை நோக்கிச் செல்லும் போது என் படகின் ஓரமாக எலுமிச்சம்பழம், மனிதமுடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்றவை இருப்பதைக் கண்டேன். அப்போது எனக்குச் சந்தேகம் வந்தது. சரி என்று கடலுக்குச் சென்றேன். ஒரு மீன்கூடக் கிடைக்காமல் வீடு திரும்பினேன். இவ்வாறு பலநாட்கள் திரும்பிவர வேண்டிய சூழல் ஏற்பட்டது. உடனே கடலூரில் உள்ள தர்காவிற்குச் சென்று தகடு எழுதிக் கொண்டு வந்து படகில் கட்டிய பிறகு மீன் வழக்கம்போல அதிகமாகக் கிடைக்கிறது''. என்று கூறினார்[6].

இந்த நிகழ்ச்சி மீனவர் வாழ்வில் மந்திரச்சடங்கு பொருளாதாரத்திற்கு எவ்வாறு அடிப்படையாக இருக்கிறது என்பதற்குச் சான்றாக அமைகிறது. மனிதனைப் பிரித்து வைத்துப் பார்க்கவும், மோதல்களுக்கும் காரணமாகவும் அமைவதைக் காண முடிகிறது.

விளக்கு வைத்துப்பார்த்தல்:

தன்னுடைய குடும்பத்திற்கோ தன்னுடைய உறவினருக்கோ தீய ஆவிகளின் தொந்தரவு இருக்கிறதா என்பதை மந்திரவாதியின் உதவி கொண்டு அறிந்து அதற்குப் பரிகாரம் செய்யும் முறைக்கு விளக்குவைத்துப்பார்த்தல் என்று கூறுவர்.

செய்யும் முறை:

இம் முறை இரவில் வீட்டில் நடைபெறுகிறது. சாமி அறையை நன்கு மெழுகி சுத்தப்படுத்தி மந்திரவாதி படையல் இடுகிறார். ஒரு வாழை இலையில் அவல், கடலை, வெல்லம் போன்ற பொருள்களை வைத்து எலுமிச்சம் பழத்தை நான்காக வெட்டி நடுவிலே குங்குமம் தடவி நான்கு புறங்களிலும் வீசுகிறார். இதற்குக் ''காவு கொடுத்தல்'' என்று கூறுகிறார்கள். காவு கொடுத்து முடிந்தவுடன் மந்திரவாதி தன்னைச் சுற்றி ஒரு வட்டம் போட்டு ''சக்கரம் தலிக்கிறார்''.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன் நடுவிலே அமர்ந்து மந்திரம் சொல்கிறார். சில மணி நேரம் கழித்து வாக்குச் சொல்கிறார். இக்குடும்பத்திற்கு யாரால் எந்த திங்குஏற்பட்டுள்ளது, இதை எப்படி நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கூறிப் பரிகாரம் செய்து வைக்கிறார். இதனால் பாதிக்கப்பட்டவர் மனம் மாற்றியமைக்கப்படுகிறது. உளப் பூர்வமாகவும் நிம்மதி ஏற்படுகிறது.

பேயோட்டும் சடங்கு -அறிவியலாய்வு:

இன்று நாட்டுப் புறத்தில் வெகு வேகமாகப் பரவி வரும் நம்பிக்கையில் முதன்மையானதாக பேய் பற்றிய நம்பிக்கைகளும் அது தொடர்பான சடங்குமுறைகளும் ஆகும். இத்தகைய நம்பிக்கையினால் நன்மை ஒரு பங்காக இருந்தாலும் தீமை பலபங்காக இருப்பதை உணரமுடிகிறது.

> காலம் காலமாக நம்பிக்கையைச் சுமந்துவரும் மக்கள் எதையுமே எளிதில் ஏற்றுக்கொள்ளும் மனம் படைத்தவர்களாக மாறி, மனத்தில் பலவீனத்தை உருவாக்கிக் கொள்கின்றனர். இத்தகைய நம்பிக்கைச் சுமையைக் குறைப்பதன் மூலம் மனபலவீனத்தைக் குறைக்க முடியும். அதற்கு நம்பிக்கை தொடர்பான அறிவியல் பூர்வமான கருத்துகளே திறவு கோல்களாக அமைய வேண்டும்.

பேய், பிசாசு, பில்லி, சூனியம் எல்லாம் உண்மையா? என்ற கேள்வியை நாமே எழுப்பிக் கொண்டு அதற்கு விடை காண ஆரம்பித்தால், நாம் பல உண்மைகளை அறியமுடியும். இத்தகைய நம்பிக்கை எல்லா மதங்களிலும் இருக்கும் பொதுவான சிறப்பம்சம்.

பேய் பற்றிய அடிப்படைக் கருத்தை உற்று நோக்கினால் தற்கொலை செய்து கொண்டவர், பிறரால் கொல்லப் பட்டவர்கள் ஆவியே, பேயாகத் திரியும் என்பது மக்கள் நம்பிக்கை. ஆனால் தன்னுடைய உணவுக்காக ஆட்பட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறந்து போன ஆடு, மாடு, கோழி இவைகளின் ஆவியைப் பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை. நினைத்துப் பார்க்கவும் விடுவதில்லை சமுதாயச் சூழல். இதனால், நம்பிக்கை வெகு சீக்கிரமாக வேருன்றி விடுவதைப் பார்க்க முடிக்கிறது.

பேய் பற்றி மக்கள் கருத்துகளைத் தொகுத்து நோக்கும் போது சில செய்திகள் கிடைத்தன. சிலர் பேய், பிசாசைப் பார்த்ததாகவும் இரவில் சலங்கை ஒலியைக் கேட்டதாகவும். கடவுள் தன்முன்னே தோன்றிப் பல இன்னல்களை போக்கிய தாகவும் கூறினர். இவர்கள் மூடநம்பிக்கையினால் இவ்வாறு கூறுகின்றனர் என்று கூறி முற்றாக ஒதுக்கிவிடுவது ஆய்வு ஆகாது. அதன் காரண காரியத்தை (Cause and effect) ஆராயும்போது உண்மை வெளிப்படும்.

ஐம்புல திசை திருப்பு உணர்ச்சி:

ஒவ்வொரு மனிதனும் உலக நடப்பியலை ஐந்து புலத்தி னாலே (கண், காது, மூக்கு, வாய், உடல்) அறிகிறான். சிந்தனை அடிப்படையில் முடிவுக்கு வருகிறான். புலனில் தவறு ஏற்பட்டாலோ சிந்தனையில் தவறு ஏற்பட்டாலோ முடிவு தவறாகத்தான் வர முடியும். இத்தகைய தவறான முடிவு பற்றிய கருத்தை ஐம்புல திசை திருப்பு உணர்ச்சியில் அடக்கலாம். இவற்றினை அறிவியல் அறிஞர்கள் மூன்றாகக் கூறுவர்.[7] அவை

1 மாயத் தன்மை (Illusion)
2 மயக்கத் தன்மை (Hallucination)
3 மருட்சித் தன்மை (Delusion)[7]

என்பனவாகும்.

மாயத்தன்மை:

புலன்கள் மூலம் நடப்பியலுக்கு மாறான தகவல்களைப் பெறுவது மாயத்தன்மையாகும். இரவில் தன்னைப்பலர் வந்து அடிப்பது போல் உணர்ச்சி இருக்கும். ஆனால் அது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மையாக இருக்காது. சில நேரத்தில் தன் முன்னே யாரோ போவது போலத் தோன்றும். அவ்வுருவம் இருள் தன்மையில் இருப்பது போலத் தோன்றும். ஆனால் வெளிச்சத்தில் அது தெரியாது. இது கண் என்னும் புலன் மூலம் அறியப்படும் மாயத்தன்மை. இவ்வாறு ஐந்து புலன் மூலமும் மாயத் தன்மையை உணர முடியும். இது பேய் பற்றிய எண்ணத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

மயக்கத் தன்மை:

ஐந்து புலன்களையும் செயலிழக்க வைத்து அதன் மூலம் செய்தியை அறிவது மயக்கத் தன்மையாகும்.

மயக்கத்தை உண்டாக்கி ஐம்புலன்களையும் செயலிழக்கச் செய்யும் முறையை தொன்மைச் சமுதாயம் கைவந்த கலையாகப் பெற்றிருந்தது. இதனால் நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு ஆட்டமும் பாட்டும் நடைமுறைக்கு வரவழைத் தனர். இன்றைய பேய் பிடித்தவர் ஆடும் ஆட்டமும் அத்தகையதே. தாள, மேளச்சத்தம் இல்லாமல் எந்தப் பேயும் ஆடுவதில்லை. இசைத் தூண்டுதல் முறையிலே பேயாட்டம் நடைபெறுகிறது.

பேய்பிடித்தவர்கள் இரவில் பிதற்றுவது, தன்னை மறந்து விடுவது போன்ற செயல்களைச் செய்கின்றனர். இது கருத்து முறையினால் ஏற்படும் மாற்றமேயாகும். சில நம்பிக்கைகள் சிறிய வயது முதல் திணிக்கப்படக் கூடியதாக இருக்கின்றன. இதில் பேய், பிசாசு, பற்றிய நம்பிக்கை அடிப்படையானது. சிறுவயது முதல் திணிக்கப்படுவதால் காலப் போக்கில் கருத்தேற்ற முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி, கருத்து மயக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது.

மருட்சித் தன்மை:

அச்சவுணர்ச்சி என்பது மனித அடிப்படையானது. அச்ச வுணர்வின் அடிப்படையில் வருவதே மருட்சித் தன்மையாகும். இது இளம் வயது முதலே அறிவுக்கு ஒவ்வாத கருத்துகளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனதில் நினைத்து வந்ததினால் ஏற்படுவது ஆகும். மருட்சித் தன்மை என்பது ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகமாகவும், அறியாமையில் ஆட்படுபவர்களாகவும் இருப்பதால் இவர்களையே பேய், பிசாசு பிடித்திருப்பதை உணர முடிகிறது. மேலும் இன்றைய தனியுடைமைச் சமுதாயத்தில் மக்களுக்குப் பொருளாதாரத்தில் தன்னிறைவு இல்லை. இதனால் பாதுகாப்பு உணர்வு கீழ்நிலையடைந்துள்ளது. பல பெண்களுக்குப் பொருளாதார நலிவின் காரணத்தால் உரிய காலத்தில் திருமணம் நடைபெறுவதில்லை. இதனால் வீட்டு நகைப்புக்கும், சமுதாய நகைப்புக்கும் ஆளாகும் பெண்களுக்கு எதிர் காலத்தைப் பற்றிய அச்சவுணர்வும், சமுதாயரீதியில் ஏற்படும் கடின முறைகளாலும் மனத் தளர்ச்சிக்கு உள்ளாகி மன நோய்க்கு ஆளாகி விடுகின்றனர்.

இவ்வாறு மூடநம்பிக்கை என்னும் முடக்கு வாத நோயால் ஆட்பட்டு இருக்கும் நாட்டுப்புற மக்களை விடுவிக்கும் நோக்கோடு சமூகவியல், உளவியல், மானுடவியல் போன்ற உதவிகளால், ஆய்வு மேற்கொள்ளுவதன் மூலம் நாட்டுப் புறவியல் ஆய்வினால் மக்களுக்கு அறிவியல் சார்ந்த உண்மைகளையும் உணர்த்த முடியும். அறியாமையால் வீழ்ந்து கிடக்கும் ஆயிரக்கணக்கான மக்களைக் காப்பற்றும் பெருமை நாட்டுப்புறவியல் துறையை வந்து சேரும்.

முடிவாகச் சில

1. மக்களுடைய வாழ்வில் பேய் பற்றிய நம்பிக்கையும் அது தொடர்பான சடங்கு முறைகளும் பண்டைக் காலந் தொட்டே இருந்து வருகின்றன.

2. பேயோட்டும் சடங்குகளின் கூறுகளாக மீனவர் வாழ்வில் வேப்பிலை அடித்தல், கயிறு மந்திரித்தல், தாயத்துக்கட்டுதல், வாய்க்கட்டுதல், திருநீறு மந்திரித்தல், தகடு எழுதுதல், விளக்கு வைத்துப் பார்த்தல் போன்ற நிகழ்ச்சிகள் இருப்பதை உணர முடிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. பேய், பிசாசு பிடித்தவர்களாக பெண்களே அதிகமாக இருப்பதை உணரமுடிகிறது.

4. பேயோட்டும் சடங்கு. இறந்தவர்களின் தீய ஆவி தன்னைத் துன்புறுத்தும். அதனைத் திருப்திப் படுத்துவதன்மூலம் நன்மையடையலாம். எந்த நோயும் நெருங்காது என்ற அடிப்படையில் செய்யப்படுகிறது.

5. ஐம்புல திசை மாற்று உணர்ச்சியே பேய் பற்றிய எண்ணத்திற்கும், அது தொடர்பான சடங்கு முறைக்கும் அடிப்படையானதாக இருப்பதை உணரலாம்.

அடிக்குறிப்புகள்:

1. ஜேம்ஸ் மரிய ஆரோக்கியம், த. பரதவர் வாழ்வியல் ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை, 1990 ப. 127.
2. காத்தவராயன், கி., (தகவலர்), மீனவர், வயது 35, புதுக்குப்பம். (புதுவை மாநிலம்), களப்பணி நாள்: 4—8—1991.
3. முத்தம்மாள், கே. (தகவலர்), மீனவர், வயது 30, வீராம்பட்டிணம் (புதுவை மாநிலம்), களப்பணி நாள்: 8—8—1991
4. ஞானசேகரன், தே. மக்கள் வாழ்வில் மந்திரச்சடங்கு, பார்த்திபன் பதிப்பகம், மதுரை, 1987, ப. 117.
5. பெருமாள், ஏ. என். நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980, ப.37.
6. நல்லதம்பி, ந., (தகவலர்) மீனவர், வயது. 50, நல்லவாடு (புதுவை மாநிலம்)' களப்பணி நாள்: 4—8—1991.
7. வெங்கடேஸ்வரலு. தி. (தகவலர்), மருத்துவர், வயது 35, புதுவை, களப்பணி நாள்: 5—9—1991.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களின் அவல முடிவுகள்

ச. இரவி

வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களின் அவல முடிவுகள் கிராமிய மக்கள் மனதில் இரக்கத்தையும் பரிவுணர்ச்சிகளையும் ஏற்படுத்த இம்மக்களது பார்வையில் வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களது அவல முடிவுகள் எவ்வாறு மாற்றியமைக்கப் படுகின்றன? என்பது பற்றியும் காப்பியம் மற்றும் ஏனைய வகைக் கதைப்பாடல் தலைவர்களது முடிவு களில் இருந்து இத்தலைவர்கள் எவ்வாறெல்லாம் ஒன்றுபட்டும் வேறுபட்டும் அமைந்து பாதிப்பை ஏற்படுத்துகின்றனர் என்பது பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

தமிழகத்தில் கிடைத்துள்ள வரலாற்றுக் கதைப் பாடல்களின் தலைவர்கள் அவல முடிவினைப் பெறுகின்றனர். ஒவ்வொரு மனிதனுக்கும் பிறக்கும் போதே இறப்பும் உறுதியா- கின்றது. ஆனால் இறப்புகள் எல்லாம் அவலம் ஆவதில்லை. தலைவர்களின் முடிவுகளில் சில மனித இயல்புக்கு மாறாகவும், காலத்திற்கு ஒவ்வாததாகவும் அமைகின்றபோது அவலம் பிறக்கின்றது. இத்தகைய அவல முடிவுகளை நாம் வரலாற்றுக் கதைப் பாடல்களில் தொடர்ந்து காணமுடிகின்றது. இவ்வாறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமையும் அவல முடிவுகளை இக்கட்டுரை ஆராய முயல்கின்றது.

அவல முடிவுக்குரிய காரணங்கள்:

இந்தியக் காப்பிய மரபில் கதைத் தலைவர்கள் அவல முடிவைப் பெறுவதில்லை. எல்லாம் மங்கலமாக முடிய வேண்டும் என்பது பரத முனிவர்தம் இலக்கியக் கோட்பாடாகும். தமிழ்க் காப்பிய மரபில் கோவலன், உதயகுமரன், சச்சந்தன் போன்ற கதை மாந்தர்களை அவல முடிவுகள் பெற்ற கதைத் தலைவர்களாக நாம் கருதுவதில்லை. இவர்களின் அவல முடிவுகளுக்கு அப்பாலும் கதை வளர்ந்து செல்வதே இதற்குக் காரணமாகும். மேல்நாட்டு இலக்கியங்களில் அவல முடிவுகள் மிகச் சிறப்பாகக் காட்டப்படுகின்றன. சேக்சுபியரது அவல நாடகங்களில் வரும் கதைத் தலைவர்கள் தாங்கள் செய்யும் சிறு தவறுகளால் அவல முடிவினைப் பெறுகின்றனர்.

வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களின் அவல முடிவுக்குரிய காரணங்களில் முதன்மையானது கதைமாந்தர்களிடையிலுள்ள முரணாகும். இரண்டு ஆதிக்க சக்திகளுக்கிடையிலுள்ள அடிப்படையான முரண்பாடுகள் போராட்டத்திற்கு வழிவகுத்துக் கதையை நடத்திச் செல்கின்றன. இறுதியில் ஓர் ஆதிக்க சக்தி வெற்றிபெற, மற்றது தோல்வியுறுகின்றது. ஆனால் அவ்வாறு தோல்வியுறுகின்ற நிலையிலும் அவை வெற்றி பெற்றவர்களுக்கு இணையாண - சில வேளைகளில் அவர்களைக் காட்டிலும் மிகுந்த மதிப்பையும் மரியாதையையும் பெறுகின்றன.

ஆதிக்க சக்திகளின் இறுதி வெற்றி போர்களால் நிச்சயிக்கபடுகின்றது. எனினும் இப்போர்கள் வெறும் ஆதிக்கப் போர்களாகச் சித்திரிக்கப்பெறாமல் ஓர் உயரிய இலட்சியத்தின் அடிப்படையில் நடைபெறுவதாக வரலாற்றுக் கதைப் பாடல்கள் பாடிச் செல்கின்றன. ஐவர் ராசாக்கள் கதையில் பாண்டியன் - கன்னடியன் இருவரும் மணவுறவு காரணமாகப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போரிடுவதாகக் காட்டப்படுகின்றது. இது சங்க காலத்தில் புறப்பாடல்களில் இடம்பெற்றிருந்த மகட்பாற்காஞ்சியை நினைவூட்டுகின்றது. பேரரசான மதுரை மண்டலத்திற்கும் குறுநில அரசான சேதுபதிக்கும் இடையில் நடைபெற்ற மேலாதிக்கப் போர், கப்பம்கட்ட மறுத்தலை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றது. இதனை இராமப்பையன் அம்மானை சித்திரிக்கின்றது. இங்கு, கலிங்கத்துப்பரணி நம் நினைவுக்கு வருகின்றது. மேலாதிக்கத்தை எதிர்க்கும் குறுநில ஆதிக்கமாகக் கான்சாயபு சண்டை பாடப்பெறுகின்றது ஆங்கிலேயருக்கும் மருது சகோதரர்களுக்கும் இடையில் நடைபெறும் போர் தம்மிடம் அடைக்கலம் புகுந்தாரைக் காப்பாற்றுதல் என்ற அறக்கோட்பாட்டின் அடிப்படையில் நடைபெறுவதாகச் சித்திரிக்கப்பெறுகின்றது. இவை அனைத்திலும் அடிப்படை ஒன்றுதான். இரண்டு ஆதிக்க சக்திகளுக்கு இடையிலுள்ள அடிப்படை முரண்கள் தாம் போராட்டங்களுக்குக் காரணமாக அமைந்து அவல முடிவுக்கு இட்டுச் செல்கின்றன.

அவல முடிவுகள் ஏற்படும் நிலைகள்:

இளமையிலேயே பிறரால் மதிக்கப்படுமாறு செயற்கரிய செயல்களைச் செய்த வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களது அவலமுடிவுகள் இரண்டு நிலைகளில் ஏற்படுகின்றன.

1. தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்ளுதல்.
2. நண்பர்கள் அல்லது தங்களின் கீழ்ப் பணிபுரியும் ஊழியர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டு எதிரிகளால் தண்டிக்கப்படுதல்.

குலசேகரபாண்டியன் தன்னைத்தானே கத்தியால் குத்திக் கொள்வதாலும்[1] வன்னியத்தேவன் வைசூரி நோய் கண்டும் இறப்பைப் பற்றிக் கவலைப்படாமல் போர்க்களம் சென்றதாலும்[2] தங்களது இறப்புக்குத் தாங்களே காரணமாகி அவல முடிவினைத் தேடிக்கொள்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கான்சாகிபு தன்னிடம் பணிபுரிந்த சீனிவாசராவ், மார்ச் செண்ட், சேகுகான்பாபு ஆகிய மூவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்ட நிலையிலும்;[3] சின்ன மருதுவை கருத்தை யாவும், பெரிய மருதுவை வலையனும் காட்டிக் கொடுத்த நிலையிலும்,[4] இவர்கள் நவாபு ஆங்கிலேயர்களால் தூக்கில் இடப்பட்டு அவல முடிவினைப் பெறுகின்றனர்.

அவல முடிவினால் ஏற்படும் பாதிப்பு:

வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்கள் எதிரிகளால் தாக்கப்படும்போது அச்சமும், கொலை(க்கள)ப்படுகின்றபோது இரக்கமும், பரிவும் அவர்கள்பால் ஏற்படுகின்றன. இக்கதைப் பாடல்கள் நிகழ்கலையாக இருக்கின்றபோது பார்வை யாளர்கள் மத்தியிலும், படிக்கின்றபோது படிப்போர் மனத்திலும் இவ்வுணர்வுகள் பலநிலைகளில் ஏற்படுகின்றன. இத்தலைவர்களது அவல முடிவு இயற்கைக்கு மாறானதாக அமைகின்றபோதும், வாழ்க்கை முற்றுப் பெறாமல் இளம் வயதிலேயே இறப்பைத் தேடிக்கொள்ளுகின்றபோதும் உயர்ந்த நிலையில் இருந்த இவர்கள் அனைத்து உடைமைகளையும் இழந்து இறப்பைத் தேடிக்கொள்ளுகின்றபோதும் சிறந்த வீரர்களாகிய இவர்கள் தங்கள் பணியாளர்கள் மற்றும் நண்பர்களால் காட்டிக் கொடுக்கப்படும் நிலையில் தங்களது வீரத்தை வெளிக்காட்ட முடியாமல் எதிரிகளால் கொடிய தண்டனைக்கு ஆட்படுகின்றபோதும் உயர்ந்த குறிக்கோள் மற்றும் இலட்சியத்திற்காகப் போராடித் தங்களது உயிர்களை இழக்கின்றபோதும் தங்களது சிறிய படை பலத்தைக் கொண்டு எதிர்ப்பது தற்கொலைக்குச் சமமானது என்று தெரிந்திருந்தபோதும் நட்பு மற்றும் விசுவாசத்திற்காகத் தங்களைத் தாங்களே தியாகம் செய்து கொள்ளுகின்றபோதும் இரக்கமும்பரிவுணர்வும் இவ்வீரத் தனலவர்கள் பால் நமக்கு ஏற்படுகின்றன. அவலத்தின் பிழிவு இரக்கமும் பரிவும் என்று கூறும் அரிசுடாட்டிலின் கருத்து இங்கு நினைக்கத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டுப்புற மக்கள் பார்வையில் அவலத் தலைவர்கள்:

இத்தகைய அவலக் காட்சிகளைக் காணும் நாட்டுப்புறக் கவிஞன் அவர்களின் முடிவு சரியா? தவறா? என்ற ஆராய்ச்சிக்குள் புகாமல் அக்கதைத் தலைவர்களை மக்கள் எவ்வாறு பார்த்தனர் என்ற கோணத்திலிருந்தே பாடினான்.

படிப்பறிவு இல்லாதவர்களுக்காகச் சொல்லப்படும் இக் கதைப்பாடல் தலைவர்களின் அவல முடிவு அவர்களது கல்வியறிவு மற்றும் அவர்களது உணர்வுகளின் ஆழத்தைப் பொறுத்தே அமைகின்றது. எனவே, இக்கதைப்பாடல் தலைவர் களின் அவல முடிவை நாட்டுப்புற மக்களது விருப்பத்திற்கு ஏற்ப, சில இடங்களில் நாட்டுப்புறக் கவிகள் சில மாற்றங் களுக்கு உட்படுத்தியிருக்கின்றனர் என எண்ணுவதற்கு இடம் தருகின்றது .

குலசேகர பாண்டியன் போர்க்களத்தில் கொல்லப்பட்டான் என்பது வரலாறு. ஆனால் ஐவர் ராசாக்கள் கதைப்பாடலோ அவன் தன்னைத்தானே கத்தியால குத்தி மாய்த்துக் கொள்வதாகக் கூறுகின்றது. மற்றொரு கதை வடிவம், அவன் தனது மோதிரத்தில் உள்ள வைரக்கற்களை விழுங்கித்தனது உயிரைப் போக்கிக் கொண்டதாகக் கூறுகின்றது.[5]

உண்மை ஏதுவாக இருப்பினும் நாட்டுப்புற மக்கள் குலசேகர பாண்டியனைப் பாண்டியர் குல மன்னனாகக் கருதியதால் அவனைப் பாரம்பரியப் பெருமை மிக்கவனாகக் கருதி, அவன் மீது மிகுந்த மரியாதையும், மதிப்பும் வைத்திருந்தனர். இந்நிலையில் குலசேகர பாண்டியன் போர்க் களத்தில் எதிரிகளால் கொல்லப்பட்டான் என்பதைக்கூற விரும்பாத நாட்டுப்புறக் கவிஞர்கள் மணஉறவு தொடர்பான காதல்சுவைமிக்க கற்பனைக் கதையொன்றைப் படைத்துக் கொண்டனர்.[6] இம்மாற்றத்தால் பாரம்பரியப் பெருமையற்ற கன்னடியனது மகளை மணக்க மறுத்துத் தன் குலப் பெருமையைக் காப்பாற்றும் புனிதப்போரில் ஈடுபட்டு எதிரியின் கைகளில் மடியாமல் தன்னைத்தானே மாய்த்துக் கொள்வதாகப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படைத்துக் குலசேகரபாண்டியனது வீரந்திற்கு மாசுஏற்படாமல் நாட்டுப்புறக்கவி பார்த்துக்கொண்டதையே இது காட்டுகிறது.

வன்னியத்தேவன் போர்க்களத்தில் கொல்லப்பட்டாலும் 'இராமப்பய்யன் கதைப்பாடல்' அவன் வைசூரி நோயுற்ற நிலையிலும் போர்க்களம் சென்று போரிட்டு வெற்றிவாகை சூடிவந்த பிறகே இறப்பதாகக் கூறுகின்றது. வன்னி போர்க் களத்தில் கொல்லப்படுவதை இழுக்காகக்கருதி அதனை ஒப்புக் கொள்ளாது நோய்வாய்ப்பட்ட நிலையிலும் போர்க்களம் சென்று போராடி வெற்றி பெற்ற பிறகே அவன் இறந்ததாகக் கூறி நாட்டுப்புறக்கவிஞன் அவனது வீரப்பெருமைக்கு மகுடம் சூட்டுகின்றான்.

'கான்சாகிபு சண்டையில்' கான்சாகிபை மூன்று முறை தூக்கிலிட்டும் அவனது உயிர் பிரியாமல் இருப்பதாகக் காட்டப்பட்டிருக்கின்றது. சிறந்த வீரர்களது உயிர் ஏதேனும் மறைவிடத்தில் இருப்பதாக நாட்டுப்புற மக்கள் நம்பினர் அதன் விளைவாக, கான்சாகிபின் உயிரைப் போக்கமுடியாத வீரர்களிடத்துக் கான்சாகிபே தனது உயிர் உச்சிப் பிடரியில் இருப்பதாகக் கூறி அதை எடுத்துவிட்டுத் தூக்கிலிடும்படி உத்தரவிடுவதாகச் சித்திரிக்கப்படுகின்றது. எனவே கான்சாகிபின் அவல முடிவு எதிரியால் ஏற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாத நாட்டுப்புறக் கவிஞன் மக்களைத் திருப்திப்படுத்த வேண்டி அவல முடிவை அவனே தேடிக் கொண்டதாக மாற்றி அமைத்துக் கொள்கின்றான். வலிமை வாய்ந்த சிறந்த வீரர்கள் உடனடியாக இறப்பதை நாட்டுப்புற மக்கள் விரும்பாததால் கான்சாகிபிற்கு மீவியல் ஆற்றல் இருப்பதாகப் புனைந்து அவனைக் காலதாமதப்படுத்தி இறக்க வைக்கின்றான்.

மருது வீரர்கள் போர்க்களத்தில் தோல்வியுற்றுச் சிறைப் படுத்தப்பட்டதாகக் கூறினால், அவர்களது வீரத்திற்கு இழுக்கு என்று கருதிய நாட்டுப்புறக்கவி நயவஞ்சகர்களால் காட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில் அவர்கள் பிடிக்கப்பட்டுத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தூக்கிலிடப்பட்டதாகச் சிவசங்கைச் சரித்திரக்கும்மி கூறுகின்றது. மருது வீரர்கள் பெரும் வீரர்களாக மக்களால் கருதப்பட்டமையால் அவர்களைப்போரில் வெற்றி கொள்ள முடியாது என்று கருதுகின்ற நாட்டுப்புறமக்களது விருப்பத்தைக் கவிஞன் பூர்த்தி செய்திருப்பதாகவே தோன்றுகின்றது.

இவ்வாறாக நாட்டுபுற மக்கள் வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களை மிகச்சிறந்த வீரர்களாகக் கருதியதால் போர்களில் விழுப்புண்பட்டு இறப்பதாகவோ, எதிரிகளால் நேரடியாகப் பிடிக்கப்பட்டுக் கொல்லப்படுபவர்களாகவோ காட்டுவதில்லை.அவ்வாறு புனைவது அவ்வீரத் தலைவர்களுக்கு இழுக்காகக் கருதப்பட்டதால் அவர்கள் தாங்களாகவே இறப்பைத் தழுவிக் கொள்பவர்களாகவும் போர்களில் வெற்றி கொள்ள முடியா வீரர்களாகையால் சூழ்ச்சியினால் பிடிக்கப் பட்டுக் கொல்லப்படுபவர்களாகவும் காட்டப்பட்டிருக்கின்றனர்.

காப்பியம் - வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களின் முடிவுகள்–ஒப்பீடு:

இந்தியக் காப்பிய மரபில் காப்பியத் தலைவர்கள் அவல முடிவினைப் பெறுவதில்லை. இக்காப்பியங்கள் அனைத்தும் திட்டமிடப்பட்ட படைப்புகள், ஆதலால் இவற்றில் இடம் பெறும் தலைவர்கள் அறத்தின் திருவுருவாகவும், அவர்களுக்குத் தீங்கிழைக்கும் பாத்திரங்களாக வரும் எதிர்நிலைப் பாத்திரங்கள் தவறிழைக்கும் பாத்திரங்களாகவும் படைக்கப் பட்டிருக்கின்றனர். இதனால் தலைமைப் பாத்திரங்கள் நல்லவர்களாகவும் எதிர்நிலைப் பாத்திரங்கள் தீயவர்களாகவும் காணப் படுகின்றனர். மக்களை நன்னெறிப்படுத்தி வழிகாட்டவேண்டிய நிலையில் நன்னெறிப் பாத்திரங்களாகிய தலைமைப் பாத்திரங்கள் தீய பாத்திரங்களாகிய எதிர்நிலைப் பாத்திரங்களை அழிக்கும் செயலில் ஈடுபட்டு வெற்றிபெற்று அறத்தை நிலை நாட்டுவதாகக் காப்பியத்தலைவர்கள் படைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் இன்ப முடிவைப் பெற்றவர்களாகக் காணப் படுகின்றனர். சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்தின் முடிவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிகச்சிறந்த அவல முடிவாக இருப்பினும் அதனை மங்கலமாக முடிப்பதற்கு வஞ்சிக்காண்டம் பாடப்பட்டிருப்பது இங்கு நினைக்கத் தக்கது.

வரலாற்றுக் கதைப் பாடல்கள் அவ்வாறு திட்டமிடப்பட்டுப் படைக்கப்படவில்லை. அறநெறியைப் பரப்ப வேண்டும் என்ற ஒரு திட்டமிட்ட நிலையிலோ மக்களுக்கு நீதியைப் புகட்ட வேண்டுமென்றோ நினைக்காமல், அவலத் தலைவரது இனத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் இனத்தின் பெருமையையும், புகழையும் பரப்பும் நோக்கில் அல்லது அவர்களது அருஞ்செயலை அவர்களது சந்ததியினர்க்கு நினைவு நாளில் நினைவு படுத்த வேண்டிய நிலையில் பாடினர். இத்தலைவர்கள் தங்கள் நியாயத்திற்காகப் போராடிய போராட்டத்தில் தங்களது உயிரையும் இழந்தநிலை நாட்டுப்புற மக்களது மனத்தில் பெரும் அவலத்தை ஏற்படுத்தியதால் அவர்களை நினைவுகூர வேண்டிய தேவை நாட்டுப்புற மக்களுக்கு ஏற்பட்டது. நாட்டுப்புற மக்களது எண்ணம் கருத்துகளுக்கேற்ப வரலாற்றுத் தலைவர்களது அவல முடிவுகளை மாற்றிக்கொண்டார்களே தவிர காப்பியத்தலைவர்களைப் போன்று இன்ப முடிவினைப் படைத்துக் கொள்ள நாட்டுப் புறக்கவிகள் ஒரு போதும் முயன்றதில்லை.

கதைப்பாடல் தலைவர்களுக்கிடையே அவல முடிகள்:

புராணக் கதைப்பாடல்களில் வரும் மாந்தர்கள் பெரும் பாலும் தெய்வ மாந்தர்களாகவே இருப்பதால் இவற்றில் வரும் தலைவர்கள் மீவியல் ஆற்றலைப் பெற்றவர்களாகக் காணப் படுகின்றனர். இதனால் தன்னேரில்லாத் தலைவர்களாக விளங்கும் புராணக் கதைப்பாடல் தலைவர்கள் பெரும்பாலும் அவல முடிவினைப் பெறாது வெற்றி வீரர்களாகத் திகழ்வதால் இன்ப முடிவினைப் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வகையில் இவர்கள் ஏட்டிலக்கியத் தலைவர்களோடு ஒன்று பட்டிருப்பதைக் காணலாம்.

சமூகக் கதைப்பாடல் தலைவர்கள் பலர் உயர் குடிமக்களின் பாதுகாப்பிற்காகப் போடப்பட்ட சமூகச் சட்டங்களாகிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாதீயச் சட்டங்கள் முதலானவற்றை மீறி மனித உரிமைக்காகப் போராடும் போராட்டத்தில் உயர்வர்க்கத்தினரால் தண்டிக்கப் பட்டு அவலமுடிவைப் பெற்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

இதே போன்று வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களும் ஆதிக்கச் சக்திக்கு அடிபணிய மறுத்து நடைபெற்ற உரிமைப் போரில் தங்களது உயிர்களை இழந்து சோக முடிவைப் பெற்று அவலத்திற்கு உள்ளாகின்றனர்.

இவ்வகையில் புராணக் கதைப்பாடல் தலைவர்களின் இன்பியல் முடிவிலிருந்து சமூக, வரலாற்றுக்கதைப்பாடல் தலைவர்கள் வேறுபட்டு அவல முடிவைப் பெறுகின்றனர். இரண்டுக்கும் ஒற்றுமை காணப்படுகின்றது.

தெய்வமாக்கப் படாமை:

பெரும்பாலான சமூக வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்கள் அவல முடிவினைப் பெற்றவர்களாகக் காணப் பட்டாலும் சமூகக் கதைப்பாடல் தலைவர்கள் மட்டுமே தெய்வமாக்கப்பட்டிருக்கின்றனர். வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்கள் இந்நிலையில் இருந்து வேறுபட்டு மதிப்பு மிகுந்த வீரத்தலைவர்களாகவே பார்க்கப்பட்டு வருகின்றனர்.

புராண, சமூக, வரலாற்றுக் கதைப்பாடல்களில் புராணக் கூறுகள் பெரும்பாலும் இல்லாமல் இருப்பது வரலாற்றுக் கதைப்பாடல்களில் மட்டுமே. புராணக் கதைப்பாடல்களில் வரும் மாந்தர்கள் தெய்வ மாந்தர்களாகப் படைக்கப்பட, சமூக வரலாற்றுக் கதைப்பாடல்களில் வரும் மாந்தர்கள் மண்ணில் நடக்கும் மாந்தர்களாகப் படைக்கப் பெற்றிருக் கின்றனர். எனினும், சமூகக் கதைப்பாடல்களில் புராணக் கூறுகள் சேர்க்கப்படுகின்றபோது அவற்றில் இடம்பெற்றுள்ள தலைவர்களில் சிலர் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுகின்றனர். 'அண்ணன்மார் சுவாமி கதை', 'காத்தவராயன் கதை', (மதுரைவீரன் கதை) போன்ற சமூகக் கதைப்பாடல்களில் புராணக்கூறுகள் மிகுந்திருப்பதால் அண்ணன்மார்களும், காத்தவராயனும், மதுரை வீரனும் தெய்வமாக வணங்கப் படுவதைக் காணலாம்.[7]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும் வரலாற்றுக் கதைப்பாடல்கள் பெரும்பாலும் அண்மைக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளையே விளக்குகின்றன. எதையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்க்கும் இக்காலத்தில் கடவுள் பற்றிய நம்பிக்கை இல்லாது இருப்ப-தால் வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்கள் பெரும்பாலும் தெய்வமாக்கப்படவில்லை.

ஆனால் காலத்தால் முற்பட்ட வரலாற்றுக் கதைப் பாடலாகிய 'ஐவர் ராசாக்கள் கதை'யில் வருகின்ற ஐவருக்கும் கோவில் எடுக்கப்பட்டிருக்கின்றது[8]. இதே போன்று தேதியிடப் பட்டு வெளிவந்த முதல் கதைப்பாடலாகக் கருதப்படும் இராமப்பையன் அம்மானையில் வரும் இராமப்பையன் அவன்பிறந்த இடமாகிய மதுரைக்கு ஏழுகல்லில் உள்ள சதுர்வேதிமங்கலம் என்ற கூத்தியார்குண்டில் உள்ள சிவாலயத்தில் அவனது சிலை அமைக்கப்பட்டிருப்பதும்[9] குறிப்பிடத்தக்கது.

அவல முடிவு தரும் முக்கியத்துவம்:

வலிமை குறைந்த சக்திகளாக விளங்கும் வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்கள் சுதந்திரம் மற்றும் தன்னுரிமைக் காகப் போராடிய சூழலில் தம் பக்கத்திலிருக்கும் நியாயங் களுக்காகப் போராடுகின்றனர். இவர்களனைவரும் வலிமை மிகுந்த சக்திகளிடம் தோல்வியைத் தழுவுவது என்பது வரலாற்று நியாயம் தோல்வியைத் தழுவுவதாகவே அமைந்து விடுகின்றது. எனினும், இத்தோல்வி காலச் சூழலின் விளை வாகும். இது நிரந்தரமானதன்று. எனவே, பிற்காலத்தில் தோன்றிய சுதந்திரம் மற்றும் தன்னுரிமைக்கான எழுச்சிப் போராட்டக் களத்திற்கு இவர்களது வரலாறுகள் முன்னு-தாரணங்களாய்த் திகழ்ந்து வருகின்றன.

வரலாற்றுத் தலைவர்களது அவல முடிவுகள் அவர்களது நடவடிக்கைகளுக்கு உயர்ந்த மதிப்புக்கொடுத்து அவர்களைத் தியாகிகளாக உயர்த்திக்காட்டுகின்றன. எந்தவொரு ஏட்டி-லக்கியமும் இவர்களைப் பற்றிப் பேசாமல் மௌனமாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருக்க, இவர்களது அவல முடிவுகளே வரலாற்றுக் கதைப் பாடல்களாக நாட்டுப்புறமக்கள் முன்பு தோற்றம் பெறச் செய்து, வரலாற்றுக்குப் புத்துயிர் ஊட்டியிருக்கின்றன. இம் முடிவுகள் மனிதர்களுக்கு முன்மாதிரிகளாக விளங்குவதோடு அவர்கள் பின்பற்றிய கொள்கைகளையும் இலட்சியங்களையும் உயர்ந்த நோக்கங்களையும் மக்களைக் கண்டுகொள்ளச் செய்திருக்கின்றன. மக்களை விழிப்புணர்ச்சி கொள்ளச் செய்து அவர்களைத் தட்டியெழுப்பும் கருவியாக வரலாற்றுக் கதைப் பாடல் தலைவர்களது சோக முடிவுகள் அமைந்திருக்கின்றன.

சமூக அநீதியை எதிர்த்துப் போராடிய வீரர்களை வணங்கச் செய்வதோடு சமூகம் எவ்வாறு இயங்கவேண்டும் என்பதையும் இவ்வரலாற்றுக் கதைப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. அவல வீரர்களிடத்து ஏற்படும் இரக்கமும், பரிவும் அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டுகின்றன.

அடிமைச் சமூகத்தில் இருந்து சுதந்திரம் மற்றும் தன்னுரிமையை நோக்கிச் செல்கின்ற சமூகத்தில் தவிர்க்க இயலாத முறையில் வரலாறு வளரவேண்டியதைப் பார்க்கின்ற போது வரலாற்றுத்தலைவர்களின் அவல முடிவின் முக்கியத் துவத்தை உணரமுடியும்.

அடிக்குறிப்புகள்:

1. நா. வானமாமலை (ப.ஆ)., 'ஐவர்ராசாக்கள் கதை' மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-1974, ப. 213.

2. சி. எம். இராமச்சந்திரஞ்செட்டியார் (ப.ஆ)., 'இராமப்பய்யன் அம்மானை' தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு, தஞ்சை-1978, பக் 76-82.

3. நா. வானமாலை, 'கான்சாகிபு சண்டை; மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-1972, பக் 110-118.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. தி. சந்திரசேகரன் (ப. ஆ)., 'சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும்' அரசு கையேட்டு ஆவணக் காப்பகம், சென்னை - 1954, பக் 79,85,97-99.

5. நா. வானமாமலை (ப.ஆ)., அடிக்குறிப்பு, ஐவர்ராசாக்கள் கதை, ப. 213.

6. நா. வானமாமலை., (ப.ஆ)., ஐவர்ராசாக்கள் கதை, ப. 27.

7. அ. நா. பெருமாள், 'நாட்டுப்புறவியல் சிந்தனைகள்' தேன் மழை வெளியீடு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-1987, பக். 21-22

8. நா. வானமாமலை (ப. ஆ)., ஐவர்ராசாக்கள் கதை, ப. 23.

9. சி.எம். இராசச்சந்திரஞ் செட்டியார்., பதிப்புரை, இராமப் பய்யன் அம்மானை, ப. 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முற்றுவினை, எச்சவினை - வடிவமைப்பு

இராம. இராமமூர்த்தி

இக்கட்டுரை பழந்தமிழில் காணலாகும் வினைச் சொற்களின் வடிவ, பொருண்மை நிலைகளை மேலோட்டமாகச் சுட்டுகின்றது. முற்றும் எச்சமும் வடிவால் வேறு படாமல் அமைவிடத்தான் மாறு படுவதையும் முற்று எச்சப் பொருண்மைபடப் பல விடங்களிற் செயலாற்றுவதையும் கட்டுரையாளர் குறித்துள்ளார். இது, மேலும் ஆழங்காற்பட ஆய வேண்டிய இடமாகும்.

0.1 ''வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்'',

என்பது வினைச் சொற்குத் தொல்காப்பியர் தரும் வரை விலக்கணமாகும். அவ்வினைச் சொல் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சமென வகைப்படுத்தப்படுகின்றது. இதனையே, முற்று, எச்சமென இருபாற்படுத்துவர். இஃதெங்ஙனமாயினும், வினைச்சொல், முற்று, எச்சமெனவும் பின்னர் அவ்வெச்சம் பெயரெச்சம், வினையெச்ச மெனவும் வகைப்படுத்தப் பெறுவதே இன்றைய பெருவழக்காக நின்று நிலவி வருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1.1. "பிற சொல்லை அவாவாது தாமே முற்றிநிற்குந் தன்மையுடைய வினைச் சொல் முற்றுவினையெனவும், பிறிதோர் சொல்லைப் பற்றி நிற்குஞ் சொல் எச்சமெனவும் படுகின்றது. இதனையே சேனாவரையர்,

> "முற்றுச் சொல்லிற்கும் எச்சத்திற்கும் வேற்றுமை யாதெனின்: பிறிதோர் சொல்லோடியையாது தாமே தொடராதற்கேற்கும் வினைச்சொல் முற்றாம்; பிறிதோர் சொற்பற்றியல்லது நிற்ற லாற்றா வினைச்சொல் எச்சமாம். இது தம்முள் வேற்றுமை யென்க".

என விளக்கியுரைக்கின்றார். ஈண்டுக் கூறப்படுகின்ற வேற்றுமை பொருள் வேற்றுமை பற்றியது; மற்றும் தொடரமைப்பில் அச்சொல்தான் அமையுமிடமும் பொருட் புலப்பாட்டிற்குத் துணை நிற்கின்றது. ஆனால், இக்கட்டுரை வினைமுற்றும், எச்சமும் வடிவிற் சிறிதும் வேறுபாடின்றிப் பொருள் வேறுபாட்டை உணர்த்துவது பற்றி ஆராய முற்படு கின்றது.

1.2. பொதுவாக வினைமுற்று, தன்னளவில் வினை முதலையுங் காலத்தையும் செயலையுஞ் சுட்டுவதாகவே காணப்படுகின்றது. (முருகன்) **உண்டான்**; இம்முற்றில் உண்டலாகிய செயலும், இறந்த காலமும், ஆண்பால் ஒருமைப் படர்க்கையும் உணர்த்தப்படுகின்றன.

> **உண்டு** வந்தான்;
> **உண்ட** களிறு;

இத்தொடர்களில் உண்டு, உண்ட என்பன எச்சங்கள். இவை செயலையும் காலத்தையும் உணர்த்தி வினைமுதலைச் சுட்டாது நின்றன. எனவே இவை எச்சமாயின. ஈண்டு எச்சவினைக்கும் முற்றுக்கும் வடிவ வேற்றுமை தெளிவாக அமைந்துள்ளது.

1.3. ஆனால்,

> **உண்ணும்** களிறு;
> களிறு **உண்ணும்**;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும் தொடர்களில், 'உண்ணும்' என்னும் ஒரே சொல், வடிவிற் சிறிதும் வேற்றுமையில்லையாக, முதற்றொடரில் எச்சமாகவும், இரண்டாந்தொடரில் முற்றாகவும் அமைந்து உள்ளது. ஈண்டு, 'உண்ணும்' என்ற சொல்லில் உண்டல் தொழில் எளிதில் விளங்குமாறு போல வினைமுதலுங் காலமும் தெளிவாக அமையவில்லை. (உண்ணும் செய்யுமென் முற்று நிகழ்காலஞ் சுட்டு மென்பது தொல்காப்பியம். நன்னூலார் கூற்று, இன்று எதிர்காலமாகச் சுட்டப்பெறுதல் காண்க.) அவ்வாறிருக்க, முதற்றொடரிற் பெயரெச்சமாகவும், இரண்டாந்தொடரில் முற்றுவினையாகவும் அமைதற்குரிய சூழல் யாதெனக் காணலாம்.

முதற்றொடரில் உண்ணும் என்ற வினைச் சொல், தொடரின் முதலில் நின்று, களிறு என்னும் பிறிதோர் சொல் பற்றி நின்றமைகின்றது. இங்கு, உண்ணுதலைச் செய்யுங் களிறு எனப்பொருள் படவமைதலால்எச்சப் பொருளுணர்த்திய தென்பர். இரண்டாந் தொடரில், 'களிறு உண்ணும்; – களிறு உண்ணுதலைச் செய்கின்றது எனப் பொருட்பயந்து, முற்றி நிற்றலான் முற்று வினையாகின்றது. இதனை நோக்க, ஒரே வினைச் சொல் வடிவம் மாறுபடாமல், அமைவிடத்தான் (Syntax) வேறுப்பட்ட பொருளுணர்த்தி நிற்குமென்பது புலனாகின்றது. வினைச் சொல்லில் ஈ தொரு நிலை. இதனைச் செய்யுமென்னும் பெயரெச்சமாகவும், செய்யுமென் முற்றாக-வும் தொல்காப்பியம் சுட்டும்.

1.4. மேற்சுட்டியவாற்றான், அமைவிடத்தான் பொருள் மாற்றம் தருவதொருவகை, மற்றொன்று வடிவ அமைப்பில் முற்றாகவும், பொருள்கொள்ளும் நிலையில் திரிந்து எச்சமாக-வும் அமைந்து செயற்படுவதாகும்.

அ) **மேசயினள்** உயிர்த்த காலை;
ஆ) **பெயர்த்தனென்** முயங்க யான்;
இ) **தங்கினை** சென்மோ
ஈ) குன்று முண்டுநீர் **பாடினிர்** செலினே;
உ) **பாடில** கலிழுங் கண்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்காட்டிய தொடர்களில் மோயினள்; பாடில; பெயர்த்தனென்; தங்கினை; பாடினிர்; என்பன படர்க்கை; தன்மை, முன்னிலை இடங்களைச் சுட்டுகின்ற முற்று வினைகளாகும். ஆனால், மோய், பெயர்த்து, தங்கி, பாடி, பாடிலவாய், என்று எச்சப் பொருட்பட அமைந்துள்ளன. மற்றும்,

கண்டனன் மகிழ்ந்தான்;
வில்லினன் வந்தான்;

என்ற தொடர்கள் கண்டு மகிழ்ந்தான்; வில்லினனாகி வந்தான் எனவெச்சப் பொருள் சுட்டுதல் காண்க.

1.4.1. ஈண்டு, இம் முற்றுவினைகள் வடிவான் முற்றாகவே, திரிபின்றி விளங்குகின்றன; ஆனால், பொருண்மை சுட்டுமிடத்து எச்சங்களாகவே தொழிற்படுகின்றன. இவற்றைப் பிற்கால இலக்கணிகள் முற்றெச்சமென வழங்குவர். நன்னூலார் இதனை,

"வினைமுற் றேவினை யெச்ச மாகலும்
குறிப்புமுற் றீரெச்ச மாகலும் உளவே",

எனக் குறிப்பர். இதனால், வினைச்சொல், முற்று வடிவாக இருப்பினும், எச்சப்பொருள் தருவதால் முற்றெச்சமாகின்ற-தெனக் கூறுவர். இக்கருத்தைத் தொல்காப்பியர்,

"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய",

என்ற நூற்பாவான் சுட்டுவதாக வுரையாசிரியப் பெருமக்கள் உரைக்கின்றனர்.

1.5. இதுகாறுஞ் சுட்டிய எடுத்துக் காட்டுகளை ஊன்றி நோக்கின், இரு கருத்துக்கள் புலனாகின்றன. ஒன்று: சில சொற்கள், சொல்லில் திரிபின்றி வருமிடத்தான் எச்சமாகவும், முற்றாகவும் தொழிற்படுகின்றன. இதனைச் 'செய்யுமென்னும் பெயரெச்ச'மாகவும், நிகழுங்காலத்துச் 'செய்யுமென்முற்றாக'வும் தொல்காப்பியம் கூறுகின்றது. ஈண்டு, முற்றும், எச்சமும் சிறிதும் வடிவில் வேறுபடுவதில்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றொன்று, வடிவான் முற்று வினையாகவும், தொழிற்படு தன்மையான் எச்சமாகவும் அமைவது. கண்டனன் என்ற முற்றுவினை, 'கண்டு' எனவும், பெயர்த்தனென் என்ற முற்றுவினை, 'பெயர்த்து' எனவும், பாடில என்ற முற்றுவினை 'பாடிலவாகி' எனவும் வடிவான் வேறுபடும் வகையில் அமைந்துள்ளமை நோக்கற்குரியது.

1.6 பிறிதொன்று; ஒரே வடிவம் இருவகை நிலைக்கும் உரித்தாகி வருவது. 'செய்யிய', 'செய்யியர்', ஆகிய இவையிரண்டும் வினையெஞ்சு கிளவிகளாகும்.

> **உண்ணிய** சென்றான்;
> **மண்ணிய** சென்ற வொண்ணுத லரிவை;
> **உண்ணியர்** வந்தான்;
> **தின்னியர்** சென்றான்;

மேலே காட்டிய எடுத்துக் காட்டுகளுள், செய்யிய, செய்யியர் என்ற இரண்டும் எதிர்காலம் உணர்த்தும் எச்சங்களாக வந்துள்ளன.

> "**நீயா கியரென்** கணவனை
> **யானா கியர்நின்** னெஞ்சுநேர் பவளே".
> (குறுந். 49).
> "சென்றள் **வாழிய** மடந்தை' (நற். 20).

இவ்விரு எடுத்துக் காட்டுகளிலும், செய்யியர், செய்யிய என்பன வியங்கோள் முற்றுகளாகவுள்ளன. இந்நிலையை நோக்கின், 'செய்யும்' என்னும் ஒரேசொல் வடிவில் திரியாது முற்றாகவும், எச்சமாகவும் நின்று பொருள்பட்டாங்கு இவ்விரு சொற்களும் எச்சமாகவும் முற்றாகவும் விளங்குகின்றன. இவையும், செய்யுமெனுஞ் சொல்லை யொப்ப, அமைவிடத்தான் முற்றாகவும், எச்சமாகவும் தொழிற்படுதல் தெற்றெனப் புலனாகும்.

1.7. (யான்) காண்கு வந்தேன்;
(யான்) உண்கு வந்தேன்;

ஈண்டுச் செய்கென்னும் ஒருமைத் தன்மை முற்று, வினையொடு முடியினும், முற்றுவினைப் பொருண்மையிற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றிரியாதென்பர் - தொல்காப்பியர். இச்'செய்கு' என்னும் முற்றைச் சுட்டும் நூற்பாக்களிரண்டு; அவை வருமாறு:

"கடதற வென்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ(டு)
என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே".
(தொல். சொல் 203)

"அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்;
(தொல். சொல் 204.)

முதனூற்பா தன்மையொருமை வினை முற்றுகளின் ஈறுகளைத் தொகுத்துரைக்கின்றது. அவற்றுளொன்று 'குவ்வீறாகும். இரண்டாம் நூற்பா 'செய்கு' என்னும் முற்று, முடிக்குஞ் சொல்லாக மற்றொரு வினையைக் கொண்டு முடியினும், முற்று வினை நிலையில் திரியாதெனச் சுட்டுகின்றது.

1:7:1: 'செய்கு' என்பது முற்று எனப்பட்டாலும், காண்கு வந்தேன் என்ற தொடரில் 'காண்கு' என்பது காண (வந்தேன்) எனப் பொருள் தரல் காண்க. முற்றுவினையின் பொதுவிலக்கணம் பிறிதோர் சொல்லோடியையாது தாமே தொடராகும் என விளக்கப்படுகின்றது. ஈண்டோ, 'செய்கு' என்னும் முற்று பிறிதொரு முற்றைக் கொண்டு முடிகின்றது: முடியினும் முற்றேயாம் எனச் சுட்டப் பெறுகின்றது. இந்நிலையெழக் காரணம் என்னையோவெனின், 'செய்கு' என்பது தன்மை யொருமை முற்றாகக் குறிக்கப் பெற்றாலும் தொடரமைப்பில் மற்றொரு முற்றொடு தொடர்ந்து முடிகின்றமையேயாம். மேலும், இச்செய் கென்னும் முற்று எச்சப்பொருள் கொள்ளவும் காண்குவந்தேன் (காண்கு வந்தேன்-காணவந்தேன்-காணற்கு வந்தேன்) இட மளித்து நிற்றல் காண்க. 'காண்கு' என்பது எதிர் காலங் குறிக்குமோர் ஒருமைத் தன்மை முற்றென்பர் சேனாவரையர். இவ்வெதிர்காலங் காட்டும் 'காண்கு'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காண்பேன் - எனப் பொருள் தரல் வேண்டும். இந்நிலையில், (யான்) உண்ட + வந்தேன் என்பது, உண்பேன் வந்தேன் எனப் பொருள் தரல் வேண்டும். இதனையே உண்ணவந்தேன்; உணற்கு வந்தேன் எனவுஞ் சுட்டலாமன்றோ?

ஆகலின்' செய்கு என்னும் ஒருமைத் தன்மை முற்று, தனித்து முடிக்குஞ் சொல்லாக வருவதினும், மற்றொரு வினையொடு தொடர்ந்து வருவது பெருவழக்காகின்றது. தனித்து முற்றாக வருவது அருகிய வழக்காகவே அமைகின்றது. நன்னூலார் 'செய்கென்' முற்றொடு 'செய்கும்' என்னும் பன்மைத் தன்மை முற்றையும் சேர்த்து மொழிவர்.

> "செய்கென் னொருமையும் செய்குமென் பன்மையும்
> வினையொடு முடியினும் விளம்பிய முற்றே",

என்ற நூற்பா முன்னர்க் கூறிய செய்தியை விளக்குவதாகும். இதனை நோக்க, இம் முற்றும் (செய்கு), வடிவான் முற்றாக இருப்பினும் எச்சப் பொருண்மையைச் சுட்டும் எச்சமாகவும் விளங்குகின்றது.

2.0. ஈதொப்பத் தமிழில் பல முற்றுவினைகள் தம் வடிவில் திரியாது நின்றே எச்சப் பொருள்பட வருதல் உறுதியாகின்றது. அவ்வாறிருக்க, முற்றுவினைகளுள் சிலவற்றையே முற்றெச்சமென மொழிகுவர் நன்னூலார். "செய்கெனொருமையும் செய்குமென் பன்மையும் வினையொடு முடியினும் விளம்பிய முற்றே" எனத் தனி நூற்பா யாத்தது தொல்காப்பியச் செல்வாக்கையே சுட்டும். செய்குமென் பன்மையையுஞ் சேர்த்துச் சுட்டியமை நன்னூலார் தம்கால வழக்காகச் சுட்டியதாகலாம். ஆனால், முற்றெச்சமெனத் தனித்துச் சுட்டிய நன்னூலார், 'செய்து' 'செய்கும்' இவற்றைத் தவிர்த்த காரணம் தெள்ளிதிற் புலனாகவில்லை.

2.1. முன்னர்க் காட்டிய வினைச் சொற்களின் இயல்பையும் வடிவையும் கூர்ந்து நோக்கின் நம்மொழியின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருண்மையை நன்குணரலாம். அஃதாவது, பண்டை நாளில் முற்றுவினைச் சொற்கள் வடிவில் வேறுபாடின்றி முற்றாகவும், எச்சமாகவும் பெருவழக்காக வழங்கப்பட்டுள்ளன. அவை யமைந்துள்ள அமைவிடங்களைக் கொண்டே முற்றாகவோ எச்சமாகவோ அவை பொருள் குறித்து நின்றன. பின்னரே திருத்தம் பெற்ற நிலையில் எச்சங்கள் அமைத்துக்கொள்ளப் பட்டிருக்கலாம். அம்மாற்றங்களையே,

> "செய்த ... ...
> ... ...
> ... ... — ... ...
> எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே",

> "தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
> ஒழிய நிற்பது வினையெச் சம்மே",

என்ற நன்னூல் நூற்பாக்கள் எடுத்துமொழிகின்றன. எனினும் தொன்மை நிலையையும் மொழி போற்றி வந்துள்ளதை நம்மிலக்கியங்களிற் பரக்கக் காணலாம். இந்நிலை பிற மொழிகளில் குறிப்பாகப் பண்டைய மொழிகளில் - இருந்திருக் கலாமோ என ஐயமும் எழுகின்றது. (ஆனால், இதுபற்றிப் போதிய சான்றுகளின்றித் தெளிவாகக் கூறமுடியாது).

3.0. தொடக்க நிலையில் முற்று வினைகட்கும், எச்ச வினைகட்கும் பொருள்வேற்றுமை போற்றப்பட்டதேயொழிய வடிவவேற்றுமை மிகுதியாகப் போற்றப்படவில்லையென்பதும் பின்னரே வடிவச் செம்மை மாற்றம் இடம் பெற்றிருக்க வேண்டுமென்பது நன்கு புலனாகும். முற்றெச்சமும், செய்கென் முற்றும், செய்யுமென்னெச்சமும், அவ்வீற்று முற்றும் மேற் கூறிய கருத்திற்குத் தக்க அரணாக விளங்குகின்றன எனலாம்.

துணை நூல்கள்:

1 தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்.

2 நன்னூல் - மயிலை நாதருரையுடன் - உ.வே.சா. பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3 குறுந்தொகை – கழகப் பதிப்பு

4 நற்றிணை – கழகப்பதிப்பு.

5 புறநானூறு — உ. வே. சா. பதிப்பு.

இக்கட்டுரை பற்றிய சிந்தனைக்கு உரமிட்டவர்,

முனைவர் இரா. கோதண்டராமன் அவர்கள்,

இயக்குநர், 'PILC'. புதுவை

அவர்கட்கு என் நன்றி!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொண்டை நாட்டில் வைணவ சமய மறுமலர்ச்சி

இரா. வ. கமலக்கண்ணன்

இக்கட்டுரையாளர், வைணவ ஆசாரியர்களைப் பற்றி அவருள்ளும் தொண்டை நாட்டாசாரியர்களைப் பற்றித் தொகுத்துரைத்துள்ளார். ஆசாரியர்களின் வரலாறும், வடகலை, தென்கலை பற்றிய செய்திகளும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன; வைணவ ஆகமங்களும் விளங்கவுரைக்கப் பெற்றுள்ளன. மற்றும் சமயக் குறியீட்டுச் சொற்களும் அவற்றின் விளக்கமும் நன்கு இடம் பெற்றுள்ளன.

தோற்றுவாய்:

'பக்தி இயக்கம்' தமிழகத்தில் முதலில் தோன்றிப் பின்னர் வடவேங்கடத்தைக் கடந்து, வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் சென்று பரவியது. இதனை,

> "பக்திநெறி தமிழகத்தில் தோன்றியது;
> மராட்டியத்தில் வளர்ந்தது;
> குஜராத்தில் மலர்ந்தது;
> இராசபுதனத்தில் இருளகற்றியது;
> வங்காளத்தில் வான் புகழ் பெற்றது".

என வடமொழியிலுள்ள பௌஷிய புராணம் கூறுவதால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறியலாம். இந்நெறியை 'மயர்வற மதிநலம் அருளப் பெற்ற' ஆழ்வார்களும் நாயன்மார்களும் பரப்பினர். ஆழ்வார்கள் பதின்மருள் முதலாழ்வார் மூவரும், திருமழிசையாழ்வாரும் தொண்ட நாட்டில் அவதரித்தனர். ஆழ்வார்களுக்குப் பின்னர் ஆசாரியர்கள் தோன்றினர். இவ்வகையில் நாதமுனிகள் என்பவர் முதலில் தோன்றியவராவார். அவருக்குப்பின் சிறந்து விளங்கியோர் ஆளவந்தார், பெரியநம்பி, இராமாநுசர் ஆகியோராவர். இராமாநுஜருக்குப்பின் ஆசாரியரின் நெறி வடகலை வழி, தென்கலை வழி என இரு வகையாக அமைந்தது. இவ்வழியில் வந்தோருள் பலர் தொண்டை நன்னாட்டில் தோன்றி வைணவ சமய மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கினர். அவர்களுடைய வைணவ சமயப் பணியினை மதிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருக்கச்சி நம்பி:

ஸ்ரீபெரும்புதூரை அடுத்த பூவிருந்தவல்லியில் பிறந்தவர். காஞ்சி அருள்மிகு வரதராஜப் பெருமானுக்குத் திருமாலைத் தொண்டும் திருஆலவட்டத் தொண்டும் (விசிறி) செய்தவர். உடையவருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். பெருமாளிடம் உடையவரின் ஐயங்களைக் கேட்டு 'ஆறு வார்த்தைகளாக,[1] விடை அறிந்து வந்து கூறியவர். பெரியநம்பிகளை ஆசாரி-யராகக் கொள்ள உடையவரை ஆற்றுப்படுத்தியவர். 'தேவ-ராஜாஷ்டகம்' பாடியவர்; ஆளவந்தாரின் சீடர்களில் ஒருவர். இவர் திருச்சந்த விருத்தத் தனியன்கள் இரண்டு பாடியுள்ளார்.

திருமலை நம்பி:

உடையவரின் தாய் மாமன்; ஆளவந்தாரின் சீடர். திருக்குருகைப் பிரான் பிள்ளானின் தந்தையார். இவரது மூத்த சகோதரி பூமி பிராட்டியின் மகனார் உடையவ ராவார். இளைய சகோதரி பெரிய பிராட்டியின் மகனார் கோவிந்தன் (எம்பார்) ஆவார். இவர் இராமாநுஜருக்கு இராமாயணப் பாடம் சொன்னார். திருமலையில் எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்தவர். திருப்பாணாழ்வாரின் 'அமலனாதிபிரான்' பிரபந்தத்துக்கு ஒரு தனியன் இவரால் பாடப்பெற்றுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எம்பெருமானார் (1017-1137) அவதாரம்:

(சகம் 939 பிங்கள ஆண்டு சித்திரை மாதம் 12ஆம் நாள் பஞ்சமி திதி சுக்கில பட்சம் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நன்னாள்)[2]

இவரது வைணவ சமயத் தொண்டுகள் அளவிடற் கரியன. இவர் ஆசாரியர்களுள் 'நடுநாயகமாக' விளங்கினார். சாதி வேறுபாடுகளைத் தம் செயல்களினால் களைந்தார்: 'திரு வெட்டெழுத்து' மந்திரத்தை அனைவர்க்கும் உபதேசித்துத் தாம் நரகம் புகவும் தயாராக நின்றார். நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களுக்கு வேதங்களுக்குச் சமமான ஏற்றம் உண்டு என்று நிறுவினார். இவ்வகையில் திருவாய்மொழிக்கு முதன் முதலில் உரைதோன்றத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் மூலம் அனுமதியளித்தார். வைணவருடைய தினசரி ஒழுக்கத்தையும் ஆலய வழிபாட்டு முறைகளையும் ஒழுங்குபடுத்தினார். திருவரங்கம் முதல் எல்லாத் திருமால் ஆலயங்களிலும் இன்னின்ன காலங்களில் இன்னின்ன பாசுரங்களைச் சேவிக்க வேண்டும் என்று நியமித்தார். இதனால் ஆழ்வார் தம் செந்தமிழ்ப் பாசுரங்கள் வைணவர் தம் குடும்ப வாழ்விலும் புகுந்து அனுபவிக்கத் தக்க பொருள்களாகிவிட்டன. இச்சிறப்பு சொல்லப்போனால், உலக வரலாற்றிலேயே வேறெந்தச் சமய இலக்கியத்துக்கும் இல்லாத ஒரு மேலான வாய்ப்பாகும்[3]. 74 சிம்மாசனாதிபதிகளை நியமித்து, தென்னிந்தியா முழுமையும் வைணவ சமய மறுமலர்ச்சிக்கு அடிகோலினார்.

பெரிய கோயில் (திருவரங்கம்) நிருவாகத்தை இவர் வகுத்தமைத்தார். அவ்வாறே இன்றளவும் அங்கு நடந்து வருகிறது. அவ்வாறே திருமலையிலும் பல ஏற்பாடுகளைச் செய்தார். கீழ்த்திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராசருக்குத் "திருக்கோயில் அமைத்தார்[4]. (சிதம்பரத்தில் கடலில் சோழமன்னனால் எறியப் பட்ட கோவிந்தராசர்). திருமலையிலுள்ள சுவாமி 'பெருமாளே' என நிறுவினர்.

வைணவ ஆகமங்கள் இருவகைப்படும். அவை வைகானசம், பாஞ்சராத்திரம் என்பன. இவற்றுள் முதலாவது ஒரு குடும்பத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தினருக்கு, பிரிவினருக்கு மட்டுமே உரியதாக இருந்தது. இது வேதநெறியை முற்றிலும் தழுவியது. பாஞ்சராத்திர ஆகமம் கட்டுப்பாடு அதிகம் இல்லாதது; அனைத்துப் பிரிவு மக்களுக்கும் இது பொதுவானது. இதன் சிறப்பம்சம், "கடவுள் முன் எல்லாரும் ஓர்குலம்" என்ற கொள்கையை வேத வழியோடு இணைத்துக் காட்டுவது. எனவே, ஏற்கெனவே வைகானச ஆகம வழி பாட்டிலிருந்த பல ஆலயங்களை எம்பெருமானார் பாஞ்சராத்திர ஆகம வழிபாட்டிற்கு மாற்றினார். உடையவர் செய்த பல புரட்சிகளுள் இதுவும் ஒன்றாகும்.

மேலக்கோட்டை எனப்படும் திருநாராயண புரத்தில் அரிசனங்கள் என்னும் திருக்குலத்தாரும் பெருமானின் கருவறை வரை சென்று வழிபடும் உரிமையை வழங்கி, சுமார் 880 ஆண்டுகளுக்கு முன்னரே 'அரிசன ஆலயப் பிரவேசம்' என்னும் சமுதாயப் புரட்சியைத் தொடங்கி வைத்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சங்கரரின் மாயா வாதத்தை மறுத்து, பிரம்ம சூத்திரம், உபநிடதங்கள் மற்றும் பகவத் கீதைக்குத் தம் விசிட்டாத்வைதக் கொள்கையின் அடிப்படையில் விளக்கமளித்தார். இஃது 'இராமாநுச தரிசனம்' என்று வழங்கப்பெறும்.

ஆதிசங்கரரின் அத்வைதத்தில், 'ஆன்மாவே கடவுள். விசிட்டாத்வைதத்தில் ஆன்மாவுக்குப் புறம்பான உயர்ந்த பரம்பொருளே கடவுளாகும். 'காண்கின்ற அனைத்தும் அழிபவை, மாயை, பொய். காணாத அந்த ஒன்று மட்டும் மெய், சத்தியம்'- என்பது அத்வைதம். ஆனால், இராமாநுசரின் விசிட்டாத்வைதமோ, 'இல்லாத பொருள் தோன்றுவதில்லை. தோன்றும் பொருள் இல்லாது போவதுமில்லை; அனைத்துப் பொருள்களும் உண்மையே; அவற்றின் மாற்றங்களும் சத்தியமே; அவற்றின் காரண காரியங்களும் நித்தியமே' என விளக்குகின்றது. 'உயிர் (சித்து), உடல் (அசித்து), இறைவன் (ஈசுவரன்) ஆகிய மூன்றும் பிரிக்க முடியாத தத்துவங்களாகும், என்பது இராமாநுச தத்துவத்தின் உயிரான கோட்பாடாகும். இம்மூன்று பொருள்களின் கூட்டமே உலகமாகும் என்பது இவர் தெளிவிக்கும் உண்மையாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர் தம்நெறியின் சிறப்பைப் போற்றும் திருவரங்கத்த முதனார், 'நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன'[6], என்றும்-'பார்த்தனன் அறுசமயங்கள் பதைப்ப'[7] என்றும் போற்று கின்றார்.

இவர் தமது கொள்கைகளைப் பரப்பச் சீடர் குழாத்தை உருவாக்கினார். அவர்களில் 700 சந்நியாசிகளும், 12,000 ஏகாங்கிகளும், 300 பெண் அடியார்களும் (ஸ்ரீஆண்டாள் குழுவினர்) கணக்கற்ற பிராம்மணரல்லாத பாகவத உத்தமர் களும் இருந்தனர்.[8]

74 சிம்மாசனாதிபதிகளில் தொண்டை நாட்டைச் சார்ந்தோர்:

1 சுந்தரத்தோளுடையான் - திருமலை ஆண்டானின் திருக்குமாரர்.

2 திருக்குருகைப்பிரான் பிள்ளான் - பெரியதிருமலை நம்பியின் திருக்குமாரர்.

3 பராசரபட்டர் - கூரத்தாழ்வானின் திருக்குமாரர்.

4 முதலியாண்டான் - உடையவரின் சகோதரியின் மகனார். பூவிருந்தவல்லியை அடுத்த பச்சை வாரணர் கோயிலில் பிறந்தவர்.

5 உக்கல் ஆழ்வான்.

6 எம்பார் - (கோவிந்தர்).

7 கணியனூர் சிறியாச்சான்.

8 திருமலை நல்லான்.

9 உக்கல் அம்மாள்.

10 ஆர்க்காட்டுப் பிள்ளான்.

இவர் வடமொழியில் இயற்றிய நூல்கள்:

1. வேதார்த்த சங்கிரகம் — விசிட்டாத்வைதக் கொள்கை விளக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. ஸ்ரீபாஷ்யம் — பிரம்ம சூத்திர விளக்கம்.
3. கீதா பாஷியம் — பகவத் கீதை விளக்கம்.
4. வேதாந்த தீபா — பிரம்ம சூத்திரச் சுருக்க விளக்கம்.
5. வேதாந்தசாரா — தொடக்க நிலையினர்க்குரிய மேற்படி விளக்க நூல்.
6. சரணாகதி கத்யம் } சரணாகதியைப் பற்றிக் கூறுவது.
7. ஸ்ரீரங்க கத்யம் }
8. ஸ்ரீவைகுண்ட கத்யம் — பரமபதம் பற்றிக் கூறுவது.
9. நித்யகிரந்தா — நாள், வழிபாட்டு முறைகளைக் கூறுவது.

இவர் பெரிய திருமொழிக்கு ஒரு தனியனும், பெருமாள் திருமொழிக்கு ஒரு தனியனும், திருமங்கை மன்னரின் திருவெழுகூற்றிருக்கை எனும் பிரபந்தத்துக்கு ஒரு தனியனும் பாடியுள்ளார். அவை வருமாறு:

வாழி பரகாலன் வாழி கலிகன்றி,
வாழி குறையலூர் வாழ்வேந்தன் — வாழியரோ,
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்,
மங்கையர் கோன்
தூயோன் சுடர்மான வேல்.

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்பெருமாள் — பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள், சேரலர்கோன் எங்கள்
குலசே கரனென்றே கூறு.

சீரார் திருவெழு கூற்றிருக் கையென்னும் செந்தமிழால்
ஆரா வமுதன் குடந்தைப் பிரான்றன் அடியிணைக் கீழ்
ஏரார் மறைப்பொருளெல்லா மெடுத்திவ் வுலகுய்யவே
சோராமற் சொன்ன அருள்மாரி பாதம் துணை
நமக்கே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எம்பெருமானாரின் பெருமைகளை, தொண்டுகளை விளக்கிக் கூறப் பல நூல்கள் எழுதலாம்.

எம்பார் (1026-1131)

உடையவரின் சிறிய தாயாரின் மகனார். இடையில் சைவராகிப் பின் வைணவரானவர்; ஸ்ரீபெரும்புதூரை அடுத்த மதுரமங்கலத்தில் தோன்றியவர். திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழிக்குத் தனியன் பாடியவர்.

> 'எங்கள் கதியே! இராமானுசமுனியே!
> சங்கைகெடுத் தாண்ட தவராசா! — பொங்குபுகழ்
> மங்கையர் கோனீந்த மறையா யிரமனைத்தும்,
> தங்குமனம் நீயெனக்குத் தா'
> 'மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று,
> கோலிப் பதிவிருந்த கொற்றவனே! — வேலை
> அணைத்தருளும் கையால் அடியேன். வினையைத்
> துணித்தருள வேணும் துணிந்து'.

உடையவருக்குப் பின் வைணவ சமயம் வடகலை வழி, தென்கலை வழி என இரு பிரிவாகப் பிரிந்தபோது. இவர் தென்கலை வழியினர்க்கு முதல்வரானார்.

கூரத்தாழ்வான்: (கி. பி 1031-1136)

காஞ்சியை அடுத்த கூரம் எனும் ஊரில் தோன்றியவர். இராமானுசரின் முதன்மைச் சீடர்; பிரம்ம சூத்திரத்திற்கு[9] உடையவர் உரைவகுக்கப் பெரிதும் துணையாய் இருந்தவர். வைணவ சமயத்திற்காகத் தம் திருக்கண்களை இழந்தவர். பெரிய திருமொழிக்கு இவரும் ஒரு தனியன் பாடியுள்ளார்.[10] இவர் வடமொழியில் ஐந்து நூல்கள் இயற்றியுள்ளார்.[11] இவர், தம் சீடரான திருவரங்கத்தமுதனார், இராமாநுச நூற்றந் தாதியைப் பாடினார். இவர்தம் மகனான பட்டர் (கி.பி. 1123) உடையவருக்குப் பின் மடத்துப் பொறுப்புகளை ஏற்றவர்: விஷ்ணுஸஹஸ்ரநாம பாஷியம் செய்தவர். வராக புராணத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திலுள்ள கைசிக புராணத்தின் 92 சுலோகங்களுக்குத் தமிழில் உரை எழுதியவர். திருமங்கை மன்னரின் 'திருநெடுதாண்டக' வியாக்கியானத்தில் வல்லவர். 'மைவண்ணநறுங்குஞ்சி[1] எனும் அதன் 21-ஆம் பாசுரத்திற்கு 800 கிரந்த அளவு உரை வகுத்தவர். இவர் பாடிய திருவாய் மொழித் தனியன்கள் இரண்டும் மிகவும் புகழ் பெற்றவையாம்.

வான் திகழும் சோலை மதிளரங்கர்
வண்புகழ்மேல்
ஆன்றதமிழ்மறைகள் ஆயிரமும், — ஈன்ற
முதல்தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த
இதத்தா யிராமா னுசன்.
மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித் — தொக்கியலும்.
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்
கோன்
யாழினிசை வேதத் தியல்.

ஆழ்வான் குருபரம்பரை பற்றியும்,[12] எம்பெருமானார் பற்றியும்[13] இயற்றிய தனியன் இரண்டும் இன்றும் வைணவர்களால் சேவிக்கப் பெறுகின்றன. ஆழ்வானின் பெருமைகள் அளவிடற்கரியன. இவரது மற்றொரு மகனான சீராமப் பிள்ளை என்பவர் 'நான்முகன் திருவந்தாதி'க்குத் தனியன் பாடினார்.

முதலியாண்டான் (எ) தாசரதி: கி.பி. 1019-1124

உடையவரின் சகோதரியின் மகன். உடையவரின் அன்புக்கு இலக்கானவர் பூவிருந்தவல்லியை அடுத்த பேட்டையில் பிறந்தவர். இவர் முதல் திருவந்தாதிக்கு ஒரு தனியன் பாடினார். இவர் மகன் கந்தாடையண்ணன் ஸ்ரீபெரும்புதூரில் உடையவருக்கு விக்கிரகம் அமைத்தார் (தமர் உகந்த திருமேனி) உடையவர் திருவடி - முதலியாண்டான் - எனப்பெறும் (சடாரி என்றால் தவறு). முதலியாண்டான் குடும்பத்தினர் பெரிய கோயில் பொறுப்புகளைக் கவனித்து வந்தனர். முகம்மதியர் படையெடுப்புக்குப்பின் இது மாறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிடாம்பியாச்சான்: (கி.பி. 1056-1158)

காஞ்சியில் பிறந்தவர்; பெரிய திருமலை நம்பியின் மருகர். திருக்கோட்டியூர் நம்பியின் நியமனப்படி உடையவருக்குத் தளிகை செய்தவர். நம்மாழ்வாரின் திருவிருத்தத்துக்கு ஒரு தனியன் பாடியுள்ளார்.

திருக்குருகைப்பிரான் பிள்ளான். (கி.பி. 1068)

பெரிய திருமலை நம்பியின் புதல்வர். இவர் உடையவரால் ஞானபுத்திரராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். எம்பெருமானாரின் அனுமதி பெற்று இவர் திருவாய்மொழிக்கு ஆறாயிரப் படி, - என்னும் மணிப்பிரவாள உரைவகுத்தார். இதற்குப் பின்னர் இவ்வகையில் பன்னீராயிரப்படி, ஒன்பதாயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாறாயிரம்படி எனப் பல வியாக்கியானங்கள் தோன்ற இது அடிப்படையாயிற்று. இவர் வழியில் வடகலைப் பிரிவு வளரலாயிற்று. இவர் இரண்டாம் திருவந்தாதிக்கு ஒரு தனியன் இற்றியுள்ளார். பிள்ளான் ரகசியம் என்னும் வடமொழி நூலையும் இவர் இயற்றினார்.

வடகலை குருபரம்பரை:

இராமானுசர் (1017—1137)
திருக்குருகைப்பிரான் பிள்ளான் (பிறப்பு, கி.பி. 1068)
எங்கள் ஆழ்வான் (பிறப்பு கி.பி. 1108)
நடாதூர் அம்மாள் (பிறப்பு கி.பி. 1165)
ஆத்திரேய ராமானுஜர் (பிறப்பு கி.பி. 1221)
வேதாந்த தேசிகர் (1268-1369)
நயினாராச்சான் பிள்ளை (பிறப்பு கி.பி 1316)

தேசிகர்

பிரம்மதந்திர ஸ்வதந்திர ஜீயர் — நைனார் ஆசார்யார் (தேசிகர் மகன்)

(மைசூர்-பரகால மடத்தை கி.பி. 1360இல் தோற்றுவித்தவர்)
கடிகாசதம் அம்மாள்
ஆதிவண் சடகோப ஜீயர்
(அகோபில மடத்தைக் கி.பி. 1398இல் நிறுவியவர்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வடகலை வழியினர் பெரும்பாலும் தொண்டை நாட்டினரே (எங்கள் ஆழ்வான் தவிர). தேசிகரிடம் சீடராயிருந்த பிரம்ம-தந்திர ஸ்வதந்திர ஜீயர் பரகால மடத்தை நிறுவி, கன்னட நாட்டில் வைணவம் வளரக் காரணரானார். அவர்தம் சீடரின் சீடராகிய ஆதிவண் சடகோப ஜீயர் அகோபில மடத்தைத் தோற்றுவித்துப் பல கிளைகளுடன் இன்றும் இயங்கக் காரணரானார். அம்மடத்தின் 44ஆம் பட்டத்தில் இன்று எழுந்தருளியுள்ள ஸ்ரீ வேதாந்த தேசிக யதீந்திர மகாதேசிகன் என்றும் சுவாமி, திருவரங்கத்தில் ஆசியாவிலேயே பெரிய இராஜகோபுரத்தை எழுப்பி என்றும் அழியாப் புகழ் பெற்றுள்ளார். இவர் தொண்டை நாட்டைச் சார்ந்த செய்யாறு வட்டம் முக்கூர் என்னும் ஊரில் தோன்றிய வராவார்.

வேதாந்த தேசிகர்: (கி.பி.1268 - 1369)

உடையவரின் மருமகனின் பெயரராகிய நடாதூர் அம்மாள் வடகலைப் பிரிவினரின் மையமாகக் காஞ்சியை அமைத்தார். எனவே, தென்கலை வளர திருவரங்கம் மையமாயிற்று. இவர் சீடரான சுதரிசன பட்டர் சுருதப் பிரகாசிகையை இயற்றினார் இந்நூல் உடையவரின் ஸ்ரீபாஷியத்திற்கு விளக்கமாக அமைந்தது நடாதூர் அம்மாளுக்குப் பின் அவர் சீடர் ஆத்திரேய ராமாநுசர்(எ) அப்புள்ளார் ஆசாரியரானார். இவர் தேசிகரின் தாய்மாமாவும் குருவும் ஆவார். இவர் நியாய குலிசம் என்னும் நூலை இயற்றினார்.

தேசிகர், அனந்தசூரி தோதாரம்மா என்போர்க்கு திருமலைப் பெருமானின் கண்டாமணியின் அம்சமாக அவதரித்தார். இவர் இளமையிலேயே எல்லா நூல்களையும் கற்று, பெரும் புலமையுடையவராய் விளங்கினார். இவர் காலத்தில் திருவரங்கத்தில் பிள்ளை லோகாசாரியர் முதலிய தென்கலை ஆசாரியர் புகழுடன் விளங்கினர். அப்பொழுது ஓர் அத்வைதி அங்கு சமய விவாதத்துக்காக வந்தார். அவருடன் வாதம் செய்யத் தக்கவரெனத் தேசிகரைத் திருவரங்கத் திலிருந்தோர் அழைத்தனர். தேசிகரும் அங்குச் சென்று அவருடன் வாதம் செய்து வென்றார்.[14]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாலிக்காபூர் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்த போது (கி. பி. 1310-1311) பிள்ளை லோகாசாரியர் திருவரங்கரின் உற்சவ விக்கிரகத்தைப் பாதுகாக்க உடன் சென்று வழியில் (காளையார் கோயில்) பரமபதித்தார். தேசிகரோ, சுதரிசன பட்டர் இறக்கும் தறுவாயில் தம்மிடம் ஒப்படைத்த கருதப்பிரகாசிகைச் சுவடியுடன், அவர்தம் இரு மக்களையும் அழைத்துக் கொண்டு, சத்திய மங்கலம் சென்றார்.[15] (மைசூர் மாநிலம்).

உற்சவர் அரங்கநாதரைப் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்று இறுதியில் திருமலையில் பாதுகாப்பாகக் கொண்டு சேர்த்தனர். பின்னர் கி. பி. 1370-71-இல் செஞ்சியிலிருந்த விஜய நகரப் படைத்தலைவர் கோபாணாவின் துணையுடன் (திருமலையிலிருந்த அரங்கநாதர் செஞ்சியையடுத்த சிங்க புரத்தில் (சிங்கவரம்) சில காலம் எழுந்தருளியிருந்தார்.) திருவரங்கத்தில் மீண்டும் பழையபடி பிரதிட்டை செய்யத் தேசிகர் துணையாய் இருந்தார். இவ்வரலாற்றுச் செய்தி திருவரங்கம் கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ளது.[16] இவ்வாறு தொண்டை நாட்டுத் திருத்தலங்கள் அரங்கர் பாதுகாப்பாக வாழ உதவிப் பெருமைபெற்றன.

தேசிகரின் நூல்கள்:

இவர் வடமொழியிலும் தென்மொழியிலும் சுமார் 100 நூல்களுக்கு மேல் இயற்றியுள்ளார். அவற்றுள் இரகசியத் திரயம் அபய பிரதான சாரம், பரமபத சோபானம், பாஞ்சராத்திர ரட்சை, கோதா ஸ்துதி, யதிராஜ சப்ததி, சங்கல்ப சூரியோதயம். அம் சந்தேசம், கீதா பாஷிய சாரம், பாதுகா சஹஸ்ரம் (ஒரே இரவில் பாடியது) யாதவாயுப்தம் ஆகியவை புகழ்பெற்றன. இவர் தமிழில் இயற்றிய தேசிகப் பிரபந்தம் திவ்வியப் பிரபந்தத்துக்கு இணையாகப் போற்றப் பெறுவது.

தேசிகர் வடமொழி நூல்களை முற்றத் துறைபோகக் கற்றவர். அம்மொழியில் வேத பாகங்கள் சில நன்கு விளங்காமலிருந்தன. அந்நிலையில் தமிழ் வேதமாகிய திவ்வியப் பிரபந்தங்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களைப் பொருளுடன் கற்ற பின்னர், அதுவரை விளங்காமல் இருந்த வேத பாக அர்த்தங்கள் விளங்கப் பெற்றன என்று பெருமையுடன் பாடுகிறார்.

"பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
பொருநல்வருங் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையமெலா மறைவிளங்க வாள்வே லேந்து
மங்கையர்கோ னென்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே[17]

இவருக்குப்பின் இவர் மகன் நைனார் ஆசாரியப் பொறுப்-பேற்றார். இவர் கேரளாவில் சுற்றுப் பயணம் செய்து பலரை வைணவ சமயத்திற்கு மாற்றினார். இவருடன் பலமுள்ள வடகலைப் பிரிவு முடிவுக்குவந்தது.

தென்கலை வழியினரில் முதன்மையான ஆசாரியராக விளங்குபவர் எம்பார் என்பவரே என்பதை முன்னரே கண்டோம். அடுத்தவர் கூரத்தாழ்வானின் திருக்குமாரரான பராசரபட்டர் ஆவார். இவ்வகையில் இருவழிகளின் முதன்மை ஆசாரிய பரம்பரையினர் தொண்டை நாட்டினரே (வடகலை வழியினரில் எங்களாழ்வான் தவிர அனைவருமே தொண்டை நாட்டினராவர்).

தென்கலை ஆசாரியர்களில் இறுதியில் உள்ள மணவாள மாமுனிகளின் தலைமைச் சீடர்கள் எண்மர், 'அட்டதிக்கயங்கள்' என அழைக்கப்பெற்றனர். அவர்களுள் திருவேங்கட ராமாநுஜ ஜீயர், பிரதிவாதி பயங்கரம் அண்ணன், எறும்பியப்பா ஆகியோர் தொண்டை நாட்டினரே.

பிரதிவாதி பயங்கரம் அண்ணன்: (1340-1440)

காஞ்சியைச் சார்ந்தவர். தேசிகரையும் அவர் மகன் நயினாராச்சரியரையும் குருவாகக் கொண்டு, வடகலைச் சம்பிரதாயங்களைக் கற்றவர்.[18] பின்னர் மணவாள மாமுனி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களின் அட்டதிக்கயங்களில் ஒருவரானார். தேசிகரைப் புகழ்ந்து சப்தாதி ரத்னாகரம்' என்னும் செய்யுளை இயற்றினார். ஸ்ரீபாஷிய வியாக்கியனம், அஷ்டசுலோகி வியாக்கியானம் ஆகியவற்றை எழுதினார். இவர் வழிவந்த பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியர் என்பவர் பல பிரபந்தங் களுக்கும் (திவ்வியார்த்த தீபிகை) உரை எழுதி பதிப்பித்து வெளியிட்டுப் பெருந் தொண்டாற்றி, அண்மையில் பரம பதித்தது அனைவரும் அறிந்ததே.

எறும்பியப்பா (எ) தேவராஜாசார்யர்:

இவர் சோளங்கிபுரத்தை (சோழசிம்மபுரம்) அடுத்து எறும்பியில் பிறந்தவர். இவர் 'தினசரியா' எனும் நூலை எழுதினார்.

தாதாசாரியார் குடும்பம்:

பெரிய திருமலை நம்பியின் வமிசத்தவர்களே தாதாசாரியர் ஆவர். அவர்கள் பல இடங்களில் பிரிந்து பல குடும்பங்களாக வாழ்ந்தவர். காஞ்சியில் வசித்தோர் தாதாசாரியார் எனப்பட்டனர். இவர்களில் புகழ்பெற்ற இலட்சுமி குமாரதாதாசாரியார், விஜயநகர அரசர் வெங்கா I-வின் குருவாக விளங்கினார். (1585-1614) மற்றும் கோடி கன்னிகா தானம் தாதாசாரியரும் புகழுடன் விளங்கினார். இவரைப் பற்றிய பல கல்வெட்டுகள் ஸ்ரீ வரதராஜர் ஆலயத்தில் உள்ளன.[19] தென்னேரியில் இவர் பெரிய ஏரியை வெட்டு வித்தார். பல சந்நிதிகளை அமைத்தார். இவர் அக்காலத்தில் பல வைணவத் திருத்தலங்களின் பொது மேலாளராய் விளங் கினார்.[20] பல கோயில்களில் தேசிகருடைய விக்கிரங்களை அமைத்தார். இவருடைய பெயரர் அரங்கநாதன் என்பவர் 'பிரபந்நாம்ருதம்' - என்னும் நூலை எழுதினார்.

பின்பழகிய பெருமாள் ஜீயர்:

தொண்டை நாட்டிலுள்ள திருப்புட்குழியில் பிறந்த பின்பழகிய பெருமாள் ஜீயர் ஆறாயிரப்படி குரு பரம்பரையை இயற்றினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறுவாய்

பிராம்மணரல்லாதோரும் ஆசாரியராக விளங்கி வைணவ சமயத்தை வளர்த்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் புவனகிரி அழகிய மணவாள ராமாநுஜ ஏகாங்கி சுவாமிகள் (7.7.1860-10.6.1927) மற்றும் புதுவை விலட்சண கவி. ஏ. வே. இராமாநுஜ நாவலர் சுவாமிகள் (1829-1891) ஆகியோராவர் நாவலர் சுவாமிகள் பாத்மோத்ர புராணம், திருச்சித்திர கூடத்தல புராணம் முதலிய பல தலபுராணங்களையும் மற்றும் பால சம்வாத வினாவிடை போன்ற சமய நூல்களையும் இயற்றி வைணவசமயத்திற்கு அவர் காலத்தில் ஏற்றம் அளித்தார். அவர் நினைவைப் போற்றும் வகையில் பல வைணவ சபைகள் பண்ணுருட்டி, புதுவை முதலிய இடங்களில் அமைந்து, பல வழிகளிலும் வைணவ சமயப் பயிரைத் தொடர்ந்து வளர்த்து வருகின்றன. இவ்வகையில் முதலாழ் வார்கள் தொடங்கி, உடையவர் நடுவாக, தேசிகர் பிரதிவாதி பயங்கரம் அண்ணன் நாவலர் பெருமான் முடிவாக, வாழ்ந்த ஆழ்வார்கள் - ஆசாரிய பரம்பரையில் எண்ணெய் ஒழுக்காகத் (தைல தாரை போல) தொடர்ந்து தொண்டை நாட்டில் வைணவ சமயம் வளர்ந்து வந்திருக்கிறது; வருகிறது.

அடிக்குறிப்புகள்:

1 அ) நாமே பரதத்துவம் (மும்மூர்த்திகளில் நானேமுதல்வன்)

ஆ) நம்சமயம் பேதமுடையதே (சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று பேதமுடையது)

இ) உபாயம் சரணாகதியே (என்னை அடைய சரணாகதி யாகிய நானேதான் வழி.

ஈ) இறுதிக்கால நினைவு தேவையில்லை (என்னைச் சரணடைந்தவனுக்கு இறக்கும்போது என்னைப்பற்றிய நினைவு தேவையில்லை)

உ) இத்தேக முடிவிலே மோட்சம்.

ஊ) பெரியநம்பிகளை ஆச்ரயிக்க வேணும் (இராமாநுஜர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரியநம்பிகளிடம் பஞ்சசம்ஸ்காராதிகளைப் பெற வேண்டும்).

2 Swami Ramakrishnananda: Life of Sri Ramanuja p. 72.

3 மு. அருணாசலம்: தமிழ் இலக்கிய வரலாறு - கி. பி. 12ஆம் நூற் பகுதி 1, பக்கம்: 18-19.

4 டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்: ஸ்ரீவெங்கடேச தேவஸ்தான வரலாறு - பக்கம். 160,

5 டாக்டர் எச். டானியல்ஸ்மித்தின் ஆராய்ச்சிக்குறிப்புரை களைக்கொண்டு கே. கே. எ. வேங்கடாச்சாரி அவர்களால் தமிழில் எழுதப்பட்ட நூல் விளக்கம் அறிமுகம் - ப. 18

6 இராமாநுச நூற்றந்தாதி — பாசுரம், 54.

7 இராமாநுச நூற்றந்தாதி — பாசுரம். 52.

8 Dr. N. Jagadeesan, History of Srinvaishnavism in the Tamil Country (Post — Ramanuja) — p-43.

9 இவை சுமார் கி.மு. 400-இல் வாதராயணர் என்பவரால் செய்யப் பெற்றவை, பிரம்மத்தைப் பற்றிய விளக்கமாயிருத்தலின் இப்பெயர் பெற்றன. உபநிடதங்கள், பகவத்கீதை, பிரம்மசூத்திரம் — ஆகிய மூன்றும் வேதாந்தத்தின் அடிநிலைகளாகும். இந்நூலின் 550 சூத்திரங்கள் உள்ளன. அவை பெரும்பாலும் 2(அ)3 சொற்களால் ஆகியவை. ஆதலால் அவை உரையின்றிப் பொருள் விளங்கா. ஆகவே சங்கரர், இராமநுசர் முதல் பல உரையாளர் தோன்றினர். இதற்கு உரையெழுத உடையவர் கூரத்தாழ்வானை அழைத்துக் கொண்டு காஷ்மீர் சென்றார், போதாயன விருத்தியை மேற்கோளாகக் கொண்டு, ஆழ்வான் துணையுடன் இதற்கு உரை வகுத்தார்.

ஏ.வீ. கோபாலாச்சாரியார், — கலைக்களஞ்சியம், தொகுதி 7-பக்கம், 290, 291.

10 நெஞ்சுக்கிருள்கடி தீபம், அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதம், தமிழநன் னூல் துறைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம், பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபர பாலன் பனுவல்களே.

11 இவை பஞ்சஸ்தவம் எனப்படும். அவை: ஸ்ரீவைகுண்டஸ்-தவம், அதிமாநுஷஸ்தவம் சுந்தர பாகுஸ்தவம், வரதராஜ ஸ்தவம், ஸ்ரீஸ்தவம் - என்பனவாம்.

12 லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.
(இ-ள்) "திருமகள் கேள்வன் முதலாக, நாதமுனிகளும் ஆளவந்தாரும் நடுவாக, என்னுடைய ஆசாரியன் இறுதியாக வருகின்ற குருபரம்பரையை வணங்குகிறேன்" என்பதாம்

13 யோ நித்யமச்யுத - பதாம்புஜ - யுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணித்ருணாய மேநே
அஸ்மத்குரோர் பகவதோ'ஸ்ய தயைகஸிந்தோ;
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே:- ஸ்ரீவைகுண்ட ஸ்தவம் - ஆசாரிய வணக்கம்.
(இ-ள்)" எந்த இராமாநுசர் எப்பொழுதும் அழிவில்லாதவனான எம்பெருமானுடைய இருதிருவடித்தாமரைகளாகிற பொன்னிடத்தில் வைத்த ஆசையினால், அந்தப் பகவானுக்கு வேறான விஷயங்களைத் துரும்பாக நினைத்தாரோ அப்படிப்பட்ட என்னுடைய ஆசாரியரும், எல்லாக் குணங்களும் நிறைந்தவரும், அருட்கடலானவருமான இந்த இராமநுசருடைய இருதிருவடிகளையும் உபாயமாகப் பற்றுகிறேன்"-என்பதாம்.
— பு. ரா. புருடோத்தமநாயடு - ஸ்ரீவசனபூஷண உரை தமிழாக்கம்.

14 Dr. N. Jagadeesan, History of Srivaishnavism, P.139
15 Dr. N. Jagadeesan, History of Srivaishnavism, P.141.
16 இரண்டாம் பிராகாரம் கிழக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு-சகம். 1293-கி.பி. 1371 - E.I., Vol. XIII, P. 222.
17 தேசிகப் பிரபந்தம் - அதிகார சங்கிரகம்-1.
18 Dr. Jagadeesan, History of Vaishnavism, P. 128.
19 363 of 1919: S.I.T.I., III, Pt.II, P.1358/475 of 1919/92 and 95 of 1923.
20 479 of 1919.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7790

பிரதிக் கோட்பாடுகள்
Text Theories

தி. சிவக்குமார்

இக்கட்டுரை, அமைப்பியல் நோக்கில் பல்வேறு பிரதிக் கோட்பாடுகளை விளங்க உரைக்கின்றது. பிரதிக் கோட்பாட்டின் பன்முகங்களை இக்கட்டுரையாளர் நுண்ணிதின் நோக்கித் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழில் இவ்வகைப்பட்ட கருத்துகள் புதியவை என்பது குறிப்பிடத்தக்கது.

0. பிரதி **(Text)** பற்றிய கோட்பாடுகள் காலந் தோறும் மாறி வந்துள்ளன. பிரதி விமர்சனம், பிரதிப் பகுப்பாய்வு என்ற வழக்குகளும் பயன்பாடுகளும் கூட மாற்றத்துக்கு உள்ளாகிக் கொண்டு இருக்கின்றன. மேலை நாடுகளில் 16-ஆம் நூற்றாண்டில் மூலபாட ஆய்வியல் என்பது பிரதிகளை நிர்ணயிக்கத் தோன்றியது. பிரதிகள் நிர்ணயிக்கப்பட்டவுடன் இலக்கியக் கொள்கைகள் வளர்ச்சி அடைந்தன. ஒவ்வொரு விதக் கொள்கைக் கேற்பவும் 'பிரதி' என்பது வேறு வேறாகப் பார்க்கப்பட்டது.

புதுத் திறனாய்வு தொடங்கி இன்றைய பெண்ணிய விமர்சனம் வரை 'பிரதி' கோட்பாடு ஆக்கப்பட்டிருக்கிறது. புதுத்திறனாய்வில் பிரதி என்பது முழுமையான ஒரு பொருளாக வும் உயிராகவும் அமைப்பியலில் பிரதி என்பது படைப்பில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்து வேறுபட்ட உற்பத்திப் பண்டமாகவும் பிற்கால அமைப்பியலில் பிரதி குறிப்பான்களின் ஆட்டக் களமாகவும் பெண்ணியத்தில் பிரதி ஆணாதிக்கச் சொல்லாடல்களின் களமாகவும் தன்னிலையாக்கக் (subjectivity) களமாகவும் முன்வைக்கப்பட்டன.

இலக்கியக் கொள்கைகளில் இருந்து வேறுபட்ட விதமாகப் பிரதி மொழியியலில் நோக்கப்பட்டது. பிரதி மொழியியல் (Text Linguistics) என்பது இப்போது வளர்கின்ற ஒரு துறை. இதனோடு குறி மொழியியல் (Semio-linguistics) என்பதுவும் வளர்கின்றது. நடையியலின் (Stylistics) அடுத்த கட்ட பரிமாண வளர்ச்சியாக இவை இருக்கின்றன. மொழியைச் சமூகக் குறியியலாகப் பார்க்கும்போது (Language as social Semiotic) அங்கு பிரதிக்கு வேறு பரிமாணம் கிடைக்கின்றது.

இவ்விதமான பல்வகைப் பிரதிக் கோட்பாடுகளை இக் கட்டுரை அறிமுகப்படுத்துகிறது. பிரதிப் பகுப்பாய்வு (Text Analysis) செய்யப் புகுமுன்தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி களின் தொகுப்பே இக்கட்டுரை. கட்டுரையினுள் மேற்கோள்கள், அடிக்குறிப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் கருத்துகள் பெரும்பான்மையும் நூற்பட்டியலில் உள்ள நூல் களில் காணலாகும்.

1. மூல பாட ஆய்வியல்: (Textual Criticism)

மூலபாட ஆய்வியல் என்பதின் நோக்கம் 'ஒரு பிரதியை நிர்ணயித்தல்' தான் (Establishing a Text). இவ்வகை ஆய்வு படைப்பாளியின் பாடத்திற்கும் பதிப்பாசிரியரின் கருதுகோள் பாடத்திற்கும் இடையேயுள்ள தொடர்பைக் கவனத்தில் கொள்கின்றது. ஒரு பிரதிக்குக் கிடைக்கின்ற பல்வகை மாற்றுப் பிரதிகளையும் (Variants) தொகுத்து ஆராய்ந்து படைப்பாளியின் மூலம் எதுவாக இருக்கும் என்று நிர்ணயம் செய்வது இவ்வாய்வின் பணியாகும். அய்ரோப்பாவில் அச்சுக் கலை வளர்ந்தவுடன் இந்த மூலபாட ஆய்வியல் பெரிதும் கிளைத்தது. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் இவ்வாய்வியல் தழைத்தோங்கி இருந்தது. பைபிள் பதிப்பை முன்னிட்டே இவ்வாய்வு வளர்ந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூலபாட ஆய்வு என்ற தொடர் கி.பி. 1748 இல் ஆக்ஸ்போர்டு அகராதியில் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது.

படைப்பாளி தான் எழுதுகின்ற பிரதியை உருவாக்கும் சொற்கள் மீதான ஆதிக்கத்தைக் கொண்டிருக்கிறான். அர்த்தத்தின் மீது அவன்/ள் அதிகாரத்தைச் செலுத்தவில்லை. எனவே, எந்த வார்த்தைகள் பிரதியை உருவாக்க வேண்டும் என்ற இறுதி முடிவை படைப்பாளி எடுக்கிறானோ/ளோ அந்த முடிவை நோக்கிய பயணம்தான் மூல பாட ஆய்வியல்.

2. மொழியியல்:

மொழியியலில் பிரதி 1) மொழியின் பயன்பாட்டு நிலையின் அல்லது செயல் நிலையின் வடிவமாகவும் (Language in action) 2) பேசும்மொழியின் அலகாகவும் (Unit of Natural language) கொள்ளப்படுகின்றது. மரபார்ந்த மொழியியல், வாக்கியத்தை உச்ச அலகாகக் கொண்டிருந்தது. ஆனால் பிரதிமொழியியல் குறைந்த பட்ச அலகாகப் 'பிரதி'யைக் கொள்கிறது. சமூகக் கூட்டுறவின் விளைவாகவும் பல்பிரதி ஒப்பீட்டாலும் விளைவ-தாக 'பிரதி' முன்வைக்கப்படுகின்றது. ஒரு பிரதி வாக்கியங்களால் ஆனதாக இருப்பினும் வாக்கியக் கட்டமைப்புக்கு அப்பாலான பிரதிக் கட்டமைப்பு விதிகள் தனித்து செயல் படுகின்றன. இந்த விதிகளைக் கண்டறிவது ஒருவிதப்பிரதி ஆய்வாக மொழியியலில் இருக்கிறது. இதனைத் 'தொடர்ச்சி' (Cohesion) என்கின்றனர்.

2.1. பிரதியில் தொடர்ச்சி (Cohesive in Text)

பெரும்பாலும் இப்பிரிவில் பிரதி உரைநடையாகவே எடுத்துக்கொள்ளப்படுகிறது. பிரதியில் தொடர்ச்சியைக் காணவே ஓரளவு பிரதி அமைப்பைக் காட்டுவதாகவும் அமைந்துவிடுகின்றது. பிரதி அமைப்பு (Text Structure) 1) தொடர்ச்சி 2) தகவல் குவி மையம் (information focus) 3) வகைமை அமைப்பு (Generic Structure) ஆகிய மூன்று கூறுகளால் விளக்கப்படுகின்றது. பிரதியில் தொடர்ச்சி கீழ்க் கண்டவாறு விளக்கப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(அ) பேசு பொருளைச் சுட்டல் (reference).

திரும்ப வருகின்ற தகவல்களை இப்பிரிவின் பொருண்மையியல் ரீதியில் பார்ப்பதைக் காட்டிலும் அவற்றின் விளக்கம் என்பது வேறொன்றைச் சுட்டுகின்றது. பேசு பொருளைக் கூடச் சூழல் சார்ந்தது; பிரதி சார்ந்தது எனப் பிரித்துப் பார்க்கின்றனர்.

(ஆ) பதிலீடு (Substitution)

பிரதிக்குள் ஓர் அலகுக்குப் பதில் வேறொன்று நிற்பது. வார்த்தையாக்கலின் ஒரு உறவுதான் பதிலீடு.

(இ) நீக்கல் (Ellipsis)

பிரதியின் ஓர் அலகை நீக்குதல்; சொல்லாமல் விடப்படும் ஏதோ ஒன்று; அமைப்பு ரீதியில் அவசியம் தேவைப்படும் ஓர் அலகின் இன்மை.

(ஈ) இணைப்பு (conjunction)

பொருண்மையியல் உறவுகளின் செயற்பாடு மொழியியல் உறுப்புகளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்துவது.

இந்நான்கும் இலக்கண ரீதியான தொடர்ச்சியாகும்.

(உ) சொற்பொருள் தொடர்ச்சி (Lexical cohesion)

இது இலக்கணத் தொடர்ச்சி அன்று; சொற் களஞ்சியத்தில் நிகழும் தேர்ந்தெடுப்பால் விளைவது. சொற்களின் திரும்ப வரல், ஒரே அர்த்தமுள்ள பிற சொற்களின் வருகை போன்றனவும் இப்பிரிவின.

இப்படிப் பிரதியின் தொடர்ச்சியைப் பற்றிக் கூறுவதைப் பிரதி அமைப்பு எனச் சிலர் சொல்ல, வேறு சிலர் பிரதித் தன்மையையும் (Texture) அமைப்பையும் (Structure) வேறுபடுத்துகின்றனர் (Halliday). பிரதித் தன்மை என்பது ஒரு பிரதியாக இருப்பதற்கு உரிய தன்மைகள். அமைப்பு என்பது ஒரு வாக்கியத்துக்குள்ளும் பிரதித்தன்மை வாக்கியங்களின் கூட்டான பிரதிக்குள்ளும் பார்க்கப்படுகின்றது. எனவே, பிரதி பற்றிய கோட்பாட்டாக்கத்தில் தொடர்ச்சி 'அமைப்பில்லாத பிரதி உருவாக்க உறவுகளாக (non-structural text-forming relations)ப் பார்க்கப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2.2. சமூகக் குறியியலாக மொழியும் பிரதியும்

மொழியைச் சமூகக்குறியியல் கொள்கையின்படி பார்க்கக் கீழ்க்கண்ட கருத்தாக்கங்கள் தேவைப்படுகின்றன.

பிரதி, சூழல், துறைமொழி (register), சங்கேதம் (code), மொழியியல் ஒழுங்கமைவு (Linguistic system), சமூக அமைப்பு, இயங்கு சூழ்நிலையில் இடம்பெறும் எதுவும் (பேச்சு/எழுத்து) பிரதியாகின்றது. நிலையான தளத்தில் உள்ளவை பிரதியாகா. (எ.டு.) அகராதியில் உள்ள சொற்கள். இங்கு பிரதி மேல்நிலை வாக்கியம் (Supersentence), என்ன அர்த்தமாக இருக்கலாம் என்ற சாத்தியப்பாடுகளைக் கொண்ட ஒரு முழுமையான வாய்ப்புகள் கொண்ட, ஒரு கணத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றது பிரதி. வேறு வார்த்தைகளில் சொன்னால், பிரதி என்பது நிஜமாகும் (ரூபமாகும்), அர்த்த ஆற்றல் ஆகும் (actualized meaning potential).

சமூகத் தொடர்பு ஒரு மொழியில் வடிவத்தைக் கைக் கொள்கிறது. இதுவே பிரதி. பிரதி என்பது அர்த்தத்தில் உள்ள அடுத்தடுத்துள்ள தொடர்ச்சியான பல வாய்ப்புகளின் உற்பத்தியாகவும் அகராதி-இலக்கண அமைப்பில் உணரப்படுவ தாகவும் இருக்கிறது. பிரதியின் சுற்றுச்சூழல் என்பது சூழலின் சூழ்நிலை (context of situation). சமூகச் சூழ்நிலையின் ஓர் உதாரணமே இது—அதாவது சூழல் வகை. சூழல் வகை (situation type) என்பது தளம் (field), ஊர்தி (tenor), முறை (mode) என்ற சொற்களில் சொல்லப்படும் அமைப்புகளை உருவாக்கும் ஒரு குறியியல் கட்டமைப்பு. அதாவது பிரதி உருவாக்கச் செயல், பங்கேற்பாளர்களின் பாத்திர உறவுகள், அவர்கள் மேற்கொள்ளும் அணிநய முறைகள்.

பிறகு பிரதி ஒரு பொருண்மையியல் அலகாக, கருத்து வரைவாக முன்வைக்கப்படுகின்றது (Text is a semantic concept/unit). ஓர் அசை ஒலியியல் ஒழுங்கமைவுக்கு எப்படியோ, ஒரு தொடர் (clause) அகராதி — இலக்கண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒழுங்கமைவுக்கு எப்படியோ அப்படி ஒரு பிரதி பொருண்மையியல் ஒழுங்கமைவுக்கு.

2.3. பிரதி மொழியியல்

இது வாக்கியத்துக்கு மேல்நிலையாகப் 'பிரதி'யைக் கொண்டு செய்யும் ஆய்வாகும். ஹாரிஸ் (Harris) என்பவரால் அமைப்பு மொழியியல் நூலில் (1960) முன்மொழியப்பட்ட இவ்வகை ஆய்வு பிறகு தனிப்பிரிவாக வளர்த்தெடுக்கப்பட்டது. தொடக்க காலத்தில், பிரதியின் தொடர்ச்சி பற்றியே பேசப் பட்டது. 1960 களின் இறுதியில் பிரதி இலக்கணம் என்பது மொழியின் பிரதி (Text in Linguistics) என வரையறுக்கப் பட்டது. பின்னர் மாற்றிலக்கண முறையில் பிரதி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

1970 களின் தொடக்கத்தில் உற்பத்திப் பொருண்மையியல் (Generative semantics) நோக்கில் பிரதி பார்க்கப்பட்டது. இதன்படி பிரதி, பேர்அமைப்பாக (macro-structure) முன் மொழியப்பட்டது. தொடர்ந்து 'பிரதி-தர்க்கம்' வான் டிஜ்க் (Van Dijk) என்பவரால் பேசப்பட்டது. அடுத்த நிலையில் குறியியலும் பிரதி மொழியியலும் ஒன்றிணைக்கப்பட்டன. பிரதி மொழியியலுக்கான குறியியல் சட்டங்கள் (semiotic frameworks of Text Linguistics) உருவாக்கப்பட்டன. இம்முறையில் பிரதி என்பது புராணம், மந்திரம், கவிதை என எதுவாகவும் இருக்கலாம். இப்பிரிவில் பிரதிப் பகுப்பாய்வு பிரதியின் அமைப்பை வெளிக் காட்டுவதாகவே உள்ளது.

3 புதுத்திறனாய்வில் பிரதி: (New criticism)

படைப்பாளியின் உள்நோக்கம் (intention) பிரதிக்கு அப்பால் இருப்பதில்லை; பிரதிக்குள்ளேயேதான் இருக்கிறது. பிரதியின் அர்த்தமும் பிரதிக்குள்ளேயே உள்ளது. புதுத் திறனாய்வின் பிரதி பற்றிய இரண்டு முக்கியக் கருத்தாக்கங்கள் இவையே. புதுத்திறனாய்வுக்கு முன்பு இலக்கியத் திறனாய்வு என்பது படைப்பாளியின் வாழ்க்கை ரகசியங்களைத் தேடுவதாக வரலாற்றின் சுவடுகளைத் தேடுவதாகவே இருந்தன. மேற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோள்களுக்கு மட்டுமே 'பிரதி' பயன்பட்டது. அவ்வாறின்றித் திறனாய்வின் முழுக் குவிமையமாகப் 'பிரதி'யைப் புதுத் திறனாய்வு முன்வைத்தது. டி. எஸ். எலியட், ஐ. ஏ ரிச்சர்ட்ஸ், டபிள்யூ. கே. விம்ஸட், கியாந்த் புரூக்ஸ் முதலியோர் புதுத் திறனாய்வாளர்கள்.

படைப்பாளியை மையமாக வைத்துச் சொல்லப்பட்ட நேர்மை, திடீர் பிரசவம், நம்பகம் முதலான கருத்தாக்கங்கள் இப்போது பிரதியை மையமாக வைத்து ஒருமை, ஒருமைப்பாடு, முதிர்ச்சி எனச் சொல்லப்பட்டன. வெளிப்பாட்டுக் கொள்கையில் (expressive theory) இருந்து மாறுபட்ட விதமாகப் பிரதி பொதுமக்களைச் சார்ந்தது; ஏனெனில் பிரதிக்குக் காரணமான மொழி பொதுமக்களுக்கானது என்பதால் எனப் புதுத் திறனாய்வு சொன்னது.

வடிவத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு கருத்தாகப் பிரதியைப் பார்க்கமுடியாது. பிரதியின் வடிவக் கூறுகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அர்த்தம் என்பது ஆசிரியன் பிரதிக்குள் பொதிந்து வைத்திருப்பதோ அல்லது வாசகர்களின் மூளையில் இருப்பதுவோ அன்று. மாறாகப் பிரதிக்குள் (கவிதைக்குள்) இருப்பது என்ற புதுத்திறனாய்வின் கோட்பாடு ஒற்றை அர்த்தத் திணிப்பாகவே இருக்கிறது. எந்த ஒரு பிரதியின் அர்த்தமும் காலங்கடந்தது; உலகப் பொதுமை-யானது; வரலாற்றைக் கடந்து நிற்பது எனச் சொல்லப்பட்டது. கலாச்சாரங்கள் மாறுகின்றன; மாறும். ஆனால் கவிதை அப்படியே இருக்கும்; இருப்பதை விளக்கும்.

இந்தக் கருத்து, தர்க்க ரீதியாக அடிபட்டுப் போகக்கூடியது. எப்படியெனில் அர்த்தம் மொழிவழி சாத்தியமாகிறது; மொழியோ மாறுகிறது; எனவே அர்த்தமும் மாறியே ஆகவேண்டும். மாறாத ஓர் அர்த்தம் பிரதிக்கு எப்போதும் உண்டு என்னும் புதுத்திறனாய்வின் கோட்பாடு ஏற்புடையதன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4 அமைப்பியல் பிரதி:

4.1. படைப்பில் இருந்து பிரதிக்கு (from work to Text)

இப்பிரிவின் தலைப்பு ரோலாண்ட் பார்த்தின் (Roland Barthes) ஒரு கட்டுரைத் தலைப்பாகும். சொசுய்ர் தொடங்கி மொழி பற்றிய சிந்தனைகள் மாறத் தொடங்கின. அதனால் மொழியால் ஆன 'இலக்கியம்' பற்றிய சிந்தனைகளும் புதுத் திசையில் கிளைத்தன. மேலும் மானுடவியல், மார்க்சியம், உளப் பகுப்பாய்வு எனப் பல துறைகளிலும் மொழியைப் பிரதானமாகக் கொண்ட, மொழியில் விளைகின்ற துறைகளில் மாற்றம் ஏற்பட்டது. மார்க்சியம், பிராய்டிஸம், அமைப்பியல் ஆகியவற்றின் கூட்டில் இலக்கியம் என்பது படைப்பாளி, வாசகன், விமர்சகன் என்னும் மூவரின் உறவுகளில் வைத்துப் பார்க்கப்பட்டது. 'படைப்பு' என்ற கருத்தாக்கம் இதுவரை ஆட்சி செலுத்தியது. இப்போது அதற்கு மாறாக இலக்கிய விமர்சனத்தின் ஆய்வுப் பொருளாக பிரதி முன்வைக்கப்பட்டது. முன்சொன்ன கட்டுரையில் ரோலாண்ட் பார்த் பிரதிக் கோட்பாடுகளாக முன்வைப்பன:

(1) படைப்பு என்பது பருமையானது; நூலகத்தில் புத்தக அடுக்கில் ஓர் இடத்தைப் பெற்றிருப்பது. பிரதி முறையிலான ஒரு தளம் (a methodogical field). பிரதி செயலில் உற்பத்தியில் உணரப்படும் ஒன்று. அது நூலக அடுக்கோடு நிற்பதில்லை. அதன் உள்ளார்ந்த இயக்கம் ஒரு தொடர் பயணம்,

(2) 'நல்ல இலக்கியம்' என்று சொல்லிக் கூடப் பிரதியைச் சிறை செய்துவிட ஏலாது. பிரதியை ஒரு படிமுறை வரிசையிலோ இலக்கிய வகைப்பாட்டிலோ சுருக்க முடியாது. பிரதியை உருவாக்குவது எது எனில் பழைய வகைப்பாட்டை அழிக்கும் அதன் சக்திதான். பிரதி எப்போதும் பொதுப் புத்திக்கு (Common sense) முரணானது.

(3) குறி (Sign) என்பதோடு தொடர்புபடுத்தி பிரதி அணுகப் பட படைப்புக் குறிப்பீட்டோடு (Signified) அணுகப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பீடு இரு விஷயங்களைப் புலப்படுத்துகிறது. ஒன்று: படைப்பு ஆய்வுப் பொருளாக ஆதல் — ஒலியியல் ஆய்வுப் பொருள். இரண்டு: குறிப்பீடு ரகசியமானது; முதன்மையானது, ஒருவன்/ள் இதைத் தேடிக் கண்டடைய வேண்டும். பிரதி குறியீட்டைத் தள்ளிப் போடுகின்றது. இதன் செயற்படு தளம் குறிப்பான் **(Signifier)**. பிரதி மொழியில் உள்வாங்கப்படுகின்றது; மொழியைப் போல் அமைப்பாகிறது ஆனால், மையமின்றி, முடிவின்றி.

(4) பிரதி பன்முகத்தன்மை கொண்டது. இப்படிச் சொல்வதால் அது பல அர்த்தங்களைப் பெற்றிருக்கிறது என்று பொருளன்று. மாறாகப் பல அர்த்தங்களை அது பெறுகிறது. பல அர்த்தங்களின் இணை இருப்பாகப் பிரதி இல்லை. பல அர்த்தங்கள் பிரதியில் ஊடாடுகின்றன; பயணிக்கின்றன. ஒரு விளக்கத்துக்குப் பதிலளிக்கவில்லை பிரதி. அது ஒரு தகரப்பை; ஒரு பரவலைக் கோருகிறது. பிரதியின் பல அர்த்தம் அதன் உள்ளடக்க மயக்கத்தால் **(ambiguity)** கிடைக்கிறது என்பதுவும் அன்று. பிரதியை நெய்யும் பல இழைகளாக உள்ள குறிப்பான்களின் பன்முகத் தன்மை பல அர்த்தங்களைச் சாத்தியமாக்குகிறது. மேலும் ஒவ்வொரு பிரதியும் மற்றொரு பிரதியின் உள்பிரதியாகவும் **(Inter textuality)** இருக்கின்றது.

(5) புற உலகால் ஒரு படைப்பு நிர்ணயிக்கப்படுகின்றது. படைக்கப்படும் இனத்தாருக்குள் பரப்படுகின்றது. படைப்பாளிக்குப் பெருமை செய்யப்படுகின்றது. அதாவது இலக்கிய ஆராய்ச்சி, படைப்பை மதித்தல் ஆசிரியனின் உள்நோக்கங்களைக் கண்டறிதல் என்பதாகவும் படைப்பாளிக்கு படைப்பின் உரிமையை வழங்குவதாகவும் இருக்கிறது. பிரதியோ தந்தையின் கையெழுத்தில்லாமலேயே வாசிக்கப்படுகின்றது., படைப்பு ஒரு வளரக்கூடிய உயிராகக் **(organism)** கருதப்படுகையில் பிரதி ஒரு வலைப் பின்னலாக **(network)** விரிவடையக் கூடியதாக முன்வைக்கப்படுகின்றது. இதனால் பிரதிக்கு மதிப்பேதும் தரப்படுவதில்லை. அது சிதைக்கப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(6) படைப்பு சாதாரணமாக ஒரு நுகர்வுப் பொருள் (Consumer good) பிரதி, படைப்பை நுகர்வில் இருந்து அதை விளையாட்டாக / உற்பத்தியாகச் செய்கிறது. எனவே பிரதி எழுதுதலுக்கும் வாசித்தலுக்கும் உள்ள வேறுபாட்டை அழிக்கும் ஒரு முயற்சியைக் கோருகிறது.

(7) படைப்பு என்று பிரிக்கப்படுவது கூட வாசிப்பில் நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் இந்த மகிழ்ச்சி பகுதியானது; நுகர்வு மகிழ்ச்சி (Pleasure). ஆனால் பிரதி பேரின்பத்தோடு (Jouissance / enjoynent) தொடர்புடையது.

4.2. பிரதிப் பகுப்பாய்வு (Textual Analysis)

பிரதிப் பகுப்பாய்வு எப்படிச் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தாக்கங்களின் ஊடேயும் நாம் 'பிரதி' பற்றிய கருத்துக் களைத் தொகுக்க முடியும். பிரதிக்குப் பிரதித் தன்மை (textuality) முக்கியமானது. இப்பிரதித்தன்மை பிரதியில் அமைகின்ற சில எல்லைப் புள்ளிகளால் (markings) உருவா கின்றது. இந்தப்புள்ளிகள் பிரதியைப் பல்வேறு அழுத்த முடையனவாக ஆக்குகின்றன. சில குறிப்பிட்ட குறிப்பான் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. குறிப்பான் குறிப்பீடு என்பதின் மூடிய இயல்பான உறவைப் பார்க்கின்றன. புரிதலைச் சிக்கலாக்குகின்றன. இதே அழுத்தத் தன்மைகள்தாம் பிரதித்' தன்மையின் குறிகள்.

முன்வைக்கப்படும் கேள்வி 'பிரதியின் அர்த்தம் என்ன? என்பதன்று. பிரதி பல்லர்த்த உள்ளுறை ஆற்றலை எப்படிப் பெற்றிருக்கிறது? என்பதுதான். **பிரதிப் பகுப்பாய்வு** சாத்திய மாகும் அர்த்தங்களின் குறியியல் நிபந்தனைகளை வெளிச் காட்டுகின்றது இந்த இடத்தில் மரபார்ந்த இலக்கியப் பகுப் பாய்வையும் **பிரதிப் பகுப்பாய்வையும்** ஒப்பிட்டு நோக்கல் அவசியமாகின்றது. இலக்கியப் பகுப்பாய்வு ஒரு படைப்பின் குறிப்பான்களை ஓர் இறுதிக் குறிப்பீட்டோடு இணைப்பதை மேற்கொள்கின்றது. இலக்கியச் சொல்லாடலை இலக்கிய மல்லாத சொல்லாடல்களில் இருந்து பிரித்துக்காட்டும் இன்றியமையாத மொழியியல் தன்மைகளைக் கண்டுபிடிப்பதும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தன்மைகளில் இருந்து வாசகன், ஆசிரியன் தன் படைப்பில் வைத்துள்ள காலங் கடந்து நிற்கும் ஓர் அர்த்தத்தைக் கண்டு பிடிப்பதும் இலக்கியப் பகுப்பாய்வின் செயல்முறை. ஆனால் **பிரதிப் பகுப்பாய்வு** பல்லர்த்தச் சாத்தியப்பாடுகளைப் பெருக்கு கின்ற குறிப்பான்களின் ஒரு தளமாக மொழியை முன்னிறுத்தி அதில் கவனம் செலுத்துகின்றது. பிரதிப் பகுப்பாய்வு நடை முறையில் பலவிதமாக மேற்கொள்ளப் பெறுகின்றது. அதை விவரிப்பது கட்டுரையின் தளத்தை விரிக்கும் என்பதால் இத்துடன் நிறுத்திக் கொள்ளப்படுகிறது.

4. 3. கதையாடலில் பிரதி (Text in Narratology)

அமைப்பியல் ஆய்வுகள் பெரும்பான்மையும் கதையாடல் ஆய்வுகளாக இருப்பதால், அக்கதையாடல் கோட்பாடுகளுக்குள் பிரதி பெறுகின்ற இடத்தையும் பார்த்தல் அவசியமாகின்றது. ரிம்மோன்-கேனன் கதையாடல் ஆய்வை மூன்று தளத்தில் பிரிக்கின்றார்: கதை - பிரதி - கதையாக்கம் (Story - Text - Narration)

கதை : பிரதியின் விவரிப்பில் இருக்கும் செயல்களின் சுருக்கம். அச்செயல்களைக் கால வரிசையில் மாற்றும் மறுஉருவாக்கம். செயல்களை அவற்றின் பங்கேற்பாளர்களோடு கொள்ளுதல்.

பிரதி : செயல்களின் **சொல்லலை** (telling of actions) காலவரிசையில் அன்றி, மாற்றி மேற்கொள்வது. நாம் படிப்பது எதுவோ அதுவே பிரதி. பங்கேற் பாளரின் குண இயல்புகள் பிரதி. முழுதும் பரவி நிற்கும். கதையாடலின் உள்ளடக்கம் குறிப்பிட்ட 'பார்வை'யில் வடிகட்டப்பட்டிருக்கும்.

கதையாக்கம்:

உற்பத்தித் தொடர் செயல்தான் கதையாக்கம். பிரதியின் வழியாகத்தான் வாசகன்/ள் கதை பற்றிய அறிவையும் (அதன் வஸ்து) கதையாக்கத்தையும் (அந்த வஸ்துவின் உற்பத்திச் செயல்) அறிகிறான்/ள். பிரதியை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நேரம் (time), பாத்திரமாக்கம் (characterisation), குவிமையமாக்கம் (focalization) என்ற மூன்று கூறுகளில் ஆய்வு செய்கின்றனர்.

ஒரு கதையாடல் பிரதியை வாக்கியத்தோடு ஒப்பிட்டு நோக்கவும் முடியும். இங்கு O' Toole என்பாரின் ஒப்பீட்டைப் பார்ப்போம்.

கதையாடல்பிரதி		வாக்கியம்
கதையாடல் அமைப்பு (narrative structure)	—	தொடர்செயல் — பங்கேற்பாளர் உறவுகள்
நோக்குநிலை (view point)	—	மனச்சார்பு, modality, aspect
கதைப்பின்னல் (plot)	—	இணைப்பு மற்றும் காரண காரியத் தொடர்புகள்
கதை (Fable)	—	நேர வரிசை அமைப்பு காலம் & நேரம் பற்றிய வினையடைகள்.
பின்னணி (Setting)	—	நேரம் & இடம் பற்றிய விவரிப்புகள்
பாத்திரம் (character)	—	பங்கேற்பாளரைப் பற்றிய விவரிப்புகள்

இவ்வொப்பீட்டோடு Toole ஒரு மாற்றிலக்கண மாதிரி ஒன்றையும் தருகின்றார். கதையாடல் ஆய்வைக் கீழ்க் கண்டவாறு காட்டுகிறார்.

$$\text{அடிக்கருத்து (Theme)} \xrightarrow[\text{Expressive Devices}]{\text{வெளிப்பாட்டுக் கருவிகள்}} \text{பிரதி (Text)}$$

அதாவது பிரதி = அடிக்கருத்து + வெளிப்பாட்டுக் கருவிகள்

அடிக்கருத்து = பிரதி வெளிப்பாட்டுக் கருவிகள் என்றாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4.4 குறியியலில் பிரதி (Text in Semiotics)

இதுவரை பார்த்த பிரதி என்பது மொழியால் (அதாவது சொற்களால்) விளைந்தது. ஆனால் குறியியலில் இந்தப் பிரதியோடு மொழியியல் அல்லாத பிரதிகளையும் (non-linguistic texts) ஆய்வுக்கு எடுத்துக்கொள்கின்றனர். அதன்படி ஓர் ஓவியம், ஒரு கட்டிடம், சினிமா, பூகோளப் படம் கூட ஆய்வுப் பொருளாகின்றது. எதுவும் 'பிரதி'யாகக் கொள்ளப் படலாம். ஒரு கடற்கரை கூடப் பிரதியாகக் கொள்ளப்படலாம் ஜான் பிஸ்கே (John Fiske) Surfalism and Sandiotics: The beach in OZ culture' என்ற கட்டுரையில் கடற்கரையைப் பிரதியாகக் கொண்டு ஆய்ந்துள்ளார்.

5 பிற்கால அமைப்பியல்: (Post – Structuralism)

ழாக் தெரிதா (Jacques Derrida) 'எழுத்து எப்படி அர்த்தத்தை வேறுபாட்டாலும் தள்ளிப்போடலாலும் (differing and deferring) உற்பத்தி செய்கிறது' என்கிறார். இந்தக் கோட்பாடு 'பிரதிகள் அர்த்த மையங்களைக் கொண்டிருப்பவை' என்ற கருத்தாக்கத்தை மறுக்கிறது. அர்த்த மையம் எனச் சொல்லப்படுகின்ற ஓர் எண்ணம், ஒரு தத்துவம் ஒரு மதம் என்ற எல்லாவற்றையும் தெரிதா கேள்விக்குள்ளாக்குகின்றார். அர்த்தம் என்பது தெரிந்தது × தெரியாதது, இருப்பது × இல்லாதது நிலையானது × நிலை யற்றது ஆகியவற்றுக்கிடையிலான உறவுகளால் (அல்லது விளையாட்டால்) புரிந்து கொள்ளப்படுகின்றது என்கிறார். ஒற்றையான, நிலையான அர்த்தம் என்பதை நிர்ணயிக்க முடியாது; அது தொடர்ந்து தள்ளிப்போடப் பட்டுக்கொண்டே இருக்கிறது. எனவே பிரதிகள் மையமிழக்கின்றன (Texts are decentred).

வரலாற்றாலும் எல்லா எழுத்துக்களின் உள் உறவாலும் (Intertest vality) மதிப்புகளாலும் கட்டமைக்கப்பட்ட பிரதிகளைக் கட்டமைப்பு நீக்கித் தகர்ப்பதே பிற்கால அமைப்பியலின் செயல்முறையாகும். புறவய முறைகளால் கண்டுபிடிக்கப் படக்கூடிய நிர்ணயமான அர்த்த அமைப்புகளைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரதியில் தேடும் திறனாய்வுச் செயல்முறைகளில் இருந்து தகர்ப்பு முறைச் செயல்முறை (Deconstructive practice) வேறுபட்டு நிற்கின்றது.

பிரதியின் அந்தஸ்து அதன் எல்லைகளால் நிர்ணயிக்கப் படுவதில்லை. பிரதி தொடங்குகிறது; பிரதி முடிகிறது என்ற செயல் பிரதியின் அந்தஸ்து ஆகாது. தெரிதாவின் கருத்துப்படி எப்பிரதியும் முடிவடைவதில்லை; அர்த்தங்கள் நிறைவடைவதே இல்லை. எனவே தெரிதாவுக்குப் பிரதி "நிறைவுறாத அர்த்தங்களின் ஒரு கலவையான வலைப்பின்னல்; தன்னை அன்றிப் பிறவற்றை முடிவில்லாமல் குறிக்கின்ற சுவடுகளின் ஒரு பின்னல்."

'ஒரு பிரதி வேறொன்றை படிக்கின்றது' என்ற தெரிதாவின் கூற்றும் 'ஒவ்வொரு பிரதியும் ஒவ்வொரு அர்த்தமும் எவ்வளவுதான் நிறைவுற்றதாகத் தோன்றினாலும் அவை ஒரு கூறுதான்' என்ற பால் தெ. மானின் (Paul de Man) கூற்றும் 'பல்பிரதியுறவை' (intertextuality) முன்வைக்கின்றன. ஹெரால்டு புளூம் (Harold Bloom)) 'பிரதிகள் பற்றிய நமது கருத்து முதல்வா தங்கள் எல்லாம் மோசமான மாயைகள்: நடைமுறையில் பிரதிகள் இல்லை; விளக்க வாசிப்பு மட்டுமே உள்ளது' என்கிறார். ஹார்ட்மண் (Hartman) "ஓர் இலக்கியப் பிரதியை வாசிக்கும் விமர்சகனே/ளே அப்பிரதியின் படைப் பாளியாக உருவாகின்றான்" என்கிறார்,

ஒரு பிரதி, சொல்லாடல் எவ்வித மொழியியல் வழிகளின் படி அதிகாரத்தைப் பிரயோகிக்கிறது என்ற கேள்வியை முன்வைத்துப் பிரதி ஆய்வு செய்யப்பட்டது. மேலும் மொழியியலுக்குக் கூடுதலாகவும் குறிப்பீட்டாக்கப் பயிற்சிகள், பிரதிநிதியாக்க அமைப்புகள் என்பனவற்றின்வழி கருத்துருவம், தத்துவம், பொருளியல் ஆகியனவும் கேள்விக்குள்ளாக்கப்படு கின்றன.

5 பெண்ணியம்: (Feminism)

மனிதநேயக் கருத்துருவத்தின் (humanist ideology) 'சுயம்' (self) என்பதுதான் வரலாற்றின் இலக்கியப் பிரதியின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒட்டுமொத்த ஆசிரியனாக இருக்கிறது. மனிதநேயப் படைப்பாளி ஆற்றல் மிக்கவன்; ஆண். உலகைப் பொறுத்து அவன் 'கடவுள்' படைப்பைப் பொறுத்து 'படைப்பாளி' வரலாறு, பிரதி இந்த முழுமையான தனிநபரின் வெளிப்பாடு அன்றி வேறில்லை. எல்லாக் கலைகளும் தன் வரலாறாகின்றன. பிரதி செயப்பாட்டுத் தன்மையதாக, சிக்கலின்றி ஏற்கனவே வழங்கப்பட்டதின் பெண்மையின் பிரதிபலிப்பாக ஆண்மை உலகாக அல்லது சுயமாகக் குறைத்துப் பார்க்கப்பட்டது. இப்படித்தான் தொடக்க நிலை பெண்ணிய விமர்சனம் பிரதியைப் பார்த்தது.

பின்னர் இப்பார்வை வளர்ந்தது' எல்லாச் சமூகச் சொல்லாடல்களின் உள்ளுறையாகவும் ஆணாதிக்கம் இருப்பதையும் பெண்கள் ஆணாதிக்க வரிசை முறையால் ஒடுக்கப்பட்டதையும் பெண்ணிய விமர்சகர்கள் சொன்னார்கள். எனவே பிரதிப் பகுப்பாய்வு "ஒவ்வொரு வாசிப்பும் பால்வயப்பட்ட வாசிப்பே (every reading is a gendered reading); ஏனெனில் எல்லாப் பிரதி உற்பத்திகளும் பால்வயச்சார்பானதே; பேசுதல்/எழுதுதல் பால்பேதம் அற்றதோ நடுநிலையானதோ அன்று", என்பதை வெளிக்காட்ட வேண்டும் என மொழியப்பட்டது. மேலும் பகுப்பாய்வு, 'பால்வயச்சார்பான பிரதியின் அரசியல், சமூகம், உளவியல் மற்றும் வரலாற்று உருவாக்கத்தின் கட்டமைப்பு, கட்டமைப்பு தகர்ப்பு' என்பனவற்றை மையப்படுத்தியது.

மொழிவழியான ஒடுக்கு முறையே முதன்மையான ஒடுக்கு முறையாகப் பெண்ணிய விமர்சகர்களால் முன்வைக்கப்பட்டது. மொழியே சமூக வயமாக்கலின் முதல்படி. ழாக் லக்கானின் (**Jacques Lacan**) உளப் பகுப்பாய்வு பற்றிய கருத்துகள் பெண்ணிய விமர்சனத்தைப் புதிய திசையில் செலுத்தியது. லக்கான் தன்னிலையாக்கத்தின் பிளவை — ஜீவிக்கும் (being) சமூக வயப்பட்டுப் பேசும் சுயத்துக்கும் (social speaking self) இடையேயான பிளவை உணர்வதே புலனறிவின் முதல்படி என்றார். ஈகோ புலனுணர்வில் ஏற்கனவே இல்லை. மாறாக அது பொருட்களைப் பற்றிய புலனுணர்வால், கட்டமைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கப்படுகின்றது என்கிறார். இந்தக் கோட்பாடு பெண்ணிய விமர்சகர்களால் புதிய பரிமாணங்களில் எடுத்தாளப்பட்டது. அர்த்தம் ஏதொன்றிலும் இருப்பதில்லை, மாறாக அது ஒரு கட்டமைவாகும்; ஒரு நாடகமாகும். அர்த்தம் ஒரு பிரதியில் உள்ளுறையாக இருப்பதில்லை. எனவே பெண்ணிய விமர்சனம் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதில்லை; மாறாக அர்த்தத்தைக் கட்டமைக்கிறது. பிரதிப் பகுப்பாய்வு ஒரு பிரதியில் குறிப்பிட்ட மொழியியல் விளைவுகளைப் பற்றி விவாதிப்பதன்று. அப்பகுப்பாய்வு எல்லாவித நடப்புண்மைகளும் மொழிவழி கட்டமைக்கப்படுகின்ற வழிகளைப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு வலிமையான மாதிரியை உருவாக்கத் தூண்டுகிறது.

துணை நூற்பட்டியல்:

1 விநாயகமூர்த்தி. அ., **'மூலபாட ஆய்வியல்'** பாலமுருகன் பதிப்பகம், 90 பாரதியார் தெரு. சுப்பிரமணியபுரம், மதுரை 1978,

2 Barthes, Roland, 'Theory of the Text' in *Untying the text* (ed) Robert Young, Routledge, London, 1990.

3 Barthes, Roland, 'From Work to Text' in *Literary Criticism-A reading* (ed) B. Dar & J. M. Mohanty, oxford University Press' calcutta, 1985.

4 Belsey, Catherine, '*Critical Practice*' Metheun, London, 1983.

5 Birch, David, '*Language, Literature and Critical Practice*, Routledge, London, 1989.

6 Culler, Jonathan, '*On Deconstruction: Theory and Criticism after structuralism*'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7 Gottesman, Ronald (ed) — '*Art and Error: Modern Textual Editing*,' Metheun & Co Ltd., London, 1973.

8 Halliday, M. A. K. — '*Langucge as Social Semiotic: The Social Interpretation of Language and Meaning*', Edward Arnold, London, 1987.

9 Halliday, M. A. K. & Hasan Ruqaiya. — '*Cohesion in English*,' Longman, London, 1979.

10 Lotman, Jurij. — '*The Structure of the Artistic Text*', Michigan Slavic Contributions, No. 7, Dept of Slavic Languages and Literature, The University of Michigan, 1977.

11 Moi, Toril. — '*Sexual/Textual Politics*' Metheun, London, 1985.

12 Rimmon — Kenan, Shlomith, — '*Narrative Fiction; Contemporary Poetics*', Metheun, London.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீனும் கோனும்

அ. சிவபெருமான்

கட்டுரை பற்றி:

பங்குனி மாதத்தில் நட்சத்திரம் வீழின் அந்நாட்டு அரசனுக்குத் தீங்குண்டாகும் என்ற கருத்தைச் சோதிட நூல்கள் குறித்துள்ளன. அக்கருத்தை மெய்ப்பிக்கப் புறநானூற்றில் கூடலூர் கிழார் பாடிய பாடலைச் சான்றாகக் கொள்ளலாம். அப்பாடல், பங்குனி மாதத்தில் ஒரு மீன் விழுந்ததன் பயனாக அந்நாட்டு அரசனான கோச்சேரமான் யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறந்து விட்டான் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது. இக் கட்டுரை அப்பாடலைக் கொண்டு அம்மீன் விழுந்த நேரத்தைக் கண்டு பிடிக்க முயல்கிறது.

1. சோதிடர்களுக்கு வழங்கப்பெற்ற பெயர்கள்:

சோதிடர்களுக்கு அறிவன், கணியன், காலக் கணிதர், வள்ளுவன், நிமித்திகன், உய்த்துணர்வோன், அறிவாளன், புரிநூல் உத்தமன் முதலிய பல்வேறு பெயர்கள் இருந்தமையைத் தமிழிலக்கியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பெயர்களுள் 'அறிவன்' என்ற பெயரைத் தொல்காப்பியர்,

> ''மறுவில் செய்தி மூவகைக் காலமும்
> நெறியின் ஆற்றிய **அறிவன்** தேயமும்''[1]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற நூற்பா அடிகளுள் குறிப்பிட்டுள்ளார். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் எழுதியுள்ள பின்வரும் உரை அக்கருத்தை மேலும் வலியுறுத்தும்:

"அறிவன் என்றது கணியனை; மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர் கோளுந் தூமமும் மீன்வீழ்வும் கோள்நிலையும் மழை நிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல். ஆதலால் மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் என்றார்"[2] இவ்வுரையின் வழி 'அறிவன்' என்பதற்குக் 'கணியன்' என்று இளம்பூரணர் பொருள் கொண்டுள்ளமையை அறிய முடிகின்றது. புறப்பொருள் வெண்பா மாலை, 'கணிவன் முல்லை' என்றொரு துறையைக் குறிப்பிட்டு, கணிவனது புகழ் கூறுதல் கணிவன் முல்லை என்று கூறுகிறது.[3] அக்கணிவனை அந்நூல் 'சோதிடன்' என்று உணர்த்துகின்றது. சங்ககாலத்தில் 'சோதிடனைக் கணியன் என்றும் அழைத்தனர்.

2. கணியன் பணி:

மேற்குறிக்கப் பெற்ற இளம்பூரணர் உரை கணியனுடைய பணியை விளக்குகின்றது அவ்வுரையிலிருந்து அவர்காலச் சோதிடர்களின் ஆற்றலை அறிந்து கொள்ள முடிகின்றது. அவர்கள், பகலும் இரவும் இடைவிடாமல் வானத்தைப் பார்த்து அங்கு நிகழும் கோள்களின் இயக்கங்களையும் நட்சத்திரங்களின் நிலைகளையும் அறிந்திருந்தனர் என்ற செய்தியும் பெறப்படுகின்றது. மேலும், அவ்வுரையிலுள்ள 'மீன்வீழ்வு' என்னும் சொல் இக்கட்டுரையின் ஆய்வுப் பொருளாக அமைகிறது, வானத்திலிருந்து கீழே விழும் நட்சத்திரங்களை 'மீன்வீழ்வு', அல்லது, 'வீழ்மீன்' என்னும் சொற்களால் குறிப்பிடலாம்.

3. நட்சத்திரக் குறியீடுகள்:

சோதிடத் துறையுள் அடிப்படையாகக் கருதப் பெறும் கூறுகளுள், ஒன்றாகக் கொள்ளப் பெறும் அசுவினி, பரணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Forwarded free of cost with the
Compliments of the Dept. of Education,
Govt. of India, New Delhi.
Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளிட்ட இருபத்தேழு நட்சத்திரங்களும் வானில் விளங்குவன. அந்நட்சத்திரங்களை அறிவார்ந்த சோதிடர்கள் மட்டும் வானத்தை நோக்கி அறிந்து வைத்திருப்பர். ஆதலால்தான் மகாகவி பாரதியார், "வானநூற் பயிற்சி கொள்"[4] என்றார். இவ்வாறு வானத்தை நோக்கி நட்சத்திரங்களைத் தெரிந்து கொள்வதற்காகச் சோதிட நூல்களில் நட்சத்திரங்களின் அடையாளங்கள் குறியீடுகளாகக் கூறப்பெற்றுள்ளன. சில நட்சத்திரங்களின் குறியீடுகள் வருமாறு:

பரணி — அடுப்புக் கட்டி போல,
மிருகசீரிடம் — தேங்காய்க்கண்போல,
பூசம் — புடலம் பூப் போல,
கேட்டை — ஈட்டிபோல

விளங்கும்.[5]

நட்சத்திரங்களின் குறியீடுகளைக் கலைக் களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது. தமிழிலக்கியங்களில் சில நட்சத்திரங்களின் குறியீடுகள் இடம் பெற்றுள்ளன.

4. மீன் விழுதல் தீய நிமித்தமாகும்:

புறநானூற்றில், கோவூர்கிழார் தீய நிமித்தங்கள் பல வற்றைக் குறித்துள்ளார். அவற்றிலொன்று விண்மீன் எரிந்து விழுதலாகும். இதனை "திசை இரு நான்கும் உற்கம் உற்கவும்"[6] என்றவாறு குறிப்பிட்டுள்ளார். எனவே, எட்டுத் திசைகளிலும் விண்மீன் எரிந்து விழுதல் தீய நிமித்தமாகக் கருதப்பட்டமை தெளிவு.

கோப்பெருந்தேவியின் கனவில், மீன் விழுந்ததாகவும் அதனால் துன்பமுண்டு என்றும் இளங்கோவடிகள் குறிப் பிட்டுள்ளார். இக்கருத்தினை,

"............ ....
இரவு வில்லிடும் பகல்மீன் விழும்
இருநான்கு திசையு மதிர்ந்திடும்
வருவ தோர் துன்ப முண்டு
.... - ...."[7]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றவாறு குறிப்பிட்டுள்ளார். எரிநட்சத்திரம் விழுதலை நோக்குதல் கூடாது என்ற கருத்தை ஆசாரக் கோவை குறிப்பிட்டுள்ளது.[8]

அறிவியல் வல்லுநரான நெல்லை சு. முத்து என்பவர், 'இலக்கியத்தில் வானவியல்கலை' என்ற தலைப்பின் கீழ் எரிவிண்மீன்கள் பற்றிப் பின்வரும் கருத்தைக் குறிப்பிடுகின்றார் :

> "இனி எரி விண்மீன்கள் சிறிதும் பெரிதுமான விண்கற்களாக (Meteorites) உடைந்து பூமியை அடைவதும் உண்டு. இந்த விண் கற்களில் இரும்புத் தாதுக்களே மிகுதி. இவை பூமியின் விசும்பை அடையும்போது அயனி (ion), காற்று இவற்றின் உராய்வினால் ஒளிர்ந்து எரிவிண் மீன்களாகக் காட்சியளிக்கும். இத்தகைய எரிவிண் கற்கள் விழுவது கூடத் தீயநிமித்தமாகக் கருதப் பட்டது."[9]

எனவே, வானத்திலிருந்து விழும் எரிவிண் மீன்களால் தீய பலன்கள் நிகழும் என்று கருதலாகின்றது.

5. சோதிட நூல்களில் 'மீன்வீழ்வு'க் கருத்துகள்:

சித்திரை, ஆவணி, கார்த்திகை, மார்கழி, பங்குனி ஆகிய ஐந்து மாதங்களில் நட்சத்திரம் விழுமாயின், அரசுக்கு (அரசனுக்கு) அழிவு உண்டாகும். ஆடி, ஐப்பசி, தை, மாசி ஆகிய நான்கு மாதங்களில் நட்சத்திரம் விழுமாயின் நாட்டில் தானியம் குறையும். ஆவணியில் நட்சத்திரம் விழுமாயின் அமைச்சனுக்கு மரணமேற்படும். புரட்டாசியில் நட்சத்திரம் விழுமாயின் நாட்டில் நோய் உண்டாகும். வைகாசியில் நட்சத்திரம் விழுமாயின் மழை இல்லை. இவ்வாறு பன்னிரு மாதங்களில் நட்சத்திரம் விழுமாயின் ஏற்படும் பலன்களைச் 'சூடாமணி உள்ள முடையான்' என்ற சோதிடநூல் பின்வரும் பாடலாக வடித்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஆடு கயல் தேள் தனுசு சிங்கம் எழுமீன் விழுமேல்
அரசழிவாம்
கோடு மகரம் துலை அலவன் கும்பம் அஃகம் குறைந்-
திடுமே
தேடு மிதுனம் மந்திரிசாம் தெரிவையின் தாம்பிணி
பெரிதாம்
ஓடும் இடபம் மழையில்லை உடுவீழ் குறியென்று
உணர்ந்து உரையே".

சுந்தரானந்தர் என்ற சித்தர் இயற்றிய, 'சோதிட முகூர்த்த சிந்தாமணி' என்ற நூலில், 'ஆகாய நட்சத்திரம் உதிரும் பலன்' என்ற தலைப்பின் கீழ்,

"சித்திரையும் ஆவணிகார் த்திகைப் பங்குனி
திருவான மார்கழிமன் னவனுக் காகா
சத்தியுள ஐப்பசியும் ஆடி மாசி
தான் உதிரில் தானியங்கள் குறையும் பாரு
பக்தியுள ஆனிபுரட் டாசி தன்னில்
பாங்குடனே தான்உதிரில் உலக பீடை
மத்திபவை காசிதனில் உதிரு மாகில்
மழையில்லை என்றிதனை வகுத்துச் சொல்லே"[11]

என்ற பாடல் இடம் பெற்றுள்ளது. மேற்குறித்த இரண்டு நூற் கருத்துகளின் வாயிலாகப் பங்குனி மாதத்தில் நட்சத்திரம் விழுமாயின், அரசனுக்குத் தீங்கு வருமென்ற கருத்தை அறிய முடிகின்றது.

6. பங்குனியில் நட்சத்திரம் வீழின் மன்னவனுக்கு ஆகாது என்ற கருத்தைக் குறிப்பிடும் புறப்பாடலும் அதன் பொருளும்:

மேற்குறித்த சோதிட நூற் கருத்துகளை மெய்ப்பிக்க கூடலூர் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடலைச் சான்றாக்க லாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடல்

“ஆடுஇயல் அழல் குட்டத்து
ஆர்இருள் அரை இரவில்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயம் காயப்
பங்குனிஉயர் அழுவத்துத்
தலைநாள் மீன் நிலைதிரிய
நிலை நாள்மீன் அதன் எதிர் ஏர்தரத்,
தொல்நாள் மீன் துறைபடியப்,
பாசிச் செல்லாது, ஊசித் துன்னாது,
அளக்கர்த்திணை விளக்காக
கனைஎரி பரப்பக், கால் எதிர்பு பொங்கி,
ஒருமீன் வீழ்ந்தன்றால் விசும்பி னானே
அதுகண்டு, யாமும் பிறரும் பல்வேறு இரவலர்,
பறைஇசை அருவி நல்நாட்டுப் பொருநன்
நோயிலன் ஆயின் நல்லுமன் தில்லென
அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப,
அஞ்சினம்; எழுநாள் வந்தன்று இன்றே
... ...
... ...
... ...
மேலோர் உலகம் எய்தினன்; ஆகலின்
... ... ”[12]

6.1. பாடலின் கருத்து:

மேட இராசிக்குள்ள கார்த்திகை நட்சத்திரத்தின் முதற் கால் நடந்து கொண்டிருக்கும் வேளையில், சந்திரன் இல்லாத பாதி இரவில், பங்குனி மாதத்தினுடைய முதற்பாதி (15-ஆம் நாள்) நாளில், அனுசத்தின் வேர் நட்சத்திரமான கேட்டையும், புனர்பூசத்தின் கடை நட்சத்திரமான திருவாதிரையும் வானில் விளங்கிக் கொண்டிருக்கும்போது, தலைநாண் மீனாகிய உத்திரம் உச்சத்திலிருந்து கீழே இறங்க, நிலைநாண் மீனாகிய திருவாதிரை மேலே ஏற, தொன்நாண் மீனாகிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேட்டை கடலுள் படிய, மேற்கண்ட நிலையில் ஒருமீன் கிழக்கும் வடக்கும் செல்லாமல் வானத்திலிருந்து பேரொளி யுடன் கீழே விழுந்தது. அம்மீன் விழுந்ததன் பயனாக அந்நாட்டு அரசனுக்குத் தீங்கு வருமென புலவர் கூடலூர் கிழாரும் பிறரும் வருந்தினர். அதே போல் ஏழாம் நாள் அந்நாட்டு அரசனான கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறந்துவிட்டான்.

மேற் கூறப்பெற்ற கருத்துகளின் வாயிலாக எதிர் காலத்தில் நிகழவிருக்கும் பலன்களைக் கூடலூர்கிழார் போன்ற கணியர்களால் முன்கூட்டியே கூற இயலுமென்றும் பங்குனி மாதத்தில் மீன் விழுந்தால் அரசனுக்கு அழிவு உண்டாகும் எனக் குறிப்பிடும் சோதிட நூற்கருத்துகளின்படி, கோச் சேரமான் யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற அரசனுக்கு இறப்பு ஏற்பட்டதென்றும் அறிய முடி கின்றது.

7. வீழ்மீன் விழுந்த நேரத்தைக் கணித்தல்:

கூடலூர் கிழார் பாடலில் ''ஆரிருள் அரை இரவில்'' என்ற அடியின் வழி இருள் நிறைந்த பாதி இரவு என்ற செய்தியும், ''பங்குனி உயர் அழுவத்து'' என்ற அடியின் வழி பங்குனி மாதத்தினது முதற் பதினைந்து நாள் என்ற குறிப்பும் இடம் பெற்றுள்ளன. எனவே, பங்குனி மாதம் பதினைந்தாம் நாள் பாதி இரவில் ஒரு விண்மீன் வானத்திலிருந்து விழுந்தது என்ற செய்தியை அப்பாடலிலிருந்து பெறமுடிகின்றது. இதனைக் கொண்டு வீழ்மீன், விழுந்த நேரத்தைக் கணிக்க இயலும்.

7.1. பகலிரவு காலங்களை அறியும் முறைகள்:

பழங்காலத்தில் நாழிகை வட்டில், குறுநீர்க் கன்னல் முதலானவற்றைக் கொண்டு பகலிரவுக் காலங்களைஅறிந்தனர். 'நாழிகைக் கணக்கர்' என்ற ஒருவர் அப்பணிக்காகச் செயல் பட்டார். மேலும், மக்கள் தம்நிழலை, அளந்து கணக்கிட்டும் 'துரும்பு, கொண்டும் பகற் காலங்களை அறிந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருநீளமான தேங்காய்நாரை எடுத்துக்கொண்டு அதில் சரிசமமாக முப்பது[13] முடிச்சிட்டுச் சூரியோதயம் தொடங்கிய உடன் அக்கயிற்றின் ஒரு நுனியில் தீயைப் பற்ற வைப்பர். காலம் தெரிந்து கொள்ள விரும்பின போது எரிந்த முடிச்சு களை நீக்கிவிட்டு எஞ்சியுள்ள முடிச்சுகளை எண்ணி அதன்வழி காலத்தை அறிவர். சான்றாக, பத்து முடிச்சுகள் எரிந்து விட்டன என்றால் அதனைப் பத்து நாழிகையாகக் கொண்டு அப்பகலில் சென்ற நாழிகை பத்து என்றும், செல்லவேண்டிய நாழிகை இருபது என்றும் அறிவர்.

இவ்வாறு பகலிரவுக் காலங்களை அறிய மேற்கூறப்பட்ட முறைகளன்றி வேறு முறைகளும் இருந்தன.

7.2. இரவு நாழிகை கணிக்கும் முறை கொண்டு வீழ்மீன் விழுந்த நேரத்தைக் கணக்கிடல்:

சோதிட வல்லுநர்கள் இராக் காலத்தைக் கணிக்கப் பிறிதொரு முறையைக் கையாண்டுள்ளனர். அம்முறையைக் கொண்டு வீழ்மீன் விழுந்த நேரத்தை அறிய இயலும். அம் முறையை,

> ''சித்திரைக்குப் பூசமுதல் சீர் ஆவணிக்கு அனுசம்
> அத்தனுசுக்கு உத்திரட் டாதியாம் – நித்தநித்தம்
> ஏதுச் சமானாலும் இரண்டே காலிற் பெருக்கி
> மாதமைந்து தள்ளி மதி''[14]

என்ற வெண்பா உணர்த்தும். இப்பாடலில் இடம் பெற்றுள்ள 'நித்தநித்தம் ஏதுச்சமானால்' என்ற தொடர் அன்றன்று இரவு நாழிகையை அறிந்து கொள்ள வேண்டுமெனில் வானத்தை நோக்கி, உச்ச மீனைத் தெரிந்து, அதன்பின்னர் நாழிகை கணக்கிட வேண்டுமென்ற கருத்தை வெளிப்படுத்து கிறது.

முதலில் உச்ச மீனைத் தெரிந்து கொண்டு அதன்பின் சித்திரை மாதம் முதல் ஆடி வரை என்றால் உச்ச மீனிலிருந்து பூசம் நட்சத்திரம் வரை கணக்கிடல் வேண்டும். ஆவணி மாதம் முதல் கார்த்திகை வரை என்றால் உச்ச மீனிலிருந்து அனுசம் நட்சத்திரம் வரை கணக்கிடல் வேண்டும். மார்கழி மாதம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதல் பங்குனி வரை என்றால் உச்ச மீனிலிருந்து உத்திரட்டாதி நட்சத்திரம் வரை கணக்கிடல் வேண்டும்.

இவ்வாறு பன்னிரண்டு மாதங்களையும் மூன்று பிரிவில் பொருத்தி, ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு நட்சத்திரம் வீதம் மூன்று நட்சத்திரங்களைக் குறித்துள்ளனர். முதலில் எந்த மாதத்தில் இரவு நாழிகையைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அன்றிரவு நிகழும் உச்சமீனை அறிந்து, அதன் பிறகு மேற்படி மாதத்திற் குரிய நட்சத்திரம் வரை எண்ணிக் கணக்கிட்டு அதனை இரண்டே காலிற் பெருக்கி மாதமைந்து கழித்து இரவு நாழிகையை அறிதல் வேண்டும்.

மேற்கூறப் பெற்ற பாடற் கருத்தைக் கொண்டு விண்மீன் விழுந்த நேரத்தைக் கணக்கிடலாம். கூடலூர் கிழார் தம் பாடலில் பங்குனி மாதம் பதினைந்தாம் நாள் இரவில் ஒருமீன் விழுந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

'சித்திரைக்குப் பூச முதல் சீர் ஆவணிக்கு அனுசம்
அத்தனுசுக்கு உத்திரட் டாதியாம் '' என்ற பாடலடி

களில் 'தனுசு' என்பது மார்கழி மாதத்தைக் குறிக்கும். மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய நான்கு மாதங்களில் இரவு நாழிகையைத் தெரிந்து கொள்ள விரும்பினால் உச்ச மீனி-லிருந்து மேற் கூறிய மாதங்களுக்குரிய நட்சத்திரமான உத்திரட்டாதி வரை எண்ணிக் கணக்கிடல் வேண்டும்.

கூடலூர் கிழார் பாடலில் உச்சமீன் உத்திரமாகும். உத்திரம் நட்சத்திரத்திலிருந்து உத்திரட்டாதி வரை எண்ணின் பதினைந்தாகும். இப்பதினைந்தை இரண்டே காலிற் பெருக்கினால் முப்பத்து மூன்றே முக்கால் ($33\frac{3}{4}$) கிடைக்கும். ''மாதமைந்து தள்ளி மதி'' என்ற அடியின்வழி, மார்கழி, தை, மாசி, ஆகிய மூன்று மாதங்களுக்கு உரிய எண்ணிக்கையான பதினைந்தையும், பங்குனியில் பதினைந்துநாள் ($\frac{1}{2}$மாதம்) கழித்து விட்டதால் அதற்குரிய இரண்டரையும் சேர்த்துக் கூட்டினால் பதினேழரை ($17\frac{1}{2}$) கிடைக்கும், மேற் குறித்த எண்ணிக்கையான முப்பத்து மூன்றே முக்காலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தினேழரைக்ய ($33\frac{3}{4}-17\frac{1}{2}=16\frac{1}{4}$) கழித்தால் கிடைக்கும் எண் பதினாறே காலாகும். ஆகையால் இரவு பதினாறே கால் நாழிகையில் அம்மீன் விழுந்துள்ளது எனக் கொள்ளல் வேண்டும்.

பகல் நாழிகை முப்பது, இரவு நாழிகை பதினாறே கால். ஆக நாற்பத்தாறே கால் நாழிகைக்குக் கூடலூர் கிழார் குறிப்பிடும் விண்மீன் விழுந்துள்ளது. இந்நாற்பத்தாறே கால் நாழிகைக்குச் (1 மணிக்கு $2\frac{1}{2}$ நாழிகை வீதம்) சரியான ஆங்கில நேரம் இரவு 12 மணி 30 நிமிடமாகும்.

இவ்வாறு வானத்தைப் பார்த்து நேரத்தைச் சொல்வதற்கு மாதமும் நாளும் உச்சத்தில் உள்ள விண்மீனும் இன்றியமையாததாகும். அத்துடன் வானம் மேகமூட்டமின்றித் தெளிவாக இருத்தல் வேண்டும்.

8. இவ்வாய்வின் மூலம் கீழ்க்கண்ட முடிவுகளைக் பெற முடிகிறது:

1 சோதிடர்களுக்கு வழங்கப் பெற்ற பெயர்களுள், ‘அறிவன்’ என்னும் பெயரைத் தொல்காப்பியர் குறித்துள்ளார். அவ்வறிவனை இளம்பூரணர், ‘கணியன்’ எனக் குறிப்பிட்டுள்ளார். அக்கணியனைப் புறப்பொருள் வெண்பா மாலை சோதிடன்’ என்று உணர்த்தியுள்ளது.

2 அக்காலச் சோதிடர்கள் பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தை நோக்கிப் புதிய வானியல் கருத்துகளை வழங்கினர். தற்காலச் சோதிடர்கள் இம்முறையைப் பின்பற்றுவதாக அறிய இயலவில்லை.

3 வானில் விளங்கும் அசுவினி, பரணி உள்ளிட்ட இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் தனித்தனிக் குறியீடுகள் உண்டு. அக் குறியீடுகளை வீமேசுர உள்ளமுடையான், சோதிட கிரக சிந்தாமணி முதலான சோதிட நூல்கள் குறித்துள்ளன.

4 வானத்திலிருந்து மீன் விழுதலைத் தீய நிமித்தமாகத் தமிழிலக்கியங்கள் குறித்துள்ளன. இதற்கேற்பச் சோதிட நூல்களும் மீன்விழுதலினால் தீயபலன்களே நிகழுமென்று காட்டியுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5 சூடாமணி உள்ளமுடையான் குறித்துள்ள (ஆடுகயல்) எனத் தொடங்கும் பாடலில் மாதங்கள் இராசிப் பெயரால் குறிக்கப் பெற்றுள்ளன. எனவே, மாதங்களை இராசிப் பெயரால் வழங்கும் வழக்கம் இருந்திருக்கலாம் எனக் கருத முடிகின்றது

6 சோதிட நூல்கள், பங்குனி மாதத்தில் நட்சத்திரம் விழுமாயின் அந்நாட்டு அரசனுக்குத் தீங்கு வருமென்று குறித்துள்ளன. புறநானூற்றுப் புலவரான கூடலூர் கிழார் பாடிய பாடலை (229) அக்கருத்திற்குச் சான்றாக்கலாம். பங்குனி மாதத்தில் ஒரு மீன் விழுந்ததன் பயனாக, கோச் சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற அரசன் இறந்தவிட்டான் என்ற கருத்தை அப்பாடல் குறிப்பிட்டுள்ளது.

7 அக்காலத்தார் பகலிரவுக் காலங்களை அறிந்து கொள்ள பல வழிகளைக் கையாண்டனர். இரவு நாழிகையைக் கணிக்கச் சோதிட நூல் 'உச்ச நட்சத்திரத்தை' முதன்மைப்படுத்துகிறது ஏனவே, உச்ச நட்சத்திரத்தைத் தெரிந்து கொண்டால் இரவு நாழிகையை அறிந்து கொள்ள இயலும். கூடலூர் கிழார் பாடலில், 'உத்திரம்' உச்ச நட்சத்திரமாகக் குறிக்கப்பட்டிருப்ப தால் வீழ்மீன் விழுந்த நேரம் இரவு பதினாறேகால் நாழிகை. யாகும். இதற்குச் சரியான ஆங்கில நேரம் இரவு 12 மணி 30 நிமிடம்.

8 வான வட்டத்தை மேடம், இடபம் முதலான பன்னிரு பாகமாகப் பிரித்து வழங்குதலும், இருபத்தேழு நட்சத்திரங்களை ஒரு இராசிக்கு இரண்டேகால் வீதம் கணக்கிடுதலும் அக்கால வழக்கில் இருந்தன என்பதைக் கூடலூர் கிழார் பாடல் தெரிவிக்கின்றது. அம்முறை இன்றளவும் சோதிடத் துறையில் பயன்பாட்டிலுள்ளது.

9 கூடலூர் கிழார் பாடலுக்கு உ.வே.சா எழுதியுள்ள குறிப்புரையைக் கொண்டு, 'ஆடுகயல்' எனத் தொடங்கும் பாடலின் முழுவடிவத்தையும் அப்பாடல் இடம் பெற்றுள்ள நூலின் பெயரையும் அறிய முடிந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கோள்

1 தொல். பொருள். புறத் 20.

2 இளம்பூரணர், உரைப்பகுதி, தொல். பொருள். புறத். 20

3 புறப்பொருள் வெண்பா மாலை, வாகைப்படலம், 174

4 பாரதியார் கவிதைகள், பலவகைப்பாடல்கள் 1 நீதி-புதிய' ஆத்திசூடி

5 வே. மீனாட்சி சுந்தர முதலியார் (பதி.ஆ). சோதிட கிரக சிந்தாமணி என்னும் பெரிய வருசாதி நூல், பக் 95, 96.

6 புறநானூறு; 41 : 4

7 சிலப்பதிகாரம், 20 வழக்குரை கதை 11,12.

8 ஆசாரக் கோவை, பாடல் 51:1

9 நெல்லை சு. முத்து அவர்கள் இதழ் ஒன்றில் 'இலக்கியத்தில் வானவியல் கலை' என்ற தலைப்பின் கீழ் கூறியவையாகும். தனித்தாளாக ஆய்வாளருக்குக் கிடைத்ததால் ஏனைய குறிப்புகளைக் குறிக்க இயலவில்லை. மேலும், இவ்வறிஞர் 'வானத்தை அளப்போம்' என்ற தம்நூலில் 'எரிநட்சத்திரங்கள்' பற்றி (பக். 122,123) புதிய செய்திகளைக் கூறியுள்ளார்.

10 மண்டல புருடர், சூடாமணி உள்ள முடையான், செய்யுள்

11 சுந்தரானந்தர், சோதிட முகூர்த்த சிந்தாமணி, செய்யுள் 375, ப. 351.

12 புறநானூறு, 229 : 1-22.

13 பகல்நாழிகை முப்பது என்பதால் முடிச்சுகள் தேவையாயின.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பு

'வீழ்மீன்' என்ற தலைப்பில் தமிழ்ப் பொழிலில் (டிச - ஜன 1989-90) ஆய்வாளரால் சுருக்கமாக எழுதப்பட்ட கட்டுரையே பலதரவுகள் கிடைத்தபின் இங்கு விரிவாக எழுதப்பட்டுள்ளது. அக்கட்டுரையில் வீழ்மீன் விழுந்த நேரத்தைக் கணிக்க உச்ச நட்சத்திரமான உத்திரத்தை நீக்கி எண்ணி நேரம் குறிக்கப் பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு நீக்கி எண்ணுதல் கூடா தென்றும், சோதிட நூற் கருத்தின்படி எண்ண வேண்டிய நட்சத்திரத்தை எண்ணும் போது, அந்த நட்சத்திரத்தையும் சேர்த்து எண்ணுதல் வேண்டும் என்ற செய்தியும் பின்னர் தெரிய வந்தது. எனவே இக்கட்டுரையில் வீழ்மீன் விழுந்த நேரத்தைக் கணக்கிட உத்திர நட்சத்திரமும் சேர்த்து எண்ணப்பட்டு நேரம் கணக்கிடப்பெற்றது. ஆதலால் வீழ்மீன் விழுந்த நேரம் இரவு 12மணி 30நிமிடம் என்பது சரியே ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆன்மிகச் சிந்தனையில் பாரதியும் ஸ்ரீ அரவிந்தரும்

ச. சுப்புரத்தினம்

பாரதியாரும் ஸ்ரீஅரவிந்தரும் விடுதலைப் போராட்ட இயக்கக் காலத்தில் மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டும் வண்ணம் எழுதிய எழுத்தாளர்கள். அவ்விரு-வரும் ஆன்மீகச் சிந்தனையில் ஈடுபட்ட விதம், இந்திய மரபில் ஆன்மிகத்தின் பங்கு, கோவில் வழிபாடு, மறு பிறவிக் கொள்கை, இல்லறம், துறவறம் பற்றிய கொள்கைகள் போன்றன இக்கட்டுரையில் ஆராயப் பெற்றுள்ளன.

இன விடுதலைக்காகவும் தேசிய விடுதலைக்காகவும் சமதர்ம சமுதாயத்திற்காகவும், அறியாமை இருளைப் போக்கு வதற்காகவும் பொருளாதார ஆன்மிக இருளைப் போக்குவதற் காகவும் பாடிய கவிஞர்கள் உண்டு. இவற்றோடு மட்டுமன்றிச் சிறந்த பத்திரிகையாளர்களாவும் இருந்து தத்தம் பங்கினைச் செவ்வனே செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாகப் பாரதியையும் ஸ்ரீஅரவிந்தரையும் சுட்டலாம்.

பன்மொழி அறிவுடையவர்களாயிருந்த இவ்விருவரும் இந்திய விடுதலைப் போரில் முற்றிலும் தங்களை உட்படுத்திக் கொண்டவர்கள். விடுதலைப்போருக்கு வேண்டிய கூறுகளுள் ஒன்றாக ஆன்மிகக் கருத்துகளையும் கருதிய இவர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரும்பாலும் தத்தம் பிற்கால வாழ்வில் ஆன்மிகச் சிந்தனைகளில் ஈடுபட்டார்கள்; அதனை அறிவுலகுக்குத் தவறாது வெளிப்படுத்தவும் முன் வந்தார்கள். அவ்விருவரின் ஆன்மிகச் சிந்தனைகளை அறிமுகம் செய்கிறது இக்கட்டுரை.

ஆன்மிகம்:

ஆன்மிகம் என்ற சொல் தெய்விகத் தொடர்பான வழக்கில் உள்ளது ''ஆன்மா'' உயிர்ப்பது என்னும் பொருளுடையது. 'அன்' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இது உயிர் என்னும் பொருளுடைய பிராணன் என்னும் சொல்லுடன் தொடர்புடையது. ஆன்மாவை வடமொழியில் 'ஆத்மா, என்பர் இந்தச் சொல் இருக்கு வேதத்தில் ஏறக்குறைய முப்பது முறை பலபொருளில் வந்துள்ளது. பொதுவாக ஆன்மா என்பது உடலினின்று வேறுபட்டதும், உடல் இறந்தபிறகு உள்ளதும், உடல் போனபின் அது முன்னர் பூமியில் செய்த செயல்களின் பலன்களைத் துய்ப்பதுமான மனித ஆவியையே குறிக்கின்றது. உபநிடதங்களிலும் ஆன்மா இந்தப் பொருளிலேயெ ஆளப்பட்டிருக்கிறது. சில வேளைகளில் இது உபநிடதச் சொல்லான பிரமம் என்பதற்கு மாற்றுச் சொல்லாக வந்துள்ளது, அப்பொழுது இதன் பொருள் உலகத்தின் மூலதத்துவம் என்பதாகும்'' (வாழ்வியற் களஞ்சியம்: ப. 767).

தெய்வத்துடன் தொடர்புடையவற்றைத் 'தெய்விகம் எனக் கூறுவது வழக்கு. அதுபோன்று ஆன்மாவுடன் தொடர்புடையனவற்றை விளக்குவது ஆன்மிகம் எனக் கூறுதல் பொருந்தும்.

ஆன்மிகத்தின் இன்றியமையாமை பற்றி ஸ்ரீஅரவிந்தர்

இந்தியாவிற்கு மூலமாக உள்ளது ஆன்மிகம் என்றும் இந்தியாவில் எந்தப் பெரிய தேசிய மறுமலர்ச்சிக்கும் பின்னால் ஓர் ஆன்மிக இயக்கம் இருக்கும் என்றும் மனிதனின் மைய ஜீவனான அந்தராத்மா விழிப்புறும் போதுதான் இந்தியனுக்கு அவனுடைய முழுச்சக்தியும் வெளிப்படுகிறது என்றும் கருதுகிறார். மேலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக்க ரீதியான எல்லா இயக்கங்களின் தலைவர்களும் ஒரு சந்நியாசி அல்லது யோகியிடமிருந்தே அருளூக்கம் (inspiration) பெற்றுள்ளனர். மராட்டிய சக்திக்குப் பின்னால் குரு நானக்கும் குரு கோவிந்தரும் இருந்ததையும் சுட்டிக் காட்டி நேற்றைய இந்தியாவில் கூட வங்காளத்தின் உதாரணம் உள்ளதையும் சுட்டுகிறார் ஸ்ரீஅரவிந்தர் (இந்தியாவின் ஆன்மா, ப. 13).

ஆன்மிகமும் இந்திய மரபும்:

இந்திய ஆன்மிக மரபு பழங்கால இந்தியச் சமூக இயக்கத்தில் தொடர்ந்து அளவற்ற செல்வாக்கினைச் செலுத்தி வந்துள்ளது. எந்தவொரு மானிட எழுச்சிக்கும், அதன்பின் ஏற்படும் வலுவான மாற்றத்திற்கும் ஆன்மிக மரபின் ஆதரவு வேண்டப்பட்டது. விடுதலை இயக்கக் காலத்தைப் பொறுத்தவரை இந்தியா ஆங்கிலேய ஆதிக்கத்தி-லிருந்து விடுதலை பெற, இந்தியாவில் உள்ள பல இனத்தவரிடையேயும் ஓர் ஒருமித்த உணர்வை உருவாக்க இந்திய ஆன்மிக மரபில் முதலில் வேதங்களும் அடுத்து பகவத் கீதையும் உந்து சக்திகளாகப் பல தேசிய வாதிகளால் பயன் படுத்தப்பட்டன.

அவ்வாறே இந்திய இனத்தாரிடையே சீர்குலைவு ஏற்பட்டமைக்குக் காரணம் சாதிக் கொடுமைகள், அறியாமை, உள்நாட்டு வெளிநாட்டு அடக்கு முறைகள் போன்றவைதான். இவற்றால் இந்தியர் அனைவரும் வலுவிழந்து நின்றனர். இத்தகு நிலையிலிருந்த இந்தியர்களை, குறிப்பாக அக்கால இளைஞர்களை அறிவூட்டி, வீறுகொண்டு எழத் தூண்டியவர்கள் பலர். அத்தகையோரில் குறிப்பிடத் தக்கவர்களாக இராமகிருஷ்ணபரமஹம்சர், விவேகானந்தர், சுப்பிரமணிய சிவா, பாரதியார், ஸ்ரீஅரவிந்தர் போன்றோரைச் சுட்டலாம்.

இவ்வாறு வளர்ச்சி பெற்ற இந்திய ஆன்மீக மரபில் உபநிடதங்கள், பிரம்ம சூத்திரங்கள், பகவத்கீதை ஆகிய இம் மூன்றும் முக்கிய ஆதாரங்கள் எனப் பொருள்படும் 'பிரஸ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தானத்ரயம்' எனப்பட்டது. ஒரு கால கட்டத்தில் இம் மூன்றிற்கும் விரிவுரைகளைத் தத்தம் நோக்கில் கண்டு அமைக்கப்பெற்ற தத்துவங்களே சங்கரரின் அத்வைதமாகவும், இராமானுசரின் விசிஷ்டாத்வைதமாகவும் மத்வரின் துவைதமாகவும் மலர்ந்துள்ளன. ஞானமும் பக்தியும் ஒருங்கே கொண்டது, விஷிஷ்டாத்வைதம். இக்கொள்கைகளைக் கொண்டு ஸ்ரீஅரவிந்தர் கூறுவதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பொருத்தமுடையது.

ஸ்ரீ அரவிந்தர், கூறகிறார்: "நான் ஒருபோதும் பக்திக்குத் தடைவிதித்ததில்லை; எந்தக் காலத்திலும் தியானத்தைத் தடை செய்ததாகவும் நினைவில்லை. சங்கரரோ சைதன்யரோ செய்ததைப் போல அவற்றில் ஒன்றுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்காவிடினும் எனது யோகத்தில் கர்மத்தைப் போலவே பக்தியையும் ஞானத்தையும் வற்புறுத்தியிருக்கிறேன்'' (யோக விளக்கம், பாகம். 1, ப. 64). எனவே, இவரை விசிஷ்டாத்வைதி எனல் பொருத்தம். அதே ஞான நெறியிற் சென்று சக்தி, நாராயணன் வழிபாடுகளில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த பாரதியையும் விசிஷ்டாத்வைதத்தில் பிடிப்புடையவர் என்பதில் தவறில்லை.

ஆன்மிகச் சிந்தனைப் படி :

ஸ்ரீ அரவிந்தர் 1904ஆம் ஆண்டுதான் முறையாக யோகம் பயிலத் தொடங்கினார் என்றாலும், யோகம் என்பதைப் பற்றித் தாம் தெரிந்து கொள்வதற்கு முன்னமேயே அவருக்கு அநேக ஆன்மானுபவங்கள் ஏற்பட்டிருந்தன. 1892 ஆம் ஆண்டு இலண்டனில் உபநிடதங்களைப் படித்துக் கொண்டிருக்கையில் மனத்தளவில் ஆன்மானுபவம் கிட்டியது. பின் 1893 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இங்கிலாந்திலிருந்து பாரதம் திரும்பிய அவர் பம்பாயில் அப்பாலோ பந்தரில் பாரத மண்ணை மிதித்தார். அது முதற் கொண்டுதான் தான் ஞான உலகில் அடியெடுத்து வைத்ததாகக் கூறும் அவர்,

> "நான் பம்பாயில் அப்பாலோ பந்தரில் இந்திய மண்ணில் அடியெடுத்து வைத்தது முதல் எனக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆத்மீக அனுபவங்கள் ஏற்பட ஆரம்பித்தன. ஆனால் அவை இவ்வுலகிலிருந்து தொடர்பு அறு பட்டவை அல்ல; இவை இவ்வுலகுடன் உள் தொடர்புகள் உள்ளனவாகவே உள்ளன. அண்ட வெளியை ஊடுருவிப் பரந்திருக்கும் எல்லையற்ற பரம்பொருள் ஒன்றுள்ளது. அது சடப் பொருள் களையும் கோணங்களையும் தன் குடியிருப்பாகக் கொண்டுள்ளது. இதைப் போலவே தான் ஆத்மானுபவங்கள் இவ்வுலகுடன் தொடர் புடையனவாகவே உள்ளன. அதே சமயத்தில் இச்சட உணர்வு நிலையின் மீது தன் செல்வாக்கைச் செலுத்துவதும் சில விளைபயன் களை உண்டாக்குவதுமான பூதவுலகம் கடந்த சூக்கும உலகிலும் அதைச்சார்ந்த ஞான உலகங்களிலும் நான் நுழையக் கண்டேன்'' (ஸ்ரீ அரவிந்தர், ப. 17.)

அப்பொழுது தொடங்கிய ஆன்மிக நாட்டம் 1910 ஆம் ஆண்டு வலுப்பெற்றது. அதே ஆண்டு அவர்தம் உள்ளத்தில் எழுந்த குரலைக் கேட்டுப் புதுச்சேரி சென்று அங்கு தீவிர யோக சாதனையில் ஆழ்ந்தார். பின்னர் 1914 ஆம் ஆண்டு வெளிவரத் தொடங்கிய 'ஆரியா' எனும் மாத இதழில் தன் எழுதிய எழுத்துகளின் வழியாகத் தன் அனுபவங்களை வெளி-யிட்டார். இத்துடன் ஸ்ரீ அன்னை 1920 ஆம் ஆண்டு ஆசிரமத்தில் சேர்ந்தார். இதுவும் ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிகச் சிந்தனைக்கான ஒரு முனைப்புத் தன்மையை ஏற்படுத்தியது. இதன் வளர்ச்சி நிலையில் 1926ஆம் ஆண்டில் அதிமனம் (Overmind) என்னும் உயர்ந்த உணர்வு நிலையை எட்டி அதன்மீது சித்தி அடைந்தார். அதுவே Supermind என்னும் பேருணர்வுநி லையின் புதியதொரு சக்தி வெளிப்படுவதற்கு வழி ஏற்படுத்தித் தந்தது.

இலண்டனில் துவங்கிய ஆன்மானுபவம் இந்தியா வந்த பின் பரோடாவில் அவர் சென்று கொண்டிருந்த கோச்சு வண்டி கவிழப் போகும் தறுவாயில் அவருக்குள்ளேயிருந்து தெய்வம் வெளிப்பட்ட காட்சி, காஷ்மீரில் தாக்தே சுலைமான் மலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளிம்பில் அவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது அனந்தப் பாழ் வெளி அனுபூதியானது, நர்மதைக் கரையில் ஒரு கோயிலில் காளியின் சாந்நித்தியத்தை உணர்ந்தது போன்ற இவ்வனுபவங்கள் எல்லாம் எதிர்பாரா வகையில் வந்தவையே.

ஸ்ரீ அரவிந்தரைப் போலவே வருவதை முன்னரே அறியும் Extra sensory perception எனும் உணர்வினைப் பாரதியாரும் பெற்றிருந்தார். புதுவையில் ஒரு முறை புயல் காற்று வீசிய போது, அவரது வீட்டிற்கு அழிவு நேரப்போவது உறுதி என உணர்ந்து, வேறு வீட்டிற்குப் பெயர்ந்தபின் அவர் எண்ணியது போலவே பாரதியாரின் பழைய வீடு சேதமடைந்தது. ஆன்ம சிந்தனைப் பயிற்சி இவ்விருவருக்கும் இருந்தமையால் பாரதியும் ஸ்ரீ அரவிந்தரும் இந்தியா விடுதலை அடையப் போவதை முன்னரே அகக்காட்சியாகக் கண்டு வெளிப் படுத்தினர். ஸ்ரீ அரவிந்தர் 1936 ஆம் ஆண்டிலேயே சுதந்திரம் வந்துவிடும் என, அதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னரேயே அறிவித்தார். ஆனால் சில அரசியல் சிக்கல்களினால் 1947 ஆம் ஆண்டு தான் பாரதம் விடுதலை அடைந்தது.

விடுதலை உறுதியைப் பாரதியார்,
"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
(சுதந்திரப்பள்ளு[1])"

என்றவாறு பாடுகிறார். பாரதியார் இப்படிப் பாடியதையும், ஸ்ரீ அரவிந்தர் பாரதம் விடுதலை பெறப் போவதைக் கூறியதையும் வெறும் யூகமாகச் சொன்னதாகக் கொள்ளலாமே என்ற கேள்விக்கு இதற்குமுன் கூறப்பட்ட முன்னரே உணர்ந்த நிகழ்ச்சிகள் விடையாக அமைகின்றன.

ஸ்ரீஅரவிந்தரைப் புதுவையில் சந்தித்தது முதல் பாரதியாரின் கவிதைகளில் ஸ்ரீ அரவிந்தரின் பூரணயோகக் கொள்கை பிரதிபலிக்கலாயிற்று. மண்ணுலகில் விண்ணுலகை அமைத்தல், மனிதனின் சாகா நிலை போன்ற கருத்துகளைப் பாரதியின் உள்ளம் முழுமையாக ஏற்றுக் கொண்டது என்பது பொருந்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கிருத யுகத்தைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்"

என்று கூறுமளவிற்கு அந்த இலட்சியத்தில் ஈடுபட்டார் பாரதியார். மனிதனை அமரனாக்கும் முயற்சியில்,

தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவீர் நீரே

என்ற அடிகள் மூலம் ஈடுபடுகின்றார்.

பாரதியார் புதுவைக்கு வந்த பின்னுள்ள எழுத்துகளில் ஆன்மிகச் சிந்தனைகள் மிகுந்துள்ளன. பாரதியார் 1912ஆம் ஆண்டு கீதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் படைத்த ஆன்மிகத் தொடர்புடைய படைப்புகளாக,

(1) குயில்பாட்டு

(2) ஞானரதம்

(3) பகவத் கீதைக்கான விளக்கம்

(4) பத்திரிகைகளில் எழுதியவற்றில் உள்ள ஆன்மிகக் கருத்துக்களான,

அ மாதர்களைப் பற்றிய ஸ்வாமி விவேகானந்தரின் அபிப்ராயம் — சுதேசமித்திரன் — 1920.

ஆ. 1906–ஆம் ஆண்டு 'சக்கரவர்த்தினி' மாத இதழில் ஸ்ரீமத் விவேகானந்த பரமஹம்சர், எனும் தலைப்பில் எழுதத் தொடங்கிய கட்டுரை (முற்றுப் பெறாதது)

என்பனவற்றைக் குறிப்பாகச் சுட்டலாம்.

ஸ்ரீ அரவிந்தரும் 1919–ஆம் ஆண்டுக்குப் பிறகு மிகுதியாக எழுதினார். அவரது படைப்புகளுள்,

(1) யோகமும் அதன் நோக்கங்களும்

(2) கீதைப் பேருரைகள்

(3) யோகம் சில ஒளிகள்

(4) தெய்விக வாழ்க்கை

(5) அக்கினி சூக்தங்கள்

(6) சாவித்திரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்றவற்றில் தனது உயர் சிந்தனைகளை ஸ்ரீஅரவிந்தர் மிகுதியாக வெளிப்படுத்தியுள்ளார்.

கோவில் வழிபாடு:

கோவில் வழிபாடு என்பதைப் பொறுத்த வரையில், ஆத்ம ஞானம் பெறக் கோவில் சென்று வணங்கத்தான் வேண்டும் என்ற கருத்தைப் பாரதி கொண்டிருக்கவில்லை. கோவிலானது அனைவரும் ஒன்று கூடி ஆன்ம ஒருமையை நிலை நாட்ட ஏற்ற இடம் என்றும், உண்மையில் ஒவ்வொரு மனிதனிடமும் தெய்வாம்சம் உள்ளமையால் அதனை மேலோங்கச் செய்தலே அவசியமென்றும் பாரதி கருதினார் என்பது வெளிப்படை. மாறாக, கோவில் சிலைகளில் மட்டுமே தெய்வாம்சம் உண்டென்றும் பூசாரிகளே தெய்வாம்சம் அல்லது தெய்விகத் தன்மை உடையவர்கள் என்றும் காட்ட முயலும் சமுதாயத்தை நோக்கி.

> ''கும்பிடுவோர் நித்திய அடிமைகளாகவும்
> தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால்
> நல்லது என்று பூசாரி யோசனை பண்ணுகிறான்.
> பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம்
> தெய்வாம்சம் ஏற்படாது!'' (பாரதியார் கட்டுரைகள்,
> தத்துவம், ப. 7)

என்ற தனது கருத்தை வலியுறுத்துகிறார் பாரதியார். அவர் உருவ வழிபாட்டை நபிகள் நாயகம் ஒழித்தமை குறித்து இஸ்லாத்தை மதிப்பதையும், உண்மை ஒளியாய் இருப்பதே இறை என்றும் அதைத் தன்னில் உணர்ந்து பூரணத்துவம் பெறுதலால் இப்பூமியிலேயே அமர நிலை எய்த முடியுமெனத் திரும்பத் திரும்பக் கூறியதையும் கவனத்தில் கொள்ளல் பொருத்தமாகும். மேலும், கண்ணன் மீதும் புதுவை மணக்குள விநாயகர் மீதும் காளியின் மீதும் பாரதிக்கு இருந்த பக்திக் கொள்கைக்கு இக்கருத்து முரண்படுவதைப் போலத் தோன்றினாலும், கண்ணனைக்கூட இயற்கை வழிபாட்டின் சின்னமாகத்தான் பார்த்தார் என்பதால் அம்முரண் சரியாகி விடுகிறது. கிருஷ்ணனின் 'எங்கும் நானே நிறைந்துள்ளேன்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற கோட்பாட்டைப் பாரதி மதித்தார் என்பதும் தெளி வாகிறது.

பாரதியார் 'வேலன் பாட்டில்' அதற்குத் தான் அளித்த விளக்கத்தில் ''வேலன் அல்லது சுப்பிரமணியக் கடவுள் என்பது ஆத்மாவில் வீர்ய ரூபமாகிய அக்நி தேவனுக்குப் பெயர்'' (அடிக்குறிப்பு, பாரதியார் பாடல்கள், ப. 648) என்று கூறி, வேலனுடன் ஆத்மாவைத் தொடர்புபடுத்துகிறார். தெய்வங் கள் பல என்னும் கொள்கையில் மாறுபட்டு அறிவு ஒன்றே தெய்வம் என்கிறார் (அறிவே தெய்வம், பாடல்: 1). அவர் மேலும் உள்ளொளியாகி நிற்கும் ஆன்மாவே பிரம்மன் என்று வேதம் கூறுவதையும் ஆதரித்து நம்மிடம் கூறுகிறார் (அறிவே தெய்வம்: 8). இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் என்ற எல்லா நிலைகளிலும் நின்று கண்ணன், வேலன், அல்லா, ஏசு எனப் பல கடவுட் பாட்டுகளைப் பாடியுள்ளார். அறிவே தெய்வம் என்று முன்னர்க் கூறியதற்கு இச்செயல் மாறுபாடுடையதாகத் தோன்றினாலும், பல தெய்வ வழிபாடிருந்தாலும், மனிதருக்குள் ஒற்றுமையும் அமைதியும் வேண்டும் என்னும் கருத்திலேயே அறிவே தெய்வம் எனப் பாடினார் எனல் பொருத்தமுடைய தாகும். ஸ்ரீ அரவிந்தரோ பிற மதங்களைவிட இந்து மதத்தில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்தார்.

இல்லறம் துறவறம்:

கிருதயுகத்தை வரவேற்பதில் விருப்பங்கொண்ட பாரதி அனைவரும் அமரத்தன்மை எய்த வழிகாட்டும் சிறந்த வழியாக பகவத் கீதையைக் கருதி அதனை மொழிபெயர்த்து அதற்கான தனது முன்னுரையில், அக்கால பாரதத்தின் புறநிலைக் கொப்பப் பயன்படுத்தி அதனை வழிநடத்தும் விதத்தில் தான் முன்னுரை எழுதியுள்ள பான்மையை அதில் விளக்குகிறார்.

கால மாற்றத்தின் விளைவுகளை அதில் எடுத்துரைத்து உள்ளார். சான்றாக, துறவறம் பற்றிக் கூறும் பொழுது ''கீதை இல்லறத்தை பந்தத்துக்கு அதாவது தீராத துக்கத்துக்குக் காரணமென்றும் கூறும் வேறு சில துறவிகளைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போலச் சொல்லாமல் இரண்டும் ஒருங்கே மோட்சத்துக்குச் சமமான சாதனங்கள் என்று சொல்லியதே பெரிய ஆறுதலாயிற்று'' (பகவத் கீதை; பக். 40—41) என்கிறார். அதே வேளை இல்லறத்திற்கு அதிக அழுத்தம் கொடுக்கும் பாரதியார்,

> 'பற்றின்மையைப்பேணுவதாகக் கூறிக்கொள்வதை நகைத்து, சோம்பேறித்தனத்தைச் சுகமாக எண்ணுவதைச் சாடி, ''இவர்கள் கடமைகளைத் துறந்தனரேயன்றி இன்பங்களைத் துறக்கவில்லை. உணவின்பத்தைத் துறந்தார்களா? சோறில்லா விட்டால் உயிர் போய்விடுமே என்றால் அப்போது நீங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தொழில் செய்து ஜீவிக்க வேண்டும். ஆடையின்பத்தை இவர்கள் துறக்கவில்லை; ஸ்நான இன்பத்தைத் துறக்கவில்லை; தூக்கத்தைத் துறக்கவில்லை; கலவி யின்பத்தைத் துறக்கவில்லை வாதின்பத்தைத் துறக்கவில்லை; அவர்களில் முக்கியஸ்தர்களாகிய மடாதிபதிகள் பண இன்பத்தைத் துறக்கவில்லை. இவர்களுடைய போலி வேதாந்தத்தை அழிக்கும் பொருட்டாகவே பகவத்கீதை எழுதப்பட்டது'' (பகவத் கீதை ப. 50) என்கிறார்.

எனவே பாரதி இல்லறத்தைத் தாழ்வாகக் கருதவில்லை என்பதும், அத்துடன் துறவறத்தை உயர்வாகவும் கருதவில்லை என்பதும் புலனாகிறது. இது, பாரதி இந்திய விடுதலைப் போரிலும், சமுதாயச் சீர்திருத்தத்திலும் கொண்டிருந்த ஆர்வத்தைப் பொறுத்ததாகவே இருந்தது என்னும் கருத்தை வலுப்படுத்துகிறது.

பாரதியின் இக்கருத்திலிருந்து மாறுபட்ட ஸ்ரீ அரவிந்தரோ துறவம்சமின்றிப் பூரணமான உயர்ந்த நாகரிகம் இல்லை என்கிறார் (இந்தியாவின் ஆன்மா: ப. 16). மேலும், அவர் துறவு என்பது சுக போகங்களை இழந்து கீழ்மையான தூண்டல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களிலிருந்து விடுபட்டு மேல் நிலைக்கு உயர்தல் என்கிறார். ஸ்ரீ அரவிந்தரின் நெருங்கிய சீடரான ஸ்ரீ அன்னை கூட ஸ்ரீ அரவிந்தரின் இக்கொள்கையிலிருந்து வேறுபட்ட போதிலும் அதற்காகத் தன் கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை ஸ்ரீ அரவிந்தர். ஸ்ரீ அன்னையைப் போலப் பாரதியும் சமதர்ம சமுதாயத்தை வேண்டினார். ஆனால், ஸ்ரீ அரவிந்தரோ இக் கொள்கையில் நாட்டங் கொண்டதைவிட ஆன்மிகத்தில் அதிக நாட்டங்கொண்டார்.

துறவுக் கொள்கையைப் பற்றி மேலும் கூறும் அவர், இந்தியாவில் துறவு என்பது எல்லாம் துன்ப மயம் என்னும் புலம்பல் கொள்கையுமன்று; மாறாக உயர்ந்தோர் இன்பம் எய்தவும், சீரிய ஆன்ம வாழ்வைப் பெறவும் செய்யும் நல்ல முயற்சியே அது என்று நம்புகின்றார். ஸ்ரீ அரவிந்தர் துறவின் வழி

(1) தன்னை வெல்லும் பேரின்பம்

(2) உட்சாந்தி இன்பம்

(3) அமர நிலையிலிருக்கும் இன்பம்

என்ற இம்மூன்று வகை இன்பங்களை அனுபவிக்கலாம் என்ற நம்பிக்கையினின்றும் அவர் நழுவவில்லை. இவற்றிற்கெல்லாம் காரணங்கள் இங்கிலாந்திலிருந்த போதிருந்த அவரது மனநிலை, பின் இந்தியா திரும்பிய போது இருந்த விடுதலைப் போராட்ட நிகழ்வுகளால் ஏற்பட்ட மன உளைச்சல், சிறை வாசத்தின் பொழுது தன் அருமை மனைவி மிருணாளினியைப் பிரிந்திருந்த பிரிவு, இறுதியாகச் சிறை வாசத்திற்குப் பின் அமைதி ஏற்பட்டு அதன் வழி அடைந்த மாற்றம் என இவையே ஆகும். எனவே, ஸ்ரீ அரவிந்தர் துறவு வாழ்க்கையே மேம்பாடுடையது என்ற எண்ணத்துடன் பரிணமித்தார்.

மேலும், துறவு வாழ்க்கையைச் சிலராலேயே பின்பற்ற முடியும் என்பதைக் கூறும் ஸ்ரீ அரவிந்தர் துறவு என்பதனை உடல் மற்றும் உள்ள உணர்வுகளின் மிகுந்த தூய்மையுடைய பகுதி என்ற நிலையிலேயே காண்கிறார். இத்துறவினையே சற்று மேல் நோக்கிச் சிந்தித்துப் பார்த்த அவர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"துறவு இலட்சியமே மனித வாழ்வாகிய பிரச்சினைக்குத் தீர்ந்த முடிவு என்பதைத் தான் ஏற்கவில்லை என்றும், ஆனால் அளவுக்கு மீறிய துறவு முறைகளில் கூட மேலை நாட்டுப் பண்பாட்டினுடைய, ஒரேயடியாக உயிர் ஆசைகளில் மூழ்கி விடும் போக்கைவிட ஓர் உயர்ந்த நோக்கம் இருப்பதைக் காணலாம்." (இந்தியாவின் ஆன்ம : ப. 17) என்றும் கூறுகிறார்.

ஸ்ரீ அரவிந்தர் அளவுகடந்த ஆசையினையும் மனித இன்பத்திற்குத் துன்பம் தருவனவற்றுள் ஒன்றாகிய 'ஆசை' என்பதனோடு ஒப்பிட்டுக் கண்டு தான் உணர்ந்திருந்தமையை யும் விளக்குகின்றார். எனவே. இறையொளியைக் காண்பதுடன் வேதத்தை நிலைநிறுத்துவதையும் ஒருங்கே செயல்பாட்டிற்குக் கொண்டு வருதலையும், உலக அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் மிகவும் வேண்டியனவாகவே ஸ்ரீ அரவிந்தர் எண்ணினார் எனக்கருதுதல் பொருந்துகிறது.

மறுபிறவிக் கருத்து:

பாரதி, ஆன்மிக நாட்டம் மிக்கவரான ஸ்ரீ அரவிந்தருடன் தொடர்பு கொண்டிருந்த புதுவையில் வாழ்ந்து வந்த நாட்களில் 'குயில் பாட்டி'னை எழுதினார். குயில் பாட்டில் ஓர் உயிர் மறுபிறவி எடுப்பதையும் ஈருயிர்கள் ஒன்று கலப்பதில் இறையின்பம் காண்பதையும் விளக்குகிறார்.

குயில் பாட்டில் வரும் குயிலி ஒருநாள் மாலை தன் தோழியருடன் உலா வருவதைக் கண்ட சேர மைந்தன் அவள் பால் மையல் கொண்டான். அவளும் அவனிடம் மாமோகம் கொண்டுவிட்டாள்.

"நின்னையவன் நோக்கினான்; நீ அவனை நோக்கி
நின்றாய்
அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்து விட்டீர்",
(குயில்பாட்டு, அடி: 276

என்று முனிவர் கதையைத் தொடர்ந்து கூறினார். பின் இளவரசன் குயிலியைத் தழுவி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"வேதநெறியில் விவாகமுனைச் செய்து கொள்வேன்
மாதரசே!" என்று வலக்கை தட்டி வாக்களித்தான்
(பூர்வஜன்மக்கதை உரைத்தல்: 294)

சிறிது நேரங்கழித்து அங்கே வந்த மாடனும் குரங்கனும் ஒருவனை ஒருவன் நோக்காது வாள்கொண்டு இளவரசனை வெட்டவே, அவனும் திரும்பி வாளுருவி வீச்சிரண்டில் அவரை வீழ்த்தினான். அவ்விருவரும் பிணமாயினர். இளவரசன் மரண வாயிலிலும் குயிலின் மடியிலும் இருக்கையில்,

"பெண்ணே, இனி நான் பிழைத்திடேன்
ஆவிதுறப்பேன். அழுதோர் பயனில்லை,
இன்னும் பிறவியுண்டு; மாதரசே இன்பமுண்டு;
நின்னுடனே வாழ்வினி நேரும் பிறப்பினிலே"
(அடிகள் : 321-22)

எனக் கூறிக் கண்மூடி உயிர் விட்டான் என்றவாறு பாரதி நடத்திச் செல்கிறார். மேலும், ஆன்மாவின் மறு உலகப் பயணத்தை,

"மாடனிங்கு செய்ததோர் மாயத்தால் இப்பொழுது
பீடையுறு புள்வடிவம் பேதையுணக் கெய்தியது"
(அடிகள் : 326)

என்று பொதியமலை முனிவர் குயிலுக்குச் சொல்வதுபோல் மொழிகின்றார்.

மறுபிறவி பற்றிய கருத்தில் நரகத்திற்குச் செல்லுதல் என்ற கருத்திற்கு வரும் பொழுது இந்த வாழ்வில் மரணத்திற்குப் பின் நரகத்திற்குப் போவார்கள் என்று புராணங்களில் கூறப்படுபவை மூட நம்பிக்கையின் பாற்பட்டவை என்ற கருத்துடைய ஸ்ரீ அரவிந்தர், ஆன்மாக்கள், செய்வினைகளுக் கேற்பச் சில பிராண, மன உலகங்களை அல்லது உணர்வியல் நிலைகளைக் கடந்து செல்கின்றன; பின் பூவுலகிற்குத் திரும்புகின்றன என்பது மட்டுமே உண்மை என்ற கருத்தினைக் கொண்டுள்ளார்.

அதேபோல சொர்க்கத்தைப்பற்றி கூறும்பொழுதும் ஒருவன் மரணத்திற்குப் பின் தான் செய்யும் நல்வினைகளுக்-கேற்பச் சிறிதுகாலம் அவன் ஒரு நல்ல நிலையில் இருக்கிறான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பது மட்டுமே உண்மை என்று கூறி, சொர்க்கமென்ற தனிப் பாகுபாட்டிற்கே ஸ்ரீ அரவிந்தர் செல்லவில்லை (பூரணயோகம், வினா விடை; ப. 21).

இவ்விரண்டிற்கும் பொதுவான மறுபிறவி என்ற ஒட்டு மொத்தக் கொள்கையைக் கர்மம் பற்றிய கொள்கையாகக் கூறுகிறார் ஸ்ரீ அரவிந்தர். மேலும், பிறவியை உருவாக்குவது ஆன்மாவே என்றும், அதற்கு ஓர் எதிர்காலம் உண்டென்றும் கூறுகிறார். நாம் செய்யும் கர்மமே நமக்கு அக, புறச் சக்தி களாக இருந்து பிறவிகளையும் அவை நிகழ்வதையும் நிர்ணயிக்கும் ஆற்றலாகும்; நமது தற்போதைய செயலின் தன்மை நமது உடனடி எதிர்காலத்தை மட்டுமின்றிப் பின் வரும் எதிர் காலத்தையும் நிர்ணயிப்பதால் அது அளவிட முடியாத முக்கியத்துவம் பெறுகிறது என்றும் (இந்தியாவின் ஆன்மா: ப. 34) கூறுகிறார் அவர். இக்கூற்றிலிருந்து அவர் கர்மத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவமும் பல பிறவி உண்டென்ற மனித நம்பிக்கை, நமது ஆன்மாவை வளர்க்க உதவுவதாக ஸ்ரீ அரவிந்தர் நம்புவதையும் வெளிப்படுத்துகின்றன.

அத்துடன், நமது தற்போதைய துன்பங்களெல்லாம் நமது பழைய வினைகளின் பயனே என்னும் கருத்து இந்திய மனத்திற்கு ஓர் அமைதியை, எதிர்க்காது இணங்குகின்ற, 'தெய்வச் சித்தப்படி நடக்கட்டும்' என்று கூறி விட்டுவிடுகிற பொறுமைக் குணத்தைக் கொடுத்துள்ளது என்றும் கூறி மறுபிறவிக் கொள்கையின் இன்றியமையாமையை வலியுறுத்தவும் ஸ்ரீ அரவிந்தர் தவறவில்லை. இம் மறுபிறவிக் கொள்கையால் மானுடம் நேர்வழி நடந்து செயலாற்றவும், தவிர்க்க இயலாது செய்து விட்ட தீய செயல்களுக்குப் பின் மன அமைதி பெற்று மேலும் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கும் வழி கிடைக்கும் என்றும் அதன்வழி பாரதத்தின் ஆன்மிக, மற்றும் இலௌகிக வாழ்க்கை முன்னேற்றம் எய்தி, அதனால் நாடு நலம் பெறும் என்றும் நம்பிக்கை கொண்டிருந்தார் ஸ்ரீ அரவிந்தர்.

இந்நோக்கில் மறுபிறவிக் கொள்கையை வரவேற்கும் ஸ்ரீ அரவிந்தர், 'சத்தியவான் சாவித்திரி' கதையைத் தழுவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சாவித்திரி' என்ற பெருங்காப்பியத்தைப் படைத்தார். அக்காப்பியம் சாவையும் விதியையும் மானிடம் வென்று மீண்ட செயலைச் சித்திரிக்கிறது. அக்காப்பியத்தில் அஸ்வபதி என்ற அரசன் மகளாகச் சாவித்திரியும் தியுமத்சேனன் என்னும் அரசன் மகனாகச் சத்தியவானும், முன்பொரு பிறவியில் சந்தித்த மங்கலான நினைவுடன் ஒன்று சேர்கின்றனர்; பின் மணம் புரிந்து கொள்கின்றனர். அதன்பின் ஓர் ஆண்டிலேயே சத்தியவான் மரணமடையச் சாவித்திரி மேலுலகம் செல்ல, வழியில் உள்ள பல உலகங்களில் மரண தேவன் உள்ளிட்ட பலரைச் சந்திக்கிறாள். இறுதியில் நித்திய உலகின் ஒளி வெள்ளத்தில் சூழ்ந்து இரகசியங்களுக்கு விடையளித்து சத்தியவானை மீட்டு வருவதாகப் படைத்துள்ளார் அவர்.

மறுபிறவிக் கொள்கையின் மறுபக்கம் நின்று காணும் பாரதியார்,

"செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதர் ... ..."
(சங்கு: 1-3)

என்று பாடி இப்பூமியில் இந்நாளிலேயே முக்தியடைதற் பொருட்டு தூய அறிவு நிலையில் களிப்பவரே தூய மனிதர் ஆவார் எனக் கூறுகின்றார். இக் கூற்றிலிருந்து மறுபிறவிக் கேற்ப இச்சமுதாயத்தில் தாம் செய்யப் போகும் நன்மை தீமைகளை வகுத்துக் கொள்வதை விட நல்லறிவு ஒழுக்கம் இவற்றால் சிறந்து, செம்மையான வாழ்க்கை வாழ முனைவதே பொருத்தமுடையது என்று அவர் கருதுவது வெளிப்படு கின்றது.

முடிவுரை:

1 பாரதியும் ஸ்ரீ அரவிந்தரும் தேச ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வேண்டிய வேதத்தை நிலை நிறுத்துவதையே தத்தம் முதற்கடமை என்று கருதினார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. இருவரும் தாம் கொண்டிருந்த ஆன்மிக நாட்டங் காரணமாக அதீத முன்னுணர்வு (Extra Sensory perception) பெற்று, அதனால் எதிர்கால நன்மை தீமைகளை மக்களுக்கு வரையறுத்துக் காட்ட முயன்றனர்.

3 பாரதியார் மோட்சத்துக்குச் சமமான வழியாக இருப்பனவாகவே இல்லறத்தையும் துறவறத்தையும் கருதினார். ஆனால், ஸ்ரீ அரவிந்தரோ, இவ்விரண்டில் துறவறத்தை மட்டுமே மிகுதியாக வலியுறுத்துகிறார். இதற்குக் காரணம், புதுச்சேரி வாசத்தின் போது ஸ்ரீ அரவிந்தர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டது, மற்றும் ஒரு சிறு வட்டத்தை மட்டுமே தன்னைச் சுற்றி ஏற்படுத்திக் கொண்டதும் ஆகும்.

4. மறுபிறவிக் கொள்கையினால் மனித இனத்திற்கு வாழ்க்கை மீதான நம்பிக்கையை ஊட்ட முடியுமெனப் பாரதியும் ஸ்ரீ அரவிந்தரும் ஒருங்கே நம்பினர்.

பயன்பட்ட நூல்கள்:

1 பாரதி பாடல்கள், ஆய்வுப் பதிப்பு, தஞ்சைப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், ஏப்ரல், 1987

2 இந்தியாவின் ஆன்மா, ச. மகாலிங்கம் (மொ. ஆ), ஸ்ரீ அரவிந்தாசிரமம், புதுச்சேரி-2, 1981

3 மகாகவி பாரதியார் கட்டுரைகள், வானதி பதிப்பகம், சென்னை-17, டிசம்பர், 1986.

4 பூரணயோகம்-வினா-விடை, ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அரவிந்தாசிரமம், புதுச்சேரி-2, 1988.

5 வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-2, தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர், செப்டம்பர், 1986.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழியின் இயக்கவியல்

ரா. செயராமன்

தானும் ஒரு பொருள் என்றாலும் மனித மனம் சார்ந்த அர்த்தத்துடன் இணைந்தே செயல்பட முடிவதால் மொழி தனித்துச் செயல்பட முடியாத ஒருபொருளாகிறது. இருந்தாலும், பிறபொருள்களுக்கான இயக்கவியல் விதிகள் மொழிக்கும் பொருந்தி வருகின்றன. மொழி செயல்படும்போது பொருள், பொருளின் அர்த்தம், மொழியின் அர்த்தம், மொழி என்ற நான்கும் ஒரே நேர்கோட்டில் நிற்பதும் மனதில் மொழியும் அர்த்தமும், குறியீட்டுக்கான மூலப் பொருளும் ஊடகமும் கட்டுரையில் விளக்கப் படுகின்றன.

மனம், உணர்வு, மொழி என்ற மூன்றையும் அடுத்தடுத்து ஒன்று ஒன்றுக்குள் ஊடுருவி உள்ளடக்கிய தளங்களாகத் தொடர்புபடுத்த முடியும். வேறுபட்ட புலன்களின் மூலம் பெறப்படும் உணர்வுகள் இயல்பாகவே உடலில், உடல் உறுப்புகளில் ஓரளவு வெளிப்படும் என்றாலும் உடலை, உடல் உறுப்புகளைச் செயல்படுத்துவதன் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற முயற்சி எழும்போது, மொழியும் தோன்றத் தொடங்கி விடுகிறது. மெய்ப்பாடு, பேச்சொலி, எழுத்து, சைகை, பிரெய்லி முதலான மொழியின் வேறுபட்ட குறியீட்டு வடிவங்கள் வேறுபட்ட மூலப் பொருள்களால் ஆக்கப்பட்டு வேறுபட்ட ஊடகங்கள் வழி எடுத்துச் செல்லப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழிக்கான குறியீடுகளோடு குறியீடுகளுக்கான மூலப் பொருளையும் மனிதனே உருவாக்க வேண்டியுள்ளது, அல்லது இயல்பாகவே உள்ள பொருளை மூலப் பொருளாகக் கொள்ள வேண்டியுள்ளது. மூலப் பொருளும் ஊடகமும் இயற்கையின் பொது வடிவங்கள் மனிதனுக்கு மட்டுமே உரியது குறியீட்டாக்கமே. உணர்வதற்கும் உணர்த்துவதற்கும் ஏற்ற ஏதாவது ஒரு பொருள் வடிவத்தைக் கொடுப்பதன் மூலமே மொழி தன்னளவில் தனித்து நின்று செயல்பட முடிகிறது.

குறியீட்டுக்கான மூலப் பொருளும் ஊடகமும் பிரிக்க முடியாதவை. குறியீடு, ஊடகம் சூழலாக இருக்கும்போதுதான் தோன்றுகிறது. ஊடகங்கள் ஊடுருவ முடியாத வேறு ஊடகங் களுக்கு அப்பால் அவ்வூடகங்களை ஊடகங்களாகக் கொண்ட குறியீடுகளும் ஊடுருவிச் செல்லா. பொருளின் இயக்கம் குறிப் பிட்ட வடிவம் பெறுதல் என்ற அடிப்படையில் மெய்ப்பாடு, சைகை மொழிக் குறியீடுகள் வெற்றிடத்தின் வழி அர்த்தங்களை எடுத்துச் செல்கின்றன. பிரெய்லி முறையில் குறியீடு விரலின் தொடு உணர்வு மூலம் அறியப்பட வேண்டியிருப்பதால், ஊடக மாக உணர்த்தும் பொருளும் உணரும் பொருளும் இருக்கின்றன. உராய்வாலோ, மோதலாலோ காற்றுச் சூழலில் ஒலி எழும் என்ற அடிப்படையில் பேச்சொலிக் குறியீடுகள் காற்றுவழி அர்த்தங்களை எடுத்துச் செல்கின்றன. பிரெய்லி முறைக்குப் பேச்சு மொழியும் சைகை மொழிக்கு எழுத்து மொழியும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டாலும், எழுத்து மொழிக்கும் பேச்சு மொழியே அடிப்படை என்பதால் பேச்சு வடிவ ஒலிக்குறியீடுகள் ஏனைய மொழி வடிவக் குறியீடு களுக்கு அடிப்படையாக அமைகின்றன.

மொழி உருவாகும் போது உணர்த்துபவர் அதை உணர்ந்து உருவாக்குவதோடு உணர்பவர் அதை உணர்த்துவதையும் உணர்ந்தே உருவாகிறது. குறியீடுகளை ஆக்குபவர் குறியீடு களை அர்த்தமாகத் தெரிந்தும் குறியீடுகளைப் பெறுபவர் அர்த்தத்தைக் குறியீடாகவும் ஆக்கத் தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டியுள்ளது. அர்த்தம் என்பது பொருள்களைப் பற்றி மனம் வேறுபட்ட புலன்களின் மூலம் உணர்ந்த உணர்வு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களின் தொகுதி. மொழி என்பது பேச்சு ஒலி, எழுத்துவரி, சைகை ஒழுங்கு முதலான, மனம் உணர்வுகளாக இல்லாத புலன்களால் உணரப்படுவனவாகவோ, புலன்களின் இயக்கத்தால் உருவானவைகளாகவோ இருப்பது. மனமும் உணர்வும் மனிதனுக்குப் புறத்தில் அர்த்தங்களை எடுத்துச் செல்லும் குறியீடுகளுக்கான மூலப்பொருளாகவோ, ஊடகமாகவோ இருக்க முடிவதில்லை. மூலப்பொருளையும் மூலப்பொருளிலிருந்து குறியீடுகளையும், உற்பத்தி செய்யவும் உடல் உறுப்புகளைக் குறியீடுகளாக்கவும் முடிந்தனவாக இருக்கின்றன. புறவயப்பட்ட மொழிக்கும் அகவயப்பட்ட உணர்தலின் வழிபட்ட அர்த்தத்திற்கும் உறவு எதுவுமில்லை. மனத்திற்குள் மொழிக்கும் அர்த்தத்திற்கும் அல்லது அர்த்தத்திற்கும் மொழிக்கும் இடையில் உள்ள உறவு உண்மையில் பொருளைப் பற்றிய உணர்தலுக்கும்; மொழியைப் பற்றிய உணர்தலுக்கும் இடையே உள்ள மரபு வழிப்பட்ட கற்பிதமான உறவே. மனத்தில் மொழி செயல்படுவது என்பது இருவேறு உணர்வுத் தளங்களுக்கு இடையில் உள்ள உறவு நிகழ்ச்சியே தவிர அர்த்தத்திற்கும் புலன்களின் வெளிப்பாடகவோ உணர்தலாகவோ இருக்கும் மொழிக்கும் இடையில் உள்ள உறவு அன்று. மனத்தில் ஒலி, ஒளி முதலானவற்றாலாகிய குறியீடுகள் அவ்வாறே இருக்க முடியாது; பொருளே அர்த்தமாக இருக்க முடியாது; பொருளைப் பற்றிய உணர்தலே அர்த்தமாக இருக்க முடியும். மொழிக் குறியீடுகள் பற்றிய உணர்வுகள் குறியீட்டு அர்த்தங்களாக இருக்கும். பொருள், அர்த்தம் என்ற இரண்டும் வேறுவேறு என்பது மொழிக்கும் பொருந்தும் என்பதால் மொழி ஊடகச் சூழலில் மொழி என்ற பொருளாகவும் மனச் சூழலில் மொழி என்ற அர்த்தமாகவும் இருக்கிறது.

அர்த்தங்களுக்கும் ஒலி, ஒளி முதலான வடிவிலாகிய குறியீட்டு மொழிக்கும் நேரடி உறவு இல்லை. பொருளின் அர்த்தம், மொழி என்ற இரண்டையும் இடையில் நின்று தொடர்புபடுத்துவது மனத்திற்குள் அடங்கிய மொழியின் அர்த்தமே. மொழியின் அர்த்தம் என்பது மொழியைப் பற்றிய புலனின் உணர்தல்கள். உடலிலிருந்து மொழி வெளிப்படும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போது பொருள், பொருளின் அர்த்தம், மொழியின் அர்த்தம், மொழி என்ற நான்கும் ஒரே நேர்கோட்டில் முறையே அடுத்தடுத்து இயங்கும். மொழி உணரப்படும்போது இந்நான்கும் முறையே எதிராக இயங்கும். சொல்லின் ஒலி உருவம் செவி வழி உணரப்பட்டு மனத்தில் ஒலி அர்த்தமாக்கப்படாமல் அச் சொல் பேசப்பட முடியாது என்றும் சொல்லின் வரி உருவம் கண்வழி பார்க்கப்பட்டுக் காட்சி அர்த்தமாக்கப்படாமல் அச்சொல் எழுதப்பட முடியாது என்றும் ஆகின்றன. சொல் தெரிதல், சொன்மை தெரிதல், பொருண்மை தெரிதல் (தொல்-சொல். சூத். 152) என்ற மூன்றும் வேறுவேறு. சொல் தெரிதல் என்பது மூலப் பொருளால் ஊடகச் சூழலில் உருவாகிய மொழியைப் புலன் உணர்தல். சொன்மை தெரிதல், என்பது மனத்தில் மொழியின் குறியீட்டு வடிவங்கள் பற்றிய நினைவுகள் புலன் உணர்ந்த மொழியின் குறியீட்டு வடிவங்களுக்குப் பொருந்தி வருதல். பொருண்மை தெரிதல் என்பது மொழியின் குறியீட்டு வடிவங்கள் பற்றிய நினைவுகளான உணர்வு அல்லது அர்த்தத்திற்கும் பொருளின் உணர்வு அல்லது அர்த்தத்திற்கும் இடையில் உள்ள மரபார்ந்த உறவு அறிதல். சொன்மை தெரிந்தபின் பொருண்மை தெரியும் என்பது மொழியை உணர்பவர் நிலையில் நின்று சொன்னது.

மொழி என்பது பொருளின் அர்த்த அலகுகள், மற்ற பொருள்களின் அர்த்த அலகுகள், அர்த்த அலகுகளுக்கு இடையிலான உறவுகள், அர்த்தங்களைக் குறிக்கும் சொல் அல்லது சொல் அலகுகள், பிற அர்த்தங்களைக் குறிக்கும் சொற்கள் அல்லது சொற்களின் அலகுகள், சொல் அலகுகள் ஆகிய ஆறுக்கும் இடையிலான தொடர்பு பற்றியது. மொழி அமைப்பு என்பது மொழி அலகுகளின் அர்த்தங்களுக்கு இடையிலான உறவை அடிப்படையாகக் கொண்டது. மனிதன் பிற பொருள்களோடுகொள்ளும் உறவு என்ற அடிப்படையில் அன்றி ஒருபொருள் மற்ற பொருள்களோடு கொள்கின்ற உறவு என்ற அடிப்படையில்தான் மொழி கட்டமைக்கப்பட்டுள்ளது. இரு பொருள்களுக்கு இடையிலான வெளிப்படையான இயக்கவியல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறவுகளை ஒரு விலங்கு தற்சார்போடு பார்ப்பதற்கும் மனிதன் இரு வேதிப் பொருள்களின் உறவை ஆய்வுக் குடுவையில் இட்டு அறிவதற்கும் அடிப்படையில் வேறுபாடு எதுவுமில்லை. பொருள்களுக்கு இடையிலான உறவை அறிவதற்கு முன் அர்த்தங்களுக்கு இடையிலான உறவு நிகழ்ந்துவிடுகிறது; நிகழ்த்தப்படுகிறது. உறவு நிகழ்ச்சிக்குப் பிறகும், முன்பும்கூடப் பொருள்களுக்கு இடையிலான உறவு அர்த்தமாக மனத்தில், அவ்வுறவைப் பொறுத்த அளவில் நிகழ்வாக இருக்கிறது.

பொருளைப் பற்றிய சிந்தனையில் மனம் பொருளின் பல்வேறு அர்த்தங்களில் உழல்வதைத் தடுத்து, ஏதாவது ஓர் அர்த்தத்தையோ, சில அர்த்தங்களையோ மொழி குறிக்கிறது. ஒரு பொருளின் அர்த்தங்கள் பலவற்றுள் ஒன்று அல்லது சிலவற்றை மட்டும் மொழி எடுத்துக்கொண்டு தன் அர்த்தத்தின் மூலம் பொருளை மொழி குறிக்கும் மரபானது, பொருளின் அர்த்தங்களை மொழி குறுக்கி அல்லது குறைத்துக் குறிக்கிறது என்றும் ஆகிறது. பொருளின் வேறு பல அர்த்தங்களை மொழி, மொழி குறிக்கும் பொருளின் ஒன்று அல்லது சில அர்த்தங்கள், அந்த அர்த்தங்கள் குறிக்கும் பொருள், பொருளின் ஏனைய அர்த்தங்கள் என்ற வரிசை முறையில் அடுத்தடுத்து இறுதியில் தெரிந்த அளவு முழுமையாக விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. மொழி குறிக்கும் பொருளின் அர்த்தம் பொருளின் ஏனைய அர்த்தங்களை நேரடியாக விளக்கி விடுவதாக இல்லை.

மனத்தில் பொருளுக்கான குறியீடு மொழியின் அர்த்தமே தவிர, மொழி அல்ல; அர்த்தத்திற்கான குறியீடும் மொழியின் அர்த்தமே தவிர மொழி அல்ல. மனம் பொருளுக்கான பதிலீடாக மொழியை உருவாக்குகிறது என்று கருதப்பட்டாலும் மொழி உண்மையில் பதிலீடு அன்று. பதிலீடு என்பது ஒன்று நிற்க வேண்டிய இடத்தில் மற்றொன்று நின்று அந்த ஒன்றின் செயல்பாடு போலத் தானும் செயல்பாடு உடையதாக இருப்பது. மற்றதற்குப் பதிலாக நிற்கும் ஒன்று பண்புகளால் ஒத்திருக்கும்; செயல்பாட்டால் தொடர்பற்று இருக்கும். மொழிக் குறியீடு என்பது பண்புகளால் ஒத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லாததோடு, தான் எதைக் குறிக்கிறதோ அதனுடன் எப்போதும் தொடர்புடையதாக நிற்க வேண்டியுள்ளது. மொழி என்பது குறியீடு. மொழி அர்த்தத்தைச் சார்ந்தே செயல்பட வேண்டியிருப்பதால் மொழியைத் தன்னளவில் தனித்தன்மையுடன் இயங்கும் ஒரு பொருளாகக் கொள்ள முடியாது. மொழியின் சிதைவு அர்த்தமற்றுப் போகிறபோது மொழி உருவாவதற்கு அடிப்படைகளுள் ஒன்றான மூலப் பொருள் வடிவை அடைந்து குறியீடாக இல்லாது போகிறது. அர்த்தம், அர்த்தங்களுக் கிடையிலான உறவு பொருள், பொருள்களுக் கிடையிலான உறவுகளை உணர்தலாக இருப்பதால் மொழியின் துணையின்றி அர்த்தம் எண்ணங்களாக மனத்தில் செயல்பட முடியும். அர்த்தத்தின் துணையின்றி மொழி, செயல்பட முடியாது. பொருளுக்கான குறியீடாகிய மொழி, பொருள் என்ற இரண்டிற்கும் இடையில் மொழியின் அர்த்தம், பொருளின் அர்த்தம் என்ற இரு இடைத் தொடர்புகளும் தவிர்க்க முடியாத கூறுகளாகி விடுகின்றன. பொருளின் செயல், தன்மை பற்றிய பொருளின் அடுத்த அர்த்தங்களுக்கோ, உறவுடைய அடுத்த பொருளின் அர்த்தங்களுக்கோ எண்ணம் தாவுவதை எளிமையும் விரைவும் படுத்துகிற ஊக்கியாகவும் அர்த்தங்களைப் பரிமாறிக் கொள்வதற்கான அர்த்தங்களைப் பற்றுதலாகக் கொண்ட ஒரு புறப் பொருளாக-வும் மொழி செயல்படுகிறது. அர்த்தங்களின் உடனிகழ்வாகவோ அர்த்தங்களை உடனிகழ்வாகவோ கொள்வதால் தான் ஒருமொழி செயல்பட முடியும்.

குறியீடுகள் பொருள் போல ஒரு பொருள் என்றாலும் அவை மனத்தைச் சார்ந்தவை. பொருள்கள் தம்மளவில் இயல்பாகவே இயக்கவியல் விதிகளுக்கு உட்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவ்வியற்கை விதிகளை மனிதன் குறியீடுகள் மூலம் குறிக்க நேர்கிறதால்,

இயற்கை, சமூகத்தின் விதிகள்—

மனதைச் சார்ந்திராமல் நிலவி, திரும்பத்திரும்ப நடக்கிற, முக்கியமான, அவசியமான உறவுகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விஞ்ஞான விதிகள் —

மனிதர்களின் மனதில் தோன்றுகிற இயற்கை சமூகத்தின் வளர்ச்சியை ஆளுமை செய்யும் விதிகளின் பிரதிபலிப்புகள்.

என்று இருவகை விதிகள் உள்ளன. (இயக்கவியல் பொருள் முதல் வாதமும் வரலாற்றுப் பொருள் முதல் வாதமும். ப. 156). பொருள், குறியீடு என்ற இரு வேறுபாடுகளின் புலப்பாடுகளாக இவ்விதிகள் இருக்கின்றன. குறியீட்டு நிலையில் மனத்தைச் சார்ந்ததாகவும் பிற பொருள்கள் போலத் தானும் ஒரு பொருளாகவும் மொழி இருப்பதால் மொழியின் விதிகளைச் மூன்றாவது வகையான விதிகளாகக் கொள்ளவேண்டும், பொருள் என்ற முறையில் தனக்கே உரித்தான மாற்றங்களையும் கருவி என்ற முறையில் மனிதர்கள் இயல்பாகவும், செயற்கையாகவும் ஏற்படுத்தும் மாற்றங்களையும் மொழி கொண்டிருக்கும். விதிகள் பொருளுக்கு உள்ளீடாகச் செயல் பட்டுக் கொண்டிருப்பதால் மொழியின் இயக்கவியல் விதிகளையும் மொழியின் தோற்றம், வளர்ச்சி, அழிவு என்ற எல்லைகளுக்குள் காணமுடியும்.

பல்வேறு நிகழ்வுகளுக்கு இடையிலான பொதுமையாலோ ஒரு நிகழ்வு பல்வேறுமுறை திரும்பத் திரும்ப நிகழ்வதாலோ விதிகள் உருவாகின்றன. மொழி செயல்படுவதில் உள்ள ஒழுங்கையோ. மாறாது தொடர்கின்ற மரபையோ விதி எனலாம். ஓர் ஒலி அந்த ஒலியாக இருப்பதும் ஒரு சொல் அதன் அர்த்தத்தை உணர்த்துவதும் மொழியைப் பொறுத்த அளவில் விதிகளே. மொழி படைக்கப்பட்டதோடு தற்செயலானது என்ற இரண்டு மாகும். அறியாத நிலையில் ஆனால் விதிகளுக்கு உட்பட்டே மொழி படைத்து முழுமைப்படுத்தப்பட்டுள்ளது. மொழி வளர்ச்சி, இலக்கண வளர்ச்சி என்ற இரண்டும் வேறு வேறு. இலக்கணம் என்பது மொழி செயல்படுவதற்கான விதிகளின் தொகுப்பு. மொழி பற்றிய சிந்தனை மொழி தோன்றி வளர்ந்த பிற்காலத்தில் தோன்றும்போது மொழியின் விதிகளாகிய இலக்கணம் கண்டறியப்படுகிறது. உண்மையில் இலக்கணம் என்பது ஆறு தோன்றும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போது கரையும் தோன்றி விடுவதுபோல மொழி தோன்றும் போது தானும் தோன்றிவிடுகிறது.

ஒரு மொழிக்குள் நிலவும் வழக்கு வேறுபாடுகளுள் மதிப்புப் பெற்றதோ, பெரும்பான்மையானதோ ஏனைய வற்றின்மீது ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது புலமை வழக்கு, பொது வழக்கு, கொச்சை வழக்கு என்பனஎல்லாக்காலங்களிலும் ஒரு மொழிக்குள் நிலவும் மூன்று வேறுபட்ட தளங்கள். புலமை மொழி இன்றைய குறிக்கோள் வழக்காகக் கொள்ளப்படக் கூடாதது என்று கருதப்படுவது; ஆனால் மரபில் குறிக்கோள் வழக்காக இருந்து வந்தது. பொது வழக்கு இன்றைய குறிக்கோள் வழக்காகக் கொள்ளப்படவேண்டும் என்று கருதப்படுவது; ஆனால் மரபில் குறிக்கோள் வழக்காகக் கருதப்படாதது. கொச்சைமொழி, பேச்சுமொழி ஆய்வுகள், இலக்கியங்கள் சிலவற்றோடு நின்றுவிடும். குறிக்கோள் வழக்கு என்பது, ஒருமொழியின் விதிகளை வரையறுப்பதற் கான தகுதி வழக்காகக் கருதப்படுவது.

குறிக்கோளை விடுத்துக் குறை, நிறைகள் கலந்த யதார்த் தத்தில் இருந்து வாழ்க்கை விதிகளை அமைத்துக் கொள்ளும் மரபுக்கு மக்கள் திரும்பியிருக்கின்றனர். பெரும்பான்மை விதியாக வேண்டும் என்ற நடுத்தர மக்களாட்சி வந்துவிட்டது. கல்வி என்பது மொழி, இலக்கியம் என்பதைவிடப் பிறதுறைகளே பெரும்பான்மை என்றாகி விட்டது. கற்றவர்களிலும் பிற துறையினரே பெரும்பான்மையினர். கற்றவர்கள் தங்கள் மொழியின் குறிக்கோள் பயன்பாட்டு நிலையிலிருந்து இயல்பான பேச்சு, எழுத்து வழக்குகளுக்குத் திரும்பியிருக் கின்றனர் இலக்கணம் என்பதும் புலமை மொழியான சிறு பான்மை வழக்கிலிருந்து பொது வழக்கான பெரும்பான்மை வழக்கிற்கு இறங்கி வந்துள்ளது. மரபிலக்கணத்தில் ஆட்சி செய்த சிறுபான்மைப் புலமை மொழி வழக்கு விதிவிலக் கான வழக்காக ஓரங்கட்டப்பட்டுப் பெரும்பான்மை வழக்கான பொது வழக்கு மொழிக்கான விதிகளை வகுப்பதில் ஆளுமை செலுத்துகிறது. மனித நடத்தைகளுள் ஒன்று என்ற நோக்கிலும் மனிதனால் மொழி பாதிப்புக்குள்ளாகிறது. உயர்வான-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாகக் கருதப்படும் மொழி வழக்கைப் பயன் படுத்த ஏனைய வழக்குகளைப் பயன்படுத்துபவர்களும் முயல்கின்றனர். தான் என்ற உணர்வில் தன்னை முன்வைக்கும் போது தன் கொச்சை வழக்குக் கூடப் பெருமைக்குரியது என்ற கருத்துக்குரியதாகி விடுகிறது.

குறியீடுகள், அர்த்தங்கள் என்பன தம்முள்ளும் மற்ற வற்றுடனும் கொள்ளும் உறவில் வளர்ச்சி மாற்றம், தோற்றம், அழிவுகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன ஏனைய புலன்களின் உணர்வுகளை உணரும் மூளையின் உணர்வாகிய மனம் தன்னைத் தானேயும் உணரக் கூடியதான இரண்டாவது செயல் பாட்டையும் உடையது. தன்னைத்தானே உணர்தல் அல்லது அறிதல் என்ற முறையில் மேலும் மேலும் தன்னை உணர்தல்-களில் பல அடுத்தடுத்த அடுக்கு நிலைகளைக் கொண்டுள்ளது. அர்த்தம், குறியீடுகளுக்கு இடையிலான உறவுகளில் பல திருத்தங்களை மேற்கொள்ள இது காரணமாக இருக்கிறது.

சங்க இலக்கிய மொழி இன்றும் விளங்கிக் கொள்ளப் படுவது போல மற்றொரு பகுதி இயல்பாக விளங்கிக்கொள்ள முடியாததாகவும் இருக்கிறது. மொழி என்பது மாறாத மரபுக் குட்பட்ட வடிவமாக இருக்கும்போது தான் மொழிச் செயல் பாடு நிகழ முடியும் என்றாலும் மரபும் மாற்றத்-திற்குள்ளாகிப் புதுப் புது மரபுகள் தோன்றுவதாக இருக்கிறது. புது மரபுகளும் பழைய மரபிலிருந்து வளர்ச்சி அல்லது மாற்றம் பெற்றனவாக இருக்கின்றன. ஒரு பொருளில் இருப்பும் இயக்கமும் பிரிக்க முடியாது இணைந்தே இருக்கின்றன என்றும் புலப்படும் மாற்றங்களுக்கும் மாற்றமின்மை களுக்கும் உள்ளே முறையே புலப்படாத மாற்றமின்மை களும் மாற்றங்களும் கலந்துள்ளன என்றும் இயக்கவியல் கருத்துக் கொண்டுள்ளது. ஒரு பொருளுக்கான இயக்கவியல் விதிகளை அப்பொருளைப் பற்றிய சிந்தனை களிலிருந்து காணுவது சிறப்பானது என்றாலும் இயக்கவியல் விதிகள் எல்லாப் பொருள்களுக்கும் பொதுவானவை என்பதால் மொழியின் விதிகளுடனும் பொருந்தி வருவதாக உள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்தாலும், விதிவிலக்கான பொருளான மொழியின் இயக்கவியல் விதிகளை மொழி பற்றிய சிந்தனையில் இருந்துதான் காண வேண்டும்.

1 ஒவ்வொரு இயக்கத்திற்கும் மூல காரணமாக இருப்பது உள் முரண்பாடுகளே; புது முரண்பாடுகள் தோன்றும் போது புது இயக்கம் தோன்றுகிறது; முரண்பாடுகள் மறைகிற போது அம் முரண்பாடுகளால் தோன்றிய இயக்கமும் மறைந்து போகிறது.

2 பொருளின் வளர்ச்சியில் எந்த ஒரு கட்டமும் நிலையானதன்று; ஒவ்வொரு கட்டமும் விரைவாகவோ, காலம் தாழ்ந்தோ மறைந்து போகிறது; நிலை மறுக்கப்படுகிறது. ஒவ்வொன்றும் அடுத்து வரும் கட்டத்தால் . தொடர்ச்சியாக நிலைமறுக்கப்படுகிறது. இயக்கவியல் நிலை மறுப்பு என்பது நிலை மறுக்கப்பட்ட கட்டத்தின் காலாவதியாகிப் போன சில அம்சங்களின் மறைதலில் மட்டுமல்ல; மாறாக, அக்கட்டத்தின் சில அம்சங்கள் தக்க வைத்துக்கொள்ளப்படுவதும் முன்பு எப்போதும் இருந்திராத முற்றிலும் புதிய சில அம்சங்கள் தோன்றுவதும் ஆகும்.

3 இருக்கின்ற பொருளை மறையச் செய்கிற, இல்லாத பொருளைத் தோற்றுவிக்கிற மாற்றங்கள் (திடீர் மாற்றம்), பொருளில் மாற்றத்தை ஏற்படுத்தாது பொருளின் பகுதிகளில் மாற்றத்தை ஏற்படுத்துகிற மாற்றங்கள் (படிப்படியான மாற்றம்) என்ற இரண்டும் ஒரு பொருளில் உள்ளன. திடீர் மாற்றங்கள் படிப்படியான மாற்றங்களின் அடுத்தடுத்த சேர்க்கையினால் நிகழ்வனவே.

மூன்றும் முக்கிய இயக்கவியல் விதிகளாகக் குறிப்பிடப் படுகின்றன (இயக்கவியல் பொருள் முதல்வாதமும் வரலாற்றுப் பொருள் முதல்வாதமும், பக். 183, 175, 160). மற்ற இரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயக்கவியல் விதிகளும் முரண்பாடுகளின் ஒற்றுமையால் இயக்கம் என்ற முதன்மை விதிக்குள் அடங்கி விடுவன. அதாவது இயக்கம் என்பது படிப்படியான மாற்றங்களும் படிப்படியான மாற்றங்களில் ஏற்படும் திடீர் மாற்றங்களும் நிலை மறுக்கப் படுகின்ற கட்டத்தின் தன்மைகள் மறைந்துபோவதும் அவை தொடர்ந்து நிலவுவதும் மீண்டும் மீண்டும் நிகழ்வதும் நிகழாமல் இருப்பதும் நிலைத்து இருப்பதும் மாற்றம் அடைவதும் ஆகியவற்றின் ஒற்றுமை என்றாகிறது (மேலது, ப.180).

மொழி செயல்படக் குறைந்தது இரு முரண்பட்ட அல்லது வேறுபட்ட தளங்களாவது வேண்டும். ஓசையும் மௌனமும் ஒன்றுக்.கொன்று எதிரானவை. ஓசையிலும் அர்த்தம் உணர்த்தப் பயன்படும் ஒலி அலகுகள் மட்டும் மொழிக் குறியீடுகள் ஆகின்றன அர்த்தம் உணர்த்தும் ஒலி, அர்த்தம் உணர்த்தா ஒலி என்ற இரு முரண்கள் ஓசையிலும் தோன்றுகின்றன. அர்த்தம் உணர்த்தும் ஒலிக்குறியீடுகளாக மாறும்போதுதான் அது ஓசையிலிருந்து மாறுபட்டதாக அமைகிறது. குறியீடு களுக்கான மூலப் பொருள், குறியீடு என்ற இரண்டிற்கும் உள்ள முரண் அர்த்தம் உணர்த்தும், உணர்த்தாது என்பதில் தான். மௌனம் கூட அர்த்தம் உணர்த்துவதில் பங்காற்றுவ-தானது அசைவுகளோடு ஒப்பிட்டு அசைவற்ற நிலைக்கு ஓர் அர்த்தம் கற்பித்துக் கொள்வது போன்ற ஒரு மரபால் வருவதுதான். எழுத்து மொழியிலும் எழுதப்படும் தளமும் எழுத்துத் தளமும் வேறுபட்டு நிற்க வேண்டியுள்ளன பிரெய்லி முறையிலும் குறியீட்டை உருவாக்குவதற்கான தளமே குறியீடாக இருந்த போதிலும் குறியீடு குறியீட்டுக்கான தளத்திலிருந்து வேறுபடுத்துவதால்தான் அது குறியீடாக இருக்க முடிகிறது. குறியீடு மூலப்பொருளிலிருந்து வேறுபடுத்தப் பட்டபோதும் அது மூலப்பொருளின் தளத்தையே தன் தளமாகக் கொண்டு இயங்குகிறது.

ஒலி முதல் வாக்கியம் வரையிலான மொழியின் பல்வேறு அளவுகளிலும் முரண்பட்ட பண்புகள் நிலவுகின்றன. ஒலிகளுள் உயிர், மெய் என்ற எதிர்வுகள் உள்ளன. ஒரு தொகுதிக்குள் அடங்கிய கூறுகள் இரண்டாக இருந்தால் அவை எதிரானவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களாகவும் பலவாக இருந்தால் வேறானவைகளாகவும் இருக்கும். உயிர், மெய் என்ற இரு எதிர்வுகளும் தங்களுக்குள் உள்ள பல ஒலிகளாலும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. வாக்கியத்தின் தொடக்கம் இருப்பதால் முடிவும் இருந்தா-கிறது. பெயர், வினை என்ற முக்கிய இலக்கணக் கூறுகள் பொருளையும் பொருளின் இயக்கத்தையும் குறித்து இருப்பு, இயக்கம் என்ற எதிர்வுகளாகின்றன. ஒரு சொல் ஓர் அர்த்தம் குறிக்கும் என்பது அச்சொல் வேறு அர்த்தங்களைக் குறிக்காது என்ற முரண்பாட்டாலும் தான் கிடைக்கிறது. ஒருபுறம் முக்கியமான உறவுகளால் உருவாக்கப் படவேண்டியது, மறுபுறம் முக்கியமற்ற உறவுகளாலும் உருவாக்கப்பட வேண்டியதாகிறது.

மொழியை ஒரு முழுப் பொருளாகவும் ஒலியன், உருபன், தொடரன், முதலான அளவுகளை அப்பொருளின் பகுதிகளாக-வும் கொண்டு இரண்டிலும் ஏற்படும் மாற்றங்களையும் தொடர்புபடுத்தி விளக்க முடியும். ஒவ்வொன்றும் தன்னளவில் முழுமையானது என்ற அடிப்படையில் ஒலி, உருபன் முதலான-வைகளும் தனித்த இயக்கம் உடையன. ஒவ்வொன்றுக்கும் தோற்றம், வளர்ச்சி, மாற்றம், அழிவு உண்டு. ஒலி, உருபன் முதலானவை ஒன்று பெரும்பான்மையாகத் தோன்றியபின் தான் அடுத்துத் தோன்றியது என்றில்லாமல் ஒன்று தோன்றிய நிலையில் மற்றதும் உடனிகழ்வாகத் தோன்றியிருக்கும் என்றும் அதாவது உருபன் தோன்றிய நிலையில் வாக்கியங்களும் தோன்றத் தொடங்கியிருக்கும் என்றும் கொள்ள வேண்டும். ஒலியனே சொல்லாகவும் சொல்லே வாக்கியமாகவும் என்று ஒன்று மற்றொன்றில் கலந்த நிலையும் சிறுபான்மையாக இருக்கும். ஒலியன், உருபன், தொடர் என்பன தோற்றச் காலத்தில் ஒவ்வொன்றும் படிப்படியான வளர்ச்சி பெற்று முழுமையடைந்திருக்கும். ஒன்று பெரும்பான்மையான தோற்றத்தில் இருக்கும்போது அடுத்தது சிறுபான்மையாக இருந்திருக்கும்.

சிறுபான்மை, பெரும்பான்மை என்பது உறழ்ச்சி வடிவங் களுக்குள் காணப்படும் எண்ணிக்கை வேறுபாடே. ழகரமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றகரமும் வழக்கில் சிறுபான்மையாகக் காணப்படும் செயல்பாட்டு நிலைக்குக் காரணம் அவை பரவல் பெற்றதிலிருந்து வழக்கொழிந்ததோ, ஓரிடத்திலிருந்து இன்னும் பரவல் பெறாமல் இருப்பதோ ஆகும். சிறுபான்மை வழக்கு நிலையிலிருக்கும் ஒன்று வளர்ச்சி பெறுவதற்கு முந்தைய தொடக்க நிலையாகவோ தேய்வு பெற்ற அழிவு நிலையாகவோ இருக்கலாம். முழுமையாகவோ, ஓரளவோ பரவல் பெறாமலும் அழிந்துவிடலாம் என்ற நிலைக்கு ழகர, றகரங்கள் உள்ளாகியிருக்கின்றன. பின்பற்ற முடியாதவை என்று கருதி விடப்படுவது போலப் பின்பற்ற முடியாதவை பரவல் பெறாமல் இருந்து விடுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. மக்கள், மொழியைக் கற்றுக் கொள்ளும்போதே திரிபுபடுத்தியும் கற்றுக்கொள்பவர்களாகவும் பின் வருபவர்களுக்குக் கற்பிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ழகர, றகரங்கள் திரிபுபட்ட நிலையிலேயே பேச்சு வழக்கிலும் பெரும்பாலான மக்களால் கற்கப்பட்டும் கற்பிக்கப்பட்டும் வந்துள்ளன. கடின ஒலிகளைப் பெற்ற சொற்கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்காக அவ்வொலிகளை உச்சரிப்புக்கு எளிதான குறிப்பிட்ட ஒலிகளாக அவை பிழையானவை என்பதையும் பொருட்படுத்தாமல்மாற்றி அமைத்துக் கொள்கின்றன. அவ்வாறு தங்களைத் திருத்தி அமைத்துக் கொள்ளாத சொற்கள் வழக்கொழிந்து போய் விடுகின்றன. ஒருமொழிச் சொல்லை அதன் அர்த்தத்தை உணர்த்தும் பிற மொழிச்சொல்தான் வழக்கொழிக்க வேண்டும் என்பதில்லை; தாய் மொழிச் சொல்லும் வழக்கொழிக்கலாம்.

ஒருமொழி தான் அழிந்து போனாலும் தன் கூறுகளை எஞ்சி நிற்கச் செய்கிறது. தன்னைப் பேசும் மக்களின் அழிவு, தான் பல மொழிகளாகப் பிரிந்து விடுதல், பிற மொழிகளின் அதிக அளவு ஊடுருவல்கள் காரணமாக ஒரு மொழிக்கு அழிவு நேரலாம். வளர்ச்சி நிலையில் இருக்கும் ஒருமொழி தன் கடந்த காலக் கூறுகள் பெரும்பாலானவற்றை நிலைப்படுத்திக் கொள்வதோடு புதிய கூறுகளையும் பெரும்பான்மையாகத் தோற்றுவித்துக் கொள்கிறது. அழிவு நிலையில் இருக்கும் ஒரு மொழி தன் கடந்த காலக் கூறுகள் பெரும்பாலானவற்றை வழக்கொழிய விட்டுவிடுவதோடு புதிய கூறுகளையும் தோற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வித்துக் கொள்வதில்லை. வளர்ச்சி விகிதம் கூடும்போது அழிவு விகிதம் குறைவாகவும் அழிவு விகிதம் கூடும்போதும் வளர்ச்சி விகிதம் குறைவாகவும் இருக்கும்.

ஒரு மொழி பல மொழிகளாகப் பிரியும் போது அம்மொழி மூல மொழியாகி, பிரிந்த மொழிகள் குடும்ப மொழிகளா-கின்றன. 'ஒரு மொழி பேசுகிறவர்களின் எண்ணிக்கை, பேசப் படும் பரப்பு, பேசப்பட்டு வரும் காலம் மற்றும் மக்களுக்கு இடையிலான சூழ் வேறுபாடுகள் முதலானவைகளுக்கு ஏற்பக் கிளை மொழிகளைப் பெற்றிருக்கும்' (கிளை மொழியியல், ப: 13). ஒரு மொழிக்குள் கிளைமொழி வேறுபாடுகள் நிலவினாலும் வேறுபட்ட கிளை மொழிகள் பேசும் மக்களுக்கு இடையேயான தொடர்பு மூல மொழியை நிகழ்கால மொழியாகவும் வளர்த்துப் பொது வழக்கையும் கொண்டிருக்கும். பொது மொழி வழக்கு தான் வளர்வதோடு கிளை மொழிகளிலிருந்தும் தனக்குத் தேவையானவற்றை எடுத்துக்கொள்ளும். பொது மொழி வழக்கு கிளை மொழி பேசும் அனைவரோடும் தொடர்பு கொண்ட பொதுவான மக்களால் பேசப்படுவதாக இருக்கும். ஒரு மொழி வழக்கு கிளைமொழிகளிலோ, வேறு மொழிகளிலோ செல்வாக்குச் செலுத்துவதானது அம்மொழி பேசும் மக்களின் அரசியல், பண்பாடு, அறிவியல் முதலான துறைகளில் அவர்கள் பெற்ற செல்வாக்கால்தான் முடியும். மொழி தனக்கெனத் தனி மதிப்பு இல்லாது மனித மதிப்பைச் சார்ந்து இயங்கும், வளர்ச்சி பெற்ற மக்கள், வளர்ச்சி பெறும்பெறாத மக்களில் ஏற்படுத்தும் பாதிப்பைச் சார்ந்து மொழியும் செயல்படும்.

மொழி வளர்ச்சியில் ஒரு தொடர்பு கடந்த கால மொழி யோடு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாக ஏற்படும் சிக்கல்களையும் மரபு வழிப்பட்ட முறை களிலேயே தீர்த்துக்கொள்ள நினைப்பது போல மொழியில் ஏற்படும் புதுப்புது வளர்ச்சிகளிலும் தாய்மொழியின் மரபுத் தன்மை இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த கால மொழியை உள்வாங்கிக் கொண்டுதான் சம கால மொழி வளர்கிறது. விரைவான வளர்ச்சிக்குக் கடந்தகால மொழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈடுகொடுக்க முடியாத போதுதான் தொடர்புடைய பிற மொழிச்சொற்கள் எடுத்தாளப்படுகின்றன. வெளி மொழியினரிடமிருந்து புதிதாகவோ, வளர்ச்சி பெற்றதாகவோ ஊடுருவிய துறைகளில் இப்போக்கு நிறைய உள்ளது. சம காலத்தின் புதிய தேவைகளோடு கடந்த காலத்தில் நிறைவு செய்யாது விட்ட குறைபாடுகளையும் ஒரு மொழி நிறைவு செய்ய வேண்டியுள்ளது. சம காலத் தேவையை முழுமையாக நிறைவேற்றிவிட எந்த ஒரு மொழியும் ஆற்றலற்றதாகவே இருக்கிறது. தான் பேசப்படும் சூழலில் ஏற்படும் வளர்ச்சி, மாற்றம் முதலானவற்றை மொழி வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இயற்கையைப் பற்றியும் மொழியைப் பற்றியும் ஏற்படும் சிந்தனைகளால் புதுப்புது அர்த்தங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அர்த்தங்களும் மொழி வடிவம் பேறாததிலிருந்து மொழிவடிவம் பெறுவதாக மாறி அமைந்து கொண்டே வருகின்றன.

மொழி, அர்த்தம் என்ற இரண்டிற்குமான உறவில் மாற்றமின்மை காரணமாகவே ஒரு மொழி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. விதிவிலக்கான மாற்றங்களும் விதிகளாக அமையத் தக்க பொதுமை யுடையனவாக நிகழ்கின்றன. பொருளில் மாற்றம் ஏற்படும்போது அர்த்தத்திலும் மாற்றம் நிகழ்ந்து, சொல்லிலும் மாற்றம் நிகழ வேண்டும்; ஆனால் மாறாமலும் இருக்கிறது. சொல் மாற்றம் அர்த்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாததாகவும் இருக்கிறது; சொல் மாறாது அர்த்தம் மாறி இருக்கவும் செய்கிறது. ஒரு சொல் தான் குறித்த பரந்த அர்த்தத்திலிருந்து குறுகி விடுவதாகவோ, பல அர்த்தங்களுள் சிலவற்றை இழந்து விடுவதாகவோ கூடுதல் அர்த்தங்களைப் பெற்று விடுவதாகவோ மாறியும் அமைகிறது.

முறையே மனம், உணர்வுகளுக்கு உள்ளடங்கும் தளமாகக் கொள்ளப்பட்ட மொழி சிறப்புக் கருதித் தனித் தளமாகக் கொள்ளப் பட்டதே தவிர, உண்மையில் உணர்வின் உட்பாகுபாட்டுக்குள் பொருளைப்பற்றிய உணர்தல் என்பது போல மொழியைப்பற்றிய உணர்தல் என்ற மற்றொரு பாகுபாடாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடங்குவதே யாகும். மொழியை மையமாகக் கொண்டு இயற்கைப் பொருள்களை மொழி என்ற பொருள், மொழி அல்லாத பொருள்கள் என்று இருவகைப் படுத்தலாம். மனிதன், மனம், உணர்வு, மொழி முதலானவை எல்லாம் உணர்தலுக்கு உட்படும்போது உணரப்படும் பொருள்களாகி விடுகின்றன. தன்னை உருவாக்கிய மனிதன், மனம், உணர்வு முதலானவற்றையும் தன்னையும் மொழி அர்த்தங்களாகக் கொள்ள வேண்டியுள்ளது. உணர்வு, உணர்வின் ஒரு பகுதி-யாகிய மொழி என்ற இரண்டும் மனத்தின் குறுகிய பகுதியில் அடங்கி விடுகின்றன. மனத்தின் பெரும்பகுதி மையமோ, விளிம்போ இல்லாத வெற்றிடமே. மனத்தின் உணர்வு, புலன், உடல் பற்றியதாக இருக்கும்போது இது உணரப்படுவதில்லை; தன்னைப் பற்றியதாக இருக்கும்போது உணரப்படுகிறது. மனிதனின் மையம் என்பதோ, மனத்தின் மையம் என்பதோ அர்த்தம், கருத்துருவம், உணர்வு, எண்ணம் முதலான ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்த முடியாத, ஒன்றுபடுத்தவும் முடியாதவைகள் தம்மளவில் கொள்கின்ற மையமே.

துணை நூல்கள்:

1 சீனிவாசவர்மா, கோ., கிளை மொழியியல், அனைத்திந்தியத் தமிழ்மொழியியல் கழகம், சிதம்பரம், 1986.

2 சுந்தரமூர்த்தி, கு. (விளக்.), தொல்காப்பியம் - சொல் அதிகாரம், தெய்வச்சிலையார் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1979.

3 பிரேம், "மனிதார்த்தப் பொருண்மை நோக்கு", நிறப்பிரிகை இதழ்-2, தோழமை வெளியீடு, கும்பகோணம், ஜனவரி 1991.

4 பொகுஸ்லாவ்ஸ்கி, வெ.மொ. முதலானோர், இயக்கவியல் பொருள் முதல் வாதமும் வரலாற்றுப் பொருள் முதல் வாதமும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் நாவலின் தலைமைப் பாத்திரச் சிதைவுப் போக்கில் அம்மா வந்தாளும் சினிமாவுக்குப் போன சித்தாளும்

பெ. செல்வத்துரை

தமிழ் நாவல் கதை மாந்தர்களில் குறிப்பாக, தலைமை மாந்தர்களில் படைப்புப் போக்கில் மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. அம்மாற்றம் தலைமைப் பாத்திரத்தின் சிதைவுப் போக்கைக் காட்டுகிறது. அச்சிதைவுப் போக்கிற்கான பின்னணியும் அப் பின்னணியில், இரு நாவல்களின் தலைமை மாந்தர்களும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றனர்.

1.0. முன்னுரை:

எடுத்துரைக்கும் போக்கில் அமையப்பெற்ற கதை இலக்கிய வடிவங்களில் நாவலும் ஒன்று. இது பல்வேறு வகையான மாதிரிகள் (types) நடமாடுவதற்கேற்ற களமாக அமைந்துள்ளது. இப்பல்வேறு வகையான மாதிரிகளில் நடுநாயகமாகவும், கதை நிகழ்விற்கு முதல் நிலையாகவும் விளங்குவது தலைமைப் பாத்திரமாகும். இத்தலைமைப் பாத்திரம் பாரம்பரிய உணர்வு காரணமாக, நாவல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியத்தில் இலட்சியமான பாத்திரமாகக் காட்டப்பட்டு வந்தது. ஆனால் கால அளவில் இப்போக்குச் சிதைந்து விட்டது[1] அவ்வாறு சிதைவு பெற்ற நிலையில் நாவல் இலக்கியத்தில் தலைமைப் பாத்திரம் ஒரு சாதாரன மனிதனாகப் படைக்கப் பட்டது. அத்துடன் சில நாவல்கள் தனிமனிதன் தலைமைப் பாத்திரமாக இல்லாமலும் படைக்கப்பட்டன, இவ்வாறாகத் தலைமைப் பாத்திரம் சிதைவு பெறும் போக்கில் அம்மா வந்தாள், சினிமாவுக்குப் போன சித்தாளு ஆகிய இரு நாவல்களும் இங்கு ஆராயப்படுகின்றன.

1.1 சிதைவு வரையறை:

இந்திய விடுதலைக்குப்பின் படைக்கப்பட்ட தமிழ்ச் சமூக நாவல்களில் தலைமைப் பாத்திரம் சிதைவு அடைந்துள்ளதைக் கீழ்க்கண்டவாறு வரையறை செய்யலாம்.
அவையாவன:

1 தலைமைப் பாத்திரம் அதன் முக்கியத்துவத்தையும் முதன்மைத் தன்மையையும் இழந்து வருதல்.

2 அது தன் இயல்புகளில் இருந்து பிறழ்தல்.

3 செயலூக்கம் அற்ற நிலையில் விளங்குதல்.

4 சமுதாய ஓட்டத்திலிருந்து விலகி நிற்றல்.

5 பண்பாட்டில் இருந்து பிறழ்தல்.

6 குறிக்கோளற்ற முறையில் அமைந்திருத்தல்.

7 தனிமனிதன் தலைமைப் பாத்திரமாக இல்லாத நிலை.

இவ்வாறான வரையரைகளுக்கு உட்படுத்திய நிலையில் இது ஒரு கோட்பாடாக இன்றைய நாவல்களில் படிந்திருப்பதைக் காண முடிகின்றது. இதனடிப்படையில் இவ்விரு நாவல்களும் நோக்கப்படுகின்றன.

1.2. அம்மா வந்தாள்:

இந்நாவல் நிலவுடைமைச் சமுதாயச் சிதைவினை விளக்கும் வகையில், அச்சமுதாயத்தைப் பின்புலமாகக் கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தஞ்சாவூரை களமாக அமைத்து நாவல் புனையப்பட்டுள்ளது. இன்றைய சமுதாயம் மற்றும் தனிமனித வாழ்க்கை நிலைகள் எப்படிப் பின்னடைந்துபோன மரபியல் நெறியில் இருந்து புதுமையான மனிதாபிமானமுள்ள நெறிக்கு மாறிக் கொண்டிருக்கின்றன என்பதைக் காட்டும் நிலையில் இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. இதில் தாய்மை, கணவன்-மனைவி உறவு ஆகியன சிதைக்கப்படுகின்றன. இந்நிலையில் தலைமைப் பாத்திரமான அலங்காரத்தம்மாள் பண்பாட்டில் பிறழ்ந்தவளாகக் காட்டப்பட்டிருக்கின்றாள்.

பண்பாடு என்பது மக்களின் கூட்டுச்சக்தியாய் பிறப்பதாகும். இப்பண்பாட்டில் ஈடுபாடோ அக்கறையோ, நம்பிக்கையோ, பிடிப்போ இல்லாத மக்களைப்[2] பண்பாட்டில் பிறழ்ந்தவர்கள் எனக் கூறலாம். இவ்வாறு பண்பாட்டில் பிறழ்ந்தவர்களைத் தலைமைப் பாத்திரமாகப் படைப்பது மரபிற்கு முரணானதாகின்றது.

பண்பட்ட தமிழ்ச்சமூகத்தினிடையே இப்படிப்பட்ட மனிதர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். இதற்குக் காரணம் பண்பாட்டிற்கு ஊட்டந்தரும் மணவளம் குறைந்து வருகின்றதைக் காட்டுகிறது.[3] வேறுவகையில் சொல்ல வேண்டுமெனில் மக்களின் பண்பாட்டுச் சக்தி வடிந்து வருகின்றது எனலாம்.

இன்றைய அறிவியல் யுகத்தில் பாரம்பரிய உறவு நிலைகள், சமூக மதிப்புகள் ஆகியன சிதைந்து வருகின்றன. ஆதலில் மனித குலத்தில் இதுதான் நடக்கும்; இதுநடவாது, என்று கூறுவதற்கில்லை. எதுவும் எப்படியும் நடக்கலாம் என்ற சூழ்நிலைக்கு இன்று மனித குலம் தள்ளப்பட்டுவிட்டது. இதனடிப்படையில் வழிவழியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த குடும்ப மரபுகளும், அவற்றில் புனிதமும், மதிப்பும் இன்று சிதைந்து விட்டன.

இதனை,

> குடும்பம் என்று தத்துவம் அழிபடும்போது அதன் அங்கங்களும் உறவுகளும் மதிப்புகளும் அவற்றிற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> முன்னர் அளிக்கப்பட்ட புணிதத்துவமும் மறைகின்றன.[4]

என்பர் வெங்கட் சாமிநாதன்.

'அம்மா வந்தாள்' நாவலில் தண்டபாணி – அலங்காரத்தம்மாள் ஆகியோர்களின் உறவே முதன்மையாகப் பேசப்படுகின்றது. இதன்படி அலங்காரத்தம்மாள் முதல் நிலைக் கதை மாந்தராக அமையவேண்டும். ஆனால், நாவல் முழுவதும் அப்புவைச் சுற்றியே கதை நிகழ்கின்றது. அலங்காரத்தம்மாள் என்ற பாத்திரம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றது. எனவே. நாவலின் தலைமைப் பாத்திரம் முதன்மைத் தன்மையையும் முக்கியத்துவத்தையும் இழந்து விட்டது எனக் குறிப்பிடலாம்.

இந்து தர்மத்தில் தாய் என்பவள் புனிதம் நிறைந்தவளாகவும், தூய்மை நிறைந்தவளாகவும் கருதப்பட்டு வந்திருக்கின்றாள். அத்துடன் தாய் என்பவள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டு வணக்கத்திற் குரியவளாகப் போற்றப்பட்டிருக்கின்றாள். ஆகவே, தாய்மை தமிழ்ச் சமுதாயத்தின் அச்சாகவும், சிறப்பு நிலை கொண்டதாகவும் அமைந்திருக்கின்றது. கால வளர்ச்சி நிலையில் இத்தாய்மை அதன் சிறப்பையும் மதிப்பையும் இழந்து விட்டது. இதனை அடையாளப்படுத்தும் நிலையே அலங்காரத்தம்மாள் பாத்திரப் படைப்பு எனத் தெளிவுபடுத்தலாம்.

சித்தன்குள வேத பாடசாலையில் வேதம் பயில்வதற்கு அப்பு சேர்க்கப்பெறுகின்றான். அவ்வாறு அவன் சேர்வதற்குக் காரணம், அலங்காரத்தாம்மாள் தான் செய்த தவற்றிற்குப் பிராயச்சித்தம் தேடுவதற்கேயாகும், வேதபாட சாலையில் சேர்க்கப் பெற்ற அப்பு, முறைப்படி வேதங்களைக் கற்று வேத வித்தாகி விடுகின்றான். அவன் தன் வேதப் படிப்பை முடித்து விட்டதனால் தன்னுடைய சொந்த ஊருக்குப் புறப்பட எண்ணு கிறான். அப்போது அவனது தாய் அலங்காரத்தம்மாளின் நினைவு அவனுக்கு வருகின்றது. அவன் தனது தாயைப் பற்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்ணும் நினைவினை ஆசிரியர் பின்வருமாறு அமைத்து உள்ளார்:

> "அப்பூ!" என்று வாசற்படி ஏறினதும் அம்மா கூப்பிடுகிறபோது, அது ஒரு புதுமுகம்–தனிமுக-மாகத் தானிருக்கும்; அப்புவுக் கென்றே இருந்த ஒரு முகத்தைச் சட்டென்று கழுத்தில் மாட்டிக் கொண்டது போல! அம்மா முகத்தில் இவ்வளவு அமிர்தமா? உடல் உள்ளெல்லாம் இப்படி நிரப்பும் சக்தி வருகிறது அந்த நினைவிற்கும்! ..[5]"

இது தாய்மையின் செழுமையையும் சிறப்பையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க தாய்மையின் முன் அப்பு தான் எவ்வித களங்கமும் இல்லாமல் நிற்க வேண்டும் என விரும்புகின்றான். இவ்விருப்பத்திற்கு இந்து களங்கம் கற்பிக்க முயல்கின்றாள். அப்போது அப்பு தன் தாயைப் பற்றி இந்து-விடம் கூறுகின்றான்:

> "வேதம் எங்கம்மா மாதிரி. அதுதான் ஈச்சுவரன். எனக்கு அம்மா. எங்கம்மா மாதிரி புடம் போட்ட தங்கம். மாற்றுக் குறையாத தங்கம்"[6].

இது அவன் தன் தாயைத் தெய்வ நிலைக்கு வைத்து வணங்குவதைக் காட்டுகின்றது.

இவ்வாறாக அப்பு தன் தாயை நினைத்த நிலையில் ஊர் வந்து சேர்கின்றான். அங்கு தன் தாயைக் கண்ட நிலையில் அவளை அபூர்வப் பிறவி என்றும் களங்கம் இல்லாதவள் என்றே அப்பு நம்புகின்றான்.
இதனை,

> "அம்மா முகத்திற்கு ஒரு தனிக்களைதான். அம்மா என்பதற்காகச் சொல்லவில்லை. லட்சம் பெண்களைப் பார்த்தால் இப்படி ஒரு களை பத்து முகத்தில்தான் பார்க்க முடியும். அம்மா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> நல்ல உயரம். நாற்காலியில் உட்கார்ந்திருப்பதே ஒரு கம்பீரமாக இருக்கிறது. அம்மா என்று சொல்வதற் கேற்ற வடிவம்''.[7]

என அப்பு கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.

இவ்வாறு அப்பு தன் தாயை நினைவிலும் நேரிலும் ஒரு தெய்வமாகவே எண்ணி வருகின்றான்.

இப்படிப்பட்ட சிறப்பு நிலையில் விளங்கும் அலங்காரத்தம்மாள், தண்டபாணிக்கு வாழ்க்கைப்பட்டு ஏழு குழந்தைகளுக்குத் தாயாகின்றாள். இந்நிலையிலும் அவள் சிவசு என்பவனுடன் கள்ள உறவு கொண்டு வாழ்கிறாள். இவ்வுறவு குழந்தைகளுக்கும் கணவனுக்கும் தெரிய வருகின்றது. மூத்த மகள் பார்வதி தன் அம்மாவைப்பற்றித் தன் தம்பி அப்புவிடம் சொல்கின்றாள்;

> ''அம்மாவை நெனச்சா அங்கலாய்ப்பா இருக்குடா அப்பு .. அப்பாவோடு இருக்கிறது கஷ்டமோ என்னமோ, எனக்கும் தெரியலே .. ஆனா, கடைசி மூணும்தான் அவ மனசோட பெத்த குழந்தைகள்னு தோன்றது. அவ சுய புத்தியுடன் தான் இருக்கா. சிவசுவைப் பார்க்-காமல் அவளால இருக்க முடியாது. நீயும் நானும் ஆமடையானும் ஊரும் உலகமும் கோச்சுண்டு என்ன பண்றது.''[8]

இது தாயைப்பற்றி மகள் வெளியிடும் விமரிசனமாக அமைந்துள்ளது.

இந்து அலங்காரத்தம்மாளைப் பற்றிச் சிறிது விரசமாகவே கூறுகின்றாள்:

> ''அம்மாவாம் அம்மா! உங்க அம்மா ரொம்ப ஒழுங்குன்னு நினைச்சுக்காதே. நானாவது உன்னையே நினைச்சுண்டு சாகறேன். உங்கம்மா யாரையோ நினைச்சுண்டு சாகாம இருக்கா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> பாரு. நான் உங்கம்மா இல்லை. நான் உன்னைத் தவிர யாரையும் நினைச்சதில்லேடா, பாவி. அம்மா அம்மான்னு என்னை அவளோட சேர்க்காதே. எனக்கு ஏமாத்தத் தெரியாது".[9]

இவ்வாறு அம்மாவைப் பற்றிப் பார்வதி, இந்து ஆகியோர் அப்புவிடம் கூறியது மட்டுமின்றி, அவனது அப்பாவும் அவளைப் பற்றி அவனிடம் கூறுகின்றார். அத்துடன் அப்புவும் கண் கூடாக இவளது நடத்தையைக் காண நேரிடுகின்றது. ஆதலின் அவன் எதிர்பார்த்த அம்மாவாக இவள் இல்லாததைக் கண்டு வெறுப்படைந்து, சித்தன் குளத்திற்கே திரும்பி விடுகின்றான் அங்கு வேதபாடசாலைப் பொறுப்பை ஏற்று இந்துவின் குடும்பத்துடன் இணைந்து விடுகின்றான்.

இவ்வாறு தாய்மையின் சிறப்புச் சிதைவதைக் காண முடிகின்றது.

அடுத்து கணவன்-மனைவி உறவு சிதைக்கப்படுவது இந்நாவலில் காட்டப்படுகின்றது.

தண்டபாணி தனது மனைவி அலங்காரத்தம்மாள் நல்லவள் என்று நினைத்து அவளால் ஏமாற்றப் பட்டவராகவே காட்சியளிக்கின்றார். தனது வீட்டிலேயே அவள் சோரம் போவதை அவரால் கண் கூடாகவே அறிய நேரிடுகின்றது. இதனால் அவர் மனப் புழுக்கத்திலேயே வாழ்ந்து வருகின்றார்.

இதனை,

> "ஒன்னையும் புரிஞ்சிக்க சிரமப்படக் கூடாது. பேசாமல் பார்த்துண்டே யிருக்கணும். அதுக்காகத் தான் ஸ்வாமி நம்மைப் படைச்சிருக்கிறார்"[10]

என்று அவர் கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.

இவர் தனது மனைவியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் உள்ளக் குமுறல் கொண்டு, ஆற்றாமை உணர்வுகொண்டு கோபமடைந்தவராக இருக்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதனை, அவருடைய பின்வரும் கூற்றிலிருந்து அறியலாம்:

> ..... பழிகார முண்டை என்று குமைந்தார். அலங்காரம் என்று பெயர் வைத்தார்களே சரியாக- லக்ஷ்மி, சரஸ்வதி, விசாலம், கௌரி, சங்கரி என்று இத்தனை பேர்களை விட்டு விட்டு அலங்காரமாம் அலங்காரம்! தேவடியாளுக்கு வைக்கிறாற் போல''.[11]

தண்டபாணி தனது வாழ்க்கை உறவு சிதைந்த நிலையில் ஓர் இருண்மை நிலைக்குத் தள்ளப்பட்டுத் தனது வாழ்நாளை அதிலேயே, கழித்து வருகின்றார்.

இதனை, ஆசிரியர் எடுத்துக் கூறுகின்றார்:

> ''ஆனால் வழக்கம் அவரை இப்போது கைவிட்டு விட்டது. நினைத்த பொழுது அவருக்கு மனதைச் சூனியமாக அடித்துக் கொள்ள முடியும். அந்த வெறும் வெளியையே கடவுளாக ஆக்கி அப்படியே கிடப்பார். மனது சற்றுச் செத்துப் போகும்; சற்றுப் பிழைக்கும். மீண்டும் சாகும்; மீண்டும் பிழைக்கும். கடைசியில் ஒரு பர்டாகத் தூக்கம் வரும்''[12].

இது அவரது பரிதாப நிலையைக் காட்டுகிறது.

வாழ்வில் துன்பங்கள், துயரங்கள், குறைகள். மலிந்த போதும் கணவன் - மனைவி என்பவர்கள் ஒருவரையொருவர், புரிந்து கொண்டு, அன்புடன் வாழ்தலே மரபாகும். மேலும், வாழ்க்கையைப் புரிந்துகொண்டு, வாழ்க்கையை ஒரு பயிற்சிக் கூடமாக்கி, வாழ்க்கையைப் பொருளுடையதாக்கி அதனில் பெரும்பங்கு வகிப்பவள் மனைவி யாவாள். ஆனால், அவள் உடல் உணர்வுகளுக்கு அடிமையாகும் பொழுது குடும்பமே - கணவன் - மனைவி உறவுநிலையே - அதன் புனிதமே சிதைந்து விடுவதைக் காண முடிகின்றது.

இவ்வகையில் அலங்காரத்தம்மாள், கணவன், குழந்தைகள் ஏன் உலகமே வெறுக்கத் தக்க ஒருத்தியாகி, காசிக்குத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனியே செல்கின்றாள். இவ்வகையில் அவள் வேண்டத் தகாத-வளாக, பயனற்றவளாக ஆகி விடுகின்றாள்.

இந்நாவலில் தலைமைப் பாத்திரம் தன் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் இழந்து விடுதலோடு, பாரம்பரிய அமைப்பில் சிதைந்ததாகவும் காணப்படுகின்றது.

1.3. சினிமாவுக்குப் போன சித்தாளு:

ஆண்டாண்டு காலமாக மக்கள் தாங்கள் கடைப்பிடித்து வந்த கலாச்சாரம் சிதைவு பெற்று, அச்சிதைவிற்குப் பலியான ஒருத்தியைத் தலைமைப் பாத்திரமாகக் கொண்டு இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. இம்முறை மரபு வழியில் படைக்கப் பெறுவதில்லை.

அறியாமையும் பேதைமையுங் கொண்ட 'கம்சலை' என்ற ஏழைத் தொழிலாளிப் பெண், திரைப்பட உலகின் கலாச்சாரத்-திற்குப் பலியாகின்றாள். இவளது நிலை கெட்ட வாழ்வின் மூலம் இன்றைய கலாச்சாரச் சிதைவை, த. ஜெயகாந்தன் இந்நாவலில் வெளியிட்டுள்ளார். இந்நிலையில் கலாச்சாரச் சிதைவை விளக்கும் மாதிரியாக கம்சலையின் பாத்திரப் படைப்பு அமைந்துள்ளது.

இன்றைய காலத்தில் மக்களிடையே ஆற்றல் வாய்ந்த கருவியாகத் திரைப்படம் விளங்குகின்றது. இத்துறை பணம் சேர்க்கும் சிலரது கைகளில் அகப்பட்டுக் கொண்டு அவர்களின் விருப்பப்படி செயலாற்றி வருகின்றது. பணம் சேர்ப்பதுதான் அவர்களின் நோக்கம் என்று வந்த பிறகு, உண்மைக்கும் கலைத் தொண்டிற்கும் இடமில்லாமல் போய் விடுகின்றது. மேலும், அதற்கென்று ஒரு கலாச்சாரத்தை உருவாக்கி, அத்-துறை சீரழிவுடன் விளங்கி வருதலோடு, மக்களையும் சீரழி-விற்கு உட்படுத்தி வருவதைக் காணலாம்.
இதனை,

> "பணம் சேர்ப்பது ஒன்றே எண்ணம் என்றநிலை
> வந்து, கலையையும், உண்மையையும், உழைப்பை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும் மறந்துவிட்ட போக்கு வளர்ந்துள்ள அலங்கோல நிலைதான் திரையுலகில் உருவாகி வருகின்றது''[13]

என்பர் சு. வேங்கடராமன்.

திரைப்படம் எடுக்கின்றவர்கள் உண்மைக்கும் மனச் சான்றிற்கும் கூடக் கட்டுப்படாமல், தங்களிடம் பணம் உள்ளது என்ற ஒரே காரணத்தினால் பல தீமைகளைப் புரிந்து வருகின்றனர். திரைப் படங்களில் நடிப்பவர்களும் அக-புற ஒழுக்கங்களைப் பற்றிக் கவலைப்படாமல் பணம் சேர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்றனர். அத்துடன், அவர்கள் தாங்கள் வாங்கும் பணத்திற் கேற்ப உண்மையாக உழைக்காமல் பணம் போடுபவரை ஏமாற்றி வருவதையும் காணமுடிகின்றது. அவர்கள் போடும் வேடத்தை உண்மை யென்று நம்பி, தங்களைச் சுற்றி வரும் மக்களை மந்தைக் கூட்டமாக அவர்கள் மாற்றி வருகின்றனர். இவர்கள் மக்களின் மத்தியில் நெறியாளர்கள் போல் வேடமிட்டு அவர்களை ஏமாற்றி இரட்டை வேட மிட்டு வாழ்வதையும் காணலாம்.

மக்கள் திரைப்படத்தை பார்ப்பதோடு மட்டும் நின்று விடாமல், அவற்றைப் பின்பற்றி வரும் இதழ்கள், பத்திரிகைகள் ஆகியன தருகின்ற செய்திகளையும் நம்பி, அந்த நிழற் பட வாழ்வின் போலி மயக்கத்திற்கு உட்படுவது நடைமுறை வாழ்க்கையில் காணக் கூடியதாகும். வசதி படைத்தவர்கள் மட்டுமின்றி வயிற்றுப் பாட்டிற்கு வாடுபவர்களும் கூட, கூட்டம் கூட்டமாகத் திரைப்படம் பார்க்கச் செல்கின்ற அவல நிலையினைக் கண் கூடாகக் காணமுடிகின்றது.

திரைப்படம் வெளியான முதல் நாளே மக்கள் முந்தியடித்துக் கொண்டு படம் பார்க்கச் செல்வதும் படத்தில் வரும் போலியான வாழ்வை எண்ணி ஏங்குவதும், நடிகர், நடிகைகளுக்கு ரசிகர் மன்றம் ஏற்படுத்தித் தனிநபர் வழிபாடு செய்து வருவதையும் நடை முறையில் காணலாம் எனவே,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரைப்படம் மக்களைச் சிந்திக்க விடாமல், அவர்களின் அறிவு மழுங்கிப் போய்விடும் அளவிற்குச் சீரழிந்து கிடக்கும் அவலத்தினைச் சமுதாய வாழ்விலே காணலாம்.

பொழுது போக்கிற்காக இருக்க வேண்டிய இக்கலைத் துறை, மக்கள் நலனையும் வாழ்க்கைப் போக்கினையும் கெடுத்து வருகின்றது. இம்மண்ணிற்கென அமைந்த பண்பாட்டுச் சிறப்பு மிக்க வாழ்க்கை சீர்கெட்டுப் போகின்ற அளவிற்கு மக்களை எங்கோ அழைத்துச் செல்கின்ற பண்பாட்டு இடைவெளி ஏற்படத் திரைப்படத்துறை காரணமாகின்றது.

இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில், கலைத்துறையில் ஏற்பட்டுள்ள முதலாளித்துவப் போக்கு ஏழைகளை எந்த அளவிற்கு அறியாமையில் ஆழ்த்தியுள்ளது என்பதைக் கம்சலையின் நிலைகெட்ட வாழ்வு விளக்குகின்றது. எனினும், வெவ்வேறு இடங்களில் இச்சீரழிவு வெவ்வேறு அளவுகளில் இடம்பெற்றுள்ளது. ஆயினும் பண்பளவில் இவையாவும் ஒன்றேதான்[14] எனக்குறிப்பிடலாம்.

அறியாமையும் பேதைமையுங் கொண்ட மக்களுக்குத் திரைப் படம் காட்டுகின்ற உலகம் ஓர் இலட்சிய உலகமாகவும், அதில் நடிப்பவர்கள் நெறியாளர்கள் என்ற எண்ணமும் ஏற்படுகின்றது. ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக அது ஒரு போலி உலகம் என்றும் மாயை உலகம் என்றும் மக்களுக்குத் தெரிவதில்லை. மேலும், அது பண்பாடற்ற தன்மையும் ஏமாற்றுகிற வித்தையும் வேடத்தன்மையும் கொண்டது என்பதையும் மக்கள் உணர்வதில்லை.

இதனை,

"......பூசிக்கிறது தானே சினிமா! மேக்கப்பு தானே! வெளிச்சம் தானே! சினிமான்னாவே, வெளக்கை அணைச்சிட்டு இருட்டுல நடத்தற வித்தை தானே! அந்த வித்தையிலே கெழம் இளசா மாறும், இளசு கிழமா மாறும்... கறுப்பு சிவப்பா ஆவும், செவப்பு கறுப்பா ஆவும்; எல்லாம் ஒரே மாறாட்டம் தானே?..."[15]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது திரையுலகின் எதார்த்தத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இத்தகைய சினிமாத்தனம் இன்றைய சமுதாயத்தின் எல்லா மட்டங்களிலும் காணப்படுகின்றது. இதனைத் தரகர் மனோன்மணி கூற்றில் காணலாம்:

> ''கம்சலை நீ இதுமாத்திரம்தான் இப்படின்னு நெனச்சிக்காதே? மனுசாளு கதையும் இப்படித் தான்''[16].

கம்சலை நத்தம்பட்டுக் கிராமத்தில் கள்ளம் கபடமற்ற பெண்ணாக வாழ்ந்து வருகின்றாள். நகரத்திற்குப் பிழைப்புத் தேடி வந்த செல்லமுத்து, திரைப் படத்தை பார்த்தபின் தன் உறவினளான கம்சலையின் நினைவு அதிகமாகின்றது. அவளைப் பற்றி நினைப்பு அவனிடம் அதிகமாகவே, அவன் தன் கிராமத்திற்குச் சென்று அவளைத் திருமணம் செய்து கொண்டு அவளைச் சென்னைக்கு அழைத்து வருகின்றான். சென்னைக்கு வந்த கம்சலை மற்ற பெண்களைப் போல நகர நாகரிகத்திற்கு அடிமையாகிச் சீரழிகின்றாள்.

திரைப் படம் என்பது ஆள் மாறாட்டம் என்பதும் இருட்டிலே காட்டுகிற ஒரு வித்தை என்ற ஞானமும் இல்லாத செல்லமுத்து, காதல் கற்றுத் தரலாம் என்ற யோசனையில் அவளைத் திரைப்படத்திற்கு அழைத்துச் செல்கின்றான். அதுவும் வாத்தியார் படத்திற்கு அழைத்துச் செல்கிறான். ஏனெனில் அவன் வாத்தியார் ரசிகன். நாளடைவில் திரைப்படம் என்பதே அவள் வாழ்க்கையில் பிரிக்க முடியாத அம்சமாகிவிடுகின்றது.

இதனை, செல்லமுத்துவின் கூற்று விளக்குகின்றது:

> ''அவபாட்டுக்கு ஒயுங்கா வேலைக்குப் போறா. ரெண்டோ மூணோ சம்பாரிக்கிறா. அதிலே பாதி சினிமாவுக்குப் போயிடுது. அதுவும் வாத்தியார் படம்னா எத்தனை ரூபா வேணும்னாலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாப்பா. அலுக்காது. சலிக்காது. மொதல் நாளே மொதல் ஆட்டமே பார்க்கணும். இல்லாட்டா தலை வெடிச்சிடும் அவளுக்கு மேஸ்திரிகிட்டே அது இதுண்ணு சொல்லிவிட்டு மத்தியான ஆட்டத்துக்கே போவணும்''[17].

இது, திரைப்படம் மக்கள் வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒன்றாகச் சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காட்டுகின்றது.

கம்சலையின் வாழ்க்கையில் சினிமா ஒன்றாகி விட்ட நிலையில், அவள் குறிப்பிட்ட நடிகரின் மீது தணியாத மோகம் கொண்டு வாழ்கின்றாள். செல்லமுத்துவும் அந்நடிகரின் அபிமானியாக இருக்கின்றான். அவர்களுடைய வீடு முழுவதும் வாத்தியார் படம் ஒட்டப்பட்டிருக்கும். அப்படத்திற்கு நேராகக் கம்சலை எப்பொழுதும் உட்கார்ந்திருப்பாள். தன் கணவன் செல்லமுத்து தன் அபிமான நடிகரின் படம் போட்ட பனியன் போட்டிருந்தால் அவனுடன் சரசம் செய்வாள். கணவனுடன் உறவு கொள்ளும் எந்நிலையிலும் அந்த நடிகரை மனத்திற் கொண்டே அவள் செயல்படுவாள். சுருங்கக் கூறின், அந்த நடிகரே எல்லாம் தனக்கு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாள் கம்சலை.

இதனைப் பின்வரும் கூற்றிலிருந்து அறியலாம்:

''இப்பெல்லாம் கம்சலைக்குச் சினிமாவை மனசிலே நெனைச்சாத்தான் செல்லமுத்துவையே புடிக்கும்னு ஆயிடுச்சு...
!... என்னைக்காவது ராத்திரியிலே அவனும் நேரத்திலேயே வூட்டுக்கு வந்து, அவளுக்கும் சினிமா நெனைப்பிலே மனசு மயங்கி இருந்தாத்-தான் மத்த விசயமெல்லாம்...
''.. ஒரு தடவை கூட அவ என்னை நெனச்சுக்கின்னு எங்கிட்டே படுத்தது இல்லை! .. வாத்தியார் தான்...''[18]

இது பண்பாட்டுச் சீரழிவைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்சலை குறிப்பிட்ட நடிகரே எல்லாம் என்ற நிலைக்கு ஆளாகிய நிலையில், அவர்மீது கொண்ட மோகம் வெறியாக மாறி விடுகின்றது. இதனை யறிந்த அவள் கணவன் அவளை வேலைக்கு அனுப்பாமல் வீட்டிலேயே இருக்கும்படி செய்து விடுகின்றான். இதனால் அவன் மீது கம்சலை கோபமும் வெறுப்பும் கொள்கின்றாள். இதனைத் தொடர்ந்து வீட்டில் அமைதி யில்லை. இந்நிலையில் வாத்தியார் படம் இலட்சத்தில் ஒருவன் வெளியிடப்படுகின்றது. அதைப் பார்க்க இயலாத நிலையில் கம்சலை பித்தம் பிடித்துத் தன்னுணர்வின்றி இருக்கின்றாள்,

இதனை,

> "தெரு ஒரத்திலே துணி இல்லாம நிக்கிறோ மின்னு நெனப்புக்கூட இல்லாம அப்படியே அந்தப் படத்தைப் பார்த்துக்கின்னு நிக்கிறா கம்சலை. நம்பளை இந்தக் கோலத்திலே அவரு கண்ணடிச் சிக்கின்னு பார்க்கிறாரென்னு நெனச்சி 'ஐயோ ராசான்னு' பல்லைக் கடிச்சிக்னு அப்படியே ரெண்டு கையையும் மார்மேல் வெச்சி அனைச்சிக்கிற மாதிரி இறுக்கிக்கிறா "[19]

என்று நாவலாசிரியர் தந்துள்ளார்.

இக்கூற்றில் கம்சலையின் வெறி உணர்வு காட்டப்படு கின்றது.

இவ்வாறு அபிமான நடிகரின் மீது வெறிகொண்டு திரியும் கம்சலையின் பலவீனத்தைப் பயன்படுத்தி, செல்லமுத்துவின் முதலாளி சிங்காரம் அவளை லட்சத்தில் ஒருவன் படம் பார்க்க அழைத்துச் செல்கின்றான். அத்துடன் அவளைக் கட்டாயப்படுத்தி உடலுறவும் கொள்கின்றான். அத்துடன் தரகர் மனோன்மணியிடம் அவளை ஒப்படைத்து விடு-கின்றான். இவளும் கம்சலையின் பலவீனத்தைப் பயன்படுத்தி அவளது வாழ்வை நிலை குலையச் செய்கின்றாள். இவ்வாறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்சலையின் வாழ்வு சீரழிக்கப்படுகின்றது. அவளுடைய கற்பு சிதைக்கப்பட்டு கம்சலை அபலையாக ஆக்கப்படுகின்றாள்.

திரைப்பட உலகம் அதற்கென்று ஏற்படுத்திக் கொண்ட துணைக் கலாச்சாரத்தால் இன்றைய சமுதாயம் பாழாக்கப் பட்டு வருகின்றது. இது ஒரு சமுதாய வீழ்ச்சியினை அடையாளப்படுத்துவதாகும். கலாச்சாரச் சிதைவின் மாதிரிப் படைப்பாக கம்சலை படைக்கப்பட்டிருக்கின்றாள்.

இங்கும் தலைமைப் பாத்திரம் அற நெறிக்கு மாறுபட்டு இருப்பதுடன் பண்பாட்டிலிருந்தும் பிறழ்ந்து விடுகின்றது. இந்நிலையில் இத்தலைமைப் பாத்திரம் சிதைவு பெறு கின்றது.

1. 4. முடிவுரை:

தமிழ்ச் சமூக அமைப்பில் 1960 களுக்குப் பின் வளர்ச்சி பெற்றது முதலாளித்துவச் சமூக அமைப்பே என்று சொல்ல வேண்டும். நிலவுடைமைச் சமுதாயத்தின் எச்சங்கள் ஆங்காங்கே காணப்படினும், இன்று முதன்மையான வடிவமாக முதலாளித்துவச் சமூகம் இருக்கின்றதை மறுக்க இயலாது. நிலவுடைமைச் சமூகம் நிலவி வந்தவரை, அது மக்களின் உணர்வுகளைத் தடுத்தே வந்திருக்கின்றது அத்துடன் அது ஒரு சமூக இலட்சியத்தையும் தத்துவத்தையும் மரபையும் முன்வைத்தே வந்துள்ளது. ஆனால், இவை முதலாளித்துவச் சமூக அமைப்பால் சிதைக்கப்பெற்றன; அவற்றை நிலைநிறுத்த முயற்சி செய்தது. ஆயினும் நிலவுடைமைச் சிதைவை இதனால் தடுத்து நிறுத்த இயலவில்லை.

1960 களுக்குப்பின் முரண்பாடுகள் தீவிரமாயின. அத்துடன் சமூகம் தொழில் மயமாகிவிட்டது. மேலும், வாழ்க்கை நெருக்கடிகள், விலைவாசி ஏற்றம், கள்ளச் சந்தை, லஞ்சம், வேலையின்மை, பணப் பற்றாக்குறை போன்றவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவை மனித குலத்தை நெருக்கடிக் குள்ளாக்கின. இதனால் மனிதன் தன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல்பை இழந்து வெறுமையாகி விட்டான். இந்நிலையில் அவன் பல பிரிவுகளாகப் பிளவு பெற்று தனியனாக இருக்-கின்றான். அத்துடன் அவனது பண்பாடும் சமுதாய மதிப்பு-களும் சிதைந்து வருகின்றன. இத்தகைய சிதைவை விளக்கும் மாதிரியாக அலங்காரத்தம்மாள், கம்சலை ஆகியோர்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற மாதிரிகளைப் படைப்பது என்பது, நமது பண்பட்ட சமூகத்தின் மண் வளமிழந்து வருவதைக் காட்டு கின்றது எனக் குறிப்பிடலாம்.

சான்றாதாரங்கள்:

1 R. Chandra Sekaran, Hero: In disintegration - A study in post Indepentent - Tamil Novels, நான்காவது கருத்தரங்க மலர்-1972, ப — 45.

2 Maxim Gorky, On Literature, p — 135.

3 மேலது.

4 வெங்கட் சாமிநாதன், என் பார்வையில். ப — 120.

5 அம்மா வந்தாள், ப — 10

6 மேலது ப — 45

7 மேலது, ப — 113

8 மேலது, ப — 152

9 மேலது, ப — 52

10 மேலது, ப — 134

11 மேலது, ப — 88

12 மேலது ப — 77

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13 சு. வேங்கடராம், அகிலன் சிறுகதைகள் - ஒரு திறனாய்வு, ப — 56.

14 எஸ். தோதாத்ரி, ஜெயகாந்தன் ஒரு விமர்சனம், ப — 32

15 சினிமாவுக்குப் போன சித்தாளு, பக்—12—13.

16 மேலது, ப — 92

17 மேலது, பக் — 110 — 111.

18 மேலது, ப — 14, 15, 21.

19 மேலது, ப — 45.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரை வட்டார வள்ளுவர் இனச் சடங்குகள்

வே. முத்தன்

முன்னுரை:

புதுவை மாநிலத்தின் ஒரு பகுதியாகவும், பழைய சோழநாட்டின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதியாகவும் விளங்கும் காரைக்கால் வட்டாரத்தில் வாழும் பல இன மக்களுள் வள்ளுவர் இன மக்களின் சடங்குகளை இக்கட்டுரை நோக்குகிறது. கட்டுரையாளர் இவ்வாய்வின் தொடர்பாக நேரில் சென்று சேகரித்த தரவுகளும், பழகியும், உற்றுப் பார்த்தும், கிடைத்த குறிப்புகளும் இக் கட்டுரைக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

வள்ளுவர் இனப்பின் புலம்:

காரைப் பகுதியில் வாழும் கிறித்தவர், இஸ்லாமியர், இந்துக்கள் ஆகியோரிடையே இந்துக்களில் ஒரு பிரிவினராய் வாழும் அட்டவணை இனத்தவர்கள் காரைப் பகுதியில் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினராய் உள்ளனர். இவர்களுள் ஆதி திராவிடர்தான் மிகப்பெரும்பான்மையினராய் உள்ளனர். வள்ளுவர்கள் மிகச்சிறு பான்மையினர் ஆவர். எனினும், காரைப் பகுதியின் 15 வகை அட்டவணை யினத்தவர்களில் இவ்வள்ளுவ இனத்தினரே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்வி நிலையிலும் பொருளியல் அளவிலும் அரசு ஊழியத்திலும் தனியார் தொழில் வகைகளிலும் உயர்நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இங்கு வள்ளுவர்கள் பெரும்பாலும் நாயனார் என்ற சிவ வழிபாட்டினர் ஆவர். எனினும், நிரவி சார்ந்த பிரிவினர், பொன்பேத்தி சார்ந்த பிரிவினர், திருவேட்டக்குடி பிரிவினர் என்றுதனித் தனியாகப் பெண் கொள்வினை கொடுப்பினை இன்றி வாழ்கின்றனர். மருத்துவம், குருத்துவம் (புரோகிதம்), நிமித்திகம் (ஜோதிடம்), தத்துத்தொழில், அரசு ஊழியம் போன்ற தொழில் சார்ந்தவர்களாய் உள்ளனர். இவர்களின் தொழில் சிறப்பிற்கு வழிவழியாய் முன்னோர்களால் கற்பிக்கப்படும் வாய்மொழிக் கல்வியும் ஏட்டுக் கல்வியும் நன்கு துணை செய்கின்றன. அட்டவணை இனத்தவர்களுள் பெரும்பான்மையினரான ஆதி திராவிடர்களுக்கு இவர்களே குருக்களாய் விளங்குகின்றனர். இவர்களின் உணவு வகைகளும், இருப்பிடத் தூய்மையும், ஆடை அணிகலன் சார்ந்த வளமும், உடல் நலமும், கல்வி அறிவும், பொருளாதார வசதியும் அட்டவணை இனத்தவர்களுள் இவர்களைத் தனிமைப்படுத்தி உயர்த்திக் காட்டுகின்றன எனலாம்.

சடங்குகள்:

தனிமனிதனின் கருவறை முதல், கல்லறை வரையிலான வாழ்வு பல மாற்றங்களைப் பெறுகின்றது. இம்மாற்றங்கள் இவனது குடும்பத்தையும் இனத்தையும் பாதிக்கின்றன. எனவே சமூகச் சிந்தனையாளர்கள் சமூக நலன் கருதி இம்மாற்றங்களை நெறிப்படுத்துகின்றனர். இந்நெறி முறைகள் வழிவழியாய்ப் பின்பற்றப்படுகின்ற பொழுது, சடங்குகள் ஆகின்றன. இச்சடங்குகளுக்குச் சமயங்களும் வலுவூட்டுகின்றன. இந்தியக் கிராமங்களில் பிறப்பு முதல் இறப்பு வரை ஏன் அதன் பின்னும் கூட, சடங்குகள் மேலோங்கி உள்ளன என்பதை ஆய்வாளர் D. N. மஜீன்தார் தமது 'இந்தியக் கிராமங்களில் வகுப்பு முறையும் அதுதரும் செய்திகளும்' என்னும் நூலில் விளக்குகின்றார். மானிட இயலார் வள்ளக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தோணி, மனிதனின் பிறப்பு, காது குத்தல், பூப்பு, திருமணம், இறப்பு, இறுதிக்கடன் என்றுள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் "வாழ்க்கைச் சுழற்சிச் சடங்குகள்" (Life cycle rituals) என்பர்.

பிறப்புச் சடங்குகள்:

காரைப் பகுதியில் வள்ளுவர் இனப் பெரியோர்களால் முறையாகத் திருமணம் செய்யப்பட்டபின் கருவுற்ற பெண்ணுக்கு ஐந்து அல்லது ஏழு மாதங்களில் பெண்ணின் பிறந்தகத்தார் நாள், கோள் பார்த்து பெண்ணின் புகுந்தகத்திற்கு வந்து வரிசை தந்து (வரிசை-பழம், தேங்காய், உப்பு, பாக்கு, வெற்றிலை, இனிப்பு, கார வகைகள்) மருந்துக் களி கொடுத்தல் செய்வர். இம்மருந்துக் களியில் துளசி இலை, வேப்பங் கொழுந்து, சங்கு இலை, சித்தரத்தை, வெள்ளை மிளகு, சுக்கு, பெருங்காயம், அரிசித் திப்பிலி, கண்டந் திப்பிலி போன்றவற்றுடன் இனிப்புக் கலந்து கொடுப்பர். இச்-சடங்கினையும், ஏழு அல்லது ஒன்பது மாதங்களில் நடக்கும் வளைகாப்புச் சடங்கினையும் பிள்ளைப் பேறுபெற்ற கட்டுக் கழுத்திகள் மட்டும் முன்னின்று நடத்துவர். வளைகாப்பின் போது பெண்ணின் பிறந்தகத்தார் பெண்ணிற்கு வெள்ளி, பொன் போன்றவற்றாலான வளையல்களையும் இடுவதுண்டு. முதல் குழந்தையைப் பெண் தன் தாய் வீட்டில் பெற்றுக் கொள்கிறாள். மூன்று முதல் ஒன்பது நாள்வரை மகப்பேறு பெற்ற தாய்க்கு உணவுடன் "நடகாயம்" கொடுக்கப்படுகிறது. குழந்தை பெற்ற தீட்டு பதினாறாம் நாள் தான் கழிகின்றது. இதுநாள் வரை தாய் இயற்கைத் தீர்வுக்கு வெளியில் செல்லும் போது பெண் துணையுடன் வார்கோல் கரிக் கட்டை, வேப்ப இலை, இரும்புக் கத்தி இவற்றுள் ஏதாவது எடுத்துக் கொண்டு வெளியில் செல்வாள். பதினோறாம் நாள் வரை அவ்வப்போது உணவில் கோழிக்கறி, மீன்கறி சிறிது சேர்த்து கொள்ளப் படுகிறது. ஆட்டுக்கறி விலக்கப்படுகிறது.

பதினாறாம் நாள் சடங்கின் போது மகப்பேறு பெற்ற வீடு தண்ணீரால் நன்கு கழுவப்படுகிறது. ஆட்டுக் கறி, கோழிக் கறி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருவாடு போன்ற அசைவ உணவுகளும், கொழுக்கட்டை, வடை, பாயசம் போன்ற சைவ உணவுகளும் ஆக்கப்படுகின்றன. குல தெய்வம் அல்லது, ஊர்ப் பொதுத் தெய்வத்திற்குப் படையல் செய்த பின் தாய் முதலில் விருந்துண்ணத் தொடங்கிய பின் புகுந்தகத்தார், பிறந்தகத்தார், உற்றார், உறவினர், நண்பர் விருந்துண்ணத் தொடங்குகின்றனர். தொட்டில் இன்று தான் கட்டப்படுகின்றது. தொட்டில் சேலையும் தாய்க்கும் சேய்க்கும் புத்தாடைகளும் சேயின் கழுத்து, இடுப்பு, விரல் போன்ற இடங்களில் வெள்ளி, பொன், போன்றவற்றாலான அணிகலன்களும் தாய் மாமனால் அணிவிக்கப்படுகின்றன. மாமன் முறையுள்ள மற்றயோரும் தொடர்ந்து வரிசை செய்வர். குழந்தையின் தந்தையின் சகோதரியின் வீட்டார் சிறுபரிசு தந்தால் போதும். தாய் மாமன் போன்று பெரும் பரிசு தரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

இவை யாவும் காரைப் பகுதியின் வன்னியர், ஆதிதிராவிடர் போன்ற மக்களிடையே வழக்கில் இருப்பினும் வள்ளுவர்களின் ''மருந்துக்களி'', ''நடகாயம்'' போன்ற தயாரிப்புகள் தனிச் சிறப்பு வாய்ந்தவைகளாக அமைகின்றன ஏனெனில், இவர்களின் சித்த மருத்துவ அறிவு நன்கு துணை செய்கிறது எனலாம். மகப்பேறுபெற்ற தாயும் சேயும் 45 நாள் அல்லது மூன்று மாதம் கழித்துப் பிறந்தகத்தாரால் புகுந்தகத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அடுத்தடுத்து வரும் குழந்தைகளைத் தாய்மார்கள் தம் புகுந்தகத்திலேயே பெற்றுக் கொள்கிறார்கள். 16 விழாவின் போது மட்டும் பிறந்தகத்தார் வந்து வரிசைப் பொருள்களுடன் 10, 50 என்று பணம் வைத்து, பார்த்து விட்டுச் செல்வர். ஆடை அணிகலன்கள் எதுவும் அளிப்பது கிடையாது.

திருமணச் சடங்குகள்:

அத்தை மகள், மாமன் மகள், அக்கா மகள், என்ற முறையில் காரைப்பகுதி வள்ளுவர்கள் திருமணம் முடித்துக் கொள்ளுகின்றனர். எனினும், ஒரு குலத்திற்கு உள்ளாகப் பெண் கொடுத்து எடுத்தல் இல்லை. சான்றாக,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருஞானசம்பந்தர் குலம், கவிராயர் குலத்தோடு தான் திருமணம் முடிப்பார்களேயன்றி, திருஞானசம்பந்தர் குலத்திற்குள் கிடையாது. பெண் மாப்பிள்ளை ஆகிய இரு வீட்டாருக்கும் மனம் ஒத்து வருமானால் நாள், கோள் பார்த்துப் பெண் வீட்டில் முகூர்த்த ஓலை எழுதுகின்றனர். முகூர்த்த ஓலைகளின் இருபடிகளில் மாப்பிள்ளை, பெண் ஆகியோரின் பெற்றோர்களும், தாய் மாமன்மார்களும், நாட்டாண்மை, பஞ்சாயத்து, ஆகியோர்களும் கையொப்பம் இடுகின்றனர். திருமண நாளின் முன் மாப்பிள்ளை வீட்டில் பரிசம் போடல் என்ற சடங்கு நிகழ்கிறது. பெண்ணிற்கு உரிய ஆடைகளும், அழகுபடுத்தும் பொருட்களும், காதிற்கோ, கழுத்திற்கோ உரிய ஒரு பொன் நகையும் 101 ரூபாய் வரையில் பரிசப் பணமும் மாப்பிள்ளை வீட்டார் பெணவீட்டாருக்குத் தருகின்றார்கள். மூன்று நாட்களுக்கு முன்பே இருவீட்டாரும் பந்தல்கால் நடுகின்றனர். திருமணத்தன்று கல்யாண வீட்டில் புதுமண்ணாலான மணமேடையில் கரகங்கள் அடுக்கப்படுகின்றன. ஆலமரம், அரச மரம், மாமரம் போன்றவற்றின் குச்சிகளில் நெய்யூற்றி, வேள்வித்தீ, மணமேடையில் வள்ளுவப் புரோகிதரால் வளர்க்கப் படுகிறது. வள்ளுவ மணமகன் பூணூல் அணிந்திருக்கிறார். ஓதியம்போத்து ஒன்று முகூர்த்தக் காலாக நடப்படுகின்றது. தேவார, திருவாசகம் ஆகிய தமிழ்மறைகள் ஓதப்படுகின்றன. வள்ளுவக் குரு தாலி எடுத்துக் கொடுக்க மணமகன், மணமகள் கழுத்தில் மூன்று முடிச்சுக்கள் {இட்டுத் தாலி கட்டுகின்றார். திருமணத்தில் தப்பு மேளம், உறுமி மேளம் போன்றவை முழங்கப்படுகின்றன. நையாண்டி மேளம் முழங்கும். இசை வேளாளர்கள், வள்ளுவர்களின் திருமணம் கல்யாண மண்டபத்தில் நிகழ்ந்தால் மட்டும் இசை வாசிக்க வருகின்றனர். மணமக்களுக்கு வேண்டிய ஆடைகள், தாலி முதலியன யாவும் மணமகன் வீட்டுச் செலவையே சாரும். இத்திருமணத்தின் போது தாய்மாமன்மார் மண மக்களின் நெற்றியில் பொற்காசினை மாமன் பட்டமாகக் கட்டுவதுடன் பூமாலையும் இடுகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தோடு தாய்மாமன் வரிசை முடிவு பெறுகிறது. அன்றே, மணமகனுக்கு மணமகளின் சகோதரர் மச்சான் மோதிரம் என்று வரிசை வழங்கத் தொடங்குவதன் மூலம் புது மாமன் மைத்துன உறவு தொடங்குகின்றது. விழா முடிந்து விடை பெறும் தாய்மாமனுக்கு வழிச் செலவிற்குப் பணமும் மோதிரம் போட்ட மச்சானுக்கு வழிச்செலவுக்குப் பணத்துடன் வேட்டி, சட்டை, துண்டு என்று ஆடைகளும் எதிர் வரிசையாய் வழங்கப் படும். அத்தைமார் வரிசை அரிதாகவே இருக்கும். சகோதரிகள் தம் விருப்பப்படியும் வசதிப்படியும் நாத்திப்பட்டமோ (மணமகளுக்கு) மோதிரமோ (சகோதரனுக்கு) வழங்குவர்.

புகுந்த வீடு செல்லும் மகளுக்குப் பிறந்த வீட்டார் ஐந்து ஜோடி புது ஆடைகள், உறைபோடாத தலையணை கட்டில், மெத்தை, பாய், புதுக் குடித்தனத்திற்கான பாத்திரங்கள் போன்றவற்றை வழங்குகின்றனர். திருமணம் தொடங்கித் தாலி பிரித்துக் கோக்கும், சடங்கு சார்ந்த நிகழ்ச்சிவரை பெண் வீட்டார் மணமக்களை மூன்று முறை விருந்துக்கு அழைக் கின்றனர். முதல் விருந்தின் போதுதான் மேற்கூறிய சீர்வரிசைப் பொருட்களைக் கொடுத்தனுப்புகின்றனர். இனிப்பு, காரம் சார்ந்த பல வகையான பலகாரங்கள் வரிசையில் வைக்கப் படுகின்றன. பெரும்பாலும் விருந்துகளில் அசைவ உணவுக்குச் சிறப்புண்டு. முதல் விருந்தைப் பலகாரக் குடம் திறத்தல் என்று வழங்குகின்றனர். ஆடிப் பதினெட்டில் அல்லது மூன்று மாதம் கழித்துப் பெண் வீட்டார் தாலி பிரித்துக் கோத்தல் என்ற சடங்கினைச் செய்கின்றனர். ஆறு, வாய்க்கால், குளம் என்று ஊர்ப் பொது நீர்நிலைகளில் பிள்ளைப்பேறு பெற்ற கட்டுக்கழுத்திகள் முன்னின்று இச்சடங்கினைச் செய்கின்றனர் புதிதாக இரு பொன்மணிகள் செய்து தாலியுடன் இச்சடங்கின் போது இணைக்கின்றனர் பெண் வீட்டார்.

இறப்புச் சடங்குகள்:

வயதான பெரியவர் இறந்தவுடன் வெட்டியார் மூலம் தொலைவிலான இடங்களுக்கும் அருகில் உள்ள இடங்களுக்கு வள்ளுவர்கள் மூலமும் செய்தி அனுப்பப்படுகின்றது. இறந்த-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரின் ஆன்மா அமைதியடைய உடனுக்குடன் அந்தராட்ச பூசை என்ற பூசையைச் செய்து முடிக்கின்றனர். இப்பூசையின் போது இறந்தவர் முகம் மழிக்கப்பட்டு நீராட்டப்பட்டு ஆடைகள் சரி செய்யப்பட்டு பூணூல் அணிவிக்கப்பட்டு கால்கோலிய நிலையில் முதுகுப் புறத்தில் உரல் போன்றவற்றால் தாங்கல் கொடுத்து அமர வைக்கப்பட்ட பின் தேவார, திருவாசகப் பாடல்கள் சுருக்கமாகவும் அருமையாகவும் தமிழ் மந்திரப் பாடல்களாகப் பாடி முடிக்கின்றனர். இறந்த வள்ளுவரைப் பிற அட்டவணை இனமக்கள் தீண்டுவதை அனுமதிப்பதில்லை. வள்ளுவர்களுக் கெனத் தனியாக வண்ணார், அம்பட்டர் இல்லையாதலால் தாமாகவே தேர்கட்டத் தொடங்குகின்றனர். தேரின் அமைப்பு குத்துத் தேராகிறது. குழி வெட்டிட மட்டும் வெட்டியார்களைப் பயன்படுத்துகின்றனர். இறந்தவரின் இறுதி ஊர்வலத்தின் வரை வெட்டியார் பறை முழக்கிக் கொண்டிருப்பர். தகுந்த கூலி வழங்கப்படுகிறது. அந்தராட்ச பூசை நடக்கும் பொழுதே இறந்தவரின் வாய்மூலம் உட்செல்லும் வரை நல்லெண்ணெய், பாதரசம் கொடுக்கின்றனர் நெடுநேரம் உடல் கெடாமல் இருப்பதற்காக.இறந்தவர் சார்பாகப் பிறந்த கோடி-யும் முறைகாரர் சார்பாகப் புகுந்த கோடியும் எடுக்கப்பட்டு இறந்தவருக்கும் இருப்பவருக்கும் ஆண் பெண் யாவராயினும் அணிவிக்கப்படுகின்றன. நல்லெண்ணெய், சீயக்காய், இளநீர், பூ, மாலை, அரிசி ஆகியவற்றுடன் ஏனைய முறைகாரர்களும் கொண்டு வந்து துன்பத்தில் பங்கு கொள்கின்றனர். பங்காளி உறவினர்களும் பூமாலையுடன் வந்து கலந்து கொள்கின்றனர். உறவினர் யாவரும் வந்தபின் இறந்தவருக்குக் கொள்ளிக் குடம் எடுக்கும் மூத்த மகன் முதல் பங்காளிகள் குடங்கள் எடுத்துச் செல்வர். முன்னும் பின்னும் முறைகாரர்கள் வேட்டிப் பந்தல் அமைத்துச்செல்வர். தேவார, திருவாசகப் பாடல்களைப் புரோகிதர் தமிழ் மறையாக ஓதி முன் நடப்பார். பொது நீர் நிலையில் நீராடி, தர்ப்பையில் பூணூலும் மோதிரமும் அணிந்து நீர்கொணர்வர். அரகரா கோவிந்தா எனும் ஒலி ஒற்றுமையுடன் ஓங்கி ஒலிக்கப்படும். வீட்டுக்கு வந்ததும் இறந்தவரைத் தென்னங்கீற்றில் அமர வைத்து குடநீரால் நீராட்டுவர்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்ணெயும் சியக்காயும் இறந்தவரின் உறவு முறை கூறி இறந்தவரின் தலையில் வைத்துத் தேய்த்து நீராட்டிய பின் புரோகிதர் புதுமண் சட்டியில் தீ வளர்க்கத் தொடங்குவார். பேரன்கள் நாயுருவிச் செடியில் சுற்றிய நெய் துணியால் வேள்விச் சட்டியில். நெய் வார்ப்பர். கொள்ளி போடும் மூத்த மகன் புரோகிதரின் கட்டளைப்படி நெய் வார்ப்பார். அப்பொழுது ஆண்டு அறுபது, மாதம் 12, நாள் 7, திதி 15, விண்மீன் 27 ஆகியவற்றைப் புரோகிதர் கூறி இறந்தவரின் உறவு முறையைக் கூறுவார். இதனை மோட்ச மந்திரம் என்று அழைக்கின்றனர். இவ்வேளையில் இறந்தவரின் இருசார் உறவு முறையினர் ¼ ரூபாய் தொடங்கி, தம் விருப்பப்படி இறந்தவரின் உறவு முறை கூறி புரோகிதருக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். இதன்பின் கொள்ளிக்கான முத்திரிகளை நெய்யில் தோய்த்து மந்திரித்து மூத்த மகன் கையில் தருவார். ஏனைய மகன்களும் கையில் பிடித்து இறந்தவரின் முகத்தில் மும்முறை சுற்றி வேள்விச் சட்டியில் இடுவர்.

அப்பொழுது,

> "முன்னை இட்டதீ முப்புரத்தில்
> பின்னை இட்டதீ தென் இலங்கையில்,
> அன்னை யிட்டதீ அடிவயிற்றில்,
> நான் இட்டதீ மூள்க மூள்கவே"

என்று புரோகிதர் மறை முழக்கம் செய்வார். இச்செயல் முடிந்தபின் இறந்தவர் தேரில் அமர்த்தப்படுவார். வாயில் வெற்றிலை, பாக்கு, தாம்பூலத்துடன் கீழ்த்தாடை மேல்நோக்கி, உச்சந்தலையில் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். பூணூலும், தர்ப்பை மோதிரமும் விளங்கும். குத்துத் தேரில் ஒரு புறத்தில் கட்டுச் சோறு தொங்க விடப்பட்டிருக்கும். இழவு வீட்டுப் பெண்கள் மாரடித்து அழுது புலம்பித் தேரினை மும்முறை வலம் வந்து வழிபடுவர். ஆண் வள்ளுவர்கள் மட்டும் தேரினைத் தூக்கிச் செல்வர். தீச்சட்டி வெட்டியாரின் கைபடாமல், வெட்டியாரால் தூக்கு பரண் மூலம் இடுகாட்டிற்குக் கொணரப் படும். இடுகாட்டிற்குத் தேர்வரும்போது மூத்தமகன் புரோகிதர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மந்திரித்து கொடுத்த கொள்ளிக் குடத்தை இடது தோளில் சுமந்து வருவார். இடையில் ஏனைய பிள்ளைகளும் மாற்றிக் கொள்ளுவர். அரகரா, கோவிந்தா குரல் எழுப்பப்பட்டுக் கொண்டு வரும். வெட்டியார் தேரினை இடுகாட்டின் முன் கோடிட்டு வழி மறைப்பார். காணியாட்சி வரியாக 1¼ ரூபாய் வெட்டியாருக்கு வழங்கப்பட்டு சுடுகாட்டுக் குழியைச் சுற்றி மும்முறை வலம் வந்து இறக்கப்படும். 4 அடி அகலமும் 6 அடி ஆழமும் உடைய குழியில் தென்பகுதியிலிருந்து இறந்தவரை வள்ளுவர்கள் மட்டும் தொட்டுத் தூக்கிக் குழிக்குள் இறக்கி சமாதிக்குரிய முதல் மண் மூத்த மகனால் புறங்கையால் தள்ளப்படும். பின்பு உறவு உடையோர் புறங்கையால் மண் தள்ளுவர். அப்பொழுது இருசார் உறவுடையோர் இறந்தவரின் உறவுமுறையைக் கூறி ¼ ரூபாய் முதல் தம் விருப்பப்படி குழி மேட்டில் காசு இடுவர். இக்காசினைச் சேகரித்துப் புரோகிதர் தூர நிற்கும் வெட்டியாரை அழைத்துக் கொடுப்பர். பின் வெட்டியார் மண்வெட்டியால் குழியை மூடிச் சமாதி செய்வார். இறந்தவர் உடல் குழியில் இறக்கப்படும் பொழுது தான் தாலி முதல் பிற அணிகலன்கள் எடுத்துக்கொள்ளப்படும் மண்வெட்டியைப் பிடியிலிருந்து கழற்றிக் குப்புறப் போட்டு வெட்டியார் விலகி நிற்பர். கொள்ளிக் குட நீர் சமாதியின் தலை மாட்டில் வைக்கப்படும். மூத்த மகன் புரோகிதருக்குச் சந்தனம் பூசி, பொட்டிட்டுப் பாத பூசை செய்வார். அதன் பின் புரோகிதர் சில மந்திரப் பாடல்களைப் பாடிக் கொள்ளிக் குட நீரை எடுத்து அங்குள்ள யாவர் மீதும் தெளிப்பர். தீப ஆரா தனை முடிந்த பின் யாவரும் தெற்குத் திசையில் தலைவைத்து வணங்கித் திரும்பிப் பாராமல் காசு பிரிக்கும் இடத்தை நோக்கி நடப்பர்.

காசு பிரித்தல் சடங்கு:

குழி வெட்டிய, வெட்டியாருக்குக் கூலிப் பணத்துடன் சுதந்திரப் பணம் ஒன்றும் சேர்த்து வழங்கப்படும். பறை கொட்டியோருக்கும், தேர்கட்டிய வள்ளுவர்களுக்கும், கூலி வழங்கப்படும். காவல் செய்யும் தலையாரி நீர்ப் பாய்ச்சும் நீராணிக்கர், ஊர்ப் பிள்ளை என்ற முறையில் ஆதி திராவிடர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று யாரேனும் அங்கு வந்தால் யாவருக்கும் தலைக்கு ஒரு ரூபாய் என வழங்கப்படும். இழவுச் செய்தியை வெளி ஊர்களுக்கு அறிவித்து வந்த வெட்டியார் இனத்தவர்களுக்கு ஒரு நாள் கூலி வழங்கப்படும். பின் யாவரும் பொது நீர் நிலையில் நீராடிய பின் இழவு வீட்டிற்குச் செல்வர். வாயிலில் குறுக்காகக் கிடத்தப்பட்டிருக்கும், உலக்கையைத் தாண்டி செம்புத் தண்ணீரை எடுத்து வாய் கொப்பளித்த பின் உள்ளே சென்று, இறந்தவர் கால் கோலி இருந்த இடத்தில் எரியும் நல்ல விளக்கை ஒளிமயமாய்க் கண்டு வணங்கிய பின் முறைகாரர்கள், அளிக்கும் புதிய தூய சைவ உணவை உண்டு பசியாறுவர்.

ஆதி திராவிடர், வன்னியர் ஆகியோரிடையே இறப்பின் போதும், அடக்கத்தின்போதும் மறை ஓதி புரோகிதர் வழி நடத்த எந்த ஒரு சடங்கும் கிடையாது. இனப் பெரியவர்களோ, வண்ணார், அம்பட்டர் போன்றோர்கள் தான் சடங்குகள் செய்கின்றனர். அடக்கம் செய்வதும், இறந்தவரைப் படுக்கவைத்தும் தான் சமாதி செய்கின்றனர். அகால மரணமாயினும் வள்ளுவர் எரிப்பது கிடையாது.

பால் தெளித்தல்:

8 ஆம் நாள் பால் தெளித்தல் சடங்கு நடக்கிறது. வீடு, கழுவப்பட்டு, விளக்கு ஏற்றப் படும். பழம், பாக்கு, வெற்றிலை சூடம், சாம்பிராணி, பால், தயிர், கோமியம், சீவிய இளநீர் ஆகியவற்றை வாங்குவதுடன் பலவகை இனிப்பு, காரம் சார்ந்த பலகாரங்களையும் இழவு வீட்டார் தயார் செய்வர். முதிய வள்ளுவர், லிங்கம், நந்தி, நான்கு பிள்ளையார், ஒரு பிச்சைக்காரன் ஆகிய களிமண் உருவங்களைச் செய்திடுவார். கட்டுச் சோறு, சாம்பார் சோறு ஆகியவற்றையும் சேர்த்து கட்டுக் கழுத்திகள் நல்ல விளக்கு முன் படையல் செய்வர். படையலில் மூன்றில் ஒரு பகுதியை பெண்களுக்குக் கொடுத்துவிட்டு மீதம் யாவற்றையும் பிரம்புக் கூடையில் இட்டு மறை ஓதி புரோகிதர் வழி நடத்த வெண் சங்கு முழங்க அரகரா, கோவிந்தா குரல் எழும்ப உற்றார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறவினருடன் இறந்த வீட்டு ஆண்கள் சமாதி செய்வர். சமாதி மேடைமெழுகப்பட்டு மூன்று படிகளுடன் விளங்கும், லிங்கம் சமாதியானவரின் தலைநோக்கி நடப்படும். நான்கு திசை-களுக்கும் பிள்ளையார் காவலாய் அமைவர். கிழக்குத் திசையில் நந்தியின் பின், பிச்சைக்காரர் நிற்பார். லிங்கம் தொடங்கி பிச்சைக்காரர் வரை புரோகிதரால் எலுமிச்சை, நாரத்தை, தேன், சர்க்கரை, நல்லெண்ணெய் போன்றவற்றால் அபிசேகம் செய்யப்படும். கற்பூர தீப ஆராதனை அகல் விளக்கிற்குக் காட்டப்படும். பலகாரங்களைத் திருஉருவங்களுக்குப் பகிர்ந்து படையல் செய்வர். புரோகிதர் மந்திரப் பாடல்களைப் பாடிப் பாலினை இறந்தவரின் மூத்த மகன் அல்லது கணவன் தொடங்கி லிங்கத்தின் மீது பால் வார்ப்பர். இது சமாதியானவரின் உச்சந் தலையில் சென்று தங்கும் என்று நம்புகின்றனர். பின் படையல் பொருட்களை யாவரும் பகிர்ந்து உண்பர். பிச்சைக்காரருக்கு உரிய படையலைத் தேர் கட்டிய வள்ளுவர் மட்டும் அல்லது ஊர்ப் பிள்ளையான ஆதி திராவிடர் ஒருவர் உண்பார். திரும்பிப் பாராமல் வந்து, வீட்டின் வாயிலில் குறுக்காகக் கிடக்கும் உலக்கையைத் தாண்டி நல்லெண்ணெய், சீயக்காய் ஆகியவற்றை இடக்கையில் எடுத்து வலக்கையில் தொட்டு செம்புத் தண்ணீரால் கை கழுவியபின், சுட்ட கருவாட்டையும், சுண்டி வைக்கப்பட்ட அகத்திக் கீரையையும் மென்று துப்பி, வாய் கொப்பளித்து வீட்டினுள் சென்று நல்ல விளக்கை வணங்குவர். பால் தெளித்தலின் போதும், முறைகாரர்களின் சைவ விருந்துச் சாப்பாடு உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருமாதி:

வள்ளுவர்கள் கருமாதியைச் சொர்க்கதீப அழைப்பு அல்லது சிவமய அழைப்பு என்று வழங்குகின்றனர்.



(மோட்சம்)

1, 2, 3, 4, துறக்க வாயில்கள்

5. உட்கலசம்

6. முப்பிரிவுத் தூண் நாணல் பந்தல்

7. பிள்ளையார், கலசம், தீபம் முதலியன.

கரித்தூள், செங்கல்தூள், பச்சை அரிசி மா ஆகியவற்றால் தரையில் கோலமிடுவர். அதன்மேல், மேற்காட்டப்பட்ட முறையில் சொர்க்கத்தை அமைப்பர் புரோகிதர். 26 அகல் தீபங்கள், 26 புதுமண் கலசங்கள், 26 பிள்ளையார் ஆகியவை சொர்க்கச் சுற்றுச் சுவர்களாக அமையும் நடுவில் நெல் பரப்பி வைக்கப்பட்டுள்ள இடத்தில், நூல் சுற்றப்பட்டுள்ள கலசத்தின் வாயில் மஞ்சள் பூசிய தேங்காய் வைக்கப்பட்டிருக்கும். கலசத்தின் மேல் முப்பிரிவுத் தூண் அமைத்து நாணல் கூரை அமைக்கப்படும். சொர்க்கத்தின் கீழ்ப் புற வாயிலில் புரோகிதர் அமருவார். ஆல், அரசு, மா, வேம்பு, பூவரசு முதலான ஐந்துவகை சுள்ளிக்குச்சிகளால் நெய் மூலம் வேள்வியைத் தொடங்குவார். தமிழில் மந்திரப் பாடல்களைப்பாடுவார். கட்டுக்கழுத்திகள் கால் ரூபாய் காணிக்கையுடன் முதலில் வந்து ஆண்டு, மாதம், நாள், திதி, விண்மீன் முதலியவற்றைப் புரோகிதர் ஓதிட தம் உறவுமுறை கூறிநெய்கலந்து அரிசிப்பொரியைப் புரோகிதரிடமிருந்து வாங்கி வேள்வித்தீயில் இடுவர். பின்னர் கட்டும் பொட்டும் இழந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்களும் காணிக்கை ஈந்து அரிசிப் பொரி வாங்கி வேள்வித் தீயில் இடுவர். பெண்களின் இவ்வணக்கம் முடிந்த பின் இறந்தவர் கணவராய் இருந்தால், மனைவியின் தாலியைக் கட்டும் பொட்டும் இழந்த (விதவைகள்) பெண்கள் பாலில் தாலி வாங்குவர். பிறந்தகத்தாரின் கோடி அவளுக்கு அப்பொழுது இடப்படும். பின் கற்பூர தீப ஆராதனை தொடங்கும். புரோகிதர் மறைப்பாடல்கள் பாடி, அகல்களில் ஒளி ஊட்டுவார். எங்கும் ஒளிப் பிழம்பாய் இருக்கும் நெய்யில் தோய்த்த நூல் கலசம் தொடங்கி, நாணல் கூரையில் முடியும். நெய் தோய்க்கப்பட்ட நூலின் அடிப்பகுதியில் கற்பூர தீபத்தில் ஒளியூட்டுவார். தீ முப்பிரி நாணல் பந்தலை அடையும் பொழுது இறந்தவர் மேல் உலகம் சென்று விட்டார் என்று நினைத்து கைகுவித்து வணங்குவார். பின் பலி (பூசை)ப் பொருட்களுடன் இறந்தவரின் பங்காளிகள், முறை-காரர்கள் என்ற இருசார் உறவினர்களுடன் வள்ளுவப் புரோகிதர் சிவாலயம் செல்வர். செல்லும் பொழுது உலக்கை ஏந்தி, எமதர்மராக நடித்து "யாரடா இவன்" .. என்று பாடி சொர்க்கத்தின் வாயில் அடைக்கப்படுகிறது, என்று நிற்பார். புரோகிதர் சொர்க்கத்தின் வாயில் திறக்க எதிர்ப்பாட்டுப் பாடிக் கழுவாயாக இரண்டாயிரம் பொன் என்று கூறி 1¼ ரூபாய் கொடுத்து சிவாலயம் நோக்கி வழி நடத்திச் செல்வார்.

சிவாலயத்தின் முன் பகுதியில் வள்ளுவப் புரோகிதர் வேட்டியால் தற்காலிக நாற்புறசுவர் மாளிகை எழுப்புவர். பூசைப் பொருட்களைச் சிவாலயக் குருக்களிடம் கொடுத்து அனுப்புவார். ஆரிய குருக்கள் சிவலிங்கத்திற்குப் பலி பொருட்களை அபிஷேகம் செய்து கொண்டு வந்து வள்ளுவ குருக்களிடம் கொடுப்பர். பிராமணக் குருக்களுக்குப் புதுவேட்டி, 1¼ ரூபாய், காணிக்கைப் பணம் போன்றவை அளிக்கப்படும். நாற்புறச் சுவர் மாளிகையில் பூசை பொருட்களின் முன் அமர்ந்துள்ள இறந்தவரின் கணவன் அல்லது மூத்த மகன் ஆகியோருக்கு வேட்டி, துண்டு போன்ற புத்தாடைகளைப் போர்த்துவர். மற்ற முறைகாரர்களும், ஆடைகள் நல்குவர். இந்தச் கருமாதிச் சடங்கு இரவு 2 மணி தொடங்கி காலை 5½ மணிக்குள் முடியும். பிற இனத்தவர்கள் (நண்பர்கள்) கருமாதிக்கு காலையில் தான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருவர்; மொய்ப் பணம் தருவர். கோடி தருதல் இல்லை. காலையில் சிற்றுண்டியும் நண் பகலில் வடை பாயசத்துடன் சைவ உணவையும் யாவருக்கும் விருந்தாகக் கருமாதி வீட்டார் தருவர். முறைகாரர்கள் மறுநாள் அசைவக் உணவைக் கருமாதி வீட்டாருக்கு விருந்தாகத் தருவர்.

ஆதிதிராவிடர், வன்னியர், ஆகியோரிடையே பால் தெளித்தல், மூன்றாம் நாள் நடக்கிறது. புரோகிதர் முன்னின்று அதனைச் செய்வதில்லை. வண்ணார். அம்பட்டர் போன்றோர்களே முன்னின்று செய்கின்றனர். கருமாதியின் போது ஆதி திராவிடருக்கு வள்ளுவப் புரோகிதரே முன்னின்று சடங்குகள் செய்கின்றார். வன்னியருக்குச் சிறுபடையலை வண்ணார், அம்பட்டர் ஆகியோரும், பெரும் படையலை ஆரியப் புரோகிதரும் செய்கின்றார்கள்.

காரைப் பகுதி வள்ளுவர்கள் மணம் முடித்துக் கொடுத்த பெண்களுக்கு இறக்கும் வரை தீபாவளி, தைப் பொங்கல் போன்ற ஆண்டுப் பட்டியலில் உள்ள விழாக்களின் போது தவறாமல் பழம், தேங்காய், பூ, வெற்றிலை, பாக்கு, கரும்பு, சர்க்கரை, ஆகிய வரிசைப் பொருட்களுடன் 10 முதல் 50 வரை பணம் வைத்து வரிசை அளிக்கின்றனர். பொருள் வசதிபடைத்த வள்ளுவர்கள் ஆடிப் பலகாரமும் அனுப்புகின்றனர். மணம் முடித்துக் கொடுத்த பெண்ணை முதல் குழந்தை கருத்தரிக்கும் வரையில் மட்டும் ஆடி மாதத்தில் பிறந்தகத்திற்கு அழைத்து வந்து விடுவர். அடுத்தடுத்த குழந்தைகளுக்கு ஆடி மாதத்தில் பிரிப்பதில்லை.

முடிவுரை:

காரைப் பகுதி வள்ளுவர்கள் தம் தனித்த இயல்புகளால், அரசியல் சலுகைகளுக்காக அட்டவணை இனத்தில் இருந்தாலும், மேலவர் மயமாக மாறி வருகின்றனர் என்பதை அவர்களுடைய சடங்குகள் மூலமாக அறியலாம்.

கள்ளர் நாட்டு வள்ளுவர்கள் இடையே தாய் வழிச் சமூக எச்சங்கள் மிகுந்தும், காரைப் பகுதி வள்ளுவர்கள் இடையே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாய் வழி எச்சங்கள் குறைந்தும் இருப்பதை மேற் கூறிய வற்றால் அறியலாம்.

காரைப்பகுதி வள்ளுவர்கள் தற்பொழுது, உயர்சாதி இந்துக்களில் பிராமணர்கள் போல் அட்டவணை இனத்தவர்-களுள் உயர்ந்தவர்களாக உள்ளனர் எனலாம்.

இவ்வாய்வுக்குத் துணைநின்ற கட்டுரை:

ம. வேலுச்சாமி, வாழ்க்கைச் சுழற்சிச் சடங்குகள், நாட்டுப்புறவியல், இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலைநகர் 1987.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்ககாலக் கபிலர் பற்றிய சிக்கல்கள் -ஓர் அறிமுகம்

ஆ. விஜயராணி
முனைவர் பட்ட ஆய்வாளர்

சங்க விலக்கியங்களுள் கபிலர் பாடல்கள் மிகுதியாக விடம் பெற்றுள்ளன, கபிலரென்ற பெயரால் பாடிய புலவர் ஒருவர்தாமா? பலரா? என்ற ஐயம் பலராலும் எழுப்பப்படுகின்றது. சங்க விலக்கியத்துள் குறுந்தொகைப் பாடல்களும் கலித்தொகைப் பாடல்களும் சொல்லாட்சி, உவமை, நடையமைப்புப் போன்ற மொழியமைப்பின், அடிப்படையில் ஒப்பீடு செய்யப் பெற்றுக் கபிலர் பற்றிய ஆய்வை இக்கட்டுரை மேற்கொண்டுள்ளது.

1. முன்னுரை:

தமிழ் இலக்கியங்களுள் சங்க இலக்கியங்களாக எட்டுத் தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களும் கொள்ளப்படுகின்றன. இவ்விரண்டு தொகுப்பு நூல்களின் பாடல் எண்ணிக்கை 2381 என்றும் இப்பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 473 என்றும் அறியப்படுகிறது.[1] இப்புலவர்கள் வரிசையில் முதன்மையானவர்களாகத் திகழ்பவர்கள் கபிலர், பரணர், நக்கீரர், கல்லாடனார், அம்மூவனார் போன்ற சிலரே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர்களுள் அதிகமான பாடல்கள் பாடியவராகக் குறிக்கப் பெறுகின்றவர் கபிலர். கபிலருடைய பெயர் மற்றும் பாடிய பாடல்கள் பற்றிப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடையே நிலவுகின்றன. மேலும், கபிலர் பாடிய கலித்தொகைப் பாடல்களுக்கும், மற்ற அகப்புறப்பாடல்களுக்கும் ஐங்குறுநூறு பாடல்களுக்கும் நடையில் பல வேறுபாடுகள் காண இடம் உள்ளது என்பது உய்த்துணரப்படுகிறது. எனவே, ஒருவரே இப்பாடல்களை எல்லாம் பாடினாரா என்ற ஐயத்தின் அடிப்படையில் அவர் பாடல்களில் உள்ள சிக்கலை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகிறது.

2. இலக்கியங்களில் கபிலர்:

சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை வந்துள்ள இலக்கியங்களில் கபிலர் என்ற பெயரில் பல்வேறு புலவர்கள் இடம் பெற்றுள்ளனர் கபிலர், தொல்கபிலர், கபிலமுனி, கபில தேவர், கபில தேவநாயனார் என்னும் பெயர்கள் தெரிய வருகின்றன. இப்பெயர்களினாலேயே கபிலர் ஒருவரா, பலரா, என்ற சிக்கல் பலருக்கும் ஏற்படுகிறது. இருப்பினும்? இவர்களின் அனைவர் பெயர்களும் ஒரே காலக் கட்ட இலக்கியத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1. கபிலர், தொல்கபிலர் என்ற பெயர்கள் எட்டுத் தொகை நூல்களிலும் கபிலர் என்ற பெயர் பத்துப் பாட்டிலும் காணப் படுகிறது.

2. சங்கம் மருவிய நூல்களில் ஒன்றான இன்னா நாற்பதின் ஆசிரியர் கபிலர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஏட்டுப் பிரதிகள் பலவற்றில் ஆசிரியர் பெயர் ‘கபில தேவர்’ என்றே காணப்படுகிறது.[2]

3. பக்தி இலக்கியங்களில் 11-ஆம் திருமுறையில் உள்ள மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்ற மூன்று பிரபந்தங்களையும் இயற்றியவர் கபில தேவ நாயனார் என்று அறியப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. தனிப்பாடல் இலக்கியங்களில் திருவள்ளுவ மாலையில் நெட்டிலை இருப்பை எனவரும் பாடல், பன்னிரு பாட்டியலில் சில சூத்திரங்கள் ஆகியன கபிலர் என்ற பெயரில் இடம் பெற்றுள்ளன.[4]

5. மேலும், கபிலர் என்ற பெயர் சாங்கிய நெறியை நிறுவிய முனிவர்களில் ஒருவர் பெயராகவும் பரிபாடலில் சுட்டப்படும் 11 கபிலர்களில் ஒரு பெயராகவும் அறியப் படுகிறது.[5]

இவ்வாறாக இலக்கியங்களில் கபிலர் என்ற பெயர் கொண்டு பல்வேறு பெயர்கள் காணப்படுகின்றன.

ஆனால், இப்பெயர் மாற்றங்கள் கபிலருக்கு மட்டுமின்றிச் சில சங்கப் புலவர்களுக்கும் காணப்படுகிறது. பரணர் பெயர் வன்பரணர், நெடுங்கழுத்துப் பரணர், பரண தேவநாயனார் என்று அறியப்படுகிறது. நக்கீரர் பெயர் நக்கீரனார், மதுரை நக்கீரனார் நக்கீரதேவ நாயனார் என்றும் கல்லாடர் பெயர் கல்லாட தேவ நாயனார் என்றும் பக்தி இலக்கியமான 11-ஆம் திருமுறையிலும் பிற இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க காலத்தில் சிறப்புப் பெற்று விளங்கிய புலவர்களின் பெயர்களைப் பிற்காலப் புலவர்கள் தங்களின் தகுதியை உயர்த்திக்கொள்ள வேண்டிச் சிறப்புப் பெயராக வைத்துக் கொண்டு இருக்கலாம் என்பதையே இது காட்டுகிறது. இருப்பினும் இங்கு எட்டுத்தொகை, பத்துப் பாட்டு நூல்களில் வரும் கபிலர், தொல்கபிலர் என்ற பெயரில் உள்ள சிக்கலே ஆகும். இவர்கள் இருவரும் ஒருவரா? அல்லது வேறானவர் களா? என்று காண்பதும், கபிலர் என்ற பெயரில் சங்க காலத்தில் பலர் இருந்தார்களா? கபிலர் பெயரில் அமைந்துள்ள பாடல்கள் அனைத்தும் ஒருவரால் பாடப்பெற்றனவா? என்று இங்கு ஆராயப்படுகிறது.

3. சங்க இலக்கியங்களில் கபிலர்:

சங்க இலக்கியத்தில் கபிலர் பாடல்களாகப் பத்துப் பாட்டில் ஒன்றான குறிஞ்சிப் பாட்டும் எட்டுத் தொகையில் பரிபாட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீங்கலாக உள்ள மற்ற ஏழிலும் இடம்பெற்றுள்ளன. கபிலர் பாடியனவாக மொத்தம் 235 பாடல்கள் குறிக்கப்படுகின்றன. ஆனால், ஒவ்வொரு தொகைநூலிலும் கபிலர் பெயரில் இடம் பெறும் பாடல் எண்ணிக்கை தமிழறிஞர்களால் வெவ்வேறு விதமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

குறுந்தொகையில் கபிலர் பாடிய பாடல்கள் 29 என்று ஒரு சிலரும்,[6] 28 என்று ஒரு சிலரும்[7] தத்தம் நூல்களில் குறிப்பிடுகின்றனர். நற்றிணையில் கபிலர் பாடியன 20 என்று ஒரு சிலரும்,[8] 19 என்று சிலரும் குறிப்பிடுகின்றனர்.[9] அகநானூற்றில் கபிலர் பாடிய பாடல்கள் 18 என்று சிலரும்,[10] 16 பாடல்கள் என்று சிலரும் [11] தமது நூல்களில் கூறுகின்றனர். புறநானூற்றில் கபிலர் பாடல்கள் 30 என்று சிலரும்[12], 28 என்று சிலரும்[13] தம் நூல்களில் குறிக்கின்றனர்.

இவ்வாறாகக் கபிலரின் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகைப் பாடல்களில் ஓரிரு பாடல்களில் ஒவ்வொரு ஆசிரியரும் எண்ணிக்கையில் வேறுபட்டு இருப்பதை அறியலாம். ஆனால், உ. வே. சாமிநாதய்யர், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, வேங்கடாசலம்பிள்ளை, வேங்கடசாமி நாட்டார், வையாபுரிப்பிள்ளை இவர்களின் சங்க இலக்கியப் பதிப்புகளைக் காணுகையில், குறுந்தொகையில் 29 பாடல் என்பதும் நற்றிணையில் 20 பாடல்கள் என்பதும், அகநானூற்றில் 18 பாடல்கள் என்பதும் புறநானூறில் 28 பாடல்கள் என்பதும் அறியப்படுகிறது. இருப்பினும், இவ்வேறு பாடுகள் மேலும் ஆராய்தற்குரியன.

4. கபிலர் பாடல்கள் பற்றிய சிந்தனைகள்:

எட்டுத் தொகை நூல்களோடு சேர்க்கப்பட்டுள்ள கபிலரின் 28 கலித்தொகைப் பாடல்கள் கபிலர் பாடியன அல்ல என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. மேலும், கால நிலையில் கலித்தொகை ஏனைத் தொகை நூல்களை விடப் பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்ற கருத்தும் நிலவி வருகின்றது.[14] இதேபோன்று தொடர்கள் திரும்பத் திரும்பப் பயின்றுவரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாய்மொழி இலக்கிய உத்தியினைக் காணும்போது ஐங்குறுநூறு ஏனையவற்றை விட முதலில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவி வருகின்றது.[15]

வையாபுரிப் பிள்ளை தனது சங்க இலக்கியப் பதிப்பில் கபிலர் பாடியதாகக் குறிஞ்சிக்கலி 29 பாடல்களையும் குறிக்கின்றார். ஆனால், தனது வேறு நூலில் கபிலர் பாடிய பாடல்கள் எண்ணிக்கையினைக் கூறும்போது 206 பாடல்கள் என்று குறிப்பிடுகிறார்.[16] இவ்வெண்ணிக்கை மாற்றமும் ஆராய்தற்குரியது.

மேலும், கலித்தொகை நெய்தற்கலியில் 25-ஆம் பாடல் உரையில் நச்சினார்க்கினியர், "தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட்செய்தார்" என்று கூறியிருப்பதால் கலித்தொகை முழுவதையும் நல்லந்துவனார் ஒருவரே செய்தார்[17] என்று சிலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். கலித்தொகை பாடியோர் இவரிவர் என்ற பாடல் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் 1887-ஆம் ஆண்டு முதல் கலித்தொகைப் பதிப்பில் காணப்படவில்லை[18] என்ற கருத்தினையும் சிலர் முன் வைக்கின்றனர்.

எனவே, மேற்கூறிய சிக்கல்கள் ஐயத்திற்கு இடமளிப்பதால் கபிலரின் குறிஞ்சிக் கலி, ஐங்குறுநூற்றுப் பாடல்கள் மற்ற தொகை நூல்களில் உள்ள அகப்பாடல்களோடு எவ்வகையில் ஒன்றுபடுகின்றன அல்லது வேறுபடுகின்றன என்பது இங்கு ஆராயப்படுகிறது. அதில் குறுந்தொகைப் பாடல்கள் மட்டும் கலித்தொகைப் பாடல்களோடு திணை, துறை, நிகழ்ச்சிகள், தொடர்கள், உத்திகள் என்னும் ஐந்து நிலைகளில் ஒப்பிடப்படுகின்றன.

5. திணைவழிப் பாடல்கள்:

கபிலரின் குறுந்தொகைப் பாடல்கள் 28-உம் குறிஞ்சித் திணைக்குரிய பாடல்கள் ஆகும். அதேபோன்று கலித்தொகையில் குறிஞ்சித் திணைப் பாடல்களாக 29 உள்ளன. அவற்றுள் 3 பாடல்கள் கைக்கிளைக்கும் ஒரு பாடல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருந்திணைக்கும் உரியன என்பது துறைக்குறிப்பின் வழி உணரப்படுகிறது.

மேலும் சங்க இலக்கியப் பாடல்களில் கைக்கிளை பற்றிய துறையில் 5 பாடல்களே காணப்படுகின்றன. இவ்வைந்து பாடல்களும் கலித்தொகையில் குறிஞ்சிக் கலியில் மூன்றும் முல்லைக் கலியில் இரண்டுமாக உள்ளன. பெருந்திணையைக் குறிக்கும் பாடல்களாகக் குறிஞ்சிக் கலியில் ஒன்றும் நெய்தற் கலியில் பத்துப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திணை மாற்றம் கபிலர் பாடல்களில் கலித்தொகையில் மட்டும் அமைந்திருப்பதும் மற்ற தொகைநூல்களில் இவ்விரு திணையும் இடம்பெறாது உள்ளதும் ஆராய்தற்கு உரியன.

6. கூற்றுத் துறை வழிப் பாடல்கள்:

குறுந்தொகையில் தோழி கூற்றாக 7 பாடல்களும் தலைவி கூற்றாக 16 பாடல்களும் தலைவன் கூற்றாக 5 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. கலித்தொகையில் தோழி கூற்றாக 20 பாடல்களும் தலைவி கூற்றாக 5 பாடல்களும் தலைவன் கூற்றாக 4 பாடல்களும் இடம்பெற்றுள்ள. குறுந்தொகையில் தலைவி கூற்றுப் பாடல்கள் அதிகமாகவும், கலித்தொகையில் தோழி கூற்றுப் பாடல்கள் அதிகமாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இக்கூற்றுகளைத் துறைகள்வழி அறியும் போது தோழி கூற்றில் 'வரைவு கடாதல்' என்னும் துறை இரண்டு தொகுப்புகளிலும் உள்ளன. தோழியிற் புணர்ச்சி, வரைவு மலிதல், ஆற்றுவித்தல், கடிநகரில் என்னும் துறைகள் கலித்தொகையில் மட்டுமே அமைந்துள்ளன. இதேபோன்று தலைவி கூற்றில் வரும் துறைகளும் [illegible] வரும் 5 துறைகளும் கலித்தொகை, குறுந்தொகை இவ்விரண்டிலும் வேறுபட்ட நிலையில் அமைந்திருப்பது உணரத்தக்கது.

எனவே, கூற்று, துறைகள் இவற்றின் வழி பாடல்கள் வேறுபட்டு இருந்தாலும், இத்தகைய மாற்றம் மற்ற தொகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

பாடல்களில் இடம் பெற்றுள்ளதா என்பதும் கபிலர் காலத்தில் வாழ்ந்த மற்ற புலவர்கள் இக்கூற்று, துறைகளை எம்முறையில் கையாண்டுள்ளனர் என்பதும் ஆராய்ந்து அறியத் தக்கது.

7. சுட்டப்படும் நிகழ்ச்சிகள்:

கபிலர் பாடல்களில் சுட்டப்படும் நிகழ்ச்சிகள் உள்ளுறை உவமைகள் மூலமே வருணனை செய்யப்பட்டு விளக்கப்படுகின்றன. அதில் குறிஞ்சி நில இயற்கைக் காட்சிகளே சுட்டப்பட்டிருப்பது அறியத்தக்கது.

குறுந்தொகையில் மன்னல் நீரருவி, மரையா, முசு, யானை, கன்று, பிடி, குரங்கு இவைகளின் செயல்கள் தலைவனின் செயற்பாடுகளுக்கு உள்ளுறையாகக் குறிப்புப் பொருளை உணர்த்துகின்றன. கலித்தொகையில் புராணக்கதையில் வரும் திருமகள், திருமால், சிவன், இராவணன், துரியோதனன், வீமன் இவர்களின் செயற்பாடுகள் சில பாடல்களில் உள்ளுறை உவமையாக விளக்கப்படுகின்றன.

இவையன்றி, கலித்தொகையில் யானை, புலி இவற்றின் செயற்பாடுகளும் தேள், இறால், தும்பி, பாம்பு இவற்றின் செய்கைகளும் மா, வாழை, பலா, காந்தள் இவற்றின் தன்மைகளும் தலைவன் தலைவிபர்க்கு உள்ளுறைக் கருப்பொருட்களாகக் கையாளப்படுகின்றன. உள்ளுறைக்குச் சுட்டப்படும் நிகழ்ச்சிகள் ஒன்றன்மேல் ஒன்று அடுக்கி ஒரு குறிப்புப் பொருளை உணர்த்துகிறது.

கதிர்விரி கனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சாரல்
எதிரெதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து
அதிரிசை அருவிதன் அஞ்சிலம்பின் சிவப்ப
முதிரிணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை
வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தி
... திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்ப 2
(கலி: குறி: சச;)

என்னும் பாடல் இயற்கையை வருணிப்பதாக இருந்தாலும்,

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உட்பொருள் மூன்று, நான்கு குறிப்புப்பொருள்களோடு தலைவனுக்கும், தலைவிக்கும் பொருந்துவதாகத் தோழி வாயிலாகக் கூறியிருப்பதை அறியலாம்.

ஆனால், குறுந்தொகையில் இத்தகைய நிகழ்ச்சிகள் அமையவில்லை என்பதும் ஏதாவது ஒரு சிறு நிகழ்ச்சியை விளக்குவதாகவே உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. இம்-முறை பா வடிவ அமைப்பினால் வேறுபட்டு இருக்கலாம் என்று கூறினாலும் நிகழ்ச்சிக்குச் சுட்டப்படும் பொருள்கள் குறுந்தொகையை விடக் கலித்தொகைப் பாடல்களில் பல்வேறு விலங்குகள், இயற்கை நிகழ்வுகள் இவற்றின் செய்கைகள் மூலம் சுட்டப்பட்டிருப்பது ஆராயத்தக்கது.

மேலும், விலங்கினங்களில் புலி கலித்தொகைப் பாடல்-களில் மட்டும் எடுத்தாளப்பட்டுள்ளது. குறுந்தொகையில் இவ்-விலங்கு ஒரு பாடலில் கூடச் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

8. தொடர்கள் ஆளப்படும் விதம்:

ஒவ்வொரு ஆசிரியரும் தமக்கெனச் சில குறிப்பிட்ட தொடர் அமைப்புகளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துகின்றனர். இத் தொடர் அமைப்புகளை நோக்குவதன் மூலம் படைப்பாசிரியரின் தனிப்பட்ட விருப்பத் தொடர்களை அறியமுடியும். அத்தொடர் பின்வருமாறு:

8. 1. விளித் தொடர்கள்:

ஒரு கருத்தினை நேரடியாகச் சொல்லும்போது விளித் தொடர்களை அதிகம் பயன்படுத்துவது இலக்கிய உத்தியாகும். சங்க இலக்கியத்தில் தோழி, தலைவி ஆகிய இருவரும் தலைவனை விளித்துப் பேசும் பாடல்கள் அதிகம் உள்ளன. இம்முறை ஒவ்வொரு ஆசிரியர்க்கும் வேறுபடலாம்.

தோழி, தலைவனை அந்தந்த நிலத்திற்கு ஏற்பப் பெயர் களைப் பல அடைகளோடு கூறுவது குறிப்பிடத்தக்கது குறுந்தொகையில் தோழி கூறுவதாக 3 பாடல்களில் 'நாட' என்றும் 2 பாடல்களில் 'வெற்ப' என்றும் மற்ற 2 பாடல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களில் இத்தகைய சொல்லாட்சி இல்லாமையும் காணப்படுகிறது. இதே போன்று தலைவியால் 10 பாடல்களில் 'நாட' என்றும், மற்ற 6 பாடல்களில் இச்சொல்லாட்சி ஆளப்படாமையும் அறியப்படுகிறது.

கலித்தொகையில் தோழி கூற்றில் அனைத்துப் பாடல்களிலும் நாட, வெற்ப, கிழவ, கானவ, நாடன்மகன் என்னும் சொற்களால் தலைவன் அழைக்கப்படுகிறான். "நாட" என்ற சொல்லுக்கு நன்மலை, வியன்மலை, அணிமலை, வளமலை, பயமலை என்கிற அடைச்சொற்களும், "வெற்பன்" என்பதற்கு மைதவழ், சேயுயர், மலைகெழு, தொடர்வரை, விறல். இலங்குதீர் என்னும் அடைச்சொற்களும், "கிழவ" என்பதற்கு மென்தோள், மலை என்னும் அடைச்சொற்களும் கையாளப் பட்டுள்ளன.

குறுந்தொகையில் 2 பாடல்களைத் தவிர மற்ற அனைத்துப் பாடல்களிலும் தலைவன் 'நாட' என்றே அழைக்கப்படுகிறான், ஆனால், கலித்தொகையில் பல்வேறு பெயர்களில் அழைக்கப் படுகின்றான். மேலும், ஒரே பாடலில் பலமுறை தலைவனைக் குறிப்பிடுதல் கலித்தொகையில் மட்டும் காணப்படுகிறது, அடைச்சொற்கள் கையாளப்பட்டிருப்பதும் கலித்தொகைக்கே உரித்தாகக் கொள்ளப்படுகிறது.

8. 2. அடைத்தொடர்கள்:

அடைத்தொடர் இலக்கியங்களில் தலைவி வருணனையின் போதும் விலங்குகளை விளக்கும் போதும் புலவர்களால் கையாளப்படுகின்றது. இம்முறை சில கருத்துக்களை நேரடி-யாகச் சொல்லாது, சில குறிப்பிட்ட அடைத்தொடர்கள் மூலம் தலைவன், தலைவியின் செயற்பாடுகளையும் தன்மைகளையும் விளக்குவதாகும்.

அவ்வாறு விளக்கும்போது விலங்கு, பறவைகளைப் பல்வேறு பெயர்களில் குறிப்பிடுதல் உண்டு. அதில் குறுந்-தொகையில் யானையை 6 பாடல்களில் களிறு, வேழம், பிடி என்றும் மயிலினை கான மஞ்ஞை, இனமயில், ஆடுமயில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றும் கிளியினைப் புனக்கிளி, படுகிளி என்றும் காக்கையைச் சிறுவெண்காக்கை, என்றும் குன்றக் கூகை என்றும் கையாளப்பட்டிருப்பதை அறியலாம்.

கலித்தொகையில் யானையை மதயானை, புன்செய் யானை, கொல்யானை, எழில்வேழம், புகர்முகக்களிறு, பெருங்களிறு, எழில் யானை என்றும் புலியை உறுபுலி, இரும்புலி என்றும் நரியைக் குறுநரி என்றும் குரங்கைக் கல்லாக் கடுவன், என்றும் மானை வருடைமான், வருடை நன்மான், வருடை மடமறி என்றும் குறிப்பிடுகின்றார்.

குறுந்தொகையில் யானை அடையின்றி அமைந்திருக்க கலித்தொகையில் யானையின் செயலோடு பல்வேறு அடைகள் சேர்ந்து வந்திருப்பது அறியத்தக்கது. மேலும், பறவைகள் கலித்தொகையில் 2 பாடல்களில் தவிர மற்றவற்றில் இடம் பெறாததும், விலங்கில் புலியினைக் குறுந்தொகையில் கையாளாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, விலங்கு-பறவைகளைக் கையாண்ட முறையில் இரு தொகைநூல் பாடல்களிலும் வேறுபாடு உண்மையை அறியலாம்.

குறுந்தொகையில் தலைவியை வருணிக்கும்போது அதில் கண், தோள், கை, கூந்தல் என்பனவற்றிற்கு ஓரசை அடைச்-சொல்லைப் பயன்படுத்துகிறார். கலித்தொகையில் அனைத்துப் பாடல்களிலும் பல்வேறு அடைமொழிகளைப் பயன்-படுத்துகிறார். கலித்தொகையில் மேற்கூறிய உறுப்புகள் இன்றி நுதல், பல், இதழ், முகம் போன்றனவும் அடைத்தொடரோடு கையாளப்பட்டுள்ளது.

குறுந்தொகையில் கண்ணிற்கு உண்கண், குவளையங்கண், பூங்கண் என்று அடைச்சொல்லைப் பயன்படுத்தியவர் கலித்தொகையில் பேரமருண்கண், கயமலருண்கண், நெய்தலித-ழுண்கண், பல்லிதழ்மலருண்கண் என மூன்று நான்கு அடை மொழிகளை அடுக்கிக் கூறுவது உணரத்தக்கது. மேலும், ஒரே பாடலில் பல அடைமொழிகளைப் பயன்படுத்தி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணிற்கு அடைச்சொல் பயன்படுத்தியதைப் போன்று கூந்தல், தோள் இவற்றிற்கும் இருள் உறழ் இருங்கூந்தல், நரந்த நாறிருங் கூந்தல், தடமென்றோள், பனைத்தடமென்றோள், என மூன்று நான்கு அடைகளைக் கையாண்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. இவ்வாறு அடைத்தொடர்களைப் பயன்படுத்திய விதம் கலித்தொகை, குறுந்தொகையில் இருந்து வேறுபட்டு இருப்பதை அறியமுடிகிறது.

8.3 இணைப்புத் தொடர்கள்:

பெயரெச்சங்கள், வினையெச்சங்கள், உம்மை உருபுகள், தொடர் இணைப்பன்கள் முதலானவை தொடர்களை விரிப்பதற்கும் அதன்மூலம் அக்கருத்தை இணைப்பதற்கும் பயன்படுகின்றன.

இதில் 'ஆனால்', 'அதனால்', 'என வாங்கு', 'ஏனென்றால்,' போன்ற தொடர் இணைப்புகள் பாடலில் பயின்றுவருதல் உண்டு. மேற்கூறிய தொடர்கள் கலித்தொகையில் நேரிடையாகக் கையாளப்படுகின்றன. 'எனவாங்கு' என்னும் தனிச் சொல் கலிப்பாவின் உறுப்புக்களில் ஒன்று என்று பெயர் பெற்றாலும் அது அப்பாடலில் முன்கூறும் கருத்திற்கும், பின் கூறவரும் கருத்திற்கும் இணைப்பாக இருந்து அப்பாடல் கருத்தினை விரிவுபடுத்துகிறது.

குறுந்தொகையில் இத்தகைய தொடர்கள் இடம் பெற வில்லை என்பதும் பாடலின் பொருள் கொள்ளும்போதே இத்தகைய சொற்கள் வெளிப்படுகின்றன என்பதும் உணரத் தக்கது. இம்மாற்றம் பா வடிவில் வேறுபட்டாலும் மற்ற கலித்தொகைப் பாடல்களில் எவ்வகையில் ஆளப்பட்டுள்ளது என்பது மேலும் ஆராய்தற்குரியது.

8.4. உவமைத் தொடர்கள்:

ஒப்புமைத் தொடர்களைப் பல ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் பயன்படுத்தி இருந்தாலும் உவம உருபுகளைக் கையாள்கிற முறையில் வேறுபடலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறுந்தொகையில் அன்ன, இன், போல, ஆங்கு, என்னும் உவம உருபுகள் மட்டும் இடம்பெறுகின்றன. கலித்தொகையில் மேற்கூறிய உருபுகள் இன்றி போல், என, புரை, ஒப்ப, அற்று, ஏய்ப்ப, போலும், ஏய்க்கும், ஓர்க்கும் போன்ற உருபுகளும் இடம் பெற்றுள்ளன. எனவே, கலித் தொகையில் இத்தகைய உவம உருபுகளைக் கையாண்டிருப்பதி லிருந்து கபிலரின் மற்ற தொகைநூல் பாடல்களில் அவை எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பது மேலும் ஆராய்தற்குரியது.

மேற்கூறிய தொடர் அமைப்புகளில் காணப்படும் மாற்றங் களேயன்றி, சொல்நிலையில் பாடல்கள் எவ்வகையில் முடிக்கப்பட்டுள்ளன என்றும், ஒலி நிலையில் எதுகை, மோனை என்ற அமைப்பில் பாடல்கள் எவ்வாறு அமைந்து உள்ளன என்றும் காணும் போது இம்மாற்றங்கள் குறித்து மேலும் ஆராய்ந்து முடிவு காணலாம்.

முடிவுரை:

கபிலரின் அகப் பாடல்கள் வரிசையில் கலித்தொகை, குறுந் தொகை ஆகிய இரண்டின் பாடல்களும் ஒப்பிடப்பட்டதில் கிடைத்த கருத்துகள்:

1. கலித்தொகைப் பாடல்களில் நேரிடையாக உரை யாடுவது போன்று பேச்சு வழக்குச் சொற்கள் நிறைய இடம் பெற்றுள்ளன.

2 ஒரு பாடலில் மூன்று நான்கு முறை திரும்பத் திரும்ப வரும் தொடர்கள் என்ற நிலையில் கலித்தொகைப் பாடல்கள் அமைந்துள்ளன.

3. கலிப்பாவின் 'எனவாங்கு' என்ற தனிச்சொல் உறுப்பைத் தவிரப் பாடலில் பல தனிச்சொற்கள் இடம்பெற்றுள்ளன.

4. 'நீ', 'நின்', 'நின்னை' போன்ற முன்னிலை ஒருமைச் சொற்கள் நிறையக் கலித்தொகையில் பயின்று வருகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. (பழைய) புராணக் கருத்துகள் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளன. குறுந்தொகையில் ஒரு பாடலில் கூட இவை எடுத்தாளப்படவில்லை.
6. கருப்பொருட்கள் குறுந்தொகையில் பெரும்பாலும் அடையில்லாமல் இடம்பெற, கலித்தொகையில் பல அடைச்சொற்களைப் பெற்று வருதல் அறியப்படுகிறது.
7. திணை அமைப்பில் குறிஞ்சித் திணை என்ற நிலையில் இருந்து மாறி, கலித்தொகையில் சில பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
8. கலித்தொகையில் சுட்டப்படும் நிகழ்ச்சிகள் ஒன்றன் மேல் ஒன்று அடுக்கிச் சொல்லப்படுகின்றன. குறுந் தொகையில் அவை ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் வருணிக்கப்படுகின்றன.
9. குறுந்தொகையில் தலைவன் 'நாட' என்று மட்டும் விளிக்கப்பட, கலித்தொகையில் பல பெயர்களில், பல்வேறு அடைகளோடு விளிக்கப்படுகின்றான்.

குறுந்தொகை கலித்தொகை, ஆகிய இரண்டிலும் நிறைய வேறுபாடுகள் காணப்பபடுகின்றன. இக்கருத்துக்களை மேலும் பிற கலித்தொகைப் பாடல்களோடும் கபிலர் காலப் புலவர்கள் பாடல்களோடும் ஒப்பிடப்பட்டு ஆராய்ந்தால் இம்மாற்றத்திற்கு அரண் செய்யும் பல கருத்துக்கள் கிடைக்கும் என்று கூறலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சான்றெண் விளக்கம்:

1. மாணிக்கம், வ. சுப., தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை, 1980, ப. 9.
2. வையாபுரிப் பிள்ளை, எஸ்., தமிழ்ச்சுடர்மணிகள், பாரி நிலையம், சென்னை 1959, ப. 56
3. பாலசாரநாதன். சு., சங்ககாலப்புலவர்கள், உ. வே, சாமிநாதய்யர் நூல்நிலையம், சென்னை 1986, ப.119.
4. மேலது. ப. 119.
5. தமிழண்ணல், குறிஞ்சிப் பாட்டு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1987, ப.41.
6. (i) சாமிநாதய்யர், உ. வே. குறுந்தொகை (1983), பதிற்றுப்பத்து (1980), புறநானூறு (1985) முகவுரைகள்.
   (ii) வேங்கடராஜுலு ரெட்டியார். வே., கபிலர், சென்னைப் பல்கலைக் கழகம், 1936.
   (iii) வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம் (இரண்டு பகுதிகள்), பாரிநிலையம், சென்னை, 1967.
   (iv) நாராயணசாமி அய்யர், நற்றிணை நானூறு, கழகவெளியீடு, சென்னை, 1952.
   (v) கோவிந்தன். கா., சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை (பகுதி க), கழக, வெளியீடு, சென்னை, 1956.
   (vi) கந்தையாப்பிள்ளை ந.சி., தமிழ்ப் புலவர் அகராதி கழக வெளியீடு, சென்னை 1952
   (vii) செல்வகணபதி, ஒப்பிலக்கிய நோக்கில், தமிழ் இலக்கியம், கற்பகம் பதிப்பகம், தஞ்சாவூர் 1986.
   (viii) மெய்யப்பன், ச., கபிலர், மணிவாசகர் நூலகம், அண்ணாமலைநகர், சிதம்பரம், 1975.
   (ix) வேங்கடசாமி நாட்டார், ந.மு. கபிலர், கரந்தைத் தமிழ்சங்கம் வெளியீடு, கரந்தை1936
   (x) தமிழண்ணல், குறிஞ்சிப்பாட்டு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1987

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. சாமிநாதய்யர், உ. வே. குறுந்தொகை, (1983). புறநானூறு, (1985) பாடியோர் வரலாறுகள்.

8. சான்றென விளக்கம்: 6.

9. (i) கனகராஜய்யர், தமிழ்ப்புலவர் வரலாறு, இ.மா, கோபாலகிருஷ்ணக் கோன் சென்னை 1950.

(ii) சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி ஏசியன் எஜுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி, 1982

10. சான்றென் விளக்கம் : 6

11. சான்றென் விளக்கம் : 6

12. சான்றென் விளக்க்ம் : 6

13. சான்றென் விளக்கம் : 6

14. நீதிவாணன், ஜெ., நடையியல், முல்லை வெளியீடு, மதுரை, 1979, ப. 7.

15. மேலது. ப. 101

16. வையாபுரிப்பிள்ளை. எஸ். தமிழ்ச்சுடர்மணிகள், ப.55.

17. கந்தையாபிள்ளை ந.சி., கலித்தொகை வசனம் ஒற்றுமை ஆபீஸ், சென்னை, 1941 ப. V

18. மேலது. ப. V

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டுரையாளர்கள்

1. முனைவர் அ. பாண்டுரங்கன் எம்.ஏ., பிஎச்.டி., பட்டயம் (மொழியியல்.

மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் "கம்ப ராமாயணமும் காப்பியக் கொள்கையும்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். புதுவை அரசுக் கல்லூரிகளில் 26 ஆண்டுகளாகப் பணியாற்றிச் சிறந்தவர். பல ஆய்வுக், கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவரது அண்மைப் படைப்பாக "காப்பிய நோக்கில் கம்பராமாயணம்" எனும் நூல் வெளி வந்துள்ளது. தற்போது புதுவைப் பல்கலைக் கழகத்தின் காரைக்கால் மையத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். சங்க, பக்தி இலக்கியங்களிலும் தமிழகப் பண்பாட்டு வரலாற்றிலும் ஈடுபாடு கொண்டவர். "காப்பியக் கலை" என்னும் இவருடைய நூல் விரைவில் வெளிவர உள்ளது.

2. முனைவர் ம. மதியழகன் எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்டி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மலேசியத் தமிழ் நாவல்கள் குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம்பெற்றவர், 1981, 1987 ஆகிய ஆண்டுகளில் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குத் தமிழாய்வு தொடர்பாகச் சென்றுள்ளார். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி உள்ள இவர். நவீன இலக்கியத்தில் ஈடுபாடு உடையவர். 1988இல் "மலேசியத் தமிழ் நாவல்கள்" என்னும் நூலினை வெளியிட்டுள்ள இவர் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். "நவீன இலக்கியச் சிந்தனைகள்" என்னும் நூல் இவ்வாண்டு வெளி வரவுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. ஆ. அருள்தாசு எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.

புதுவைப் பல்கலைக்கழகப் புதுவை மையத் தமிழியல் துறையில் "வாழும் தமிழர் பண்பாட்டில் வழிபாடு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து எம்ஃபில் பட்டம் பெற்றவர். மானுடவியல் பற்றிய சான்றிதழும், இரு கட்டுரைகளும் இவரது முயற்சியால் விளைந்தவை. தற்போது காரைக்கால் மையத் தமிழ்த் துறையில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

4. ச. இரவி எம்.ஏ., எம்.ஃபில்

பாரதியார் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் "வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல், கட்டபொம்மு கும்மிப் பாடல் ஒப்பீடு" என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு எம்ஃபில் பட்டம் பெற்ற இவர், நமது துறையில் "வரலாற்றுக் கதைப் பாடல்களில் தலைவர்கள்" என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு பணிக்கும் நிலையில் உள்ளார்.

5. இராம. இராமமூர்த்தி

புதுவைக் கல்வித்துறையில் மேனிலைப் பள்ளித் துணை முதல்வராகப் பணியாற்றி வருகிறார். நம் துறையில் பகுதி நேர ஆய்வாளராகச் சேர்ந்து "நேமிநாதம்-நன்னூல் ஓர் ஒப்பாய்வு' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு எம்ஃபில் பட்டத்தினைப் பெற்றுள்ளார். முனைவர் பட்டத்திற்கு "தொடக்க காலத் தமிழ் மொழியில் எச்சத் தொடர்கள்" என்னுந் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

6. இரா. வ. கமலக்கண்ணன் எம்.ஏ., பி.எட்.,

26 ஆண்டுகளாகத் தமிழாசிரியராகப் பணியாற்றும் இவர் முனைவர் பட்ட ஆய்விற்குத் "தொண்டை நாடும் வைணவமும்" என்ற தலைப்பைத் தெரிவு செய்துள்ளார். மூன்று நூல்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ள இவரின் "உலகப் பெருங் கவிஞர் கம்பர்" என்ற நூல் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளது. மொழியியல் இலக்கியங்களில் அதிக ஈடுபாடும் ஆய்வு நோக்கும் கொண்டவர்.

7. தி. சிவக்குமார் எம்.ஏ., எம்.ஃபில்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் "தமிழ் மொழி வளர்ச்சி தொழில் நுட்பத் தமிழ்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து எம்.ஃபில் பட்டம் பெற்றவர். நமது துறையில் "நவீன தமிழ் நாவல்களில் பிரதியும் கதைசொல்லலும் — ஓர் அமைப்பியல் ஆய்வு" என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு உள்ளார். புதுவையில் இருந்துவரும் "எதிர்வு" என்னும் இலக்கிய இதழின் ஆசிரியர். மொழி பெயர்ப்பியல் முதுநிலைப் பட்டமும் இதழியல், நாட்டுப் புறவியல் இரண்டிலும் சான்றிதழும் பெற்றவர்.

8. அ. சிவபெருமான் எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் "அடிகளாரது படைப்பு-இலக்கியப் பணி மதிப்பீடு" என்ற தலைப்பில் ஆய்வு செய்து எம்.ஃபில் பட்டம் பெற்றவர். பல நூல்களைப் பதிப்பித்திருக்கும் இவர் முனைவர் பட்ட ஆய்வுக்கு "தமிழர் பெரும்பிரிவுகள் அன்று முதல் இன்று வரை" என்ற தலைப்பை மேற்கொண்டு உள்ளார். "சோதிட ரத்னா", "நவக்கிரக ரத்னா" என்ற பட்டங்களைப் பெற்றவர்.

9. ச. சுப்புரத்தினம் எம்.ஏ., எம்.ஃபில்.

காஞ்சி அறிஞர் அண்ணா நினைவு அரசினர் கலைக் கல்லூரியில் முதுகலையில் தமிழ் பயின்றவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் "சிலப்பதிகாரத்தில் அகத்திணைக் கூறுகள்" என்னும் பொருளில் ஆய்வு செய்து எம்.ஃபில் பட்டம் பெற்றவர். நமது துறையில் "பாரதி — ஸ்ரீ அரவிந்தர்: ஓர் ஒப்பாய்வு" எனும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு பணிக்கும் நிலையில் உள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10. ரா செயராமன் எம்.ஏ., எம்.ஃபில்.

மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் முதுகலைத் தமிழ் இலக்கியமும் "சேனாவரையரின் உரைத்திறன்" என்னும் பொருளில் எம்.ஃபில் பட்டமும் பெற்றவர். நமது துறையில் "தொல்காப்பிய உரையாசிரியர்கள் காட்டும் தொடரியல் கூறுகள்" என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு பணிக்கும் நிலையில் உள்ளார்.

11. பெ. செல்வதுரை எம்.ஏ., எம்.ஃபில்.

திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரியில் "நாஞ்சில் நாடன் நாவல்கள்-ஓர் ஆய்வு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து எம்.ஃபில். பட்டம் பெற்றவர். நமது துறையில் "தமிழ் நாவல்களில் தலைமைப் பாத்திரத்தின் சிதைவு" என்னும் தலைப்பில் முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொண்டு ஆய்வேட்டைப் பணித்துள்ளார்.

12. வே. முத்தன் எம்., ஏ.,

7790

மதுரை — காமராசர் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், கடந்த 15 ஆண்டுகளாகப் புதுவை அரசுக் கல்லூரிகளில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். காரைக்கால். அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றும் இவர், பகுதி நேர ஆய்வு மாணவராகக் காரைக்கால் தமிழ்த்துறையில் "வள்ளுவர் இனம் — ஒரு சமூக ஆய்வு" என்னும் தலைப்பில் எம்.ஃபில் பட்டத்திற்கு ஆய்ந்து வருகிறார்.

13. ஆ. விஜயராணி எம்.,ஏ., எம்.ஃபில்

புதுவைத் தாகூர் கலைக்கல்லூரியில் முதுகலைப் பட்டம் பெற்றவர். "பிரஞ்சிந்திய விடுதலை இயக்கத்தில் காரைக்காலின் பங்கு" என்ற தலைப்பில் காரைக்கால் மையத்தில் ஆய்வு செய்து எம்.ஃபில் பட்டம் பெற்றவர். 'சங்க காலக் கபிலர்-சில சிக்கல்கள்" என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

Forwarded free of cost and with the Compliments of the Dept. of Education; Govt. of India, New Delhi.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
17.6.13

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோக்கு - 2 பற்றி...

.... புத்தகத்துக்கு உள் நுழைந்தால் மிகவும் கவனிப்புக்குரியதாகவே இந்த நூல் உள்ளது. நூலை முழுதும் படித்து முடித்தவுடன் கண்ணில்படுவது, தமிழ்த் துறை என்ற இரும்புக் கோட்டைக்குள் நவீன தமிழ்ச் சிறுபத்திரிகைகளின் சிந்தனை ஊடுருவியுள்ளது என்பது.......

இத்தொகுப்பில் முதலில் கவனத்தைக் கவர்வது ஆய்வு விஷயங்களின் தேர்வு. இன்றைய இலக்கியப் பிரச்சனைகளும், இன்றைய நவீன சிந்தனைகளும், ரசனைக் கேடும் இன்று தமிழனின் முக்கிய பிரச்சனைகள். எனவே, ஆய்வு என்பது பிழைப்புக்காக ஒரு பட்டத்தைத் தருவது என்பது மட்டுமில்லாமல் இன்றுள்ள எரியும் பிரச்சனைகளின் தொடர்புள்ள ஆய்வாக இருக்கும் என்ற பொறுப்புமிக்க சிந்தனை இத்தொகுப்பிலிருந்து தெரிகிறது.

— 'மேலும்', பிப்ரவரி 91

தமிழ் இலக்கியக் கொள்கைகளை உருவாக்குதல், தமிழகத்தின் பண்பாட்டு வரலாற்றை ஆராய்தல் என்று தங்களின் இரண்டு குறிக்கோள்களையும் அடியொற்றி எழுந்த இச்சிறப்பு மிக்க கட்டுரைகள், சிந்தனையை வளர்க்கும் திறம் வாய்ந்தவை, பயன்தரக் கூடியவை.

— 'தமிழ்மணி', ஆகஸ்ட் 31, 1991.

ஸ்ரீ வேலன் பிரஸ், சிதம்பரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar